வெளியீடு 9-4-2007

Issued 9-4-2007

763
3·07·07
3/7/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஆகஸ்ட் 22, 2006—தொகுதி 13—எண் 1

Tuesday the 22nd August, 2006 — Volume 13 — No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V 2", 3' Pok
Pob. 13·1
227429

[Price Rs. 3.00

**22-8-2006**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| | v–x |
| ஆளுநரும் அமைச்சரவையும் | xi–xv |
| Governor and Council of Ministers | |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xvii–xix |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxi–xxxi |
| **1. இரங்கல் தீர்மானம்**— | |
| ஷெனாய் இசை மேதை திரு பிஸ்மில்லா கான் மறைவு | 1-2 |
| **2. வினாக்கள்-விடைகள்**— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-36 |
| **3. தலைவர் கோரல்**— | |
| மதிமுக பொதுச் செயலாளர் திரு வைகோ இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பொதுக் கூட்டத்தில் தெரிவித்த ஆட்சேபகரமான கருத்துகள் அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை | 36-45, 102, 112-115, 116-117 |
| **4. கவன ஈர்ப்பு**— | |
| (அ) பூமலூர் அரசு மருத்துவமனை விரிவாக்கப் பணிகள் விரைவில் முடிக்கப்பெறுதல் | 45-48 |
| (ஆ) தமிழ்நாடு பனை வெல்லக் கூட்டுறவு இணையப் பணியாளர்களுக்கு ஊதியமும், ஓய்வு பெற்றவர்களுக்குப் பணிக்கொடையும் வழங்காதது | 48-56 |

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 56-57 |
| (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 57-58 |
| (இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006 | 58-59 |
| **6. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) **கோரிக்கை எண் 45 – சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை** | 59-112,116, 117-149, 151-217 |
| (ஆ) **கோரிக்கை எண் 6** – கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை- கால்நடை பராமரிப்பு | |
| *மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை | 60,100-101, 186-199,201 |
| *மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன் | 78,101, 177-186,202 |
| *திரு. த. தியோடர் ரெஜினால்டு | 102-112 |
| *திருமதி ராணி வெங்கடேசன் | 116-129 |
| *திரு. ல. ராதாகிருஷ்ணன் | 129-137 |
| *திருமதி பெ. கமலாம்பாள் | 99-100, 137-144,217 |
| செல்வி கே. பாலபாரதி | 68,144-149 |
| திருமதி பி. பத்மாவதி | 76,94,151-156, 208,214 |





| | பக்கங்கள் |
|---|---|
| **6. மானியக் கோரிக்கைகள், 2006-2007, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| *திரு. கு. செல்வம் | 156-161 |
| *திரு. எம்.ஆர். சுந்தரம் | 161-165 |
| செல்வி ஆ. அங்கையற்கண்ணி | 165-171 |
| *திருமதி செல்வி ராமஜெயம் | 66,88,171-176, 204,212 |
| **7. விதி 110-ன்கீழ் அறிக்கை—** | |
| தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் வேலைநிறுத்தம் செய்த காலத்தைப் பணிக் காலமாகக் கருதி ஊதியம் வழங்கிடும் ஆணை — மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் அறிக்கை | 150-151 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 218 |

**ஆளுநரும் அமைச்சரவையும்**

**ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கரும்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி & தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்

2. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

3. **மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்
ஊராட்சிகள் மற்றும் ஊராட்
ஒன்றியங்கள், வறுமை ஒழிப்பு
திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்
பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்க

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மை
பொறியியல், வேளாண் பணி
கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை
கரும்புத் தீர்வை மற்றும் கரும்
மேம்பாடு

7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறு பாசன
உள்ளிட்ட பாசனம் மற்று
செயற்திட்டப் பணிகள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உய
கல்வி, மின்னணுவியல், அறிவியல்
மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும்
முன்னாள் படைவீரர் நலன்

227429
சென்னை-600 008
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

12. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

D
V24,3/96
P06 - 13.1

13. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

14. உணவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ. வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டுவசதி, ஊரக வீட்டுவசதி மற்றும் வீட்டுவசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இட வசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

19. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

21. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

23. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

25. சமூக நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

26. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:

கால்நடை பராமரிப்பு

27. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

28. மீன்வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

29. பால் வளத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

30. கதர்த் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR — THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** - **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

2. **Minister for Finance** - **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

3. **Minister for Electricity and Rural Industries** - **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

4. **Minister for Rural Development and Local Administration** - **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** - **The Hon. Thiru Ko. Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** - **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** - **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** - **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** - **The Hon. Thiru K. N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** - **The Hon. Thiru M. R. K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act



11. **Minister for Revenue and Law** - **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. **Minister for Tourism** - **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

13. **Minister for Information** - **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. **Minister for Food** - **The Hon. Thiru E. V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Housing and Slum Clearance** - **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Wasteland Development

16. **Minister for Health** - **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

17. Minister for Labour .. **The Hon. Thiru T. M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment

18. Minister for Hindu Religious and Charitable Endowments .. **The Hon. Thiru K. R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

19. Minister for Handlooms .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

20. Minister for School Education .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

21. Minister for Commercial Taxes .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

22. Minister for Environment .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

23. Minister for Forests .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



24. Minister for Highways .. **The Hon. Thiru M. P. Saminathan:**

Highways and Ports

25. Minister for Social Welfare .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

26. Minister for Animal Husbandry .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

27. Minister for Adi Dravidar Welfare .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

28. Minister for Fisheries .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

29. Minister for Dairy Development .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

30. Minister for Khadi **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. உ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல்., | - சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | - சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | - வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | - ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | - அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | - திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | - சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | - சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | - திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | - ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | - பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | - பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | - துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | - திருச்சிராப்பள்ளி-I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | - அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | - செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | - அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | - ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | - உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | - கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | - திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்

22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்

23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்

24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி

25. இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். - பள்ளிப்பட்டு

26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)

27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்

28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி

29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி

30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்

31. இராஜேந்திரன், திரு. சபா - நெல்லிக்குப்பம்

32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)

33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)

34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்

35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு

36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்

37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி

38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்

39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)

40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்

41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்



42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)

43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி

44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்

45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்

46. சண்ணன், திரு. வே. - செஞ்சி

47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்

48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்

49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)

50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி

51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்

52. கலீலுர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி

53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்

54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை

55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)

56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்

57. காவேரி, திரு. வை. - எடப்பாடி

58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். - கலசப்பாக்கம்

59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி

60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை

61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)

62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்

63. குமரகுரு, திரு. இரா - திருநாவலூர்
64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஒரூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. எஸ்.வி. - மதுரை மேற்கு
72. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
73. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
75. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
76. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
77. சாமி, திரு. ஆர். - மேலூர்
78. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
83. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்



85. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
86. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்
87. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
88. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
89. சின்னப்பன், திரு. பொ. - விளாத்திகுளம்
90. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
91. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
92. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
94. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
95. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
96. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
97. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
98. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
99. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
101. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
103. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
105. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
106. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. என். - முசிறி

108. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்

109. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

110. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்

111. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்

112. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி

114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)

115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி

117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)

118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு

119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை

120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி

121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்

122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)

123. தமிழரசு, திரு. அ. - மேலூர்

124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)

125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்

126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்

127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்

129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)

130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு

132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)

133. துரைமுருகன், திரு. - காட்பாடி

134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)

136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை

138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை

139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி-2

140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி

141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)

142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்

143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)

145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி

146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு

150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்

151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்

152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்

153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. - தாராபுரம் (செ.வ.)

155. பிரேமா, திருமதி ஆர். - அவினாசி (செ.வ.)

156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். - கடையநல்லூர்

157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)

158. பூங்கோதை, டாகடர் (திருமதி) - ஆலங்குளம்

159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்

160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்

161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்

162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்

163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு

164. பொள்ளாச்சி
வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி

165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்

166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆவா.)

167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை

168. போளூர் வரதன், திரு. ம. - செங்கம் (செ.வ.)

169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்

170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி

171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)

172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்

173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்

174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்

175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்

176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு

178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை

179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்

180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி

181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்

182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்

183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)

184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்

185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்

186. மோகன், திரு. பெ. - ஓட்டப்பிடாரம் (செ.வ.)

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை

188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்

190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை

191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்-I

193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்

194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி

195. ராமசந்திரன், திரு. கா. - கடலூர்

196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி

197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி

198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை

| | | |
|---|---|---|
| 199. | ராஜசேகரன், திரு. மா. | - தொட்டியம் |
| 200. | ராஜன், திரு. அ. | - நாகர்கோவில் |
| 201. | ராஜா, திரு. என்கேகே.பெ. | - ஈரோடு |
| 202. | ராஜா, திரு. தி.க. | - திருப்பத்தூர் |
| 203. | லட்சுமணன், திரு. ச. | - போடிநாயக்கனூர் |
| 204. | லதா, திருமதி ஜி. | - குடியாத்தம் |
| 205. | லீமா றோஸ், திருமதி ரா. | - திருவட்டாறு |
| 206. | வசந்தகுமார், திரு. எச். | - நாங்குநேரி |
| 207. | வரதராஜன், திரு. ரா. | - விருதுநகர் |
| 208. | விசுவநாதன், திரு. இரா. | - நத்தம் |
| 209. | விடியல் எஸ். சேகர், திரு. | - காங்கேயம் |
| 210. | விஜயகாந்த், திரு. | - விருத்தாசலம் |
| 211. | விஜயகுமார், திரு. கே.எஸ். | - கும்மிடிப்பூண்டி |
| 212. | விஜயகுமார், திரு. பெ.சு. | - போளூர் |
| 213. | விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. | - செய்யாறு |
| 214. | வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். | - பேராவூரணி |
| 215. | வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | - சேலம்-2 |
| 216. | வேதரத்தினம், திரு. எஸ்.கே. | - வேதாரண்யம் |
| 217. | வேலு, திரு. எ.வ. | - தண்டராம்பட்டு |
| 218. | வேலுசாமி, திரு. இல. | - தருமபுரி |
| 219. | வேலுசாமி, திரு. செ.ம. | - பல்லடம் |
| 220. | வேலுமணி, திரு. சு.ப. | - பேரூர் |
| 221. | வேலதுரை, திரு. பா. | - சேரன்மகாதேவி |



| | | |
|---|---|---|
| 222. | வேல்முருகன், திரு. தி. | - பண்ருட்டி |
| 223. | வைத்திலிங்கம், திரு. ஆர். | - ஒரத்தநாடு |
| 224. | ஜாண் ஜேக்கப், திரு. எஸ். | - கிள்ளியூர் |
| 225. | ஜாண் ஜோசப், திரு. ஞா. | - விளவங்கோடு |
| 226. | ஜெகன்மூர்த்தி, திரு. மு. | - அரக்கோணம் (செ.வ.) |
| 227. | ஜெயக்குமார், திரு. டி. | - இராயபுரம் |
| 228. | ஜெயக்குமார், முனைவர் கு. | - நாமக்கல் (செ.வ.) |
| 229. | ஜெயபால், திரு. எஸ். | - குளச்சல் |
| 230. | ஜெயராமன், திரு. எஸ்.பி. | - வந்தவாசி (செ.வ.) |
| 231. | ஜெயலலிதா, செல்வி ஜெ | - ஆண்டிப்பட்டி |
| 232. | ஸ்டாலின், திரு. மு.க. | - ஆயிரம் விளக்கு |
| 233. | ஹசன் அலி, திரு. கு. | - இராமநாதபுரம் |
| 234. | (வெற்றிடம்) | - மதுரை மத்தி |
| 235. | ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் | - நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை - மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 6, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 22, செவ்வாய்க்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா*
*பிற்பகல் தாமே வரும்."*

*பிறருக்குத் தீங்கு விளைவித்துவிட்டோம் என்று ஒருவர் மகிழ்ந்துகொண்டிருக்கும்போதே, அதேபோன்ற தீங்கு அவரையே தாக்கும்.*

## 1. இரங்கல் தீர்மானம்

### ஷெனாய் இசை மேதை திரு. பிஸ்மில்லா கான் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *"இதயத்தை ஊடுருவும் ஆழங்காண முடியாத இனிய இசைமூலம் இந்திய மக்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தி வந்த ஷெனாய் இசை மேதை பாரத் ரத்னா பிஸ்மில்லா கான் தனது 91–வது அகவையில் 21–8–2006 (திங்கட்கிழமை) அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*

*ஓர் இசைக் கலைஞர் பெறக்கூடிய அனைத்து விருதுகளையும், கௌரவங்களையும், பெருமையையும், புகழையும் பெற்றிருந்தபோதிலும், எளிமையான வாழ்க்கையையே தன் கடைசிக் காலம் வரை கடைப்பிடித்து வந்தார்.*

*அன்னாரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது."*

[பேரவைத் தலைவர்] [2006 ஆகஸ்ட் 22

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேறியது.)*

***TMT. BADER SAYEED:** Honourable Speaker Sir, May I say some words about Ustad Bismillah Khan?

**HON. SPEAKER:** It is already over. The next item is Question Hour. Please sit down.

## 2. வினாக்கள்–விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 61, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**61—**

### கட்டடம்

***1326—திரு. பி.என். பெரியண்ணன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி நகரில் செயல்பட்டு வரும் உதவிக் கோட்ட மின் பொறியாளர் அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தருமபுரி நகரில் தற்போது செயல்பட்டு வரும் உதவிக் கோட்ட மின் பொறியாளர் அலுவலகம், நகரின் மையப் பகுதியில் பொது மக்கள் வசதிக்கேற்ப உள்ளதால், சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்துத் தற்போது ஏதும் திட்டம் இல்லை.



2006 ஆகஸ்ட் 22]

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரிலே வாடகைக் கட்டடத்தில் சுமார் 30 ஆண்டு காலமாக இயங்கி வரும் உதவிக் கோட்ட மின் பொறியாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல, சொந்தக் கட்டடம் ஒன்று அங்கே கட்ட வேண்டுமென்று மின் வாரியமும் அதற்கான இடத்தைத் தேடிக்கொண்டிருக்கிறது. அந்த உதவிக் கோட்ட மின் பொறியாளர் அலுவலகம் கட்டுவதற்கு இடம், சுமார் இரண்டு ஏக்கர் நிலம் தருமபுரியிலே மையப் பகுதியில் கிடைக்கவில்லை. மாண்புமிகு உறுப்பினர் பெரியண்ணன் அவர்கள் முயற்சி எடுத்து இரண்டு ஏக்கர் நிலம் வாங்கிக் கொடுப்பாரானால், இந்த ஆண்டு அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கான முயற்சிகளை மின் வாரியம் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி நகரின் மையத்திலே கோயில் மானிய நிலம் 1½ ஏக்கர் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பெற்று, அந்தக் கட்டடத்தை நிறுவித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உதவி மின் பொறியாளருடைய கோட்டக் கட்டடம் கட்ட வேண்டுமென்றால், இரண்டு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர், அறநிலையத் துறைக்குச் சொந்தமான 1½ ஏக்கர் நிலம் இருப்பதாகச் சொல்கிறார். அறநிலையத் துறையினுடைய அதிகாரிகளிடத்திலே அது பற்றிக் கலந்து பேசினாலும், அவர்கள் உடனடியாக அந்த நிலத்தைக் கொடுப்பதற்கு ஒப்புதல் தரமாட்டார்கள். இரண்டு ஏக்கர் நிலத்தை மாண்புமிகு உறுப்பினர், அவர் விரும்புகின்ற இடத்திலே ஏற்பாடு செய்து தந்தால், அரசு அது பற்றி முடிவெடுத்து கட்டடத்தைக் கட்டித் தரும் என்று ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

[2006 ஆகஸ்ட் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

*முற்பகல் 9—35*

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, பல கோடி ரூபாய்களை வெளிநாட்டு மூலதனமாகத் தமிழகத்திற்குக் கொண்டு வந்து இருக்கிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள். அதைப் பாராட்டுகிற அதே நேரத்திலே, அதற்குத் தேவையான மின்சாரத்தை augmentation செய்ய வேண்டியது நம் அரசினுடைய கடமையாகும். சென்ற காலத்திலே, G.M.R. Vasavi போன்ற தனியார் நிறுவனங்கள் எல்லாம் மின் உற்பத்திக்கு அனுமதிக்கப்பட்டன. அதுபோல, தேவைப்படுகிற மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகத் தனியார் துறையிலே அல்லது வெளிநாட்டு உதவியுடன் மேற்கொண்டு திட்டங்களை அரசு வைத்திருக்கிறதா என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திற்குத் தேவையான மின்சாரம் 8,500 மெகா வாட் ஆகும். ஆனால், இப்பொழுது நம்முடைய கையிருப்பாக 10,011 மெகா வாட் மின்சாரம் இருக்கிறது. நாமே பக்கத்திலே இருக்கக்கூடிய மாநிலங்களுக்கு மின்சாரத்தை விற்பனை செய்துகொண்டு இருக்கிறோம். இருந்தாலும்கூட, பல தனியார் நிறுவனங்கள் தமிழகத்திலே மின் உற்பத்தியைத் தொடங்குவதற்காக மின் வாரியத்தையும், என்னையும் அணுகியிருக்கிறார்கள். ஏறக்குறைய 10 ஆயிரத்திலிருந்து 15 ஆயிரம் மெகா வாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். 11—வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், இந்தியாவினுடைய பற்றாக்குறை 65 ஆயிரம் மெகா வாட்டாக இருக்கும் என்று பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எனவே, அந்தக் கருத்தையும் ஏற்றுக்கொண்டு, மின் வாரியம், தனியார் மின்சாரம் உற்பத்தி செய்ய வருகின்ற நேரத்தில் tender மூலமாக அந்த விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, யார் குறைந்த செலவிலே மின்சாரம் விநியோகிக்க அனுமதி கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்களோ, அவர்களுக்கு அனுமதி வழங்கலாம் என்று மின் வாரியம் முடிவெடுத்திருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. முல்லைவேந்தன்.



2006 ஆகஸ்ட் 22]

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடம் கட்டுவதற்கு நிலம் கிடைக்கவில்லை என்ற காரணத்தால், ஏராளமான இடங்களில் அரசு அலுவலகங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன. மின் வாரியத்தைப் பொறுத்தவரையில், மின் கம்பங்களைப் போடுகிறபோது, நிலத்தினுடைய அனுமதி இல்லாமலே போடுகிற வாய்ப்பைப் பெற்றிருக்கிற ஓர் அமைப்பு. எனவே, அரசுக் கட்டடங்களைக் கட்டுவதற்காக, அரசே நிலத்தைக் கையகப்படுத்தி, கட்டுவதற்கான நடவடிக்கை எடுகக முன்வந்தால் மாத்திரம்தான், இந்தப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படும். எனவே, அரசு அந்த நடவடிக்கையை எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கம்பங்கள் நடுவது என்பது வேறு. மின் கம்பம் நடுவதற்கு ஒரு சதுர அடி இடம் இருந்தால் போதும். அதிலேயும் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரரேகூட மின் இணைப்புப் பெற வேண்டிய சூழ்நிலையிலே இருப்பார். அதற்கு அனைவருமே ஒப்புதல் தந்து மின் கம்பங்கள் பொருத்துவதற்கு எந்தத் தடையும் சொல்வதில்லை. ஆனால், 2 ஏக்கர் நிலம் வேண்டுமென்று சொன்னால், யாருடைய நிலத்தையாவது எடுத்து, அதிலே நாம் விரும்பியதைப்போல கட்டடம் கட்ட ஆரம்பித்தால், அவர்கள் நீதிமன்றத்திற்குப் போவார்கள். பிறகு கட்டடம் கட்டுகின்ற பணியே நின்றுவிடும். அதற்காகத்தான் ஒரு நல்ல இடத்தை முன்னாள் அமைச்சரைப் போன்றவர்கள் எல்லாம் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுபபினர் திரு. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் பதிலிலே கூறுகின்றபோது, அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடங்களைப் பெறுவதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்று கூறினார். 110 கே.வி. துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு இப்படி அரசுக்குச் சொந்தமான இடத்தைத் தேர்வு செய்து கேட்கின்றபோது, அரசுத் துறையிலிருந்து வருகின்ற பதில் என்னவென்றால், மின்சார வாரியம் என்பது வணிக நோக்கோடு இயங்குகின்ற ஸ்தாபனம்; ஆகவே, guideline value—விலே இரண்டு மடங்கு பணம் செலுத்தினால்தான் நாங்கள் இடங்களைத் தருவோம் என்று கோப்பிலே எழுதி அனுப்புகிறார்கள். சம்பந்தப்பட்ட துறை, இல்லை, நாங்கள் guideline value எவ்வளவு இருக்கிறதோ, அவ்வளவுதான் தருவோம் என்று திருப்பி எழுதி

அனுப்புகிறார்கள். இப்படியே, 110 கிலோ வோல்ட் நிலையம் அமைக்கப்படுகின்ற சூழ்நிலை இருந்தும், இந்த இடத்தை அரசு நிர்ணயித்த விலைக்குக் கொடுக்கத் தயாராக இருக்கின்றபோதும்கூட, அரசுத் துறை அந்த விலையைப் பெற்றுக்கொண்டு நிலம் தருவதற்கு ஒப்புக்கொள்வதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு, அரசுதான், அரசிற்காகப் பயன்படுத்துகிற நிலம், அதுவும் மின்சாரத்தைப் பொறுத்தளவில், அதிக விலை கொடுத்து வாங்கி மானியத்துடன் பொது மக்களுக்கு விநியோகிக்கின்ற துறை என்பதால், அரசு வழிகாட்டுகின்ற கட்டணத்தைச் செலுத்தி, நிலங்களைப் பெறுவதற்கு ஒரு தனிக் குழுவை அமைத்து, அந்த நிலங்களைப் பெற்று மின்சாரம் சீரான வகையில் கிடைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியண்ணன் அவர்கள் கேட்டது, தருமபுரியிலே 1½ ஏக்கர் நிலம் ஆலயத்திற்குச் சொந்தமான நிலம் இருக்கிறது என்று சொன்னார். குறைந்தது இரண்டு ஏக்கர் நிலம் தேவைப்படுகின்ற காரணத்தாலே, அந்த இடம் போதாது என்ற அடிப்படையிலே நான் பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் 110 கே.வி. மின் நிலையம் தொடங்குவதற்கு, அங்கே அறநிலையத் துறைக்குச் சொந்தமான இடம் இருக்கிறது, அதை விலை பேசி ஒரு நிர்ணயம் செய்து வாங்கக்கூடாதா என்று கேட்கிறார். பல இடங்களிலே அறநிலையத் துறை, மின்சார இலாகாவிற்கு இடத்தைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்கிறது. நாம் கேட்கின்ற நேரத்திலே விலை அதிகமாகச் சொன்னால்கூட, guideline Value-படிதான் அரசாங்கம் அதற்கான கட்டணத்தைச் செலுத்தி நிலத்தை வாங்கிக்கொண்டிருக்கின்றோம். எனவே, அவர்களுடைய தொகுதியிலே அப்படிப்பட்ட பிரச்சினை இருக்குமானால், அதை எழுதிக் கொடுத்தால், அறநிலையத் துறையோடு கலந்து பேசி, அந்த நிலத்தை வாங்கி, புதிய மின் நிலையம் அமைத்துத் தருவதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது.

முற்பகல் 9—40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தோடு தொடர்புடைய ஒரு கேள்வி என்ற முறையிலே,





காற்றாலைகள்மூலமாக உற்பத்தியாகக்கூடிய மின்சாரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கோயம்புத்தூர் மாவட்டங்களிலே அதிகமாக இப்பொழுது உற்பத்தியாகிக்கொண்டிருக்கிறது. காற்று வேகமாக வீசுகிறபோது, அதிகமான மின்சாரம் உற்பத்தியாகிறது. ஆனால், அப்படி உற்பத்தியாகிற மின்சாரத்தை மின்சார வாரியம் காலத்தில் எடுத்துக்கொள்ளாத ஒரு குறைபாடு இருப்பதாக, அந்தக் காற்றாலை மின்சார உற்பத்தியில் ஈடுபட்டிருக்கக்கூடிய உற்பத்தியாளர்கள் தெரிவிக்கிறார்கள். ஆகவே, அதற்குரிய ஏற்பாடுகள் செய்து, உற்பத்தி அதிகம் கிடைக்கிற மின்சாரத்தை அவ்வப்போது நாம் பயன்படுத்திக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்று மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தில் ஓரளவிற்கு உண்மை இருக்கிறது. கோவை மாவட்டத்திலே காற்றாலைமூலம் மின் உற்பத்தி செய்கின்ற இடத்தில், feeder-லே அந்த மின்சாரத்தைக் கொண்டு போய் இணைப்பதற்கான வசதிகள் இல்லாமல் இருந்த காரணத்தினாலே, இந்த ஆட்சி பொறுப்பேற்றுக்கொண்டவுடன், காற்றாலைகளுடைய உரிமையாளர்களைச் சந்தித்தபோது, அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொன்னார்கள். உடனடியாக மின்சார வாரியத்திலே அதனுடைய தலைவரை அழைத்துப் பேசி, Member (Distribution) மற்றும் (Generation)—ஐ அழைத்துப் பேசி, அங்கே உற்பத்தியாகின்ற மின்சாரத்தை grid-லே இணைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று தெரிவித்தேன். இப்போது அந்தப் பிரச்சினை தீர்ந்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. என்.ஆர். ரங்கராஜன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

**62—**

### மின் தடை

***1639—திரு. என்.ஆர். ரங்கராஜன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை தொகுதி, அதிராமப்பட்டினம் பேரூராட்சியில் தொடர்ந்து ஏற்படும் மின் தடையை நீக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தொகுதி, அதிராமபபட்டினம் பேரூராட்சியில் உள்ள அதிராமப்பட்டினம் ஆளில்லாத் துணை மின் நிலையத்திலிருந்து, அதிராமப்பட்டினம் நகருக்குச் செல்லும் மின் பாதையைத் தனியே பிரித்து, புதிதாக ஒரு பிரிகலன்—feeder அமைத்து மின்னோட்டம் தர அனுமதியளிக்கப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது. வேலை முடிந்தவுடன், நிரந்தரத் தீர்வாக, அதிராமப்பட்டினம் பகுதி முழுவதற்கும் தங்கு தடையில்லா மின்சாரம் கிடைக்கும்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதிராமப்பட்டினம் பேரூராட்சி கிட்டத்தட்ட 40 ஆயிரம் மக்கள்தொகை கொண்ட ஒரு பேரூராட்சியாகும். அங்கு நிரந்தரமாக நாளொன்றுக்கு 10 முறை மின் தடை, கடந்த ஒரு வருட காலமாகவே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், தற்போது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள், அந்த லைனை இரண்டாகப் பிரித்துக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான வேலைகளைச் சீக்கிரம் முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன். அதே சமயத்தில், அங்கு இருக்கக்கூடிய அதிக மின் அழுத்தத்தைக் கணக்கில் எடுத்து, 33/11 கே.வி.ஏ., துணை மின் நிலையமும் தற்போது அங்கு இருந்துகொண்டிருக்கிறது. 110 K.V. Sub-Station போட்டால் எல்லாப் பிரச்சினையும் தீர்ந்துவிடும் என்று சொல்கிறார்கள். அதற்கான கோரிக்கைகளையும் நாங்கள் கொடுத்திருக்கிறோம். எனவே, மரியாதைக்குரிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் கோரிக்கையை நிறைவேற்றி வைப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அதிராமப்பட்டினம் பேரூராட்சியில் இப்போது உடனடியாக அந்த மின்சாரப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு ஒரு புதிய feeder போட்டால் போதும். அந்தப் பணியை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்று மின் வாரியத்திற்கு ஏற்கெனவே தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப்போல, 33/11 கே.வி.ஏ., துணை மின் நிலையம் இப்போது





இருந்தாலும்கூட, 110/11 இ.வோ. மின் நிலையம்—Sub-Station கட்டுவதற்கான தேவை அங்கே இல்லை. இருந்தாலும்கூட, அங்கே பெருகி வரும் மின் தேவையைக் கணக்கிலே கொண்டு, மின் வாரியம் இப்போது 10 எம்.வி.ஏ.,—விலிருந்து 20 எம்.வி.ஏ., கூடுதலாக மின் மாற்றி நிறுவுவதற்குத் திட்டமிட்டிருக்கிறது. அந்தப் பணிகள் அநேகமாக டிசம்பர் மாதத்திற்குள்ளாக முடிவடைந்துவிடும்.

முற்பகல் 9—45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** அதேபோன்று, அந்தப் பகுதி கடற்கரை ஓரத்தைச் சார்ந்த பகுதியாக இருக்கக்கூடிய காரணத்தினாலே, பல இடங்களிலே மின் கம்பிகள் எல்லாம் பழுதடைந்து, இற்றுப் போய் இருக்கின்றன. எங்கு பார்த்தாலும், இழுத்து வைத்துக் கட்டி வைத்திருக்கிறார்கள். எனவே, அவற்றை முழுவதுமாக ஆய்வு செய்து, அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மின் கம்பிகளை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன். பட்டுக்கோட்டை தொகுதியிலே, தாமரங்கோட்டை மற்றும் துவரங்குறிச்சியில் 33 கே.வி.ஏ., துணை மின் நிலையம் அமைப்பதற்கு நமது அரசு அனுமதி அளித்திருக்கின்றது. அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கையை ஏற்று, விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உதவக்கூடிய வகையிலே இந்தத் திட்டத்தை அறிவித்திருப்பதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர், மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் ஐயா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 110 கிலோ வோல்ட் மின் நிலையம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கைகள்தான் ஏராளமாக வருகின்றன. காரணம், 33 கிலோ வோல்ட் மின் நிலையங்கள் பல இடங்களிலே அமைக்கப்படுகின்றன. ஆனால், மின் தேவையைப் பூர்த்தி செய்வதற்குரிய வாய்ப்பு இல்லையென்று கருதப்படுகிற காரணத்தினாலே, 33 கிலோ வோல்ட் மின் நிலையங்கள் அமைப்பது

அத்தியாவசியத் தேவைதானா அல்லது புதிதாக அமைக்கப்படுகிற மின் நிலையங்களை 110 கிலோ வோல்ட் மின் நிலையங்களாகவே அமைபபதற்கான முயற்சியைப் பற்றி இந்த அரசு சிந்திக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கே, எந்த அளவிற்கு மின்சாரம் தேவைப்படுகிறதோ, அந்தத் தேவைக்கு ஏற்பத்தான் Sub-Station-களும் கட்டப்படுகின்றன. சில இடங்களிலே 11 கே.வி.ஏ., transformer-கள் பொருத்துகின்றோம். சில இடங்களில் 22 கே.வி.ஏ., transformer-கள் பொருத்துகின்றோம், சில இடங்களிலே தேவைக்கு ஏற்ப 33 கே.வி.ஏ., transformer-கள் பொருத்துகின்றோம். அந்த Sub-Station-லே இருக்கின்ற மின்சாரம் மற்ற பகுதிகளுக்குப் போதவில்லை என்று தெரிவித்தால், அதனுடைய தரத்தை இன்னும் கூடுதலாக ஆக்குவதற்காக, 10 எம்.வி.ஏ., அல்லது 20 எம்.வி.ஏ., கூடுதலாக நாம் மின் மாற்றிகளை அமைத்து மின்சாரத்தை வழங்கிக்கொண்டிருக்கின்றோம். திடீரென்று 33/11 கே.வி.ஏ., transformer-லிருந்து 110/11 கே.வி.ஏ., transformer-ஆக மாற்றுவது என்று சொன்னால், 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்ற வகையிலே, அந்தப் பகுதியிலே மின்சாரத்தைப் பயன்படுத்துகின்றவர்கள் இருக்க வேண்டும். அப்படித் தேவையிருந்தால்தான், அந்த 110 கே.வி.ஏ., மின்சாரத் துணை மின் நிலையம் அமைக்கப்படுமே தவிர, தேவையில்லாமல் மின்சார வாரியத்தினுடைய பணத்தை ரூ.10 கோடி, ரூ.15 கோடி செலவு செய்து பணத்தை வீணாக்க மின் வாரியமும் விரும்பாது, மாண்புமிகு உறுப்பினரும் விரும்பமாட்டார் என்று கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டத்தைத் 'தென்னை நகரம்' என்று அனைவரும் செல்லமாக அழைப்பார்கள். கேரள மாநிலத்திலே எவ்வளவு தென்னை விவசாயம் உள்ளதோ, அதே அளவிற்கு பொள்ளாச்சி வட்டாரத்தில் தென்னை விவசாயம் உள்ளது. அந்தப் பகுதி விவசாயிகளுக்குப் பகல் நேரத்தில் shift முறையில் 6 மணி நேரம் மட்டும்தான் மின்சாரம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், காற்றாலைமூலம் ஏராளமான மின்சாரம் உற்பத்தி செய்யப்படுவதாகச் சொன்னார்கள். எனவே, அதனைக் கருத்தில் கொண்டு, தென்னை விவசாயம் மேலும் செழித்தோங்கத்தக்க வகையில், பகல் பொழுது முழுவதும் மும்முனை மின்சாரம் வழங்க இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு எத்தனை மணி நேரம் மின்சாரம் கொடுப்பது என்பது, அகில இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான், எந்த ஆட்சி இருந்தாலும் சரி, காங்கிரஸ் ஆட்சி, தி.மு.க. ஆட்சி, பிறகு அ.தி.மு.க. ஆட்சி என்று எந்த ஆட்சி பொறுப்பிலே இருந்தாலும், பகல் நேரத்திலே ஆறு மணி நேரமும், இரவு நேரத்திலே எட்டு மணி நேரமும்தான் மின்சாரம் வழங்குவது என்று முடிவு எடுக்கப்பட்டு, இப்போது அமல்படுத்திக்கொண்டிருக்கின்றோம். அதிலும் குறிப்பாக, இலவச மின்சாரம் கொடுத்துக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், அந்த நேரத்தை அதிகப்படுத்தினால் சில பேர் அதிகமாகக்கூட மின்சாரத்தைப் பயன்படுத்துவார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலே, அந்த 14 மணி நேரம் மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்குத் தேவையான தண்ணீரே அங்கே இருக்காது என்ற காரணத்தால், இந்தக் கேள்வியே எழாது, தேவையும் இல்லையென்றே கருதுகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

(முற்பகல் 9–50

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடற்கரை ஓரங்களிலே இருக்கின்ற கிராமங்களில் எல்லாம் குண்டு விளக்குகள்தான் இரவில் எரிகின்றன; Tube lights எரிவதில்லை. ஆகவே, கடற்கரை ஓரங்களில் உள்ள கிராம மக்கள் மின்சாரம் பெறுகின்ற வகையில், காற்றாலைகள்மூலம் அங்கே மினசாரம் உற்பத்தி செய்து வழங்கப்படுமா? அதேபோல, மலைவாழ் பகுதியிலேயும் காற்றாலை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே எல்லா இடங்களிலேயும் காற்றாலை அமைத்துவிட முடியாது. ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, எங்கே காற்று அதிகமாக வீசுகிறதோ, அதாவது, 14 சதவிகிதம் அளவிற்குக் காற்றினுடைய வேகம் இருக்குமானால், அதற்கேற்றாற்போல அங்கேயெல்லாம் காற்றாலைகள் அமைக்கப்படும். திருவண்ணாமலையிலேயோ அல்லது வேலூர் மாவட்டத்திலேயோ

[2006 ஆகஸ்ட் 22

காற்றாலைகள் அமைக்கக்கூடிய அளவிற்கு அங்கே காற்று வீசவில்லை. கன்னியாகுமரி மாவட்டம், நெல்லை மாவட்டம், அதைப்போல, கோவை மாவட்டத்திலே இன்றையதினம் காற்றாலைகள் அமைப்பதற்கான காற்று வேகமாக வீசிக்கொண்டிருக்கிறது. எனவேதான், அங்கே புதிய காற்றாலைகளை அமைத்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், என்னுடைய பண்ருட்டி தொகுதியில், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், ஒரு 110 கே.வி., துணை மின் நிலையம் அமைப்பதற்கு, கீழக்குப்பம் பகுதியில் இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டு, அதைத் தொடங்குவதற்கான முயற்சி இருந்துகொண்டிருந்தபோது, ஆட்சி மாறியது. ஆட்சி மாறிய 5 ஆண்டு காலத்திலும், அந்தத் துணை மின் நிலையம் தொடங்கப்பட வேண்டுமென்று பல முறை வற்புறுத்தியும்—அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு விட்டது; பஞ்சாயத்தில் இடத்தைத் தேர்வு செய்து, அதற்கான பணத்தை நம்முடைய மின் வாரியத்திற்குத் தந்திருக்கிறார்கள். மின் வாரிய Superintendenting Engineer அவர்களும் கோப்புகளை நம்முடைய மின் வாரிய அலுவலகத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால்--இதுநாள் வரையில் அந்தப் பணி தொடங்கப்படாமல், அங்கே சீரான மின்சாரம் இல்லாமல், அந்த மக்கள் மிகப் பெரிய அவதிக்குள்ளாகின்றார்கள். அதனால், நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞருடைய அரசு, இந்த ஆண்டே அந்தத் துணை மின் நிலையத்தைத் தொடங்குவதற்கு வழிவகை காணுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அதேபோல, கிராமப்புறங்களிலே இருக்கின்ற மின் மாற்றிகள் எல்லாம், சாலையோரங்களிலும், தெருக்களின் நடுப் பகுதியிலும் இருக்கின்றன. அது சில வீடுகளின்மேல் தவழ்ந்து போகிறது. அதை மாற்றுவதற்கு, மின் துறை அதிகாரிகளிடத்தில் அந்தக் குடும்பத்தில் வசிப்பவர்கள் மனுக் கொடுத்தால், ஒரு மின் மாற்றியை மாற்ற வேண்டுமென்று சொன்னால், 30 ஆயிரம் ரூபாய், 60 ஆயிரம் ரூபாய் மின் துறைக்குப் பணம் கட்டினால்தான் மாற்ற முடியும் என்கிறார்கள். குடிசைகளில் வாழ்கின்ற ஏழை மக்கள், தங்கள் வீடுகளின்மீது எங்கு மின் கம்பிகள் பட்டு, தீப்பற்றி எரிந்து விடுமோ என்ற அவலத்தில் அந்த மனுவைக் கொடுக்கின்றபோது, அவர்களிடத்தில், 30 ஆயிரம்



2006 ஆகஸ்ட் 22]

ரூபாய், 20 ஆயிரம் ரூபாய் கட்டுங்கள், அப்போதுதான் மின் மாற்றிகளை மாற்றியமைக்க முடியும்; அந்த line-களை, கம்பிகளை மாற்றியமைக்க முடியும்' என்று கூறுகிறார்கள். கருணையோடு மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் பரிசீலித்து, அப்படியொரு ஆபத்து ஏற்படுகின்ற சூழ்நிலையில் இருக்கின்ற மின் மாற்றிகளைக் கட்டணம் இல்லாமல், அந்தக் கட்டணத்தை மின் வாரியமே செலுத்தி, மாற்றியமைப்பதற்கான வழிவகை செய்யுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை தி.மு.க. ஆட்சியிலே இருந்தபோது, 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கு அனுமதி கொடுக்கப்பட்டு, கடந்த ஆட்சிக் காலத்திலே பணம் ஒதுக்கியும்கூட, அது கட்டப்படவில்லை என்று சொன்னார்கள். இரண்டு தினங்களுக்கு முன்னாலேகூட, கடந்த காலத்திலே அனுமதி வழங்கப்பட்டு, அலமாதி என்ற இடத்திலே 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க 150 கோடி ரூபாய் பணத்தை ஒதுக்கியும், அதற்கான திறப்பு விழா நடக்காமலே இருந்தது. இப்போது இரண்டு தினங்களுக்கு முன்னாலேதான் நான் போய், அந்தத் துணை மின் நிலையத்தைத் தொடங்கி வைத்துவிட்டு வந்திருக்கின்றேன். பொதுவாக, மின்சாரத் துறை என்பது ஒரு Essential Service. அது எந்த ஆட்சியாக இருந்தாலும், அதற்கு முன்பிருந்த ஆட்சி திட்டம் தீட்டினால், அதை அமல்படுத்தியாக வேண்டும். ஆனால், என்ன காரணத்தினாலோ, சில இடங்களிலே அப்படிப்பட்ட நிலைகள்.

அதைவிட வேதனையான செய்தி என்னவென்றால், நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 24 மணி நேரத்திற்குள்ளாக, ஒரு வீட்டிற்கு மின் இணைப்பு வேண்டுமென்றால், கொடுக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருக்கின்றோம். யாராவது கொடுக்கவில்லை என்றால், அவர்களைப் பணியிலேயிருந்துகூட நீக்குகின்றோம். ஆனால், கடந்த கால ஆட்சியிலே, நான்கு முறை முதலமைச்சராக இருந்த இன்றைய முதல்வர் கலைஞருடைய வீட்டிற்கே 7 மாத காலமாக வீட்டிற்கு மின் இணைப்புக் கேட்டு, மின்சாரமேகூட கொடுக்காமல் இருந்தார்கள். பிறகு இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் வீட்டிற்கே மின்சாரத்தைக் கொடுத்தோம். அதைப்போல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன் அவர்களுடைய தொகுதியிலே, 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை உடனடியாக அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்து, இந்த ஆட்சி இருக்கும்போதே தொடங்கி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2006 ஆகஸ்ட் 22

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, டாக்டர் க. நெடுஞ்செழியன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**63—**

## மண்வளப் பரிசோதனை நிலையம்

***1292—டாக்டர் க. நெடுஞ்செழியன்:**

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் இலவச மண்வளப் பரிசோதனை நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்திவேலூரில் அந்நிலையத்தினை அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஒவ்வொரு மாவட்டத்திலும் இலவச மண்வளப் பரிசோதனை நிலையம் அமைக்கத் தற்போது அரசிடம் திட்டம் ஏதுமில்லை. (ஆ) வினா எழவில்லை.

*முற்பகல் 9—55*

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் பெருமக்கள் இடுகின்ற உரங்களின் விலைவாசி விண்ணளவு உயர்ந்து கொண்டிருக்கிற காலத்தில், தனது மண்ணின் தன்மைக்கேற்ப என்னென்ன உரங்கள், எவ்வளவு உரங்கள் எந்தெந்தக் காலக்கட்டத்தில் இடப்பட வேண்டுமென்ற அறிவுரைகளைப் பெற்று, வெகுவான உற்பத்திச் செலவைக் குறைப்பதுடன், விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஏதுவாக மண்வளப் பரிசோதனை நிலையம் மாவட்டத்தின் தலைமையிடத்தில் அமைந்திருந்தாலுங்கூட நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள், மாவட்டத்தில் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு குறிப்பிட்ட நாள் முகாமிட்டு விவசாயிகளிடம் மண் மாதிரிகளைப் பெற்று, மண் பரிசோதனை செய்து, உரப் பரிந்துரைகளை அளித்தால் நலமாக இருக்கும் என்பதால், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் அதற்கேற்ப ஆவன செய்வார்களா அல்லது ஒவ்வொரு ஒன்றியத்திலும் இருக்கும் வேளாண்மைத் துறையினர் விவசாயிகளிடம் மண் மாதிரிகளைப்



2006 ஆகஸ்ட் 22]

பெற்று, அதனை மாவட்ட மண் பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பிப பரிசோதனைக்குட்படுத்தி, உரங்கள் இடுவதற்கான அறிவுரைகளை விவசாயிகளுக்கு வழங்க மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விழைகின்றேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 19 மண் ஆய்வுக் கூடங்கள், மாவட்டத்திற்கு கூடங்கள் மற்றும் 16 நடமாடும் மண் ஆய்வுக் கூடங்கள், மாவட்டத்திற்கு ஒன்றாக வேளாண்மைத் துறையின்மூலம் இயங்கி வருகின்றன. இந்த ஆய்வுக் கூடங்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயன் பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றன. விளை நிலங்களில் இருந்து சேகரித்துப் பெறப்படும் மண் மாதிரிகளில் பேரூட்டச் சத்துக்களான தழைச் சத்து, மணிச் சத்து, சாம்பல் சத்து-சத்துக்களின் நிலை மற்றும் மண்ணின் கலர், அமில நிலை, உவர் தன்மை ஆகியவையும் கண்டறியப்பட்டு, உரிய பரிந்துரைகளும், நிலச் சீர்திருத்த வழிமுறைகளும் விவசாயிகளுக்குத் தற்போது தெரிவிக்கப்படுகின்றன. இத்துடன் நுண்ணூட்டச் சத்துக்கள் ஆய்வும் ஆய்வுக் கூடங்களில் மேற்கொள்ளப்பட்டு, நுண்ணூட்டப் பரிந்துரைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. பேரூட்டச் சத்துக்களின் ஆய்விற்கு, ஒரு மண் மாதிரிக்கு ரூ.5/—ம், நுண்ணூட்டச் சத்துக்களின் ஆய்விற்கு ஒரு மண் மாதிரிக்கு ரூ.5/—ம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

தற்போது, சேலத்திலே இயங்கி வந்த நடமாடும் மண் பரிசோதனை நிலையம், நாமக்கல் மாவட்ட விவசாயிகள் எளிதில் பயன் பெறும் வகையில், நாமக்கல்லைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அந்த மாவட்டத்திலே உள்ள கபிலர்மலை தொகுதி விவசாயிகளும் பயன்படுத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டத்தில் பல பகுதிகளில், குறிப்பாக நன்னிலம் தொகுதியில், பேரளம் பகுதி, அதேபோன்று மயிலாடுதுறை, சீர்காழி போன்ற பகுதிகளில் குறுவை நெல் அறுவடை தொடங்கி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. உற்பத்தி செய்த விவசாயிகள் நெல்லைக் கொள்முதல் நிலையத்திற்குக் கொண்டு சேர்ப்பதில் அதிகச் செலவு ஆகின்றது. எனவே, நெல்லுக்கு ஊக்கத் தொகை வழங்கி,

[2006 ஆகஸ்ட் 22

அவர்களுக்கு உதவி செய்ய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம் விவசாயத்தையே நம்பியிருக்கிற மாவட்டம். வடாற்காடு மாவட்டத்திலே இருந்து திருவண்ணாமலை மாவட்டம் பிரிந்து ஏறக்குறைய 11 ஆண்டுகள் ஆகியும்கூட, அந்தப் பகுதியில் இருக்கிற விவசாயிகளுக்காக இலவச மண் பரிசோதனை நிலையத்தை இதுவரை அந்த விவசாயிகள் பயன் பெறுகின்ற வகையில் இந்த அரசு அமைக்கவில்லை. அமைப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை உங்கள்மூலமாக நான் அறிய விரும்புகிறேன். அப்படி அமைக்கவில்லையென்றாலும்கூட, விவசாயிகள் பயன் பெறுவதற்காக நடமாடும் மண் பரிசோதனைக் கூடத்தைத் திருவண்ணாமலையைத் தலைமையிடமாகக் கொண்டு அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதையும் தங்களின்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி காங்கேயம் வட்டத் தலைநகரமாக இருக்கிறது. அங்கே சுமார் 40,000 மக்கள் வசிக்கிறார்கள். அங்கே உழவர் சந்தை அமைக்கிற திட்டம் அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறதா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி, மூலக்கேள்விக்குச் சம்பந்தம் இல்லாததாக இருக்கிறது.



2006 ஆகஸ்ட் 22]

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வி உழவர் சந்தையைப் பற்றியது. எனவே, நான் அடுத்த கேள்விக்குக் கையை உயர்த்தலாம் என்றிருந்தேன். நான் கையை உயர்த்தியது, மின்சாரத் துறைக்காகக் கையை உயர்த்தினேன். மின்சாரத் துறையிலே கேள்வி கேட்பதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை. உழவர் சந்தை என்பது முக்கியமான ஒன்று. குறிப்பாக காங்கேயம் மிகப் பெரிய தொகுதி. எனவே, அடுத்த கேள்வி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். வினா எண் 64, திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**64—**

### உழவர் சந்தை

***1580—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேன்கனிக்கோட்டையில் விவசாயிகளின் நலன் கருதி உழவர் சந்தை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்சமயம் கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரில் உழவர் சந்தைகள் நல்ல முறையில் செயல்பட்டு வருவதால், தேன்கனிக்கோட்டை பகுதியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) வினா எழவில்லை.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை, தளி பகுதிகளில் காய்கறிகள் விளையக்கூடிய நல்ல சீதோஷ்ண நிலை இருப்பதால், பீட்ரூட், கேரட், முட்டைக்கோஸ், காலிஃபிளவர் போன்ற காய்கறிகள் அதிக அளவிலே உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகத்திலே உள்ள மற்ற மாவட்டங்களுக்கும், மற்ற மாநிலங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. ஆகவே, அந்தப் பகுதி விவசாயிகளின் நலன் கருதி, தேன்கனிக்கோட்டையில் உழவர் சந்தை

அமைக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, அதேபோல, **விவசாயிகள்** அல்லாதவர்கள், போலியாக உழவர் அட்டைகளைப் பெற்று உழவர் சந்தையிலே பயன்படுத்தி வருகின்றனர். ஆகவே, அத்தகைய முறைகேடுகளைத் தடுக்க, சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தையை அமைக்க நடவடிக்கை எடுக்கும்போது, காய்கறி உற்பத்தி அளவையும் கணக்கிடுகிறோம். நுகர்வோர்களுடைய எண்ணிக்கையையும் கணக்கிட்டு அந்த உழவர் சந்தையைத் தொடங்கினால்தான் இலாபத்திலே நடைபெறும். அந்த அடிப்படையிலே, தேன்கனிக்கோட்டை கிராமத்திலே, மொத்த மக்கள்தொகை 19,328 பேர் என்றும், மொத்தக் காய்கறி சாகுபடிப் பரப்பு 2,125 எக்டேரில், 23,375 மெட்ரிக் டன் உற்பத்தி ஆனாலும், மக்கள்தொகை குறைவாக இருக்கக்கூடிய காரணத்தினாலே, தேன்கனிக்கோட்டைக்கு நுகர்வோர்கள் அதிகம் வரமாட்டார்கள். ஆகவே, அங்கே சந்தை தொடங்குவது அவசியமில்லை என்று நாங்கள் கருதுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது வாய்ப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கிருஷ்ணகிரி மாவட்டம், எனது மாவட்டத்திற்கு இடையிலே சேலம் மாவட்டம் மட்டும்தான் குறுக்கே இருக்கிறது; நெருங்கிய மாவட்டம்தான். காங்கேயம் தொகுதியைப் பொறுத்தவரையிலே, காங்கேயம் ஒன்றியம், பக்கத்திலே குண்டடம் ஒன்றியம், இரண்டிற்கும் நடுவே காங்கேயம் நகரம் இருக்கிறது. அங்கே சுமார் 40 ஆயிரம் மக்கள் வசிக்கிறார்கள். அங்கே நிறைய விவசாயிகள், தாங்கள் விளைவித்த காய்கறிகளை, தாராபுரம் சந்தைக்கும், ஈரோடு சந்தைக்கும் கொண்டு சென்றுகொண்டிருக்கிறார்கள். எனவே, அங்கே வாங்குகிற சக்தியும் மக்களிடத்திலே நிறைய இருக்கிறது. மக்கள்தொகை இருக்கிறது. விவசாயிகள் விளைவிக்கிற விளைபொருட்களும் நிறைய இருக்கின்றன. எனவே தமிழக அரசு, தலைவர் கலைஞர் தலைமையில் கருணையோடு இருக்கிற அரசு, கண்டிப்பாக, கருணையோடு காங்கேயத்தில் உழவர் சந்தையை அமைக்கத் திட்டம் தீட்டுமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25-10-1999-ல், முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்தபோது, இன்றைய முதலமைச்சர் அவர்கள், 100 உழவர் சந்தைகள் உடனடியாகத் தொடங்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டு, அதன் பேரில், 103 உழவர் சந்தைகள் தொடங்கப்பட்டன. பிறகு வந்த ஆட்சியின் நடவடிக்கை காரணத்தினால், அந்தச் சந்தைகள் சரியாகச் செயல்படாமல், 28 சந்தைகள் மூடப்பட்டுவிட்டன. மற்ற உழவர் சந்தைகளில், வணிகர்கள் சில பேர் உள்ளே நுழைந்துவிட்டார்கள். ஆகவே, இப்போது ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஒரு மாத காலத்திற்குள்ளாக, விவசாயிகளுக்குப் பதிலாக வணிகர்கள் உழவர் சந்தையிலே வியாபாரம் செய்ததையெல்லாம் தடுத்து நிறுத்தி, விவசாயிகளைக் கண்டறிந்து, மீண்டும் புதிய கார்டுகள் வழங்கப்பட்டு, இந்த 103 உழவர் சந்தைகளும் இப்பொழுது நல்ல முறையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, தேவை எங்கு என்று கோரிக்கை வருகிறதோ, அதை விசாரித்தறிந்து, காய்கறி உற்பத்தியாளர்கள், நுகர்வோர்களுடைய எண்ணிக்கையையும் பார்த்து, தொடங்க வேண்டுமென்ற அவசியம் ஏற்பட்டால், கண்டிப்பாக மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே, கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கிற அரசு, உழவர் சந்தையை சிறப்பாகப் புதுப்பொலிவோடு நடத்திக்கொண்டிருக்கிறது. அதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை இன்னும் கூடுதலாக்க அரசு முன்வருமா? அதேபோன்று, உழவர் சந்தைக்கு விவசாயிகள் எடுத்து வருகிற பொருட்கள் முழுவதையும் அன்றைக்கே விற்பனை செய்ய முடியவில்லை. மறுநாள் விற்பனை செய்வது என்று சொன்னால், காய்கறிகள் வாடிவிடுகிற நிலைமை இருக்கிறது. எனவே, அவற்றைப் பாதுகாப்பதற்கான குளிர்பதன அறை ஏதாவது அங்கே ஏற்படுத்த முடியுமா? அதேபோன்று விவசாயிகள் நலன் கருதி, அந்த உழவர் சந்தையிலேயே விதைகள் விற்பனை மையம் அமைத்துத்தரவேண்டும். அதேபோன்று, மகளிர் சுய உதவிக் குழுக்கள் இப்பொழுது ஏராளமாக உற்பத்தி செய்கிற உணவுப் பொருட்களை விற்பதற்கான அறைகளை

[2006 ஆகஸ்ட் 22

அங்கே ஒதுக்கித் தர முடியுமா என்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய செங்கல்பட்டு தொகுதியிலே இருக்கிற செங்கல்பட்டு உழவர் சந்தையைக் கூடுதலாக நவீனப்படுத்த வேண்டும். அதற்குச் சுற்றுச்சுவர்கூட இல்லை. அதையெல்லாம் செய்து கொடுக்க நம்முடைய அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சி பொறுப்பேற்றதும், பழுதடைந்திருந்த அந்த உழவர் சந்தைகளைச் சீரமைப்பதற்காக 42 இலட்சம் ரூபாய் செலவு செய்து சீரமைத்திருக்கின்றோம். அப்படி இன்னும் ஏதாவது ஒன்றிரண்டு இடங்களிலே அந்தப் பணி நடைபெறாமல் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் சொன்னதை அரசாங்கம் பரிசீலிக்கும். ஒரு கணக்கை மட்டும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். நேற்றையதினம், 21-8-2006 அன்று, மொத்தம் 71 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 870 மெட்ரிக் டன் காய்கறிகளை 6,054 விவசாயிகள் கொண்டு வந்து விற்பனை செய்யக்கூடிய அளவிற்கு இப்பொழுது நல்ல முறையிலே உழவர் சந்தைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தக் கோரிக்கையை இந்த அரசு பரிசீலித்து, அவசியமானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. குருசாமி.

**திரு. செ. குருசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உழவர் சந்தை ஈரோட்டில் மட்டும்தான் இருக்கிறது. அந்தியூரிலேயிருந்து ஈரோட்டுக்கு 40 கிலோ மீட்டருக்கு மேலாக விவசாயிகள் சென்று தங்களுடைய விளைபொருட்களை விற்கவேண்டியதாக இருக்கிறபடியினாலே, அந்தியூரிலேயே ஒரு உழவர் சந்தையை அரசு ஏற்படுத்திக் கொடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருக்கின்றார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, திரு. க. சுந்தர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2006 ஆகஸ்ட் 22]

65—

## பணிமனை

***387—திரு. க. சுந்தர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் வட்டத்தில் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனை அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உத்திரமேரூருக்கு மிக அருகில் உள்ள 5 பணிமனைகளின்மூலமாக உத்திரமேரூர் மற்றும் அதனைச் சார்ந்த பிற பகுதிவாழ் மக்களுக்குப் போதிய பேருந்து வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. உத்திரமேரூருக்கு அருகிலேயே கீழ்க்கண்ட ஐந்து அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் பணிமனைகள் அமைந்துள்ளன. காஞ்சிபுரம், 27 கிலோ மீட்டரிலும், செங்கல்பட்டு, 29 கிலோ மீட்டரிலும், மதுராந்தகம், 25 கிலோ மீட்டரிலும், செய்யாறு, 30 கிலோ மீட்டரிலும், வந்தவாசி, 29 கிலோ மீட்டரிலும் உள்ளன. மேலே குறிப்பிடப்பட்ட ஐந்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணிமனைகள்மூலமாகத் தினமும் 19 நகரப் பேருந்துகள்மூலம் 162 நடைகளும், 38 புறநகர்ப் பேருந்துகள்மூலம் 160 நடைகளும், உத்திரமேரூருக்கும் மற்றும் உத்திரமேரூர் வழியாகவும் பல்வேறு ஊர்களுக்கு இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, உத்திரமேரூரில் ஒரு பணிமனை அமைத்துப் பேருந்து வசதி செய்ய வேண்டிய தேவை தற்போது எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர்.

**திரு. க. சுந்தர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1998-லே நம்முடைய மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் அன்றைக்கு இருந்த போக்குவரத்துக் கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் எல்லாம் உத்திரமேரூரிலே இடத்தைப் பார்வையிட்டு, அந்தப் பேரூராட்சியின் சார்பிலே 6 ஏக்கர் நிலம் வழங்கப்படலாம் என்ற தீர்மானத்தையும் நிறைவேற்றி, அங்கே பணிமனை அமைப்பதற்கான அந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்தார்கள். ஆனால், இடையிலே நிறுத்தப்பட்டுவிட்டது. எனவே,

அது அமைச்சருடைய கவனத்திற்கு வந்து, அந்தப் பணிமனை அமைக்கின்ற திட்டம் முடியுமா என்பதை இந்த நேரத்திலே அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—10

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி நிலம் இலவசமாகத் துறைக்குத் தரப்படுமானால், அதைப் பற்றி யோசனை செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்டுமன்னார்கோவிலிலே பணிமனை அமைக்க வேண்டுமென்கின்ற கோரிக்கை நீண்ட நாட்களாக முன்வைக்கப்பட்டு வருகிறது. தற்போது திருச்சியிலிருந்து காட்டுமன்னார்கோவில் வழியாக சிதம்பரம் செல்லும் சாலை தேசிய நெடுஞ்சாலையாக அறிவிக்கப்பட்டிருப்பதால் போக்குவரத்து இன்னும் அதிகரிக்க வாய்ப்பு இருக்கின்ற நிலையிலே, அங்கே ஒரு போக்குவரத்துப் பணிமனையை இந்த அரசு உருவாக்க முன்வருமா? நம்முடைய பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள், அதற்கு அந்த இடத்தைக்கூட தன் முயற்சியிலே வாங்கித் தர முடியும். அந்த நிலையிலே அந்தப் பணிமனையை அங்கே அமைக்க அரசு முன்வருமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவ்ர்களே, இடம் வாங்கித் தருவதாலேயே ஒரு பணிமனை அங்கு அமைக்கப்படும் என்று அல்ல. தேவைப்படின், அருகிலேயிருக்கின்ற கிராமங்களுக்கு அதிகமாக இயக்க வேண்டிய தூரம், ஏற்கெனவே 30 கிலோ மீட்டர் வரை இயக்கலாம் என்று இருந்தது; இப்போது இந்த அரசு 35 கிலோ மீட்டர் வரை பேருந்துகளை இயக்கலாம் என்று ஒரு புதிய சட்டம் போட்டிருக்கிறது. அப்படி தூரத்தைக் கணக்கிட்டுத்தான் பணிமனைகள் அமைக்க முடியும். அங்கு, காட்டுமன்னார்கோவிலில் அவசியம் ஏற்படின், ஆய்வு செய்து, அவசியமிருந்தால் அதைப் பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன். (குறுக்கீடு) அமைதியாக இருக்க வேண்டும்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகப் பணிமனைகளில் கான்கிரீட் தளங்கள் இல்லாத பணிமனைகள் எவ்வளவு இருக்கின்றன? 



கான்கிரீட் தளங்கள் இல்லாத போக்குவரத்துக் கழகப் பணிமனைகளில் கான்கிரீட் தளங்கள் அமைக்கும் கருத்துரு அரசிடம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியிலிருந்து இதற்கென்று தனியாக ஒரு தனிக் கேள்வி போட்டால், அது பற்றிய விவரங்களை அவர்களுக்குச் சொல்ல இயலும். முதலிலே, பணிமனை புதியதாக அமைக்கப்படுகின்றபோது கான்கிரீட் தளங்கள் அமைக்கப்படுவதில்லை. படிப்படியாகத்தான் அதை விரிவுபடுத்தி, கான்கிரீட் தளங்கள் அமைத்து, பல சௌகரியங்களைச் செய்துகொண்டிருக்கின்றார்கள். உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி கேட்டால், அதைப் பற்றி நான் விளக்கம் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தின் தலைமை நகரத்தில் இயங்கிக்கொண்டிருந்த பழைய பேருந்து நிலையம், புதிய பேருந்து நிலையமாக மாற்றப்பட்ட பிறகு, பயணாளிகள் அதிகம் பாதிப்பிற்குள்ளாகியிருக்கிறார்கள். எனவே, ஏற்கெனவே இயங்கிக்கொண்டிருந்த பழைய பேருந்து நிலையத்தில், திருவண்ணாமலை, விழுப்புரம், மதுரை, கன்னியாகுமரி போன்ற விரைவுப் பேருந்துகளை அங்கு இயக்க அரசு ஆவன செய்யுமா? அதே நேரத்தில், போக்குவரத்துக் கழகங்களில் காலிப் பணியிடங்களை நிரப்புவதாக அரசு அறிவித்தது. அந்த அறிவிப்பின்படி, பெண் ஓட்டுநர்களும், நடத்துனர்களும் பணி நியமனம் செய்யப்படுவார்களா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நேற்றைக்கு முன்தினம் அவருக்குத் தேவையான பேருந்துகளையெல்லாம் எழுதித் தந்திருக்கிறார்கள். நேரிடையாக அதிகாரிகளிடம் சொல்லப்பட்டிருக்கிறது. போக்குவரத்துக கழகங்களில் இருக்கின்ற காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதிலே கண்டக்டர், டிரைவர் பணியிடங்களை நிரப்புவது பற்றி நீதிமன்றத்திலே பிரச்சினை இருக்கிற காரணத்தினால் கொஞ்சம் தாமதமாகிக்கொண்டிருக்கின்றது. மற்ற இடங்களிலே நிரப்புவதற்குத் தொடர்ந்து அந்தப் பணி

ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. பெண் டிரைவர், கண்டக்டர் நியமிக்கப்படுவார்களா என்பதைப் பற்றி நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து பேசித்தான், அதைச் சொல்ல முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது முகையூர் தொகுதிக்குட்பட்ட விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலைக்கும், விழுப்புரத்திலிருந்து திருக்கோவிலூருக்கும் இரண்டு பேருந்துகளைச் சென்ற வாரம் இயக்கினார்கள். ஆனால், அந்தப் பேருந்து, திருக்கோவிலூரிலிருந்து விழுப்புரத்திற்கு ஒரு நடையும், விழுப்புரத்திலிருந்து திருவண்ணாமலைக்கு ஒரு நடையும் மட்டுமே சென்று வருகிறது. அதை முழுமையாக, திருக்கோவிலூரிலிருந்து திருவண்ணாமலைக்கு ஒரு வண்டியும், திருக்கோவிலூரிலிருந்து விழுப்புரத்திற்கு ஒரு வண்டியும் இயக்க அரசு முன்வருமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினா பணிமனை கட்டுவது பற்றியது. தொடர்ந்து பேருந்து விடுவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுத்தான் இந்தப் பேருந்தே இயக்கப்படுகிறது. நான் பல முறை சொல்லியிருக்கிறேன். புதிய பேருந்துகள் வந்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையெல்லாம் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசசேகரன்.

*முற்பகல் 10–15*

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ஆலங்குடியில் போக்குவரத்துப் பணிமனை கட்டுவதற்காகக் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னால் இடம் தேர்வு செய்யப்பட்டு, இதுவரையில் பணிமனை சம்பந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து, ஆலங்குடியில் பணிமனை கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கடந்த கால அம்மா ஆட்சியில் போக்குவரத்துப் பணிமனை கட்டி இன்னும் திறக்கப்படாமல் இருக்கின்றது. அதை எப்போது அரசு திறக்கும் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். மேலும், கடந்த காலங்களில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலும் சரி, தற்போதைய ஆட்சிக் காலத்திலும் சரி, என்னுடைய மானாமதுரை தொகுதியில் இதுவரை ஒரு கட்டடம் கூடக் கட்டப்படவில்லை. ஆகவே, எங்களுடைய அம்மா ஆட்சியில் நாங்கள் கட்டிய அந்தப் பணிமனையை அந்த அரசு எப்போது திறந்து வைக்கும் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் அம்மா ஆட்சியில் கட்டியதை நீங்களே திறக்காமல் விட்டீர்கள்? (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. குணசேகரன், சொல்லுங்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Supplementary question-க்கு supplementary question கிடையாது. உட்காருங்கள். வினா எண் 66. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டிருக்குமேயானால், விரைவிலே அதிகாரிகளை விட்டு ஆய்வு செய்து, திறப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், ** திறக்கப்படவில்லை என்று. இங்கே Chief Minister Room-லிருந்தே switch போட்டுத் திறந்த இடங்கள் நிறைய இருக்கின்றன. நீங்கள் அது மாதிரி திறந்திருக்க வேண்டியதுதானே இதையும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**66—**

## தங்கும் விடுதி மற்றும் சாலையோர உணவகம்

***818—திரு. இல. வேலுசாமி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டத் தலைநகரமாக விளங்கும் தருமபுரியில் தங்கும் விடுதியும், சாலையோர உணவகமும் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தருமபுரியில் தங்கும் விடுதியும், சாலையோர உணவகமும் அமைத்திட எவ்விதச் செயற்குறிப்பும் தற்போது இத்துறையின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் நீர்வீழ்ச்சி, தீர்த்தமலை ஆகிய

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இரண்டு பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலங்கள் உள்ளன. அங்கே வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களும், வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் திரள்திரளாக வந்து செல்கிறார்கள். எனவே, தருமபுரி நகரில் தங்கிச் செல்லக்கூடிய அளவுக்கு, சுற்றுலாப் பயணிகளின் வசதிக்கேற்ப தமிழ்நாடு சுற்றுலாத் துறை சார்பில் தங்கும் விடுதி கட்டப்படுமா என்பதை அமைச்சர் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புவதோடு, தருமபுரி, ஓமலூர், தாரமங்கலம் ஆகிய மூன்று தொகுதிகளின் மையப் பகுதியான தொப்பூர் பகுதியில், பிரதான நால்வழிச் சாலையோரம் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மிகச் சிறப்பாகப் பயணிகள் உணவு விடுதி ஒன்று நடந்து வந்தது. ஆனால், சில ஆண்டுகளாக அது நடைபெறுவதில்லை. சுற்றுலாத் துறையின் சார்பாகப் பயணிகளுடைய நலன் கருதி அந்த விடுதி மீண்டும் ஆரம்பிக்கப்படுமா என்று பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10—20*

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், கிருஷ்ணகிரி பகுதியிலும், ஓசூர் பகுதியிலும், ஒகேனக்கல் பகுதியிலும் இந்தத் துறையின் சார்பாக விடுதிகள் இருக்கின்றன. அவையே போதுமானவையாக இத்துறை கருதுகிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துகளை ஏற்றுக்கொண்டு, துறையினுடைய அதிகாரிகளை அனுப்பி, பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வரக்கூடிய இடமான வேளாங்கண்ணியில் தங்கும் விடுதி அமைக்கும் பரிசீலனை அரசின் வசம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

[2006 ஆகஸ்ட் 22

67—

## திருக்கோயில் குளங்கள்

***501—திரு. எஸ்.கே. வேதரத்தினம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் நகரத்திலுள்ள அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான குளங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றித் தூர் வாரிப் புனரமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் நகரத்திலுள்ள அருள்மிகு வேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான குளங்களில் காணப்படும் ஆக்கிரமிப்புகளை அகற்றி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இக்குளங்களைத் தூர் வாரிச் சீரமைக்கத் திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லாததால், மாவட்ட நிர்வாகத்தின்மூலமாகத் தூர் வாரிச் சீரமைக்கத் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.கே. வேதரத்தினம்.

**திரு. எஸ்.கே. வேதரத்தினம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேதாரண்யேஸ்வரர் திருக்கோயிலுக்கு, நகரத்திலே மட்டும் கிட்டத்தட்ட 55 குளங்கள் இருக்கின்றன. அவற்றிலே 26 குளங்கள் தற்போது பகுதியாகவும், முழுமையாகவும் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. ஆகவே, தீ விபத்துக்கள் ஏற்படுகிறபோதுகூட, இதுபோன்ற குளங்களிலிருந்து நீரை எடுப்பதற்குள்ள வாய்ப்பு வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. இன்றைக்கு நீர்நிலைகளை மேம்படுத்த, நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்குப் பல வகைகளிலே முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற இந்தக் காலக்கட்டத்திலே, இதுபோன்ற குளங்களிலே இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுவது மிகவும் அவசியமாகிறது. எனவே, அரசு இதற்கு ஏதேனும் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2006 ஆகஸ்ட் 22]

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்னதைப்போல, இன்னும் கூடுதலாகவே, மொத்தம் 151 குளங்கள் அந்த ஆலயத்திற்குச் சொந்தமான குளங்கள் இருக்கின்றன. ஆக்கிரமிப்பில் உள்ள குளங்கள் 7 குளங்கள் இருக்கின்றன. அவற்றிலே பொது மக்கள் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு இருக்கக்கூடியவை தற்போது 30 குளங்கள்தான். அந்தக் குளங்களிலும்; மத்திய அரசினுடைய சமச்சீர் வளர்ச்சித் திட்டத்தின்கீழே கடந்த 31–3–2006 முதல் 16 குளங்கள் தூர் வாரப்பட்டுள்ளன. எஞ்சிய குளங்களையும் தூர் வாருவதற்கான பணிகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே அந்தக் கோரிக்கை வைக்கப்பட்டு, வெகு விரைவிலே அது தீர்த்து வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி நகரத்தில் மேல்திருத்தணி என்ற இடத்திலே அமைந்திருக்கின்ற அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான குளத்தைச் சீரமைப்புச் செய்து, அங்கே வருகின்ற பல பக்தர்கள் தவறி விழுந்து இறப்பதை, சுற்றுச்சுவர் வேலி போட்டுத் தடுக்க இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி, வேதாரண்யேஸ்வரர் சம்பந்தப்பட்ட கேள்வி. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பற்றித் தனிக் கேள்வியாகக் கேட்டால், பதிலும் கிடைக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எல்.பி. தர்மலிங்கம்.

**திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்திற்கு உட்பட்ட சிறப்புமிக்க அருள்மிகு பண்ணாரி அம்மன் திருக்கோயில் உள்ளது. அங்கு பக்தர்கள் நிறையப் பேர் வருகிறார்கள். அவர்கள் உணவு உண்பதற்கும், ஓய்வு எடுப்பதற்கும் விடுதி இல்லை. அதை அரசு கட்டித் தருமா என்று பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்க விரும்புகின்றேன்.

[2006 ஆகஸ்ட் 22

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபோன்ற கேள்விகளைத் தனிக் கேள்விகளாகக் கேட்டால், ஏதுவாக இருக்கும். அதே நேரத்தில், தலைவர் கலைஞர் அவர்களுடைய தலைமையிலான அரசு, அனைத்து ஆலயங்களிலும் அடிப்படை வசதிகளைச் செய்து தருவதற்கு உறுதிபூண்டிருக்கின்றது. வெகு விரைவில் உறுப்பினரது கோரிக்கையும் பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**68—**

**மீன்பிடித் துறைமுகம்**

***1368—திரு. ஞா. ஜாண் ஜோசப்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இராமன்துறைக்கும், தேங்காய்ப்பட்டினத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இராமன்துறைக்கும், தேங்காய்ப்பட்டினத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு தொகுதிக்குட்பட்ட இராமன்துறைக்கும், கிள்ளியூர் தொகுதிக்குட்பட்ட தேங்காய்ப்பட்டினத்திற்கும் இடையில், தாமிரபரணி நதி கடலில் கலக்கும் இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைப்பதற்காக 200 இலட்சம் ரூபாய் முதல் தவணையாகவும், 72.75 இலட்சம் ரூபாய் நில ஆர்ஜிதம் செய்வதற்காகவும் அரசு ஒதுக்கியிருப்பதாக மானியக் கோரிக்கையின்மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ஏற்கெனவே



2006 ஆகஸ்ட் 22]

அரசுக்கு நன்றி தெரிவித்திருந்தாலும், மீண்டும் ஒரு முறைகூட நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த நில ஆர்ஜிதப் பணி முடிவடைந்ததா? இந்தத் துறைமுகப் பணி எப்போது தொடங்கும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், இராமன்துறைக்கும், தேங்காய்ப்பட்டினத்திற்கும் இடைப்பட்ட இடத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் எதுவுமில்லை. மாறாக, கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், தேங்காய்ப்பட்டினம் கிராமத்தில் சுமார் 700 மீன்பிடி விசைப் படகுகள் தங்கித் தொழில் புரிந்திட ஏதுவாக, ரூ.30.55 கோடி செலவில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய மீன்பிடித் துறைமுகம் அமைக்க கடந்த டிசம்பர் மாதம், 2005—ல் மாநில அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தினைத் தனியார்களிடமிருந்து கையகப்படுத்தும்பொருட்டு அரசால் ஒப்பளிக்கப்பட்ட தொகையான ரூ72.75 இலட்சம், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியருக்கு நில ஆர்ஜிதம் செய்யும்பொருட்டு வழங்கப்பட்டுள்ளது. தனியாருக்குச் சொந்தமான நிலங்களை ஆர்ஜிதம் செய்திடவும் மற்றும் வருவாய்த் துறைக்குச் சொந்தமான கடல் புறம்போக்கு நிலத்தினை மீன்வளத் துறைக்கு மாற்றம் செய்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இத்திட்டத்திற்கு மத்திய வனம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தால் சுற்றுச்சூழல் தடையில்லாச் சான்று வழங்கப்பட்டுள்ளது. மத்திய விவசாய அமைச்சகத்திடமிருந்து நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு ஆணை கிடைக்கப்பெற்றதும், ஒப்பந்ததாரர் தேர்ந்தெடுக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் தொடங்கப்பெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கடற்கரைக் கிராமங்களான கூட்டப்புளி, பெருமணல், தோமையார்புரம், இடிந்தகரை, கூத்தங்குளி, உவரி, கூட்டப்பனை, கூடுதாளை ஆகிய பகுதிகளில் தூண்டில் பாலம் அல்லது Mini Fishing Harbour—மீன்பிடித் துறைமுகம் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்மூலம் கோரிக்கை வைத்ததன் பயனாக, பொதுப் பணித் துறைமூலம் கட்டுவதாக இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு

மீன்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்வது, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி தாராளமாக இருக்கின்றது. அந்த நிதியைக் கொடுத்து, Mini Fishing Harbour,-- தூண்டில் பாலம் கட்டித் தர ஏற்பாடு செய்வீர்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தினை, நம்முடைய மாண்புமிகு முதல்வருடன் கலந்து பேசி ஆய்வு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**69—**

**மீன்பிடித் துறைமுகம்**

***1479—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் இரண்டாம் நிலை விரிவாக்கத் திட்டம் குறித்து அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, பழையாறு மீன்பிடித் துறைமுகத்தினை இரண்டாம் கட்டமாக விரிவாக்கம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

முற்பகல் 10—30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீர்காழி தொகுதி, பழையாறு மீனவர் கிராமத்தில் சுமார் ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றார்கள். பழையாற்றில் 250 விசைப் படகுகள் உள்ளன. அது மட்டுமல்லாமல், பூம்புகார், திருமுல்லைவாசல், தரங்கம்பாடி, தொடுவாய் ஆகிய கிராமங்களிலிருந்து 100 விசைப் படகுகளைப் பழையாற்றிலுள்ள தங்குதளத்தில்தான் கட்டவேண்டும். முதல் தங்குதளத்தில் குறைந்தபட்சம் 30 விசைப் படகுகள் மட்டுமே



கட்டக்கூடிய அளவுக்கு இடம் இருக்கின்றது. மேலும், இப்பொழுது 30 விசைப் படகுகள் சுனாமியால் பாதிக்கப்பட்டு, அந்த இடத்திற்கு நிதி கொடுத்து, 30 விசைப் படகுகளைக் கட்டுவதற்குப் பணிகள் நடந்து வருகின்றன. ஆனால், பழையாறை பொறுத்தவரையில் குறைந்தபட்சம் 350 விசைப் படகுகளைக் கட்டுவதற்குத் தளங்கள் அமைத்தால்தான், அங்கு படகுகளை நிறுத்த முடியும். இல்லையென்றால், மழைக் காலங்களில் மீனவர்கள் பெருமளவில் சிரமத்திற்கு ஆளாக்கப்படுவார்கள். எனவே, இந்த ஆண்டு எத்தனை விசைப் படகுகள் கட்டுவதற்குப் பரிசீலனையில் உள்ளது? மாண்புமிகு அமைச்சரவர்கள் எத்தனை விசைப் படகுகள் கட்டுவதற்கு முயற்சி எடுப்பார்கள்? அதே சமயத்திலே, இந்த ஆண்டு மாண்புமிகு அமைச்சரவர்கள் மேலும் கட்டிக் கொடுப்பதற்கு மறுபரிசீலனை செய்வார்களா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26 ஆம் நாள் ஏற்பட்ட சுனாமி பேரலையின் தாக்குதலால் பழையாறு மீன்பிடித் துறைமுகம் மிகவும் சேதமடைந்ததைத் தொடர்ந்து, சேதமடைந்தவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைத்திட, அரசு ரூ.300 இலட்சம் ஒப்பளித்து, தற்போது மராமத்துப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மேலும், பழையாறு மீன்பிடித் துறைமுகத்தில் கூடுதல் மீன்பிடிப் படகுகள் பாதுகாப்பாகத் தங்கி மீன்பிடித் தொழிலில் ஈடுபட ஏதுவாக, கூடுதல் உள்கட்டமைப்பு வசதிகளை இரண்டாம் கட்டமாக ரூ.10.28 கோடி செலவில் உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்த, 'அவசர சுனாமி மறுவாழ்வு சீரமைப்புத் திட்டத்தின்கீழ்' ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கென அரசால் முதற்கட்டமாக ரூ.2.168 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு முன் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால், உரிய நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆயவுப் பணிகள் முடிக்கப்பட்டவுடன், கட்டுமானப் பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்.

**டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே அதிகப்படியான மீனவர்கள் இருக்கிறார்கள்.

பல குடும்பங்கள் மீன்பிடித் தொழிலை நம்பியிருக்கின்றன. எப்படி டாக்டர் கலைஞர் அவர்கள் உழவர்களுக்கு இடைத்தரகர்களை நீக்கி, உழவர் சந்தையை ஏற்படுத்தி சகாப்தம் படைத்தாரோ, அதுபோல, மீனவர்களுக்கும் மீனவர் சந்தையை ஏற்படுத்தி மீண்டும் சரித்திரம் படைப்பாரா இந்தச் சரித்திர நாயகன் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீனவ மக்களுக்காக நல்ல பல திட்டங்களை வாரி, வாரி வழங்கியுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்து மிக நல்ல கருத்தாக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்தாலோசித்து, நல்ல முறையில் தீர்வு காணலாம்.

*முற்பகல் 10—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**70—**

## பால் குளிரூட்டும் நிலையம்

***332—மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):**

*மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை அளிப்பாரா—*

*(அ) சங்ககிரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?*

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) சங்ககிரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. (ஆ) வினா எழாது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கப்பட வேண்டியதனுடைய அவசியத்தைக் குறித்து 12—6—2000—ல் இந்தத் துறைக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தப் பகுதியிலே தினந்தோறும் 65 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தக் குளிரூட்டும் நிலையம் சங்ககிரியில் அமைந்தால் 1 இலட்சம் லிட்டர் பால் அதிகமாக வாய்ப்பு இருக்கிறது. இந்தப் பகுதியில் வாழ்கின்ற, வேளாண்மைத் தொழில் செய்யும் மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கை அது என்பதாலும், கிராமப்புறப் பொருளாதாரம் முன்னேற்றம் அடைகின்ற வாய்ப்பை ஏற்படுத்துகின்ற வகையிலும் சங்ககிரியிலே பால் குளிரூட்டும் நிலையம் அமைந்திட அரசு முன்னுரிமை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகக் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்கும் திட்டங்களுக்குத் தேசிய பால் வள வாரியம் தற்போது நிதியுதவி வழங்குவதோ அல்லது ஊக்கப்படுத்துவதோ இல்லை. புதிய பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கு, புதிதாகக் கிராமப்புறங்களிலுள்ள 2 முதல் 5 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மையமாக உள்ள, பால் உற்பத்தி அதிகம் செய்யப்படும் ஒரு சங்கத்தில் பால் குளிர்விப்பான்கள்—bulk milk coolers அமைக்கும் திட்டம் தமிழக அரசு மற்றும் மத்திய அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சங்ககிரியில் பால் சேகரிப்புப் பகுதியில் 5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள 12 பால் குளிர்விப்பான்களும், 2 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள 4 பால் குளிர்விப்பான்களும், ஆக 16 பால் குளிர்விப்பான்கள் அமைந்திட, சேலம் மாவட்டம், கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின்மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சேலம் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்திற்கு முன்னுரிமை வழங்கி, ஏற்கெனவே 2,000 லிட்டர் திறனுள்ள 4 பால் குளிர்விப்பான்கள் 50 சதவிகித மானியத்தில் வழங்கப்பட்டு, தற்போது சோதனை அடிப்படையில் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் தேவையான பால் குளிர்விப்பான்களை சேலம் ஒன்றியத்திற்கு வழங்கி,

சங்ககிரி பகுதியில் பால் குளிர்விப்பான்கள் நிறுவுவதற்கான திட்டம் நடவடிக்கையில் உள்ளது. எனவே, சங்ககிரியில் தனியாகப் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அவசியம் இல்லை என்ற நிலை உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ.பெ. துரைசாமி.

**மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரியில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏறத்தாழ 165-க்கு மேலாக உள்ளன. நமது அமைச்சர் அவர்கள், சங்ககிரியைச் சுற்றிப் பல இடங்களில் குளிரூட்டும் மையம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதுவும், 8 ஆயிரம் லிட்டர் கொண்ட பகுதிகளுக்குக் குளிரூட்டும் நிலையம் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், சங்ககிரியில் தினமும் 6.5 ஆயிரம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுவதால், குளிரூட்டும் மையம் இந்தப் பகுதியிலே அமைந்தால், local sales—உள்ளூரிலே விற்பனை அதிகமாகும்.

அதேபோல, இங்கு உற்பத்தி செய்யப்படுகின்ற பால் பரமத்திவேலூருக்கும், சேலத்திற்கும் அனுப்பப்படுகிறது. 15 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட பரமத்திவேலூருக்கு குளிரூட்டும் மையம் ஏற்கெனவே வழங்கி இருக்கின்றார்கள். 6.5 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட சங்ககிரி பகுதியிலே குளிரூட்டும் நிலையம் இந்த ஆண்டே அமைத்திட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைப்பதற்கு சாத்தியங்கள் இல்லை. ஆனால், தேவைப்படின், பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்குப் பரிசீலனை செய்து, அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 3. தகவல் கோரல்

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. வைகோ இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பொதுக் கூட்டத்தில் தெரிவித்த ஆட்சேபகரமான கருத்துகள்—அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்) பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Sit down, உட்காருங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நான் முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவாகளே, ஒரு முக்கியமான... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பதர் சயீத், ஓர் உறுப்பினர் பேசிக்கொண்டிருக்கும்போது எழுந்திருந்து நிற்கக் கூடாது. உட்காருங்கள் முதலிலே. Repeatedly I am telling you Please sit down. (Interruption) No, no, no, I won't allow you. Sit down. Mr. Peter is already speaking. (Interruption) No, no, sit down.

(முற்பகல் 10-40)

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையினுடைய கவனத்தினையும், உங்கள்மூலமாகத் தமிழக மக்களுடைய கவனத்தினையும், இந்த அரசினுடைய கவனத்தையும் மிக முக்கியம் வாய்ந்த ஒரு பிரச்சினை குறித்து நான் ஈர்க்க விரும்புகிறேன்.

இந்தப் பிரச்சினை தமிழகத்தினுடைய சமூக அமைதியினை, தமிழகத்தினுடைய பொருளாதார முன்னேற்றத்தினை, தமிழகத்தினுடைய வளர்ச்சியினை மிகவும் பாதிக்கும் என்கிற அபாயத்தினை உங்கள்மூலம் இந்த அவைக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேற்றையதினம் ஒரு பொதுக் கூட்டத்திலே மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுச் செயலாளர் வை.கோ. அவர்கள் பேசியுள்ள வார்த்தைகள், ஈழத் தமிழர்களுடைய நலனுக்காகச் சொல்லப்பட்ட வார்த்தைகளா அல்லது தமிழகத்தை ஒரு மிகப் பெரிய மரணப் பூங்காவாக மாற்றுவதற்காக அவர் விடுத்த அறைகூவலா என்பதை உங்கள்மூலம் நான் கேட்க விரும்புகிறேன்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2006 ஆகஸ்ட் 22

அவர்கள் பேசிய சில பகுதிகளை இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். அவர் சொல்கிறார்: "Don't create a Kashmir down South"--"தமிழகத்திலே தென்னிந்தியாவிலே ஒரு காஷ்மீரத்தை உருவாக்காதீர்கள்" என்று ஒரு அறைகூவலை விடுக்கிறார். காஷ்மீரைப் பற்றி இன்று உலகம் முழுவதும் அறியும். கடந்த 10, 15 ஆண்டுகளாக அந்த மாநிலத்திலே சமூக அமைதியில்லாமல், அந்த மாநிலத்தில் மாண்டு போன இளைஞர்கள், இளம் பெண்களுடைய எண்ணிக்கை ஏறக்குறைய ஒரு இலட்சத்திற்கும் அதிகம். அங்கே இருக்கின்ற பள்ளிக்கூடங்கள், அங்கே இருக்கின்ற கல்லூரிகள், அங்கே இருக்கின்ற தொழிற்சாலைகள், உலகமே வந்து இரசிக்கக்கூடிய சுற்றுலாத் தலமாக இருந்த காஷ்மீரம், இன்று இரத்த பூமியாக, அமைதியற்று, பெண்களும், ஆண்களும், இளைஞர்களும், அரசியல் தலைவர்களும், அதிகாரிகளும் வெளியேவே நடமாட முடியாத ஒரு சூழ்நிலை, 24 மணி நேரமும் இராணுவ ரோந்து, இராணுவப் பாதுகாப்பு. அப்படிப்பட்ட நிலையிலே இருக்கின்ற மாநிலத்தைப்போலத் தமிழகம் மாறும் என்று அவர் எச்சரிப்பது, தமிழகத்தையும் அப்படி உருவாக்க நினைக்கிறாரா? தமிழகத்திலும் இராணுவம், 24 மணி நேரமும் ஊரடங்கு உத்தரவுமூலம் இந்த மக்கள் வாழ வேண்டுமென்று வைகோ அவர்கள் எதிர்பார்க்கிறார்களா என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதைவிட இன்னும் அதிக ஆபத்து என்னவென்று சொன்னால், அவர் சொல்கிறார்; அவருடைய மாவட்டச் செயலாளர் மணிமாறன் அவர்கள் பேசியதிலே என்ன தவறு என்று கேட்கிறார். அந்த மணிமாறன் என்ன பேசியிருக்கிறார்? தமிழகத்திலே இருக்கின்ற இளைஞர்கள் ஏ.கே. 47 துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு தெருவிற்கு வருவோம் என்று பேசியிருக்கிறார். கடந்த காலச் சரித்திரத்தை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்திலே ஆயுதக் கிடங்குகள் அங்கங்கே இருந்ததை நாம் இன்னும் மறந்துவிடவில்லை. இலங்கைப் போராளிகள் என்று, ஈழப் போராளிகள் என்று சொல்லிக்கொண்டு சில சமூக விரோதிகள், மரண பயம் தரக்கூடிய ஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும், வெடி மருந்துகளையும் தமிழகம் முழுவதும் பதுக்கி வைத்திருந்ததை நாம் இன்னும் மறந்துவிடவில்லை. ஈழத் தமிழர்களுக்கு நாங்கள் விரோதமானவர்கள் அல்ல. ஈழத் தமிழகத்திலே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வர வேண்டும் என்பதிலே காங்கிரஸ் கட்சியும், அதன் தலைவர்களும் யாருக்கும் சற்றும் குறையாமல் உழைத்தவர்கள், போராடியவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனினும் ஒரு கணம்



2006 ஆகஸ்ட் 22][திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

அதிகமாகச் சொல்கிறேன், இந்த ஈழத் தமிழர்களுடைய பிரச்சினைக்காக எங்கள் தலைவர் தன்னுடைய இரத்தத்தையே சிந்தினார் என்பதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

மூன்று நாட்களுக்கு முன்னால், நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராகப் பேசவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகப் பேசவில்லை. மாறாக, இந்திய அரசாங்கமே, இந்திய தேசமே ஏற்றுக்கொண்ட மிகப் பெரிய தேசியத் தலைவராக இந்த அவையிலே பேசினார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் பேசிய கருத்துகளை இன்று அனைத்து மாநிலங்களிலும், ஒரு ராஜ தந்திரியாக, ஒரு ராஜாங்க ரீதியாக, ஒரு அரசியல் ரீதியாக; இந்த இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு எப்படித் தீர்வு வர வேண்டுமென்று ஒரு பொறுப்புள்ள தமிழினத் தலைவராக அவர் பேசிய வார்த்தைகளில் எங்களுக்கு முழுமையான உடன்பாடு உண்டு. ராஜீவ் காந்தியோடு பேசியதை நினைவுகூர்ந்தார். ராஜீவ் காந்திக்கு இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதிலே எவ்வளவு ஆர்வம் இருந்தது என்று சொன்னார். என்னைப் போகச் சொல்லி அவர் கேட்டாரே, போக முடியவில்லையே என்று வருத்தப்பட்டார். அவர் சொல்லியபடி போய் இருந்தால் இந்தப் பிரச்சினை எப்படி முடிந்திருக்கும் என்று இந்த அவையிலே தன்னைத் தானே அங்கலாய்த்துக்கொண்டார். அப்படிப் பிரச்சினை தீரக்கூடிய நேரத்திலே, அந்தப் பிரச்சினை எப்படிக் கெடுக்கப்பட்டது என்பதையும் சூசகமாகச் சுட்டிக்காட்டினார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 20 ஆம் நூற்றாண்டினுடைய மிகப் பெரிய அரசியல் கொலை. உலகம் உள்ளளவும், இந்தியா உள்ளளவும், தமிழர் இனம் உள்ளளவும் மறக்க முடியாத ஒரு அரசியல் கொலை, இந்த ஸ்ரீபெரும்புதூர் மண்ணிலே நடந்தது. அந்தக் கொலையினுடைய முதல் விரோதி திரு. பிரபாகரன். அவரைப் பார்த்து வைகோ சொல்கிறார், அவர் நெஞ்சம் பனிமலையாம். நாங்கள், இங்கே இருக்கின்ற 34 காங்கிரஸ் தொண்டர்களும் இன்று கண்ணீர் விடுகிறோம். இதை எவ்வளவு நாட்கள் நாங்கள் பொறுத்துக்கொண்டிருக்க முடியும்? எங்கள் தலைவனை, எங்கள் நெஞ்சின் கதாநாயகனை இந்தத் தேசத்திற்காகத் தியாகம் செய்த மிகப் பெரிய தியாகக் குடும்பத்தின் குல விளக்கைச் சின்னாபின்னமாக்கி, சிதைத்துக் கொலை செய்த அந்தக் கயவரைப், பனிமலை நெஞ்சம் கொண்டவர் என்று தமிழகத்திலே மேடையிலே ஒரு அரசியல் தலைவர் பேச முடியும் என்றால், அதை இந்த அரசாங்கம

அனுமதிக்கப் போகிறதா? தமிழகத்தை இன்னும் விஷபூமியாக்க, இன்னும் ஆயுதக் கிடங்காக்க அனுமதிக்கப் போகிறதா? நான் இன்னும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ** (குறுக்கீடுகள்)

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரையும் குறிப்பிட்டு அவர் சொல்லவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள். No, no. (Interruption) No, no, no. உட்காருங்கள். யாரையும் அவர் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாரையும் பெயர் குறிப்பிட்டு அவர் சொல்லவில்லை, உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், யாரையும் பெயர் குறிப்பிட்டு அவர் சொல்லவில்லை.

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்)*

முதலில் நீங்கள் உங்கள் உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள். நான் உங்களிடம் (குறுக்கீடுகள்) செங்கோட்டையன், ஏற்கெனவே நான் சொல்லி இருக்கிறேன் உங்களிடம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் எல்லோரும். யாரையும் அவர் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடுகள்) யாரையும் அவர் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) யாரையும் அவர் பெயர் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. (குறுக்கீடு) ஜெயக்குமார், யாரையும் அவர் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்கும்போது, வேறு ஒரு கோணத்திலே அந்தப் பிரச்சினையை அவர் அணுகி இருக்கத் தேவையில்லை என்பதே என்னுடைய தாழ்மையான கருத்து. எனவே, ** அவர் இங்கே குறிப்பிட்டு இருக்கத் தேவையில்லை என்றே கருதுகின்றேன். பொதுவாக, தமிழ்நாட்டைக் காஷ்மீர் ஆக்குவது, அல்லது ஆக்காமல் இருப்பது போன்ற இந்த வார்த்தைகளைப் பற்றி. அவருக்குள்ள ஆட்சேபனையைத் தெரிவித்த வரையிலே சரி. அதை இங்கே இருக்கின்ற முன்னாள் ஆளுங்கட்சிக்காரர்கள். அருமை அ.தி.மு.க. நண்பர்களும்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





உணர்வார்கள். ஏனென்றால், அவர் யாரைப் பற்றி வேகமாகக் கண்டித்து இங்கே பேசிக்கொண்டு இருந்தாரோ, ராஜீவினுடைய கொலைக்கு யார் காரணம் என்று இங்கே பேசிக்கொண்டு இருந்தாரோ, அதே காரணகர்த்தாவைப் பற்றிக் கடந்த 2 அல்லது 1½ ஆண்டுகளுக்கு முன்பு இதே அவையில் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் பேசிய பேச்சுக்களும், நிறைவேற்றிய தீர்மானமும், இதைவிடக் கடுமையானவை என்பதை நாம் மறந்துவிட முடியாது. எனவே, அந்த உணர்வுகள் பட்டுப் போய்விடவில்லை. அதை மனதிலே வைத்துக்கொண்டு, இப்போது இதுபோன்ற நிலைமைகள் தமிழகத்திலே மேலும் உருவாகாமல் இருக்க என்ன செய்யலாம், என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்ற அந்தக் கருத்தை மாத்திரம் பீட்டர் அவர்கள் பேசுவது நல்லது. தேவையில்லாமல் சர்ச்சையை இங்கே உருவாக்க வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, அவர்கள் இடையிலே பேசிய—மன்னிக்க வேண்டும்—இடையிலே பேசிய ** என்றெல்லாம் குறிப்பிட்ட அந்த வார்த்தைகள் அடங்கிய அந்தத் தொகுப்பை அவைக் குறிப்பிலே இருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள். Peter, don't divert the issue. (குறுக்கீடு) நான் அதை அவைக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) ** என்ற அந்த வார்த்தையை அவைக் குறிப்பில் இருந்து நீக்குகிறேன்.

*முற்பகல் 10–50*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்ன அந்த ஆலோசனையை நான் அப்படியே ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்று சொன்னால், இன்று அவர்கள் மிகச் சிக்கலான, மிகவும் பிரச்சினைக்குரிய ஒரு விஷயத்தில் நெளிவுசுளிவோடு பார்த்து, நம்முடைய ஊரிலே ஒரு பழமொழி சொல்வார்கள், பாம்பும் சாக வேண்டும், கோலும் ஒடிந்துவிடக் கூடாது என்கிற அளவில், இலங்கையிலே இருக்கின்ற அந்த அமைதியின்மையும் தீர வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு நல்வாழ்வும் கிடைக்க வேண்டும்; அதே நேரத்தில், தமிழகத்தை யுத்தக்களமாக மாற்றி ஒரு ஆயுதக் கிடங்காக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [2006 ஆகஸ்ட் 22

மாற்றக்கூடிய சூழ்நிலையும் உருவாகி விடக்கூடாது என்கிற கோணத்தில் எல்லாம் பார்த்து, அதை அணுகி வருகிறார்கள். இந்த அவையிலே இருக்கின்ற அரசியல் கட்சிகளுள், முதலமைச்சர் எடுத்திருக்கிற நடவடிக்கையிலும், அவர்கள் எடுத்துக்கொண்டிருக்கின்ற அரசியல் நிலையிலும் எங்களுக்கு முழுமையான உடன்பாடு உண்டு.

இன்று அவர்கள் மத்திய அரசைப் பார்த்து, இதிலே தலையிடக்கூடாது என்று எச்சரித்து இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அதே பேச்சினுடைய கடைசியிலே பார்த்தால், வருகின்ற செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி டெல்லிக்குப் போய், மத்திய அரசு இதிலே தலையிட வேண்டுமென்கிற போராட்டம் நடத்தப் போவதாகவும் சொல்கிறார்கள். இந்தப் பிரச்சினையைக் குறித்து அவருக்கு ஒரு தெளிவற்ற நிலை இருப்பது நேற்றைய பேச்சிலே தெரிகிறது. மத்திய அரசு அருகே வரக்கூடாது. மத்திய அரசு இந்தப் பிரச்சினையிலே தலையிடக்கூடாது. யுத்தம் ஒன்றுதான் வழி. அந்த யுத்தத்தில் வென்றே தீருவோம். அந்த யுத்தம் நடப்பதற்கான சூழ்நிலையை மட்டும்தான் உருவாக்கித் தா வேண்டும் என்று பேசிவிட்டு, பேச்சினுடைய முடிவிலே என்ன சொல்கிறார் என்று சொன்னால், செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி டெல்லியிலே நடக்கிற மத்திய அரசினுடைய கவனத்தைக் கோருகிற பேரணியிலே கலந்துகொண்டு அவர்களுடைய கவனத்தை ஈர்க்கப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

இதிலே இருக்கின்ற ஒரு செய்தியை நான் உங்கள்மூலம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு மக்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அணிக்கு இப்பொழுது தலைமை ஏற்றிருக்கிறவர் யார் என்று சொன்னால், ஜார்ஜ் பெர்ணாண்டஸ் என்கிற அந்த முன்னாள் மத்திய அமைச்சர். அவருடைய வரலாற்றைப் பற்றியும், இந்த நாட்டிலே தீவிரவாதத்தையும், இந்த நாட்டிலே பயங்கரவாதத்தையும், பயங்கரவாதத்தை உருவாக்கியவர்களோடு இருக்கின்ற தொடர்பையும் நான் மீண்டும் இந்த அவையிலே சொல்லிக்கொள்ள விரும்பவில்லை.

நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, இந்த அரசுக்கு உங்கள்மூலம் வைக்கின்ற கோரிக்கை என்னவென்று சொன்னால், இதைப்போன்ற பேச்சுக்கள் தமிழகத்தில் சமூக அமைதியின்மையை உருவாக்கும். திசை மாறிப் போகின்ற இளைஞர்களுக்கு, ஆயுதத்தைத் தூக்குகின்ற மன நிலையை உருவாக்கும். வேலையற்றுத் திரிகின்ற இளைஞர்கள், நாளை ஒரு நம்பிக்கையோடு காத்திருக்கின்ற இளைஞர்கள். தமிழகத்திலே மிகப் பெரிய தொழில் வளர்ச்சியைக் கொண்டு வந்து இவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பைக்



2006 ஆகஸ்ட் 22] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

கொடுக்க வேண்டும் என்கின்ற மிகப் பெரிய ஆதங்கத்தோடு நடந்துகொண்டிருக்கின்ற ஒரு அரசாங்கம், வெளிநாட்டு முதலீடுகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். Software Engineers, மென்பொருள், கணிப் பெர்குள் என்று சொல்லிப் பல்வேறு தொழில்கள் இங்கே வர வேண்டுமென்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், அப்படித் தொழில்கள் வருகின்ற நேரத்திலே, இதை ஒரு வெடிகுண்டு பூமியாக மாற்றுவேன் என்று ஒரு அரசியல் தலைவர் சொல்கிறார் என்று சொன்னால், அதனுடைய அபாயத்தைத் தமிழக மக்கள் மட்டுமல்ல, இந்த அரசும் உணர்ந்துகொள்ள வேண்டும். எனவேதான், உங்கள்மூலமாக நான் தமிழகத்தினுடைய முதலமைச்சர், நம்முடைய நம்பிக்கைக்குரிய தலைவர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்கொள்வேன். இதைப்போன்ற பேச்சுக்களை நீங்கள் தயவுசெய்து அனுமதிக்கக்கூடாது. இவர்கள் தமிழகம் முழுவதும் விஷப் பாம்புகளை வளர்க்கிறார்கள். நச்சு விதைகளை ஊன்றுகிறார்கள். அந்த நச்சு விதைகளும், விஷப் பாம்புகளும் வளர்ந்தால், இன்னாள் தமிழகத்தினுடைய முன்னேறறத்திற்கு, பொருளாதார வளர்ச்சிக்கு, சமூக அமைதிக்கு மிகப் பெரிய ஆபத்து இருக்கிறது என்பதைக் காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சுட்டிக்காட்டி, அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள், Rule 88-ன்படி நீங்கள் உட்கார்ந்துகொண்டே பேசலாம்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** இல்லை, இல்லை. உட்கார்ந்து பேசினால் ரொம்ப நேரம் பேசுவேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அருமை நண்பர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஆற்றிய உரையில் பொதிந்து கிடக்கும் உணர்வுகளை நாம் அனைவரும் உணர்கின்றோம். சில பேச்சுக்களால், சில நடவடிக்கைகளால், சில கோஷங்களால் அமைதியாக இருக்கின்ற நிலை கெட்டுவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற எச்சரிக்கை உணர்வோடு பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசியதாக நான் கருதுகின்றேன். அவ்வாறே அவையிலுள்ள நீங்களும் நம்புவீர்கள் என்று நான் எதிர்ப்பார்க்கின்றேன். ஆனால், ஒன்று. நேற்றுப் பொதுக் கூட்டத்திலே பேசப்பட்டதாகப் பீட்டர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டிய அந்த வாசகத்தை நாம் கொஞ்சம் பிரித்துப் பார்த்து, ஆழ்ந்து பார்த்து, நமக்கு நாமே சமாதானம் தேடிக்கொள்ளலாம் என்று கருதுகின்றேன். பொதுவாக, நாட்டைப் பிரித்தே தீருவோம் என்பது சட்டப்படி இப்பொழுது குற்றம். இறையாண்மை, ஒருமைப்பாடு, நாட்டின் ஒற்றுமை, இந்தியாவினுடைய

பாதுகாப்பு, இவற்றை எல்லாம் மனதிலே வைத்துத்தான், அந்த அடிப்படையிலேதான், எங்களை எல்லாம் ஆளாக்கிய அறிஞர் அண்ணா அவர்கள் நாட்டுப் பிரிவினை முழக்கத்தைக் கைவிட்டார்கள் என்பதை இந்த அவை நன்கு அறியும். நாடும் நன்கு அறியும். பீட்டர் போன்றவர்கள் இருக்கின்ற பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களும் நன்கு அறிவார்கள்.

(முற்பகல் 10—55

திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையிலே, பிரிவினை கேட்ட இயக்கம். ஆனால், இப்போது பிரிவினையை நாடாத இயக்கம். நாடு இறையாண்மையோடு, ஒற்றுமை உணர்வோடு நல்ல வலுவான நிலையில் விளங்க வேண்டுமென்று கருதுகின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். எனவே, யார் பேசினாலும், அது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கைக்கு மாத்திரம் அல்ல, இங்கே வீற்றிருக்கின்ற எல்லாக் கட்சிகளுடைய கொள்கைக்கும், இலட்சியத்திற்கும் எதிரானதாகத்தான் இருக்கும் என்று நான் கருதுகின்றேன். நாட்டைத் துண்டாட வேண்டும் என்று கூறுபவர்கள் யாரும் இங்கே இல்லை என்றும் நான் நம்புகின்றேன். திருமாவளவன் அவர்களுடைய கட்சியைப் பற்றி எனக்குத் தெரியாது. அவர்களும் இதுபோன்ற வன்முறைகளால் நாட்டைப் பிரிக்க வேண்டுமென்று சொல்கின்றவர்களாக நான் கருதவில்லை.

இருந்தாலும், நேற்றுப் பேசப்பட்ட பேச்சில் ஒரு வாசகத்தைப் பீட்டர் அவர்கள் இங்கே எடுத்துக்காட்டினார்கள். "தமிழ்நாட்டிலே ஒரு காஷ்மீரை உருவாக்காதீர்" என்று பேசியதாக, அதுதான் தலைப்புச் செய்தி என்று கருதுகின்றேன். அதைத் தப்பாக நாம் எடுத்துக்கொள்ள வேண்டாம். உருவாக்குங்கள் என்று சொன்னால்தான் தவறு. தமிழகத்தில் ஒரு காஷ்மீரை உருவாக்குங்கள் என்று சொல்லியிருந்தால், அது தவறு. பேசியவர் ஒரு எச்சரிக்கை மனப்பான்மையோடு; 'தமிழகத்தில் ஒரு காஷ்மீரை உருவாக்காதீர்' என்று சொன்னது, negative-ஆகப் பார்த்தால், அது உருவாக்குங்கள் என்று இருந்தாலுங்கூட, அவர் வேண்டுகோள்தான் விட்டிருக்கிறார் என்று நாம் எடுத்துக்கொள்ள வேண்டும். எடுத்துக்கொண்டு, அதைப் பொருட்படுத்தாமல் இருப்பது நல்லது. நாம் அதைப் பொருட்படுத்தினால், நேற்றே நான் சொல்லியிருக்கின்றேன், இதையெல்லாம் நான் பொருட்படுத்தப் போவதில்லை என்று. பேசுவார்கள், பேசியதைச் செயல்படுத்துவார்களா



என்பது நமக்கே தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அதைப் பற்றிக் கவலைப்படாமல், இந்தப் பிரச்சினையிலே இவ்வளவு ஆழமாக ஆத்திரப்படுவதற்கு எதுவும் இல்லை என்பதை நான் நண்பர் பீட்டர் அவர்களுக்குச் சொல்லிக்கொண்டு, இதோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு, நம்முடைய நாட்டுக்குத் தேவையான, மக்களுக்குத் தேவையான காரியங்களைப் பார்ப்போம். அதே நேரத்திலே ஈழத் தமிழர்கள், இப்படி வேதனைப்படுகின்ற தமிழர்களுக்கும் பாதுகாப்பாக இருப்போம், அறவழியிலே இருப்போம், இந்திய நாடு கடைப்பிடிக்கின்ற வழியிலே நிற்போம். எங்களைப் பொறுத்தவரையிலே சொல்லியிருக்கிறோம், மத்திய சர்க்கார் என்ன முடிவு எடுக்கிறதோ, அந்த முடிவின்படி நடப்போம் என்று. மற்ற கட்சிகளுடைய அபிப்பிராயம் வேறாக இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கருத்து அதுதான் என்பதை நண்பர் பீட்டர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டி, இந்த அளவில் அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. கவன ஈர்ப்பு

### (அ) ஓமலூர் அரசு மருத்துவமனை விரிவாக்கப் பணிகள் விரைவில் முடிக்கப்பெறுதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. அ. தமிழரசு அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்த மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ள நிலையில், பணிகள் விரைவில் முடிக்கப்பட வேண்டியது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது:

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2006 ஆகஸ்ட் 22

**அறிக்கை**

அரசு ஆணை (நிலை) எண் 252, சுகாதாரம், நாள் 26–7–2004—ன்மூலம், சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவினை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் மத்திய அரசின் மானியத் தொகையாக ரூ.150 இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, கீழ்க்கண்டுள்ள பணிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது:—

| | | |
|---|---|---|
| 1. | கருவிகள் | ரூ. 104.00 இலட்சம் |
| 2. | கட்டடப் பணிகள் | ரூ. 27.00 இலட்சம் |
| 3. | ஆம்புலன்ஸ் | ரூ. 18.00 இலட்சம் |
| 4. | தொலைத் தொடர்புக் கருவிகள் | ரூ. 1.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ. 150.00 இலட்சம் |

இதில் மருத்துவக் கருவிகள் மற்றும் மரப் பொருட்கள் வாங்குவதற்காக ரூ.104.00 இலட்சம் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்தின் தனி வைப்புக் கணக்கில் 31–3–2005—ல் செலுத்தப்பட்டது. இம்மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சேவைப் பிரிவுக்கு இன்றியமையாத கருவிகளுக்கான பட்டியலை மருத்துவம் சார்ந்த வல்லுநர்களைக் கலந்தாலோசித்து, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்கள் முடிவு செய்து, எக்ஸ்ரே கருவி, உணர்விழிப்புக் கருவி, எலும்பு மற்றும் முடநீக்குப் பொருட்கள், அவை சார்ந்த ஏனைய கருவிகள் உள்ளிட்ட 759 கருவிகளுக்கான பட்டியலை 11–2–2006 மற்றும் 16–2–2006 ஆகிய தேதிகளில் தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகத்திற்கு வழங்குவதாகத் தெரிவித்துள்ளார். அதன்படி 652 கருவிகளுக்கான கொள்முதல் ஆணைகள் வழங்கப்பட்டு, மொத்தம் ரூ.49.65 இலட்சம் மதிப்பில் வழங்கப்பட்டுள்ளன என்றும், இக்கருவிகள் ஆகஸ்டு மாத இறுதிக்குள் வழங்கப்படும் என்றும், மீதமுள்ள எக்ஸ்ரே கருவி, உணர்விழிப்புக் கருவி உள்ளிட்ட 107 கருவிகளுக்கும் கொள்முதல் ஆணை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், இக்கருவிகள் 31–10–2006—க்குள் வழங்கப்படும் என்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம், தெரிவித்துள்ளார். ரூ.18,85,512.00 தொகையில் இரண்டு ஆம்புலன்ஸ்கள் வாங்கப்பட்டு, ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு ஒப்படைக்கப்பட்டு, உபயோகத்தில் உள்ளன. 22–7–2005 அன்று கட்டடப் பணிகள் முடிவடைந்து, மருத்துவத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள



2006 ஆகஸ்ட் 22] [திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்]

ரூ.1.00 இலட்சத்தில் தொலைபேசிக் கருவிகள் பொருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பணிகள் முடிவடைந்தவுடன், விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு செயல்படத் தொடங்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** அறிக்கையை விவரமாகப் படித்தேன், பார்த்தேன். அதிலே ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவினை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் மத்திய அரசின் மானியத் தொகையாக ரூபாய் 1½ இலட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு, குறிப்பிட்ட பணிகளுக்காக 2004 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. அதைத் தமிழக அரசு பெற்றிருக்கிறது. ஆனால், 25 மாத காலம் ஆகியும் அந்தப் பணி முடியாமல் இருந்திருக்கிறது. உரிய அந்தப் பணிக்காக மத்திய அரசு மானியமாக எந்த நோக்கத்திற்காக தொகையை ஒதுக்கியதோ, அந்த நோக்கத்திற்குக் கடந்த கால அ.தி.மு.க. அரசு அதைப் பயன்படுத்தவில்லை. அதனால் காலதாமதம் ஆகியிருக்கிறது. இதனால் பெரிய உயிர்ச் சேதம் நடந்திருக்கிறது. அங்கு பல விபத்துக்கள் நடந்திருக்கின்றன. அந்த விபத்துக்கள் நடந்தபோது நானே மருத்துவமனைக்கு அவர்களைக் கொண்டு சென்றபோது, அங்கு உரிய சிகிச்சை வழங்கப்படாமல், சேலம், அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லுங்கள் என்று அந்த மருத்துவர்கள் சொல்ல, நான் கொண்டு சென்ற வழியிலேயே, அங்கு விபத்திலே பாதிக்கப்பட்டவர்கள் இறந்திருக்கிறார்கள். இரண்டு வாகனங்கள், ஆம்புலன்ஸ் வாகனங்கள் அங்கே வழங்கப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், கடந்த கால அ.தி.மு.க. ஆட்சியிலே இருந்த பணி நியமனத் தடைச் சட்டத்தால் ஓட்டுநர்கள் அங்கே நியமிக்கப்படவில்லை. அந்த ஆம்புலன்சுகளுக்கு, அந்த இரண்டு வாகனங்களுக்கு அங்கு ஓட்டுநர்கள் நியமிக்கப்படாத நிலை. இன்னும் தொடர்ந்து அந்த இரண்டு வாகனங்களும் அங்கே இருக்கின்றன. அவசர கால வாகனங்களுக்கு ஓட்டுநர்கள் அங்கே நியமிக்கப்படவில்லை...

(முற்பகல்: 11–00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழரசு, கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

**திரு. அ. தமிழரசு:** அங்கே கட்டடப் பணி மட்டும் முடிந்திருக்கிறது. அதற்குத் தேவையான X-Ray போன்ற உபகரணங்களெல்லாம் அங்கே இன்னும் வரவில்லை. எனவே, உடனடியாக நமது அரசாவது அந்த

[திரு. அ. தமிழரசு] [2006 ஆகஸ்ட் 22

மருத்துவமனையைத் தொடங்க வேண்டுமென்றும், அதே நேரத்திலே, இதைப்போன்ற நிதி எந்த நோக்கத்திற்காக வருகிறதோ, அதை உரிய நோக்கத்திற்காக உடனடியாக நமது அரசு பரிசீலனை செய்து, அதை உடனடியாகச் செய்து முடிக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டு, இதில் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்தையும், அரசின் கவனத்தையும் ஈர்க்கின்றேன்.

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவ பணிமனையினுடைய முழுப் பணிகளும் 31–10–2006–க்குள்ளாக முடிக்கப்பட வேண்டுமென்று சொல்லி, அரசாங்கத்திலிருந்து நாங்கள் உத்தரவு போட்டிருக்கிறோம். 31–10–2006–க்குள்ளாக அந்தப் பணிகளெல்லாம் நிறைவு பெற்று, முழுமையான மருத்துவமனையாக அது செயல்படும் என்பதையும் நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்கிறேன். இதேபோல, போன ஆட்சிக் காலத்திலே நிறையத் திட்டங்கள் அரைகுறையாக இருப்பவற்றையெல்லாம் இப்போதிருக்கிற எங்கள் அரசு நிறைவு செய்கிற பணியைச் செய்துகொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

## (ஆ) தமிழ்நாடு பனை வெல்லக் கூட்டுறவு இணையப் பணியாளர்களுக்கு ஊதியமும், ஓய்வு பெற்றவர்களுக்குப் பணிக்கொடையும் வழங்காதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சு. குணசேகரன் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. சு. குணசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சு. குணசேகரன்.

***திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த 5 ஆண்டுகளாகத் தமிழ்நாடு பனை வெல்லக் கூட்டுறவு இணையங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஓய்வு பெற்றவர்களுக்குப் பணிக்கொடை வழங்கப்படாததால்



2006 ஆகஸ்ட் 22] [திரு. சு. குணசேகரன்]

ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது:

### அறிக்கை

தமிழ்நாடு மாநிலப் பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்டப் பனை வெல்ல விற்பனைக் கூட்டுறவுச் சம்மேளனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமல் உள்ளது குறித்துக் கீழ்க்கண்டவாறு விவரம் தெரிவிக்கப்படுகிறது:—

தமிழ்நாடு மாநிலப் பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் (90 + 45) பணிபுரிந்த 135 நபர்களில் தமிழ்நாடு மாநிலப் பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தில் ஓய்வு பெற்ற 3 நபர்களைத் தவிர, 87 நபர்களும், மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் ஓய்வு பெற்ற 3 நபர்களைத் தவிர, 42 நபர்களும், ஆக மொத்தம் 6 பணியாளர்கள் ஓய்வு பெற்றுள்ளதைத் தொடர்ந்து, 129 பணியாளர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர்.

தமிழ்நாடு மாநிலப் பனை வெல்லக் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்டப் பனை வெ ல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்கள் தங்களது இனைகளின்மூலம் உற்பத்தி மற்றும் விற்பனை மேற்கொண்டு, அதனில் இடைக்கும் இலாபத்தினைக் கொண்டுதான் அதன் பணியாளர்களுக்கு ஊதியத்தையும், இதரப் படிகளையும் மற்றும் இவற்றின் பிற செலவினங்களையும் மேற்கொ ள வேண்டும் என்பது இவ்விணையம் மற்றும் சம்மேளனங்களின் துணை விதிகளில் நிர்ணயம் செய்யப்பட்டதாகும். இப்பணியாளர்கள் அனைவரும் கல்வித் தகுதி மற்றும் மாநில இணையம்/மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத் துணை விதிகளில் தெரிவிக்கப்பட்ட தகுதிகளைக் கொண்டு மாநில இணையம் மற்றும் மாவட்டச் சம்மேளனங்களின்மூலம் பணியமர்த்தப்பட் டவர்கள் ஆவர். இவர்கள் அனைவரும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சம்மேளனப் பணியாளர்கள் ஆவார்கள்.

எனவே, இவர்களது ஊதியம் மற்றும் பிற செலவினங்களுக்கு அரசிடமிருந்து தனியாக நிதி ஒதுக்கீடு இல்லை.

முந்தைய காலங்களில் இவ்விணையத்தின் உற்பத்தி மற்றும் விற்பனை யாவும் தேவைக்கு ஏற்றாற்போல் இருந்து வந்தன. 1996 ஆம் ஆண்டு முதல் மும்பை கதர் ஆணைக் குழு, பனைத் தொழிலுக்கென வழங்கி வந்த மூலதனக் கடன் வழங்குவதை நிறுத்திவிட்டது. அதன் காரணமாக உற்பத்தி மற்றும் விற்பனை யாவும் குறைந்துவிட்ட நிலையிலும், பணியாளர்களுக்கான ஊதியம் அதிகரித்த நிலையிலும், மாநில இணையம் மற்றும் மாவட்டச் சம்மேளனங்களில் மிகுந்த நிதி நெருக்கடி ஏற்பட்டதனால் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கிட இயலாத சூழ்நிலையில் இருந்து வருகிறது.

இருப்பினும், தற்போது தமிழ்நாடு மாநிலப் பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தில் உள்ள 87 பணியாளர்களின் 40 மாத ஊதிய நிலுவையில் (அயல் பணியில் உள்ள 17 பணியாளர்கள் முழு ஊதியத்தையும்) தற்போது பணிபுரிந்து வரும் 70 பணியாளர்கள் மாதா மாதம் ரூ.1,000/– முதல் ரூ.2,500/– வரை ஊதிய முன்பணமாகவும் பெற்று வருகின்றனர்.

கன்னியாகுமரி மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் பணியாளர்களின் 73 மாத ஊதிய நிலுவையில், தற்போது பணிபுரிந்து வரும் 7 பணியாளர்கள் மாதா மாதம் ரூ1,000/– ஊதிய முன்பணமாகப் பெற்று வருகின்றனர்.

இராமநாதபுரம்—சிவகங்கை மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் பணியாளர்களின் 43 மாத ஊதிய நிலுவையில், தற்போது பணிபுரியும் 9 பணியாளர்கள், அவர்களது ஊதியத்தில் மூன்றில் ஒரு பங்கு ஊதிய முன்பணமாக மாதா மாதம் பெற்று வருகின்றனர்.

சேலம்—நாமக்கல் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் பணிபுரியும் 4 பணியாளர்கள், தற்போது அவர்களது முழுமையான ஊதியத்தை மாதா மாதம் பெற்று வருகின்றனர்.

திருநெல்வேலி மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் பணியாளர்களின் 7 மாத ஊதிய நிலுவையில், தற்போது பணிபுரியும் 6 பணியாளர்கள், அவர்களது முழுமையான ஊதியத்தை மாதா மாதம் பெற்று வருகின்றனர்.



மதுரை—விருதுநகர்—திண்டுக்கல் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் பணியாளர்களின் 14 மாத ஊதிய நிலுவையில், தற்போது பணிபுரியும் 11 பணியாளர்கள் அவர்களது முழுமையான ஊதியத்தை மாதா மாதம் பெற்று வருகின்றனர்.

கோவை—ஈரோடு மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் பணிபுரியும் பணியாளர்களின் 1 மாத ஊதிய நிலுவையில், தற்போது பணிபுரியும் 5 பணியாளர்களும், அவர்களது முழுமையான ஊதியத்தை மாதா மாதம் பெற்று வருகின்றனர்.

தமிழ்நாடு மாநிலப் பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தின் ஓய்வு பெற்ற மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய நிலுவை விபரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது:—

| வ. எண் | இணையம்/சம்மேளனத்தின் பெயர் | ஊதிய நிலுவை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு மாநிலப் பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம், சென்னை—8 | 87.00 |
| 2. | மதுரை—விருதுநகர்—திண்டுக்கல் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், மதுரை | 9.00 |
| 3. | இராமநாதபுரம்—சிவகங்கை மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், இராமநாதபுரம் | 28.00 |
| 4. | திருநெல்வேலி மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், தூத்துக்குடி | 25.00 |
| 5. | கன்னியாகுமரி மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், குழித்துறை | 22.00 |
| 6. | கோவை—ஈரோடு மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், குன்னத்தூர் | 10.00 |
| 7. | சேலம்—நாமக்கல் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், சேலம் | 4.00 |
| | மொத்தம் | 185.00 |

[திரு. கா. ராமசந்திரன்] [2006 ஆகஸ்ட் 22

மேலும், சேலம்—நாமக்கல் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், மதுரை—விருதுநகர்—திண்டுக்கல் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம், திருநெல்வேலி மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் மற்றும் கோவை—ஈரோடு மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் ஆகியவற்றின் பணியாளர்களின் ஊதிய நிலுவைகளை அரசின் பல்வேறு திட்டங்களின்மூலம், மானியமாக அனுமதிக்கப்பட்டுச் செயல்படுத்தப்படும் அலகுகளை இலாபகரமாக இயக்கி, அதன்மூலம் நிலுவை ஊதியம் வழங்கிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாநில இணையம்/மாவட்டச் சம்மேளனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கும் மற்றும் இவர்களுக்காக ஊழியர்கள் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஆயுள் காப்பீட்டு நிறுவனத்துடனான குழுக் காப்பீட்டுத் திட்டம், பணியிலிருந்து நிறுத்தப்பட்ட முன்னாள் ஊழியர்களுக்குத் தொழிலாளர் நீதிமன்ற ஆணைப்படியான செட்டில்மென்ட் தொகை ஆகிய அனைத்திற்கும் கீழ்க்கண்டவாறு நிதி தேவைப்படுகிறது:—

| வ. எண் | விவரம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | ஓய்வு பெற்றுள்ள பணியாளர்களின் பணிக்கொடை நிலுவைத் தொகை | 62.00 |
| 2. | பணிக்கொடைத் தொகைக்குச் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகை | 37.00 |
| 3. | தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்திற்குச் செலுத்த வேண்டிய தொகை | 69.00 |
| 4. | பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ஊதிய நிலுவைத் தொகை | 18.5.00 |
| 5. | மாநில இணையம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்குத் திரும்பச் செலுத்த வேண்டிய கடன் மற்றும் வட்டித் தொகை | 32.00 |

தமிழ்நாடு மாநிலப் பனை வெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையத்தில் பணிபுரியும் 87 பணியாளர்களில் 25 பணியாளாகள் விருப்ப ஓய்வில் செல்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்களை விருப்ப ஓய்விற்கு அனுமதிப்பதற்கு மாநில இணையத்திற்கு ரூ.44.50 இலட்சம் கூடுதல் நிதி தேவைப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 22] [திரு. கா. ராமசந்திரன்]

மதுரை—விருதுநகர்—திண்டுக்கல் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் பணிபுரியும் 11 நபர்களில் 1 நபர் மட்டும் விருப்ப ஓய்வில் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளார். இவரை விருப்ப ஓய்விற்கு அனுமதிப்பதற்கு இந்தச் சம்மேளனத்திற்கு ரூ.4.80 இலட்சம் கூடுதல் நிதி தேவைப்படுகிறது.

இராமநாதபுரம்—சிவகங்கை மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் பணிபுரியும் 9 நபர்களில் 4 நபர்கள் விருப்ப ஓய்வில் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர். இவர்களை விருப்ப ஓய்விற்கு அனுமதிப்பதற்கு இந்தச் சம்மேளனத்திற்கு ரூ.21.97 இலட்சம் கூடுதல் நிதி தேவைப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் பணிபுரியும் 7 நபர்களில் விருப்ப ஓய்வில் செல்லும் பணியாளர்கள் எவரும் இல்லை.

திருநெல்வேலி மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் பணிபுரியும் 6 நபர்களில் விருப்ப ஓய்வில் செல்லும் பணியாளர்கள் எவரும் இல்லை.

சேலம்—நாமக்கல் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் பணிபுரியும் 4 நபர்களில் விருப்ப ஓய்வில் செல்லும் பணியாளர்கள் எவரும் இல்லை.

கோவை—ஈரோடு மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தில் பணிபுரியும் 5 நபர்களில் விருப்ப ஓய்வில் செல்லும் பணியாளர்கள் எவரும் இல்லை.

மும்பை கதர் கிராமத் தொழில் ஆணையத்தின் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின்கீழ் சுமார் ரூ.3.00 கோடி கடன் தொகையினைப் பெற்று, தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்தின்மூலம் மாநில இணையம் மற்றும் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், கூட்டுறவு ஆராய்ச்சி வளர்ச்சி நிதியிலிருந்து தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்தின்மூலம் தமிழ்நாடு மாநிலப் பனை வெல்லம் மற்றும் தும்பு கூட்டுறவு இணையத்திற்கு ரூ.25.00 இலட்சம் கடன் தொகை வழங்கப்பெற்றுள்ளது. மேற்கண்ட கடன் தொகைகளை மாநிலப் பனை வெல்லக் கூட்டுறவு இணையம் மற்றும் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்கள் திருப்பிச் செலுத்தாத நிலையில், மேற்கொண்டு கடன் தொகைகள் பெற்று வழங்கப்படாத நிலை உள்ளது.

எனினும், பனைப்பொருட்களின் விற்பனைக்கான வணிக வாய்ப்பினை இந்த ஆண்டு கூடுதலாக்கிப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிலுவைத் தொகைகள் மற்றும் புழக்க நிதி ஆகியவற்றை வழங்குவதற்காக, மாநில இணையம் மற்றும் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்களுக்குச் சொந்தமான பயன்பாடற்ற இடங்களை, உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, அரசு அல்லது அரசு சார்பு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கி, அதன்மூலம் பெறப்படும் தொகையினைக் கொண்டு முடிவு செய்வதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை வெல்லக் கூட்டுறவு இணையங்கள் மாநில அளவில், மாவட்ட அளவில் பல அமைப்புகளாகச் செயல்பட்டு, பல இலட்சக்கணக்கான பனைத் தொழில் செய்யக்கூடிய கிராமப்புற மக்களுக்கான அந்த உற்பத்திப் பொருட்களைப் பாதுகாப்பதும், விற்பதும், பயிற்சி அளிப்பதுமான கடமைகளை நிறைவேற்றிக்கொண்டிருந்தன. 1967 ஆம் ஆண்டு அறிஞர் அண்ணா காலத்தில் தோற்றுவிக்கப்பட்டு, சிறப்பாகச் செயலாற்றிக்கொண்டிருந்த அந்த அமைப்புகள் கடந்த 5 ஆண்டு காலத்தில் நிர்வாகக் காரணமாகச் சீர்குலைந்து, அதிலே பணிபுரிகிற 135 ஊழியர்களுக்கு ஊதியமும், ஓய்விலே சென்றவர்களுக்கான அந்தப் பணிக்கொடையும், விருப்ப ஓய்வில் செல்லக்கூடியவர்களுக்கான அந்தப் பயன்களும் கிடைக்காத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அமைப்புகள் இன்றைக்குச் சிதைந்துகொண்டிருக்கிற நேரத்தில், இன்றைக்கு நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தத் தொழிலிலே கிடைக்கிற இலாபத்தின்மூலமாகத்தான் இந்தப் பயன்களை, சம்பளங்களைக் கொடுக்க முடியும் என்று சொல்வது பொருத்தமாக இருக்காது. எனவே, அவர்கள் பணி நியமனம் என்பது வேலைவாய்ப்பு அலுவலகங்களின்மூலமாக பணி நிபந்தனை அடிப்படையில் சேர்ந்திருப்பதால், அந்தக் கருத்து பொருந்தாது என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். இன்றைக்கு அவர்களுக்குச் சம்பளம் மற்றும் பல்வேறு பலன்கள்மூலமாக 3 கோடியே 85 இலட்சம் ரூபாயும், முதலீட்டுக்காக இரண்டு கோடி ரூபாயும் தேவைப்படுகிற நேரத்தில், அந்தப் பணியாளர்களையும், அவர்களைச் சார்ந்திருக்கிற மக்களையும் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டும்.





முற்பகல் 11–05

இந்தச் சம்பளத்தைப் பூர்த்தி செய்வதற்கு அமைச்சர் அவர்கள், பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்களுக்குச் சொந்தமான பயனற்ற இடங்களை உரிய நடைமுறைகளைப் பின்பற்றி, அரசு அல்லது அரசு சார்பு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கி, அதன்மூலம் கிடைக்கிற தொகையை ஈடுகட்டலாம் என்று சொல்லியிருக்கிறார். எனக்கு அதிலே உடன்பாடு இருந்தாலும், இந்த விற்பனை என்பதில் காலதாமதம் ஏற்பட்டு, மீண்டும் அந்தப் பணியாளர்கள் பாதிக்கப்படுவார்கள். எனவே, நமது முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுத்து, அரசின் சார்பிலே கடனாகவோ, மானியமாகவோ அந்த நிதியை வழங்கி, பின்னால் அந்தச் சொத்துக்களை விற்று ஈடு கட்டிக்கொள்ளலாம் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

இன்றைக்கு 13–வது சட்டப் பேரவையிலே நமது முதல்வர் அவர்கள், ஒரு கிலோ அரிசி 2 ரூபாய், 6,886 கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி, பெண்களுக்கு இலவசத் திருமண உதவி என்று பல்வேறு சலுகைகளை வாரி வழங்கி தமிழகமே மகிழ்ச்சிக் கடலில் நீந்திக்கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், இங்கேயிருக்கிற 129 பணியாளர்கள் மட்டும் கவலை தோய்ந்த முகத்தோடு இருப்பது என்பது சரியாக இருக்காது. எனவே, நமது முதல்வர் அவர்கள், அந்த 129 பணியாளர்களுக்குரிய, அதுவும் குறிப்பாக, இந்தத் தமிழத்திலே பரவிக் கிடக்கிற பனைத் தொழிலாளர்கள், கிராமப்புற மக்களுடைய குடிசைத் தொழிலைப் பாதுகாக்கிற அந்தத் திட்டத்தை, 6 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, அவர்களுக்கு உடனடியாக மறுவாழ்வும், அந்தக் கிராமப்புற மக்களுக்கு ஒரு வருமானத்தை ஏற்படுத்தித் தருகிற திட்டத்தையும் செயலாக்கி, ஒட்டுமொத்தத் தமிழகத்தையே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலப் பனை வெல்லம் மற்றும் தும்பு உற்பத்தி இணையம், மற்றும் மாவட்டப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனங்கள் கூட்டுறவுச் சங்கங்கள் விதிகளின்கீழ் பதிவு செய்யப்பட்டு, இவற்றில் பணிபுரியும் பணியாளர்கள், அந்தந்த இணையம் மற்றும் சம்மேளனங்கள் வாயிலாக நேரடியாகப் பணியமர்த்தப்பட்டவர்கள். எனவே, இவர்களுக்கு என்று அரசாங்கத்தின்மூலம் எந்த நிதி ஒதுக்கீடும் கிடையாது. அந்தந்த இணையம் மற்றும் சம்மேளனங்களிலிருந்து வரும்

வருமானங்களையே வைத்து சங்கக் கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றி, சம்பளத்தைக் கூட்டியோ, குறைத்தோ கொடுக்கலாம். இருப்பினும், என்னிடம் கொடுத்த மனுவின்மீது, இந்த இணையம் மற்றும் சம்மேளனங்களின் பணியாளர்கள் சங்கத் தலைவர்களை அழைத்து நான் பேசி, இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன். மேலும், இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அய்யா அவர்களது கவனத்திற்குக் கொண்டு சென்று, அய்யா அவர்களின் அறிவுரைப்படி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு.* மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) என்னங்க? அடுத்த business-க்குப் போயாகிவிட்டது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) We have gone to other business. Sit down.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு.* மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**திரு. கே.பி. அன்பழகன்:** இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

**திரு. கு. செல்வம்:** இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

(முற்பகல் 11–10) [2006 ஆகஸ்ட் 22

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## (இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2006

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. சி.வி. சண்முகம்:** இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே நாங்கள் எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன். (குறுக்கீடுகள்)



2006 ஆகஸ்ட் 22]

**திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்தாகிவிட்டது. சண்முகம், சும்மாக் கூச்சலிடாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சும்மாக் குதிக்காதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேச முடியாது. (குறுக்கீடுகள்) என்ன, சொல்லுங்கள்?

***திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமுன்வடிவைக் கொண்டு வருவதற்கு முன்னால், எங்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதற்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும். ஆனால், பேரவைத் தலைவர் அவர்கள், உங்கள் எதிர்ப்பு முடிந்து போய்விட்டது என்று சொன்னால், இது என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆமாம், உங்கள் எதிர்ப்பைப் பதிந்தாகிவிட்டது. (குறுக்கீடுகள்)

2006–2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்களுடைய எதிர்ப்பைப் பதிவு செய்ததற்குப் பிறகு திரும்பவும் நின்று பேச உங்களுக்கு உரிமை இல்லை. உட்காருங்கள். அமைச்சர், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) ஆய்வு செய்யும்போது பேசிக்கொள்ளலாம். உட்காருங்கள்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 45 – சமூக நலன் மற்றும் சத்துணவுத்திட்டத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை– கால்நடை பராமரிப்பு**

### (அ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மானியக் கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். (குறுக்கீடுகள்) வெட்டுத் தீர்மானம் எண் 2252, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை. (குறுக்கீடுகள்)

வெட்டுத் தீர்மானம் எண் 7527, திரு. க. சிவராஜ், இருக்கையில் இல்லை. (குறுக்கீடுகள்)

வெட்டுத் தீர்மானம் எண் 3307, டாக்டர் இஎஸ்எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4777, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை. (குறுக்கீடுகள்)

வெட்டுத் தீர்மானம் எண் 9101, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2363, திரு. கே.வி. ராமநாதன்.

**திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1320, திரு. தி.க. ராஜா. (குறுக்கீடுகள்)



**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதிய உணவு சாப்பிடும் மாணவர்களின் எண்ணிக்கையைச் சரியாகக் கணக்கு எடுத்து, போதிய முட்டைகள் மற்றும் உணவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4973, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு மையங்களுக்குத் தரமான அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் வழங்கக் கூடுதலாக நிதியை உயர்த்தி வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7007, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "படித்த இள வயதுப் பெண்களுக்குக் கணிப்பொறிப் பயிற்சி சமூக நலத் துறையின்மூலம் இலவசமாக அளித்து, மானியத்துடன்கூடிய கணிப்பொறி இயந்திரம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7449, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8900, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட சத்துணவுக் கூடங்களுக்கு வழங்கப்படும் காய்கறிகளின் அளவுகளைக் குறைவின்றி வழங்கி, குழந்தைகளுக்கும், மாணவர்களுக்கும் சக்தி மிக்க உணவு கிடைக்கச் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3535, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுத் திட்ட அங்கன்வாடிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2646, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநில அளவில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு சமையல் கூடம், உணவு பரிமாறும் இடம் போன்றவற்றைச் சரியாக, சுகாதார அடிப்படையில் பேண வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4395, திருமதி மூ. சந்திரா.

**திருமதி மூ. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் தொகுதியில் ஏழ்மையான முதியோர்களின் நலன் கருதி முதியோர் இல்லம் புதிதாகத் தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5444, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன். *(குறுக்கீடுகள்)*

நான் சொல்கிறேன் கேளுங்கள். C.M. அந்த issue—வைப் பற்றிப் பேசி முடித்தாகிவிட்டது. அதைப் பற்றி ஒன்றும் இல்லை. *(குறுக்கீடுகள்)* வேறு பிரச்சினைக்குப் போயாகிவிட்டது. Not allowed. *(குறுக்கீடுகள்)* Not allowed. *(குறுக்கீடுகள்)* Impossible.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி பகுதியில் பழுதடைந்த நிலையிலுள்ள சத்துணவு மையங்களைச் சரி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்தும், மற்றும் சத்துணவு மையங்களில் சுகாதாரமான முறையில் உணவு தயார் செய்வதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5364, திரு. சு. குணசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5418, திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2453, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி தொகுதியில் சத்துணவு மையங்களைப் பராமரிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4890, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு சாப்பிடும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4845, திரு. எஸ்.வி. சேகர்.

**திரு. எஸ்.வி. சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இதுவரை சமூக நலத் துறையின்கீழ் இயங்கிக் கொண்டிருந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் நிர்வாகத்தை உள்ளாட்சித் துறைக்கு மாற்றியது



குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2872, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2823, திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றும் ஊழியர்களை அரசு ஊழியர்களாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5307, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இன்றைய தனிக் குடும்பக் கலாச்சாரம் காரணமாக, 18 வயதிற்கு மேற்பட்ட ஆண், அல்லது பெண் இருந்தாலும், வயது முதிர்ந்தவர்களுக்கு உதவித் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 11—15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6004, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு மையங்களுக்கு அளிக்கப்படும் முட்டைகள் தரமானவையாகவும், கெட்டுப் போகாதவையாகவும் இருக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6197, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுப் பணியாளர்களை முழுநேர ஊழியர்களாக அறிவித்து, குறைந்தபட்சம் அவர்களுக்கு மாதச் சம்பளம் ரூ.3,000/– வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2966, திரு. ஞா. ஜான் ஜோசப்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுத் துறையில் ஏற்பட்டுள்ள ஏராளமான காலிப் பணியிடங்களை உடன் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2378, திரு. கே.ஏ. செங்கோட்டையன்.



**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மூவலூர் இராமாமிர்தம் திருமணத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் தொகையை உயர்த்தியதோடு, பயனாளிகளின் கல்வித் தகுதியை உயர்த்தியுள்ளதால் பெருமளவு பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளதால், பயனாளிகளின் கல்வித் தகுதியை, மீண்டும் 8 ஆம் வகுப்பு என ஆணை பிறப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9284, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதியில் சத்துணவு மையங்களில் நிரப்பப்படாமல் காலியாகவுள்ள நிலையில் உள்ள அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்களின் பணியிடங்கள் நிரப்பப்படுவது குறித்தும், இதேபோல் ஊட்டச்சத்து மையங்களிலுள்ள காலியிடங்களை நிரப்புவதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9181, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8088, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், கீழப்புலியூரில் மகளிர் சுய உதவிக் குழுவிற்குக் கட்டடம் கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில்

ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8138, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முதியோர், விதவைப் பெண்களுக்கான ஓய்வூதியம் அல்லது நிவாரண உதவித் தொகை பெறுவதற்கு ஆண் வாரிசு இருக்கக் கூடாது என்ற நிபந்தனை அகற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8189, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பள்ளிகளில் வழங்கும் சத்துணவு மற்றும் முட்டைகள் தரமானவையாக உள்ளனவா என்பதைக் கண்காணிக்க, அந்தந்தத் தொகுதிக்குட்பட்ட உறுப்பினர்களின் தலைமையில் ஒரு குழு அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6006, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் தொகுதியில் உள்ள புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில், பள்ளிகளில் சத்துணவு மையங்கள் அங்கன்வாடி மையங்கள் போன்றவற்றிற்குக் கட்டடங்கள் கட்டித் தர



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6310, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டத்தில் செயல்பட்டு வரும் சத்துணவு மையங்களில் காலியாகவுள்ள சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் ஆகியோரை விரைவில் பணியமர்த்த அரசு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9343, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் உடல் ஊனமுற்றவர்கள் அனைவருக்கும் வயது வரம்பின்றி ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8195, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளத்தூர் தொகுதியில் சுமார் 30-க்கும் மேற்பட்ட கிராமங்களில் தனியார் கட்டடங்களில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்களுக்கு அரசுக் கட்டடங்களைக் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8198, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதரவற்ற மற்றும் விதவைப் பெண்களுக்கு அரசு வேலை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7210, திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8789, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிங்காநல்லூர் தொகுதியில் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த மகளிருக்கு சுய உதவிக் குழு நிதியுதவி, குழுக்களுக்குத் தேவையான தொழிற்பயிற்சி அளித்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3351, திருமதி ரா. லீமா ரோஸ்.

**திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நலிந்தோர் நலத் திட்டத்தின்மூலம் குடும்பத் தலைவர் இறந்தால் கிடைக்கும் நிவாரண நிதி பெற வைக்கப்பட்டிருக்கும் விதிகளைத் தளர்த்தி, ரூ.10,000/—ஐ ரூ.15,000/– ஆக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3315, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5532, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுக் கூடங்களில் குழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள், புதிய பாத்திரங்கள், எரிவாயு அடுப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5669, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு அமைப்பாளர்களை நிரந்தர அரசு ஊழியர்களாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5580, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6510, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை கிழக்கு தொகுதியில் உள்ள சத்துணவுக் கூடங்களைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8322, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாரமங்கலம் தொகுதியில் துட்டம்பட்டி ஊராட்சிப் பகுதியில் சமத்துவபுரம் அமைக்க வேண்டியது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 966, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், முகையூர் ஒன்றியம், மனலூர்பேட்டை, முருக்கம்பாடி ஆகிய கிராமங்களுக்கு அங்கன்வாடி மையங்கள் அமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9103, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதி, புதுக்காருவள்ளியில் சமத்துவபுரம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5035, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருத்தணி, இந்திரா நகரில் உள்ள பள்ளியில் சத்துணவுக் கூடம் இல்லை; சத்துணவுக் கூடம் தனியாக அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8617, திரு. டி. மூர்த்தி

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் சத்துணவு மையம் இல்லாத பள்ளிகளுக்கு உடனடியாகச் சத்துணவு மையங்கள் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8503, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை ஊராட்சி ஒன்றியத்தில் தற்சமயம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் அங்கன்வாடி மையங்களுக்கு, திருவேங்கிடம்பாளையம், கூடும்பதி சாணர்பாளையம், மடத்துப்பாளையம், தோப்புப்பாளையம், பெருமாபாளையம், கருப்புப்பாளையம், சின்னவேட்டுவப்பாளையம், பொன்னங்காட்டுப்புதூர் காலனி, எல்லப்பாளையம், விஜயபுரி, மூங்கில்பாளையம், சூரியம்பாளையம், குஞ்சரமடை காலனி, சிட்டாம்பாளையம், சிங்கநல்லூர், தாஸ்கண்டன் வீதி (கொங்குநகர்), வாய்க்காமேடு, கருக்கம்பாளையம், தாண்டாகவுண்டன்பாளையம், பஞுகலாபூர், மம்பட்டிதோப்பு, எலயாம்பாளையம் ஆகியவற்றிற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1540, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் வாடகை மற்றும் பள்ளிக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற பாலர் பள்ளி, அங்கன்வாடி மையங்களுக்குத் தனியாக அரசுக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3964, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதியில் கட்டடம் இல்லாமல் தனியார் இடங்களில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையங்கள் அனைத்திற்கும் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7645, திரு. எஸ். ஜெயபால், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5890, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதியிலுள்ள சத்துணவுக் கூடங்களுக்கு, ஊட்டச்சத்து அங்கன்வாடிகளுக்கு மின் வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5482, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியிலுள்ள சத்துணவுக் கூடங்களைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7544, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி தொகுதியிலுள்ள பள்ளிகளில் சத்துணவு சாப்பிடுகின்ற மாணவர், மாணவியர் அதிகமிருந்தும், சத்துணவுப் பட்டியலில் எண்ணிக்கை குறைவாக உள்ளதால், சத்துணவு சாப்பிடும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2028, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவுடன் கூடுதலாக வாரம் இரு முட்டைகள், கொண்டைக் கடலை, அவித்த உருளைக் கிழங்கு வழங்குவதற்கான எரிபொருள் செலவினங்களை உயர்த்தி வழங்குவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1660, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2146, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3397, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8438, திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சைதாப்பேட்டை தொகுதியிலுள்ள சத்துணவுக் கூடங்களை முறையாகப் பராமரிப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8697, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சத்துணவு மையம் மற்றும் அங்கன்வாடியில் பணியாற்றும் ஊழியர்களைப் பணி நிரந்தரம் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8504, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, ஒரத்தநாடு ஒன்றியம், நீடாமங்கலம் ஒன்றியம் ஆகிய பகுதிகளில் சத்துணவு அமைப்பாளர், சமையலர் காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7906, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, துரிஞ்சாபுரம், ஜமுனாமரத்தூர் பகுதிகளில் சமூக நலத் துறையின்மூலம் பெறப்பட்ட மனுக்களில், எத்தனை மனுக்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.967,27,91,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.3,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6– கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை– கால்நடை பராமரிப்பு. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.27,48,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)



**திரு. டி. ஜெயக்குமார்:** Speaker Sir, காங்கிரஸ் வெளிநடப்பா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Mr. Jayakumar, mind your work please. வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். (கூச்சல்–குழப்பம்)

**திரு. டி. ஜெயக்குமார்:** ஒரு clarification. தகவல் கோரல்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 6056, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதியில் ஆடு, மாடு, கோழி வளர்ப்பதற்கு ஏழை எளிய மக்களுக்குக் கடனுதவி, மானியத்துடன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2331, திரு. கே.வி. ராமநாதன்.

**திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பவானி தொகுதியில் புதிய கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2683, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி மலைப் பகுதிகள் நிறைந்துள்ளது; இங்கு கிராம மக்கள் அதிக அளவு ஆடு வளர்ப்பைப் பிரதானமாக நம்பியுள்ளதால், ஆடு வளர்ப்புப் பயிற்சிக் கூடமும், ஆடு சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி நிலையமும் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3712, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பண்ருட்டி தொகுதிக்குட்பட்ட அனைத்துக் கிராமங்களிலும் கோழிப் பண்ணை அமைக்கக் கடன் வசதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4089, திரு. கே.எல். இளவழகன்.



**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், ஆற்காடு சட்டமன்றத் தொகுதி, ஆற்காடு ஒன்றியம், புதுப்பாடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7176, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதிக்குட்பட்ட ஆற்காடு, முகையூர், கண்டாச்சிபுரம், அன்னியூர், அந்தியூர், தடுக்கை பெருச்சானூர், ஜம்பை, கொழுந்தியாபுரப்பட்டு, மனம்பூண்டி, ஆலம்பாடி, வரனூர், பையூர் ஆகிய கிராமங்களுக்குக் கால்நடை பராமரிப்பு மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7481, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதி, கோனூர் ஊராட்சியில் ஆட்டுப் பண்ணை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *8413*, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, ஆலங்காயம் ஒன்றியம், ஜவ்வாதுமலை புதூர்நாட்டில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

முற்பகல் *11—20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2736*, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *3610*, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *8115*, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *9406*, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *5165*, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி, கொருக்கை கால்நடைப் பண்ணையில் கால்நடைத் தீவனப் புல் வகைகள் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3138*, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையில் தற்போது 2,000 கால்நடை ஆய்வாளர்கள் பணியிடங்கள் காலியாகவுள்ளவற்றை உடன் நிரப்பிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3151*, திரு. இரா. இராம்பிரபு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் *5080*, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணி தொகுதி, திருவாலங்காடு ஒன்றியம், மணவூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *4602*, திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகம் முழுவதும் வெறிநாய்க் கடிகள்மூலம் மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுக்க, வெறிநாய்களுக்குத் தடுப்பூசியும், கருத்தடையும் செய்து, அவற்றின் இனப்பெருக்கத்தைத் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்து, மக்களை வெறிநாய்க் கடியிலிருந்து காப்பாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6511, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை கிழக்கு தொகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனைகளைத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2466, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனி தொகுதி, குச்சனூரிலுள்ள கால்நடை துணை மருந்தகத்தினை மருந்தகமாகத் தரம் உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க், கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2881, திரு. என்.ஆர். ரங்கராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4901, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலைவாய்ப்பைப் பெருக்குவதற்கு, வெள்ளைப் பன்றிகள் வளர்க்க ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4842, திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5323, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ராஜபாளையம் நகரில் மிகவும் பழுதான நிலையில் இயங்கி வரும் கால்நடை மருத்துவமனையைப் பராமரிப்புச் செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5477, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொள்ளாச்சி தொகுதி, நாய்க்கன்பாளையம் கிராமத்தில் துணை கால்நடை மருத்துவ நிலையம் ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4427, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதி, கூடலூர் பேரூராட்சிப் பகுதியில் கால்நடை மருந்தகம் ஏதும் இல்லாததால், மையப் பகுதியான கூ.கவுண்டம்பாளையத்தில் புதிதாகக் கால்நடை மருந்தகம் ஒன்று தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6063, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், வேலூரில் மிகவும் பழுதடைந்துள்ள கால்நடை மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கபெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கபெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2586, திரு. ஆர்.எம். பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8468, திரு. செ. பொன்னுதுரை.



**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெருந்துறை தொகுதியிலுள்ள சின்ன வீரசங்கிலி, பெரிய வீரசங்கிலி ஊராட்சியில் கால்நடைகள் அதிகமாக இருப்பதால், அங்கு கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8524, திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், திருப்புறம்பியம் ஊராட்சியில் பகுதிநேரமாக இயங்கி வரும் கால்நடை மருத்துவமனையை முழுநேர மருத்துவமனையாக, வாரம் முழுவதுமாகச் செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8505, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், மூணவல் கோட்டை ஊராட்சியில் கால்நடை மருந்தகம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8183, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம், கால்நடை பராமரிப்பு மருத்துவமனையில் அரசு கால்நடை மருத்துவர்கள் கூடுதலாக நியமனம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8038, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதிக்குட்பட்ட பி. முட்லூர் பகுதியில் கால்நடை மருத்துவமனைக்கான நிதி ஒதுக்கப்பட்டு, இடம் தெரிவு செய்யப்படாமல் உள்ளது; உடன் இடம் தெரிவு செய்து, கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8096, திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதி, செவல்பட்டி, வெள்ளையாபுரம் கிராமங்களில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்



வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8793, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காங்கேயம் காளைகள் இனப்பெருக்கம் குறைவாக உள்ளதால், இந்த இனக் காளைகளின் இனப்பெருக்கத்தை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2084, திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1272, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர் தொகுதி, கணவாய்புதூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6005, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் இயங்கி வரும் எண்ணற்ற கால்நடை மருந்தகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால்

அவற்றுக்கு அரசு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7581, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதிக்குட்பட்ட பூத்துரை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1587, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உசிலம்பட்டி தொகுதியில், செல்லப்பட்டி ஊராட்சி ஒன்றியம், சக்கரப்ப நாயக்கனூர் பஞ்சாயத்து, மேலப் பெருமான்பட்டிக்கு கால்நடை துணை மருத்துவமனை அமைத்துக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3962, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவு தொகுதிக்குட்பட்ட நல்லிக்கண்டன்பாளையம், திப்பம்பட்டி, பணப்பட்டி ஆகிய மூன்று கால்நடை மருந்தகங்களுக்குப் புதிதாகக் கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5885, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவிடைமருதூர் தொகுதியில் திருப்பனந்தாள், துகிலி போன்ற இடங்களில் உள்ள மருத்துவமனைக்குப் போதிய மருத்துவர்கள் நியமனம் குறித்தும், மருந்துகள், உபகரணங்கள் போதிய அளவு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1992, திரு. பெ.சு. விஜயகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3375, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரதராமி, சைனகுண்டா, வளத்தூர் ஆகிய பகுதிகளில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3337, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் தொகுதி, பொன்மனையில் கால்நடை மருந்தகம் அமைப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3439, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி தொகுதி, சோலைக் கொட்டாயில் அரசு கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3428, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் தொகுதி, பாலக்குறிச்சியில் கால்நடை மருத்துவமனை ஒன்று அமைக்க நிதி ஒதுக்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1716, திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5579, திரு. எஸ். ராஜகுமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1669, திரு. பா. வேல்துரை, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6920, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாயிகளின் தோழன் என்று கருதப்படுகின்ற கால்நடைகளின் இனப் பெருக்கத்தை ஊக்குவிக்கின்ற வகையில் விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7503, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மீன்சுருட்டி கால்நடை மருத்துவமனையில் போதிய மருத்துவர்கள், மருந்துகள், உபகரணங்கள் இல்லை; போதிய மருத்துவர்களை நியமித்தும், மருந்துகள், உபகரணங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்

வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2033, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகளைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை– கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7320, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், வேட்டகுடியில் உள்ள கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்தி, மருத்துவமனையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை– கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5731, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடி தொகுதியிலுள்ள கீழாத்தூர் ஊராட்சி, சூரன்விடுதியில் கால்நடை மருத்துவக் கிளை நிலையம் தொடங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6477, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரி சட்டமன்றத் தொகுதியில் ஆடு, மாடு, பால் மாடு போன்ற கால்நடைகள் அதிகம் வளர்க்கப்படுகின்றன; இக்கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களிலிருந்து அவற்றைக் காப்பாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை– கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7539, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டி தொகுதி, ஆரம்பாக்கம் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை புதிதாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை– கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1977, திரு. அருள் அன்பரசு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3190, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அதிகப் பால் தரும் கலப்பினக் கறவை மாடுகளை ஏழை விவசாயிகளுக்கு வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8335, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, மானத்தாள் ஊராட்சியில் இயங்கும் கால்நடை மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9354, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9342, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரன்கோவில் தொகுதியில் கால்நடைகள் அதிகமாக வளர்க்கப்படுகின்ற பகுதிகளில் கால்நடை மருத்துவமனைகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8923, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பல்லடம் தொகுதி, சூலூர், பல்லடம், வாக்ராயம், பாளையம் ஆகிய கிராமங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகளுக்குத் தேவையான அடிப்படை வசதி, சுற்றுச் சுவர் எழுப்புதல் மற்றும் கூடுதல் கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8273, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரையில் உள்ள கால்நடை பராமரிப்பு மருத்துவமனையை விரிவு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9180, முனைவர் கு. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9200, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, பாளையங்கோட்டையிலுள்ள கால்நடை மருத்துவமனை பராமரிப்பு இல்லாத நிலையில் உள்ளது; அம்மருத்துவமனையைப் பராமரித்து, அதனைத் தொடர்ந்து செயல்படச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8830, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டத்தில் அதிக அளவில் விவசாய நிலங்கள் உள்ளதால், நல்ல முறையில் உழைக்கும் காங்கேயம் காளை இனப்பெருக்கத்தைப் பெருக்கி, விவசாயிகளுக்கு வழங்குவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6287, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி வட்டம், சோழவரம் ஊராட்சி ஒன்றியம், சோழவரம் கால்நடை மருத்துவமனைக் கட்டடம் பழுதடைந்து, உபயோகிக்க இயலாத நிலையில் உள்ளது; தற்சமயம் ஒரு சிறிய தனி அறையில் இயங்கிக்கொண்டிருக்கிறது; எனவே, புதிய கால்நடை மருத்துவமனைக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8603, திரு. டி. மூர்த்தி.



**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர் தொகுதியில் அமைந்துள்ள சிறுங்குன்றம் கிராமத்தில் ஆடு, மாடு, கோழி, வாத்து போன்ற கால்நடைகள் அதிகம் வளர்ப்பதால், இங்கு ஒரு கால்நடை மருத்துவ மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7213, திரு. மா. தண்டபாணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9278, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நரிப்பள்ளி, கோபிநாதம்பட்டி கூட்டு ரோடு, மருதிப்பட்டி முதலிய இடங்களில் கால்நடை மருத்துவமனைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/—, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/— மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6903, திருமதி பெ. கமலாம்பாள்.

***திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கால்நடைகளைப் பராமரிக்கும் நவீன முறை குறித்தும், கால்நடைகளுக்கு வரும் நோய்களைக் கண்டறிவது குறித்தும், கால்நடை வளர்ப்போருக்குப் பயிற்சி அளிப்பதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ்

வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,48,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2806, டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7977, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் கால்நடை மருத்துவமனை மிகவும் பழுதடைந்து உள்ளது; இதை உடன் பழுதுபார்க்க வேண்டியது பற்றியும், கால்நடை மருந்தகத்தைச் சுற்றி, சுற்றுச்சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு, .பால் வளம் மற்றும் மீன்வளத் துறை— கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.27,18,000/—ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

முற்பகல் 11—25

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை குறித்த (கூச்சல்—குழப்பம்) கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை* நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த

* 219 முதல் 297 வரையிலான பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள். (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறையின் கால்நடை பராமரிப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பினை** நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். (குறுக்கீடுகள்) ஏறத்தாழ 11 உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள். ஒவ்வொரு உறுப்பினரும் 10 நிமிடங்களுக்கு மேற்படாமல் உரையாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முதலில் மாண்புமிகு உறுப்பினர் ராதாகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) திரு. ல. ராதாகிருஷ்ணன். (குறுக்கீடு) நீங்கள் முதலிலே உங்கள் உறுப்பினர்களைக் கட்டுப்பாடாக இருக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப உங்களிடம் சொல்லியாகிவிட்டது. திரும்பத் திரும்ப he is doing the same thing. (Interruption) Not permitted. நீங்கள் பேசுங்கள், ராதாகிருஷ்ணன். (குறுக்கீடு) நீங்கள் பேசுகிறீர்களா அல்லது அடுத்த உறுப்பினரைக் கூப்பிடவா? (கூச்சல்—குழப்பம்)

(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. ஜெயக்குமார், நீங்கள் முதலில் உட்காருங்கள். நான் அப்போதே சொன்னேன், mind your work என்று. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். ராதாகிருஷ்ணன், பேசுகிறீர்களா, உட்காருகிறீர்களா? (கூச்சல்—குழப்பம்) உங்கள் உறுப்பினரைத்தான் பேசச் சொல்லியிருக்கிறேன். இதில கொறடாவுக்கு என்ன இருக்கிறது? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

** 298 முதல் 367 வரையிலான பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

V211,31'906 P06.13.1

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. வைகோ இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பொதுக் கூட்டத்தில் தெரிவித்த ஆட்சேபகரமான கருத்துகள்—அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை—தொடர்ச்சி

*திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தங்கள் விளக்கங்களைச் சொல்வதற்கு வாய்ப்பளிக்காத காரணத்தால், --அவர் கேட்டும், நீங்கள் தரவில்லை. ஆகவே—இப்போது அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல. அந்த வாய்ப்பை நீங்கள் அவர்களுக்குத் தந்திருக்க வேண்டும். அவர்களுடைய தலைவர்மீது சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகளுக்கு, அவர்கள் அது மாதிரி நடைபெறவில்லை என்று தன்னிலை விளக்கத்தைச் சொல்வதற்கு வாய்ப்பளிக்காத காரணத்தால், இப்போது அவர்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறார்கள். நாங்களும் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்)*

## 6. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு**

} —தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் தியோடர் ரெஜினால்டு (குறுக்கீடு) ரெஜினால்டு.

***திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருதூர்குறிச்சி என்ற ஒரு சாதாரண குக்கிராமத்தில், மிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த என்னை, நான்கு முறை ஒன்றியக் கழகச்



செயலாளராக, ஒரு முறை குமரி கிழக்கு மாவட்டக் கழகத்தின் செயலாளராகக் கழகத்தில் பணியாற்றும் வாய்ப்பைத் தந்து– (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், முதல்வர் அவர்கள் உரையாற்றிய உடனே கேட்டிருந்தார் என்றால், அதை அனுமதித்திருக்கலாம். அரை மணி நேரம் கழித்து இப்போதுதான் அவருக்கு உதயமாகி இருக்கிறது. எழுந்திருந்து நின்று கேட்டுக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) No. மாண்புமிகு உறுப்பினர் தியோடர் ரெஜினால்ட், பேசுங்கள்.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** நடந்து முடிந்த 13–வது சட்டப் பேரவைத் தேர்தலில் எனக்கு வாய்ப்புத் தந்து, இந்த மாமன்றத்தில் பேசுவதற்கான அனுமதியைத் தந்த தமிழினத்தின் சுமைதாங்கி, பொது வாழ்வின் பயிற்சிக் களம், மொழியினம் காக்க வந்த முத்தமிழ் அறிஞர், என் உயிரினும் மேலான தலைவர், என் குடும்பத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, நன்றி சொல்கிறேன். என்னை அடையாளம் கண்டு, எனக்கு முகவரி தந்து, என் தொகுதிக்கு வந்து சுற்றிச் சுற்றித் தேர்தல் பிரச்சாரம் செய்து, 'ரெஜினால்டு, வெற்றி பெற்று வா' என்று வாழ்த்திய, வருங்கால வசந்தத்தின் தூதுவன், நான் நேசித்து ஏற்றுக்கொண்ட, என் நெஞ்சத்தில் சுமக்கின்ற என்னுடைய இளைய தலைவர், மாண்புமிகு தமிழகத்தினுடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அன்புத் தளபதியார் அவர்களுடைய திருவடிகளை வணங்கி நான் நன்றி சொல்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

என்னைப் பரிவோடு பரிந்துரை செய்த, எங்களுடைய மாவட்டக் கழகத்தினுடைய செயலாளரும், சுற்றுலாத் துறை அமைச்சருமாகிய மாண்புமிகு அண்ணன் திரு. என். சுரேஷ் ராசன் அவர்களுக்கு என்னுடைய நன்றியை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் ஐயா அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காட்டார் அவர்கள் உள்ளிட்ட மூத்த அமைச்சர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு என்னுடைய தொகுதிக்கு வந்து, எனக்காகத் தேர்தல் பிரச்சாரம் செய்த மாண்புமிகு மத்திய அமைச்சர்கள், மரியாதைக்குரிய திரு. ஜி.கே. வாசன் மற்றும் திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும் மற்றும் பொதுவுடைமைக் கட்சியினுடைய மாநிலச் செயலாளர், மரியாதைக்குரிய தோழர் திரு. வரதராஜன் அவர்களுக்கும், தமிழக முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினுடைய மாநிலத் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்களுக்கும், இன்னும் ஜனநாயக முற்போக்குக்

கூட்டணியினுடைய தோழர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-30

அதுபோல, திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராகப் போட்டியிட்ட என்னை, முதலாவது முறையாகத் தேர்ந்தெடுத்த, அதிலும் குறிப்பாக, இதுவரை எந்தச் சட்டமன்ற உறுப்பினரும் பெற்றிராத வகையில், 31,786 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெற வைத்த என்னுடைய பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு என் நன்றியைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தாய், தந்தையை வணங்கி, என் கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் அவர்கள் தன்னுடைய தேர்தல் அறிக்கையில் சொன்னார்கள்; 'செய்வதைச் சொல்வோம், சொல்வதைச் செய்வோம்' என்று சொன்னதற்கிணங்க, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி திரும்பவும் வந்தால், 'தமிழகத்தில் அ.இ.அ.தி.மு.க. சர்க்காரால் கொண்டு வரப்பட்ட மத மாற்றத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்வோம்' என்று சொன்னார்கள். அதுபோன்று, ஆட்சிக்கு வந்தவுடன், மத மாற்றத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்ததற்கு, என்னுடைய தொகுதியில் வாழ்கின்ற சிறுபான்மை மக்கள் சமுதாயத்தின் சார்பாக என்னுடைய பணிவான நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லோரும் வாழ வேண்டும், உயிர்கள் இன்புற்றிருக்க வேண்டும்' என்ற நல்லோரின் எண்ணத்தைச் செயல்படுத்தி, எல்லோருக்கும் எல்லாம் என இருப்பது என்ற இடம் நோக்கி இந்தத் தமிழகத்தை நடத்திச் செல்லும் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஐயா தலைமையில், மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் பெருந்தகை அவர்கள் இந்த ஆண்டு அளித்த நிதிநிலை அறிக்கையில், சமூக நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறைகளில் பேசுகின்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்ச்சியடைகின்றேன்.

சமூக நலத் துறையின் பணிகள், பலதரப்பட்ட மக்களுக்குப் பயன் தரக்கூடிய வகையில் இருக்கும் பணிகளாகும். இதிலே வருமானம் வரக்கூடியது ஒன்றும் இல்லையென்று சொன்னாலும், வகையற்றோருக்கு வாழ்வளிக்கின்ற திட்டங்கள் பல இருக்கின்றன. பொதுவாக, முந்தி முற்றிய கதிர்ச் சுமையால் வளைந்து சாயும்



வலுவிழந்து பயிர்போல, உழைத்து, உழைத்து வற்றிய உடலோடு, வறுமையை இட்கின்ற, ஓய்ந்து போன விவசாயத் தினக் கூலிகளுக்கு, வறுமையை விரட்டப் பல்வேறு திட்டங்களைத் தருகின்ற துறையாகும். வறுமைப் பேயை விரட்டி வாழ்வு அளிக்கின்ற திட்டங்கள் பல உள்ள துறையாகும். நாட்டில் வறுமையை விரட்ட வழியே இல்லையா? அதற்கு அழிவே இல்லையா? பொருள் இல்லாதோர் இல்லையென்னும் திருநாள் இல்லையா என்று ஏங்கிக்கொண்டிருந்த ஏழைக் குடும்பப் பெண்களுக்கு உதவுகின்ற திட்டங்கள் பல இந்தத் துறையில் வருகின்றன. 'கோடானு கோடி உயிர்களுக்கு ஒரு தந்தை என்றாலே சிலர் கோட்டையிலே, பலர் குடிசையிலே குடியிருப்பதாலே, கூன், குருடு, செவிடராய்ப் பிறப்பதாலே, இந்தக் குறைகளுக்கு இதுவரை முடிவு இல்லையென்று' ஒரு கவிஞன் பாடினான். அப்படிப் பிறந்தாலும், காரணம் எதுவாக இருந்தாலும், காப்பது நமது கடமையென்று கருதிய தலைவர் கலைஞர் அரசு, அப்படிப் பிறந்த ஏழைக் குழந்தைகளுக்கும், காது கேளாதவர்கள், கண் தெரியாதவர்கள், வாய் பேச முடியாதவர்கள், மற்ற வகையில் ஊனமுற்றோருக்கெல்லாம் மறுவாழ்வு தருகின்ற அரசுத் திட்டங்களை, அவர்களுக்குக் கல்வியோடு, தொழிற்கல்வியும் தந்து வாழ்வு அளிக்கின்ற திட்டங்களை நிறைவேற்றித் தருகின்ற சமூக நலத் துறை உண்மையில் பாராட்டுதற்குரியதாகும்.

சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டம் என்பது குழந்தைகள் மற்றும் பெண்களை மையமாகக் கொண்ட ஒரு மானியமாகும். 'ஒரு ஆண் படித்தார் என்று சொன்னால், அவர் மட்டும் படித்ததாகப் பொருள். ஒரு பெண் படிக்கின்றபோது, அந்தக் குடும்பமே படித்ததாகப் பொருள்படும்' என்று தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள். தந்தை பெரியார் அவர்களின் வழியில் வந்த நம்முடைய தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள், பெண்கள் கல்வி அறிவைப் பெறுவதற்காகப் பல்வேறு சீரிய திட்டங்களைத் தீட்டி, பெண் அடிமையை மாற்றி வரும் தலைவர் கலைஞர் அரசை மனதாரப் பாராட்டுகிறேன்.

மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டுள்ள மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைப் பெண்களின் மகள் திருமண உதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதியுதவித் திட்டம், தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டம், சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம் ஆகிய சீரிய

திட்டங்களை மனதார வரவேற்றுப் பாராட்டுகிறேன். பெண்களுக்கான சமூகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களை மனதாரப் பாராட்டுகிறேன்.

முற்பகல் 11—3.5

சமூக நலத் துறையில் அரசு அமைக்கின்ற ஆலோசனைக் குழுக்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளான எங்களைப் போனறவர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொள்ளுமாறு மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அய்யா அவர்களைப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் குடும்ப ஆலோசனை மையம் ஒன்று அமைக்க மாண்புமிகு முதல்வர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களைக் கேட்டுக்சொள்கிறேன்.

'சர்வதேச முதியோர் தினம்' ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 2 ஆம் தேதி கொண்டாடுவதை மனதார நான் பாராட்டி, வரவேற்கிறேன். 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' என்று சொன்ன பேரறிஞர் அண்ணாவின் தம்பியாகிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை, சத்துணவுத் திட்டத்தில் வாரம் இரு முறை முட்டை வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்திச் செயல்படுத்தும் தலைவர் கலைஞர் அவர்களை இந்த நாடே போற்றுகிறது.

தாயுள்ளமும், கருணையுள்ளமும் கொண்ட தலைவர் கலைஞர் அவர்கள், சத்துணவுப் பணியாளர்களுடைய கோரிக்கையைக் கனிவோடு பரிசீலிக்கப் பணிவோடு வேண்டுகிறேன். சமூக நலத் துறையின் திட்டங்கள், சமுதாயத்தின் அடிமட்ட மக்களுக்குப் பயன் தரக்கூடிய திட்டங்களாகும். முதியோர்களுக்கு உதவித் தொகை மாதம் 400 ரூபாய் என்று தலைவர் கலைஞர் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். 200 ரூபாய் என்றிருந்ததை இரு மடங்காக, கருணையுள்ளத்தோடு நம்முடைய தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஒரு குன்னிமுத்து அளவாவது உயர்த்தினார்களா என்றால், இல்லை. 200 ரூபாயாவது ஒழுங்காகக் கொடுத்தார்களா என்றால், இல்லை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இன்னும் தாராளமாக ஏழைகளுக்கு வழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கடந்த 5 ஆண்டு காலமாக, யாரொருவருக்கும் முதியோர் தொகையோ, உதவித் தொகையோ புதிதாக வழங்கப்படவில்லை.



சமுதாயத்தில் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டவர்களாக இல்லாமலிருக்க, உதவித் தொகையை இரு மடங்காக உயர்த்தியிருப்பதை மனதாரப் பாராட்டி வரவேற்கிறேன். மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், ஏழையெளிய குடும்பப் பெண்கள் கல்வியறிவு, எழுத்தறிவு பெறுவதற்கும், அதன்மூலம் சமூகம் விழிப்புணர்ச்சி பெறுவதற்கும் வழிவகை செய்யும் வகையில், இத்திருமண உதவித் திட்டம் அமைந்திருக்கின்றது. இத்தொகையைப் பெறுவதற்காக வேண்டி, கல்விக்கூடத்திற்குச் சென்று, 10 ஆம் வகுப்பு வரை படித்தே தீர வேண்டும் என்று எண்ணுகிற ஏழை மாணவிகளும் உண்டு. சமுதாயத்தின் கடைக்கோடியில் இடப்பாருக்கும் கல்வி கிடைக்க இந்தத் திட்டம் ஏந்தலாக உள்ளது. ஏழைப் பெண்களுக்குத் திருமண உதவித் தொகை 15 ஆயிரம் ரூபாய் வழங்குவது, பொருளாதாரத்தில் மிக, மிகப் பின்தங்கிய ஏழைக் குடும்பங்களை மிகவும் ஈர்த்துள்ளது. வசதி வாய்ப்புள்ளவர்களுக்கு என்றில்லாமல், மிகச் சாமான்யர்களைப் பற்றிச் சிந்திக்கக்கூடிய ஒரு மாபெரும் தலைவரை தமிழ்நாடு ஐந்தாவது முறையாக முதல்வராகப் பெற்றிருக்கிறது.

இல்லாதவனைப் பற்றிச் சிந்திக்கிற, சாதி, சமயத்திற்கு அப்பாற்பட்டு, ஏழையெளியவனைப் பற்றிச் சிந்திக்கிற ஒரே தலைவர் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர்தான் என்பதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். இந்த உணர்வுதான், 83—வது வயதில் 5—வது முறையாக ஆட்சி அமைக்கச் செய்துள்ளது என்பதை நான் இங்கே பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்று அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார். அதற்குச் செயல் வடிவம் கொடுக்கிற ஆட்சிதான், முத்தமிழறிஞர் கலைஞருடைய ஆட்சி. எளிய குடும்பத்தில் பிறந்து, விடுதலைப் போராட்டத்தில் பல ஆண்டுகள் சிறைப்பட்ட தியாகியும், சுதந்திர இந்தியாவில் மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்பட்டவருமான, ஏழைப் பங்காளன், பெருந்தலைவர் காமராஜர் பிறந்த ஜூலை 15 ஆம் நாளை, கல்விக் கண் திறந்த நாளாக அறிவித்து, ஒரு பெற்ற தாய் செய்ய முடியாத காரியத்தை, பல இலட்சம் குழந்தைகளுக்கு, ஒரு வருடத்தில் 104 கோழி முட்டைகளோடு உள்ள சத்தான உணவை வழங்குகிற, ஆரோக்கியமான ஒரு இளைய சமுதாயத்தை வளர்க்கத் திட்டங்கள் தந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வருங்காலச் சந்ததி வாழ்த்தும்.

முற்பகல் 11—40

சமூக நலத் துறையில் பணியாற்றக்கூடிய அரசு அதிகாரிகளும், அரசு அலுவலர்களும் மனித நேயத்தோடுகூட, இரக்கச் சிந்தனையோடு தங்கள் கடமையைச் செய்யக் கடன்பட்டவர்கள் என்பதை மாண்புமிகு இத்துறையின் அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு, அந்தத் துறையின் அதிகாரிகளுக்கும், அலுவலர்களுக்கும் நல்ல அறிவுரைகளையும், உத்தரவுகளையும் கொடுப்பதோடு, ஆய்வுகளை அடிக்கடி மேற்கொண்டு, தவறு செய்வோர்மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் இத்துறையின் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு அரசு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சமூக நலத் துறையில், குறிப்பாக, சத்துணவுத் திட்டத்தில் காலியாக உள்ள அமைப்பாளர்கள், உதவியாளர்கள், ஆயாக்கள் பணியிடங்களை ஏழை விதவைப் பெண்களுக்குக் கொடுத்து, அவர்கள் வாழ்க்கையைக் காப்பாற்றவும் மாண்புமிகு தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடைத் துறையானது 1892 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட துறை. 114 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க துறையாகும். இந்தத் துறை கடந்த ஐந்தாண்டுகளில் சரியாகக் கவனிக்கப்படாத காரணத்தினால், இன்னும் சொல்லப் போனால், வேலை நியமனத் தடைச் சட்டத்தின்மூலம் புதிய பணியாளர்கள் நியமிக்கப்படாமல் இருந்த காரணத்தினால் ஐந்தாண்டு காலமாக இந்தத் துறை மிகவும் சீரழிந்து போனது என்பதை எடுத்துக்காட்ட நான் விரும்புகிறேன்.

எங்களுடைய குமரி மாவட்டத்தில் 1.25 இலட்சம் கால்நடைகள் வளர்ந்துகொண்டிருக்கின்றன. சுமார் 45 விழுக்காடு மக்கள் இந்தத் தொழிலைத்தான் பிரதான தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். கடந்த ஐந்தாண்டு காலத்தில் எங்களுடைய குமரி மாவட்டத்தில் மட்டும் பல காலி இடங்கள், குறிப்பாக 32 கால்நடை பராமரிப்பு ஆய்வாளர்கள், 42 உதவியாளர்கள், தடுப்பூசி போடுகின்ற 12 பேர் உட்பட பல பதவிகள் காலியாக இருக்கின்றன என்பதை உங்களுக்கு நான் கோடிட்டுக் காட்ட விரும்புகின்றேன். (மணியடிக்கப்பெற்றது) எனவே, தொடர்ந்து கால்நடைத் துறையைச் சீர்படுத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, என்னுடைய தொகுதி குறித்து சில குறிப்புகளை நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத்



துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தொகுதியில், 1989 ஆம் ஆண்டு தலைவர் அவர்கள் முதல்வராக இருந்தபோது எங்களுடைய மாவட்டத்திற்கு வந்து பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள். அன்றைய சட்டமன்ற உறுப்பினர், நம்முடைய தோழமைக் கட்சியினுடைய உறுப்பினருடைய வேண்டுகோளை ஏற்று, என்னுடைய மாவட்டத்திற்கு வந்து பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்கள். ஆனால் கழிந்த 17 ஆண்டு காலமாக அந்தத் திட்டங்கள் கிடப்பில் போடப்பட்டன என்பதை மிகப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலாவதாக, மாம்பழத்தாறு அணைத் திட்டம் என்பது மிக முக்கியமான ஒரு திட்டம். இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நிறைவேற்றித் தர மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவுப் பொருளான புளி, தென் மாவட்டங்களில் என்னுடைய தொகுதியில்தான் அதிகமாகக் கிடைக்கிறது. அந்தப் புளியைப் பாதுகாத்துப் பயன்படுத்தி, பதனிடுகின்ற ஒரு குளிரூட்டும் நிலையத்தை அமைத்துத் தந்தால், கிராமத்தில் வாழ்கின்ற படிக்காத ஏழைப் பெண்களுக்கும், ஆண்களுக்கும் 200 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. எனவே, அதைத் தொடர்ந்து நிறைவேற்றித் தர மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில் நீண்ட காலமாக இருந்து வருகின்ற ஒரு கோரிக்கை. உதயகிரிக் கோட்டையில் விவசாயக் கல்லூரி அமைக்கின்ற கோரிக்கையை நிறைவேற்றித் தர மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நேந்திர வாழைக்காய் என்று சொல்லுகின்ற அந்த வாழைப் பயிரை என்னுடைய தொகுதியில்தான் தென் மாவட்டங்களில் அதிகமாகப் பயிரிடுகிறார்கள். எனவே, ஒரு வாழை ஆராய்ச்சி மையமும், வாழைக்காயிலிருந்து உணவுப் பொருள் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலையும் அமைத்துத் தர நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டம் கேரள மாநிலத்தை அடுத்த மாவட்டம். மழை அதிகமாக, அடிக்கடிப் பெய்துகொண்டிருந்த மாவட்டம். என்னுடைய தொகுதியில் மட்டும் சுமார் 450 குளங்கள் இருக்கின்றன. ஆனால், கடந்த பல ஆண்டு காலமாகத் தூர் வாராத காரணத்தினால் எல்லாக் குளங்களும்

ஆக்கிரமித்து, அவையெல்லாம் இன்றைக்குச் சிறு குட்டைகளாகக் காட்சியளிக்கின்றன. எனவே, நான் இங்கே பணிவோடு கேட்டுக்கொள்வதெல்லாம், எதிர்காலத்தில் எங்களுடைய மாவட்டம் பாலைவனமாய்ப் போய்விடாமல் இருப்பதற்கு, என்னுடைய தொகுதியிலுள்ள எல்லாக் குளங்களையும் தூர் வாரி, ஆக்கிரமிப்புகளை அகற்றி, சீர்செய்து தரும்படி மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று, என்னுடைய தொகுதியில்... (மணியடிக்கப்பெற்றது)

(முற்பகல் 11—45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விரைவில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி மக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கையான, கொற்றிகோடு புறக்காவல் நிலையத்தைக் காவல் நிலையமாக தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, நாகர்கோவிலுக்கு அடுத்து, இதுவரையில் எங்களுடைய மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம் கிடையாது. என்னுடைய பத்மநாபபுரம் நகர்மன்றப் பகுதியில் ஒரு சிறந்த விளையாட்டு அரங்கம் அமைத்துத் தர மிகப் பணிவோடு நான் தமிழக முதல்வர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அய்யா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில், கோழிப்போர்விளை என்ற ஊரில் ஒரு கால்நடை மருத்துவமனை அமைத்துத் தர மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய தொகுதியில் கோதநல்லூர் பகுதியில் அமைந்திருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தாலுகா மருத்துவமனையாகத் தரமுயர்த்தித் தர மாண்புமிகு தலைவர் கலைஞர் அய்யா அவர்களை மிகப் பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, ஒரு முக்கியமான பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. எங்களுடைய மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு இணைப்பதற்காகப் போராடிய தலைவர் மார்ஷல் நேசமணி அவர்கள். அவர்கள்தான் அதிக நிலப்பரப்பு தமிழகத்திற்குக் கிடைப்பதற்கும், வயது வந்தவர்களுக்கு வாக்குரிமை கிடைப்பதற்கும்



போராடிய தலைவர் ஆவார்கள். அவர்களது நினைவாக, எங்களுடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு மணிமண்டபம் கட்டித் தர வேண்டுமென்பது எங்களுடைய மாவட்ட மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். எனவே, தாயுள்ளமும், கருணையுள்ளமும் கொண்ட நம்முடைய முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கருணையுள்ளத்தோடு, மார்ஷல் நேசமணி அவர்களுக்கு ஒரு மணிமண்டபம் கட்டித் தர வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, எங்கள் மாவட்டத்தைத் தாய்த் தமிழகத்தோடு சேர்ப்பதற்காகப் போராடிய மொழிப் போர்த் தியாகிகள், மார்ஷல் நேசமணி அவர்கள், அமரர் பொன்னப்ப நாடார் அவர்கள், தியாகி ஜீவானந்தம் அவர்கள், ஈ.எஸ். இராமசாமிப் பிள்ளை அவர்கள், சிதம்பரநாதன் அவர்கள், டாக்டர் நூர் முகம்மது போன்ற விடுதலைப் போராட்டத் தியாகிகளின் நினைவாகத் தபால் தலை வெளியிடுவதற்கு நம்முடைய மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களை மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, என்னுடைய மாவட்டத்தில் இன்னொரு கோரிக்கை. என்னுடைய தொகுதியில் வரலாற்றுப் புகழ் மிக்க உதயகிரிக் கோட்டை என்ற ஓர் இடம் இருக்கிறது. எங்களுடைய மாவட்டம் கேரளாவோடு இருக்கின்றபோது, மன்னர்கள் அரண்மனை அமைத்து, அங்கே ஆட்சி செய்திருக்கிறார்கள். பல காலமாக, பல வரலாற்றுச் சின்னங்கள் அந்தப் பகுதியில் இருக்கின்றன. அவை சுமார் 90 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளன என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேல் வரலாறு கொண்டவை. (மணியடிக்கப்பெற்றது) உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அரை நிமிடத்தில் நன்றி சொல்லி உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 9 ஆம் நூற்றாண்டில் இராஜராஜ சோழன் படையெடுத்து வந்து, இக்கோட்டையை நாசப்படுத்தினார். அங்கேயே தன் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடினார் என்பவை போன்ற செய்திகள் ஜெயங்கொண்டார் என்பவர் எழுதிய கலிங்கத்துப் பரணியில் தெரிவிக்கப்படுகின்றன. எனவே, 17 ஆம் நூற்றாண்டின் அன்றைய திருவிதாங்கூர் படைத் தளபதியாக விளங்கிய

[திரு. த. தியோடர் ரெஜினால்டு] [2006 ஆகஸ்ட் 22

கேப்டன் டிலனால் இக்கோட்டையை நவீனப்படுத்தினார். எனவே, அதைச் சுற்றுலா மையமாக்கித் தர வேண்டுமென்று கேட்டு, பேசுவதற்கான வாய்ப்பைத் தந்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

### ம.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. வைகோ இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பொதுக் கூட்டத்தில் தெரிவித்த ஆட்சேபகரமான கருத்துகள்—அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று காலையில் மதிப்பிற்குரிய சட்டமன்ற உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், நேற்றையதினம் தமிழகத்திலே, குறிப்பாகச் சென்னையிலே நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் ஒரு கட்சியினுடைய பொதுச் செயலாளர் பேசிய பேச்சினை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். இந்தியாவிலே தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு இறுதி வரை தனக்குள்ள தொடர்பை வைத்துக்கொள்ளப் போவதாகவும், எங்கள் இனிய தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் கொலை செய்யப்பட்டதில் முதன்மைக் குற்றவாளியாக உள்ள எல்.டி.டி.ஈ. தலைவர் பிரபாகரனைப் பாராட்டிப் பேசியும், தமிழகத்திலுள்ள இளைஞர்கள் ஏ.கே.47 துப்பாக்கிகள் ஏந்துவதில் தவறில்லை என்று வாதிட்டும், தமிழகத்தை மற்றொரு காஷ்மீராக மாற்றுவோம் என்றும், தமிழகத்தில் வன்முறையையும், பயங்கரவாதத்தையும் தூண்டுகின்ற வகையில், நேற்று நடந்த பொதுக் கூட்டத்தில் வைகோ. அவர்கள் பேசியது குறித்து அரசின் கவனத்தை நாங்கள் கோரினோம். இது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பதில் எங்களுக்கு அவ்வளவு மன நிறைவை அளிக்கவில்லை. இந்திய இறையாண்மைக்கு விரோதமாகப் பேசப்பட்ட இப்பேச்சுக்களைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளத் தயாராக இல்லை. தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்துப் பேசிய காரணத்திற்காகவும், ஆதரித்துப் பேசியதோடு, தனக்கு நிரந்தரமாகத் தொடர்பு உண்டு என்று பிரகடனம்



2006 ஆகஸ்ட் 22] [திரு. டி. சுதர்சனம்]

செய்து, பயங்கரவாதத்தையும், தீவிரவாதத்தையும் தூண்டிவிட்டு, பிரிவினை கோரிய வைகோ மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சி கேட்டுக்கொள்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன். *(குறுக்கீடு)* You cannot compel the Hon. Chief Minister to answer your question. *(குறுக்கீடு)* You cannot compel. *(குறுக்கீடு)* மாண்புமிகு முதல்வர் அவர்கள். *(குறுக்கீடு)* Please sit down.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்குப் பதில் சொல்வதென்றால், மீண்டும் ஒரு முறை—நான் முதலில் பேசியது, அவசரம், அவசரமாக இப்பொழுதே தட்டச்சுப் போட்டு எனக்கு வந்திருக்கிறது—அதைத் திரும்பப் படித்தாலே போதுமானதாக இருக்கும் என்று கருதுகின்றேன். சொல்ல வேண்டிய விஷயங்களை எல்லாம் சொல்லியிருக்கின்றேன். அந்தப் பொதுக் கூட்டத்திலே பேசப்பட்ட கருத்துகள், ஒவ்வாத கருத்துகள் என்பதை நான் சுட்டிக்காட்டியிருக்கின்றேன்.

அறிஞர் அண்ணா அவர்கள்—எங்களை வளர்த்த, எங்களை ஆளாக்கியிருக்கிற அறிஞர் அண்ணா அவர்கள்—திராவிட நாடு பிரிவினை கேட்ட அறிஞர் அண்ணா அவர்களே அந்தப் பிரிவினை கோஷத்தைக் கைவிட்டுவிட்டார்கள் என்பதைச் சொல்லி, அதை இப்பொழுது நினைவுபடுத்துவது சரியல்ல, இந்திய நாட்டினுடைய இறையாண்மைக்கு விரோதமானது என்பதையும் நான் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். இதற்கு மேலும் எதிர்ப்பு கருத்துகளை நான் என்ன சொல்வதென்று சுதர்சனம் அவர்கள் எதிர்பார்க்கிறாரோ, எனக்குத் தெரியவில்லை.

அது மாத்திரமல்ல, நான் இன்னொன்றும் சொன்னேன். இதே அவையில் விடுதலைப் புலிகளைப் பற்றி என்ன பேசப்பட்டது என்பதையும் சொல்லியிருக்கின்றேன். 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் தேதி இந்த அவையில் காலை 10–15 நேரம்—அப்பொழுது ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அன்றைய முதலமைச்சர் அம்மையார் செல்வி ஜெயலலிதா அவர்கள் கொண்டு வந்த தீர்மானம் இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதில் வாசகம், "ஸ்ரீலங்கா அரசினால் L.T.T.E. இயக்கத் தலைவர் பிரபாகரனைப் பிடித்து நாடு கடத்த இயலவில்லையென்றால், ஸ்ரீலங்கா அரசின் அனுமதியோடு, இந்திய இராணுவத்தை ஸ்ரீலங்கா அரசின் உதவிக்கு அனுப்பி, பிரபாகரனைச் சிறைப் பிடிப்பதற்கு உரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசைத் தமிழகச் சட்டமன்ற இந்தப் பேரவை கேட்டுக்கொள்கிறது. இந்தத் தீர்மானத்தை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமைகிறேன்" என்று அம்மையார் அவர்கள் அன்றைக்குப் பேசினார்கள்.

ஒரு வேளை அன்றைக்கு அவர்கள் கேட்டுக்கொண்டதற்காகத்தானோ, என்னவோ, இன்றைக்கு இதை நிறைவேற்ற, என்னுடைய அன்பிற்குரிய ம.தி.மு.க. உறுப்பினர்களும் வெளியே சென்றிருக்கிறார்கள். அவர்களைப் பின்பற்றி அ.தி.மு.க. உறுப்பினர்களும் வெளியே சென்றிருக்கிறார்கள். எனக்கு அதற்கு அர்த்தம் புரியவில்லை. (குறுக்கீடு) பிறகு சொல்லுங்கள். கேளுங்கள். (குறுக்கீடு) செங்கோட்டையன் பேச விரும்புகிறார். நான் பேசிய பிறகு சொல்லலாம். எனக்கு அதற்குப் பொருள் புரியவில்லை. ஆனால், ஒன்றை மாத்திரம் நான் திரு. சுதர்சனம் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். வேகமான வார்த்தைகளால் பேசுவதால், எழுதுவதால் யாரும் வீரர்களாக ஆகிவிட முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் இங்கே சொன்னேன். அதை எடுத்துக்கொண்டு, நான் சரியான பதிலைப் பீட்டர் அவர்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அளித்தேன் என்று நீங்கள் எடுத்துக்கொண்டிருக்கலாம். ஆனாலும், எனக்கு இங்கு



பற்றிப் பீட்டர் அல்போன்ஸ் பேசினாலும் அல்லது நம்முடைய ஞானசேகரன் நேற்றைக்குப் பேசியதுபோலப் பேசியிருந்தாலும், அநேகமாக இன்றைக்கு நான் எடுத்துச் சொன்ன விஷயங்கள் எல்லாம் நேற்றைக்கு ஞானசேகரன் பேசியதனுடைய தொடர்ச்சிதான். அதற்கு அளித்த பதிலைத்தான் இன்றைக்குப் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய அந்தப் பிரச்சினைக்கும் நான் இங்கே தெரிவித்திருக்கின்றேன். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான்.

ஆம், இது ஒவ்வொருவராலும், இதுதான் வீரம் என்று மேடைகளிலே பேசப்படுமேயானால், அது நிறைவேறுமா, அல்லவா என்ற ஆராய்ச்சிக்கெல்லாம் போகாமல், நிறைவேறித் தொலைந்தால் என்ன செய்வது என்ற அந்த அச்ச உணர்வோடு, உங்களுக்கு நான் உறுதி அளிக்கின்றேன். இறையாண்மைக்கு விரோதமாக, நாட்டைத் துண்டாட வேண்டும் என்று சொல்லுகின்ற எந்தப் பேச்சானாலும், யார் பேசினாலும், சட்டம் தன்னுடைய கடமையைச் செய்யும் என்ற உறுதியை நான் உங்களுக்கு அளிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன். (குறுக்கீடு) இதிலே என்ன point or order இருக்கிறது, தீவிரவாதத்தை ஒடுக்குவதிலே? (குறுக்கீடு) சரி, செங்கோட்டையன், பேசுங்கள்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை– கால்நடை பராமரிப்பு**

—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்தது, திருமதி ராணி வெங்கடேசன். (குறுக்கீடுகள்)

***திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேர நாட்டில் பிறந்த என்னை சாத்தான்குளம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக அறிவித்த எங்கள் அன்பு அன்னையும், நம் நாட்டின் தங்கப் பெண்மணியுமான அன்னை சோனியா காந்தி அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்ய, எனக்கு வாக்குகள் சேகரித்த, திருக்குவளை தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், தளபதி எனின், அதன் சிகரமான மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், தமிழகக் காங்கிரசின் கலங்கரை விளக்கமாம், மாண்புமிகு மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும்–

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி

**ம.தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. வைகோ இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாகப் பொதுக் கூட்டத்தில் தெரிவித்த ஆட்சேபகரமான கருத்துகள்—அரசு எடுக்கவுள்ள நடவடிக்கை—தொடர்ச்சி**

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அளித்த பதில் காங்கிரஸ் பேரியக்கத்திற்கு மனநிறைவை அளிக்கிறது. அதனாலே முதல்வர்



அவர்களை நாங்கள் முழுமையாக நம்புகிறோம். தகுந்த நடவடிக்கைகளை எடுப்பார்கள் என்று நம்பி, அவர்களுடைய பதில் எங்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் தருகிறது என்று சொல்லி, அவருக்கு நன்றி தெரிவித்து, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இடையிலே சில நிமிடங்கள் நம்பாமல் போனதற்காக வருத்தப்படுகிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள் 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை**

**(ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை– கால்நடை பராமரிப்பு**

—தொடர்ச்சி

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு அமைச்சர் திரு. வாசன் அவர்களுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு. கிருஷ்ணசாமி அவர்களுக்கும், முன்னாள் எம்.பி. அவர்களுக்கும் என் நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். எங்கள் மாவட்ட அமைச்சர் கீதா ஜீவன் அவர்களுக்கும், எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி ராதிகா செல்வி அவர்களுக்கும் மற்றும் எனது வெற்றிக்கு முழுமையாகப் பாடுபட்ட தி.மு. கழகத்தைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் பெரியசாமி அவர்களுக்கும், திரு. ஏ.பி.சி. சண்முகம் அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், தன்னிகரில்லாத் தொண்டர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. இத்தனைக்கும் மேலாக, இம்மாமன்றத்தில் என்னை உறுப்பினராக, தங்கள் பிரதிநிதியாக அனுப்பிய, என் பாசமிகு சாத்தான்குளம் தொகுதி மக்களுக்கு என் சிரம் தாழ்த்தி, இரு கரம் குவித்து, என் நன்றியினை உங்கள்முன் அவர்களுக்குக் காணிக்கையாக்குகின்றேன்.

நண்பகல் 12–00

பல்லாண்டுகளுக்கு முன்னர், நள்ளிரவுக்குச் சற்று முன், சேலம், மோகனூரில் ஒரு பாலம் கட்ட மக்களோடு நடந்து சென்று இடம

பார்த்து, பின் பாலம் கட்டிய, காலத்தால் அழியாத வரலாறு படைத்த பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என் பணியினைக் காணிக்கையாக்கி என் உரையினை ஆரம்பிக்கிறேன்.

*"நல்லதோர் வீணைசெய்தே–அதை*
*நலங்கெடப் புழுதியி லெறிவ துண்டோ?*
*சொல்லடி, சிவசக்தி!"*

என்றார் மகாகவி பாரதியார்.

கடந்த ஆட்சியில், புழுதியில் போட்ட நல்லதோர் வீணையாம் தமிழகத்தை இப்பொழுது மீட்டு, எடுத்துப் பேணுகிறார் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இந்த நல்ல நேரத்தில் தமிழ்த் தாயை வணங்கி, தமிழ் மக்களுக்காக நான் கூற வேண்டியதையும், கோர வேண்டியதையும் கூறுகிறேன்.

முதலில் இன்றைய சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் மானியக் கோரிக்கையைப் பற்றி என் கருத்துகளைக் கூறுவேன். அதற்கு முன் சமூக நலத் துறை அமைச்சர் மாண்புமிகு டாக்டர் பூங்கோதை அவர்களுக்கு என் பணிவான வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

சமூக நலம் என்பது ஒரு நாட்டில் ஒவ்வொரு குடிமகனுக்கும், தொட்டில் முதல் சுடுகாடு வரை நலம் பேணுவது என்று பொருள் கொள்ளலாம். இது ஒரு பெருவட்டம். இதில் ஒரு பகுதி, சமுதாயத்தில் நலிந்து, மெலிந்த பிரிவினரின் நலன் ஆகும். இதில் பெரும் பகுதி, மகளிர் நலம் ஆகும். ஏன் என்பதற்குக் காரணம் சொல்வேன். ரிக் வேத காலத்தில் பெண்களுக்குப் பெரும் மதிப்பு இருந்தது. ஆண்கள் பொறுப்பாளர்கள்தான், மேலானோர் அல்ல என்ற நிலை இருந்தது. இதன்படி, ஆண், பெண் இருவருக்கும் சம உரிமை தந்தது அன்றைய நாகரிகம். வில்லனாக எக்காளமிட்டு மனு வந்தார்; புதுப் பாடம் சொன்னார். 'பின் செல்பவளே பெண்; உற்பத்தியாளன் ஆண்: உபயோகிப்பவள் பெண்' என்றார். எனவே, பெண் அடிமை என்றார்.

ஒரு சினிமாப் பாட்டு ஞாபகம் வருகிறது.

*"புருஷன் வீட்டில் வாழப் போகும் பொண்ணே,*
*தங்கச்சி கண்ணே!*
*சில புத்திமதிகள் சொல்லுறேன் கேளு முன்னே!*



*சாமக் கோழி கூவும் முன்னே விழிக்கணும்,*
*கூட்டிப் பெருக்கிக் கோலம்போட்டு, கணவனையே துதிக்கணும்;*
*மாமனாரை, மாமியாரை மதிக்கணும்..."*

இவ்விதம் ஒரு மாமனார், மாமியார், கணவனை மதித்த ஒரு பெண் சமீபத்தில் என்ன ஆனாள்? தூக்கில் தொங்கினாள். பல நூறு ஆண்டுகளாக இந்த அவல நிலை. புத்தர் காலத்திலிருந்து, ரிக் வேத கால நிலைக்குச் செல்ல சமுதாயம் முயல்கிறது. அத்தகைய முயற்சிகளில் அரிதான, பெரிதான முயற்சிதான், நமது முதல்வர் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தருமபுரி மாவட்டத்தில் ஆரம்பித்த மகளிர் சுய உதவிக் குழுக்கள். வெற்றிகரமாக இத்திட்டம் வளர்ந்திட, 1997–2000 ஆண்டுகளில் மாநில அரசு நிதியுடன் தமிழகம் முழுவதும் விரிவாக்கப்பட்டது. கொள்கை அளவில், ஊரக வளர்ச்சியில் மகளிர் வளர்ச்சி மிக முக்கியம் வாய்ந்தது என்பதால், மகளிர் சுய உதவிக் குழுக்கள், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களிடம் தரப்பட்டுள்ளன. 2006–2007–ல் 25,000 புதிய குழுக்கள் நிறுவுதல்; 5 ஆண்டுகளில் இதை ஒரு கோடியாக ஆக்குதல்; இத்திட்டத்தின்கீழ் பயிற்சி நிதியை ஏழரை ரூபாயிலிருந்து இப்பொழுது 45 ரூபாயாகக் கூட்டியுள்ளது. இவையெல்லாம் தமிழகப் பெண்களை மகிழ்விக்கிறது. இவற்றை வரவேற்றுப் பாராட்டுகிறோம். மாபெரும் தரமான வளர்ச்சியை, மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைச்சரின்மூலமாக அடையும் என நம்புகிறோம்.

மகளிர் வளர்ச்சிக்கான இத்திட்டம் போக, பல தேவைகள் மகளிருக்கு உள்ளன. இவையும், குழந்தைகள் நலம், ஊனமுற்றோர் நலம், முதியோர் நலன் என நான்கு பிரிவினரின் நலன் பேணல் ஆகும். இவர்கள் வளர்ச்சிக்கு உதவுதல்கூட, அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பை உறுதி செய்தல் என்பதே இன்றைய சமூக நலத் துறைப் பணிகளாகும்.

கடந்த ஆண்டு 2005–2006–ல் சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைக்குக் கோரிக்கை எண் 43–ன்கீழ் நிதி ஒதுக்கீடு ரூபாய் 558.179 கோடி மட்டும். இந்த ஆண்டு இந்த அரசின் நிதி ஒதுக்கீடு ரூபாய் 967.28 கோடியாகும். மிக அதிகமான தொகை ஒதுக்கியுள்ளார்கள். இதற்காக, மகளிர், குழந்தைகள், முதியோர், ஊனமுற்றோர் யாவர் சார்பிலும், நித்தமும் பெருமை சூடும் நம் முதல்வரின் ஆட்சிக்கு நன்றி கூறிப் பாராட்டுகிறேன்.

நமது அரசின் திருமண உதவித் திட்டங்கள் பலவாகும். கைவிடப்பட்டிருந்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் மீண்டும் அதிக நிதி உதவியில் செயல்படுவது மகிழ்ச்சி தருகிறது. இதோடு, விதவைகள் மறுமணத் திட்டம் வரவேற்கத்தக்கது. அழுத குழந்தைக்குப் பால் கிடைக்கும் என்பர். எனவே, யாவர் சார்பாகவும் சில வேண்டுகோள்களை அரசின் முன் வைக்கிறேன்.

இந்த ஆட்சி அமைந்ததும், சத்துணவு, சுவையிலும், தரத்திலும், வாரம் இரண்டு முட்டைகள் போடுவதால் மேம்பாடு பெற்றுள்ளது. இது நம் சிறுவர்களின் வளர்ச்சிக்கு மிகவும் உதவும். அரசினை இதற்காகப் பாராட்டும் வேளையில், இத்திட்டத்தை நடத்தி வரும் அங்கன்வாடிப் பணியாளர்கள், சத்துணவுப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்கள் ஊதியம் குறைவாக உள்ளது. இப்போது அமைப்பாளர்கள், பணியாளர்களின் மாதச் சம்பளம் ரூபாய் 2,158/— மட்டுமே. 1 ஆம் நிலை உதவியாளர்களுக்கு ரூபாய் 1,180/— மட்டுமே. 2 ஆம் நிலை உதவியாளர்களுக்கு ரூபாய் 890/— மட்டுமே. இவற்றைக் கூட்ட வேண்டியதன் அவசியத்தை அரசு ஆராய்ந்து நல்ல முடிவுகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். சுமார் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட சத்துணவுப் பணியாளர்களுக்குப் பல பிரச்சினைகள் உள்ளன. பணி நிரந்தரம், பென்ஷன் திட்டம், கல்வித் தகுதிக்கேற்ப பதவி உயர்வு, விருப்ப ஓய்வூதியத் திட்டம், இறந்திடும் பணியாளர் வாரிசுகளுக்குப் பணி தருதல், கருவூல முறை ஊதியம், சிறப்பு சேம நல நிதி, காலியான பணியிடங்களை நிரப்புதல் ஆகும். இவை யாவற்றையும் கனிவாகப் பரிசீலனை செய்ய வேண்டுகிறேன். பட்டதாரி சத்துணவு அமைப்பாளர்களுக்கு, அவர்கள் தகுதிக்கேற்ப, வேறு வேலைவாய்ப்புகள் செய்து தருமாறு வேண்டுகிறேன்.

பிற்பகல் 12—05

சமீப காலத்தில் அங்கன்வாடி மையங்களில் சமைத்த உணவில் பல்லி விழுதலாலும், உணவுத் தயாரிப்பு சரியில்லாத காரணத்தாலும், அந்த உணவை உண்ட குழந்தைகளுக்கு வயிற்றுப் போக்கு போன்ற செய்திகள் அன்றாடம் வந்தவண்ணம் இருக்கின்றன. மேலும், விறகு அடுப்பினால் வரும் புகையினால், சமையல் செய்யும் உதவியாளருக்கும், மையத்திலுள்ள அங்கன்வாடிப் பணியாளர்களுக்கும், பச்சிளங்குழந்தைகளுக்கும் ஆஸ்துமா போன்ற நோய்கள் வருகின்றன. அதைத் தடுக்க, அனைத்து அங்கன்வாடி மையங்களுக்கும் சமையல்



எரிவாயு அடுப்பும், அதற்கு வேண்டிய சமையல் பாத்திரங்களும் வழங்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசு, ஆதரவற்ற குழந்தைகளுக்கு 25 காப்பகங்களை நடத்துகிறது. காப்பகம் இல்லாத மாவட்டங்களில் புதிய காப்பகங்கள் தொடங்கப்பட வேண்டும். குறைந்தது, மாவட்டத்திற்கு ஒரு அரசுக் காப்பகம் இருப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் உணவுச் செலவிற்காகக் கடந்த ஆண்டு ரூபாய் 225/— மாதம் ஒன்றுக்கு வழங்கப்பட்டது. இந்த ஆண்டும் மாத ஒதுக்கீடு ரூபாய் 225/— இந்த ஒதுக்கீட்டை ரூபாயாக 300/— ஆக உயர்த்துமாறு அன்போடு வேண்டுகிறேன்.

விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், உடல் ஊனமுற்ற ஆண், பெண் ஆகியோருக்கு, அவர்கள் வாழ்க்கைக்கு உதவிடத் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கடந்த ஆண்டு 2005—2006—ல் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 121 இலட்சம் ஆகும். ஒரு இயந்திரம் ரூபாய் 3,000/— என்றால், மொத்தப் பயனாளிகளின் எண்ணிக்கை 4,033 ஆகும். இதன்படி ஒரு மாவட்டத்திற்குச் சுமார் 134 நபர்கள்தான் பயன் பெறுகிறார்கள். எனவே, இத்திட்டத்தின்படி நிதி ஒதுக்கீட்டை இரட்டிப்புச் செய்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் பயனாளிகள் 200—க்குக் குறையாமல் இருக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

பணிக்குச் செல்லும் பெண்கள் தங்குவதற்கு விடுதிகள் தேவை. அரசு நடத்தும் விடுதிகள் 8 உள்ளன. அவற்றில் ஒன்று தூத்துக்குடியில் உள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில், பணிபுரியும் பெண்களுக்கான விடுதி ஒன்றை அரசே தொடங்கலாம். தனியார் சேவை நிறுவனங்கள், பணிபுரியும் பெண்களுக்கு விடுதிகள் தொடங்க மத்திய அரசு மானியம் (grant) வழங்குகிறது. மத்திய அரசின் மானிய அளவு 85 சதவிகிதம், சேவை நிறுவனத்தின் பங்கு 15 சதவிகிதம். இத்திட்டத்தின்கீழ் மாநில அரசுக்கு எந்தவித நிதிச் சுமையும் இல்லை. ஆனால், சேவை நிறுவனங்களின் மனுக்கள் தகுந்த காலத்தில் மத்திய அரசை அடைவதில்லை. இதில் தனிக் கவனம் செலுத்த வேண்டும். தனியார் மனுக்களைத் தகுந்த நேரத்தில் மத்திய அரசுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். மத்திய அரசு பல திட்டங்களைச் சேவை நிறுவனங்களுக்கு மானியம் வழங்கிச் செயல்படுத்துகிறது. இத்திட்டங்களைக் கண்டறிந்து, அவற்றிற்கு நமது நிறுவனங்களை மனுப் போடச் செய்து, தமிழகம் அதிக மானியம் பெறவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கு ஒரு நடவடிக்கைக் குழு—Action Committee அமைக்கலாம் என வேண்டுகோள் வைக்கிறேன்.

ஊனமுற்றோர் ஆணைய அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் ஆயிரம் விளக்குப் பகுதியில் செயல்பட்டு வருகிறது ஊனமுற்றோருக்காக ramp, lift, special toilet போன்ற சிறப்பு வசதிகளை உள்ளடக்கிய ஒரு கட்டடத்தை அரசு கட்ட வேண்டும் ஊனமுற்றோருக்கான மொத்தப் பள்ளிகள் 266 உள்ளன. அவற்றில் அரசுப் பள்ளிகள் 25 ஆகும். இதில் பல, வாடகைக் கட்டடங்களில் போதிய இட வசதி இல்லாமல் செயல்படுகின்றன. அனைத்து அரசு பள்ளிகளுக்கும் விரைவில் கட்டடம் கட்ட ஏற்பாடு செய்ய வேண்டும் கிண்டி, அரசுத் தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாதவருக்கு Fitter பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்தகைய பயிற்சி நிலையங்கள் திருச்சி, மதுரை, கோவை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் தொடங்கப்பட வேண்டும். ஊனமுற்றோரைத் தனியார் நிறுவனங்கள் வேலையில் நியமிக்க ஊக்குவிக்க வேண்டும். ஊனமுற்றோரைப் பணியமர்த்தும் நிறுவனத்திற்கு சற்று வரிச் சலுகை அல்லது ஊக்கத் தொகை—incentive வழங்கும் ஒரு திட்டத்தை வகுத்துச் செயல்படுத்தலாம் பல்வகை ஊனமுற்றோருக்கான National Institute for the Multiple Handicapped ஒன்று தொடங்க வேண்டும். மாண்புமிகு முதல்வரின் கரத்தால் அதனை இந்த ஆண்டே தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2 ஏக்கர் நில ஒதுக்கீட்டுத் திட்டத்தின்கீழ் ஊனமுற்றோருக்குச் சற்று முன்னுரிமை வழங்கி, முதல் கட்டத்திலேயே நிலம் ஒதுக்குமாறு கோருகிறேன். ஊனமுற்றோருக்கான பள்ளிகள் முறையாக ஆய்வு செய்யப்படாமலே உள்ளன. பள்ளிகள் ஆய்வு சரியான நேரத்தில் நடைபெற ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிற்பகல் 12–10

மாவட்ட மறுவாழ்வு அலுவலர்கள் 1993 முதல் நிரந்தரமாக நியமிக்கப்படாமல் பொறுப்பில்—incharge—ல் உள்ளனர், நிரந்தரமாக நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். மகளிருக்கான மாநில ஆணையத்தின் பதவிகளை நிரப்ப வேண்டும். ஆணையம் அனைத்து அதிகாரங்களுடன் செயல்பட வழிவகுக்க வேண்டும்.

முதியோர் விடுதிகளை, மாவட்டத்திற்கு ஒன்று வீதம் அரசே தொடங்க வேண்டும். இப்போது அரசு விடுதிகள் இல்லை. தனியார் விடுதிகளில் அதிகப் பணம் வசூல் செய்கிறார்கள்.

சமூக நலத் திட்டங்கள் பலப்பல ஆகியுள்ளன. ஒவ்வொனறிற்கும் ஒரு target வைத்து அரசு செயல்படுகிறது. இந்த இலக்குகளின்



வெற்றியினால் எந்த அளவு சமூக நலன் உயர்ந்துள்ளது என்பதைப் பற்றி ஒரு ஆய்வு செய்வது நலம் எனப் பணிவுடன் கூறுகிறேன். பல்கலைக்கழகங்கள்மூலமாகவும், ஒரு நிபுணர் குழுமூலமாகவும் இதனைச் செய்து, அந்த ஆய்வின் விவரங்களை வைத்துத் திட்டங்கள் ட்ட வேண்டும் எனப் பணிவோடு கோருகிறேன்.

குழந்தைகள் காப்பகம், மகளிர் சேவை இல்லம், முதியோர் விடுதிகள், ஊனமுற்றோர் நல இல்லம் யாவும், இப்போது தனித்தனி இடங்களில் அமைந்துள்ளன. இவை யாவும் ஒரே இடத்தில் அமைந்தால், பயன் பெறுவோர் யாவரிடமும் அன்பு, இணக்கம், நட்பு, ஆதரவு பெருகி லமும் பெருகும். எனவே, இதனைக் கொள்கை அளவில் ஏற்குமாறு காருகிறேன். எனது சாத்தான்குளம் தொகுதியில் இத்தகையதொரு ருங்கிணைந்த பொதுச் சேவை இல்லம் ஏற்படுத்தித் தருமாறு பணிவோடு கட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய சாத்தான்குளம் தொகுதியின் தேவைகள் பற்றிச் சால்கிறேன்: கடலோரம் பெரியதாழையில் இருந்து, வல்லநாடு லையடிவார முறப்பநாடு வரையாக, (மணியடிக்கப்பெற்றது) எங்கள் பிராம் தாமிரபரணி நதி ஒரு பக்கம் எல்லையாக ஓடிட, இன்னொரு க்கம் வறட்சியைப் பல்லாண்டு காலம் பார்க்கும் பூமிகள் இருக்க, மிழ்நாட்டில் பின்தங்கிய தொகுதி சாத்தான்குளம் தொகுதி ஆகும்.

தமிழகத்தில் உள்ள 18 நூற்பாலைகளில் நாசரேத்தில் உள்ள நச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலையும் ஒன்று. இது மட்டும்தான் தாழிலாளர்கள், சிப்பந்திகள் பங்குதாரர்களாக உள்ள நூற்பாலை கும். தமிழகத்தின் தென்பகுதி மக்கள் வியாபாரம் செய்ய இலங்கை ன்று, அங்கு தொழில் செய்ய முடியாமல், இலங்கையில் இருந்து யகம் திரும்பியவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் சீரிய ாக்கத்தோடு, கடந்த 1962 ஆம் ஆண்டு தமிழக முன்னாள் தொழில் றை அமைச்சர் மாண்புமிகு திரு. வெங்கட்ராமன் தலைமையில் ண்புமிகு முன்னாள் முதல்வர் பெருந்தலைவர் கர்ம வீரர் மராஜரால் தொடங்கி வைக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய முதலமைச்சரின் தலைமையில் கடந்த ஆட்சியின்போது ாழிலாளர்களுக்கு 33 சதவிகிதம் போனஸ் வழங்கப்பட்டு வந்த பாலை, கடந்த 2003 ஆம் ஆண்டு அண்ணா தி.மு.க. ஆட்சியில் வாகச் சீர்கேட்டினால் மூடப்பட்டது. ஆலையில் பணிபுரிந்த 800 ாழிலாளர்கள், 100 சிப்பந்திகள், ஆலை மூடப்பட்டதால், டியாகவும், மறைமுகமாகவும் மற்றும் சுமார் 1,000 குடும்பங்கள்

பிழைப்பின்றி வறுமையில் வாடி வருகின்றனர். இப்பகுதி வர்த்தகம் ஸ்தம்பித்துவிட்டது. எனவே, இந்த நூற்பாலையை இந்த நிதி ஆண்டிலே மீண்டும் இயக்கிட இப்பகுதிவாழ் மக்கள் சார்பில் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தங்களுடைய கடந்த ஆட்சியில் சாத்தான்குளம் தொகுதி மக்களுக்குக் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்க, 12.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாமிரபரணி ஆற்றில் திருவைகுண்டம் அணைக்கட்டிலிருந்து மழைக் காலங்களில் வீணாகக் கடலுக்குச் செல்லும் தண்ணீரை மருதூர் மேல்க்கால்வாய் வழியாக, சடையநேரி கால்வாய்மூலமாக வைரவன்தருவை, புத்தன்தருவை குளங்களுக்குக் கொண்டு செல்லும் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தீர்கள். இத்திட்டத்தை நிறைவேற்றி ஏழு ஆண்டுகளாகியும், தண்ணீர் இந்தக் குளங்களில் முழுமையாக நிரப்பப்படவில்லை. காரணம், மழைக் காலங்களில் திருவைகுண்டம் அணையைத் தாண்டி தண்ணீர் கடலுக்குச் செல்லும் முன் கால்வாயில் தண்ணீர் திறக்காமல், அரசு உத்தரவுக்காகக் காத்திருந்து பல நாட்கள் தண்ணீர் வீணாகக் கடலுக்குச் சென்ற பிறகு, சடையநேரி கால்வாய்க்குத் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதனால் குளங்களில் முழுமையாகத் தண்ணீர் நிரப்ப முடியாமல் போய்விடுகிறது. வருடத்திற்கு 13,500 மில்லியன் கன அடித் தண்ணீர், பொது மக்களுக்கு எந்தவிதப் பயனுமின்றி வீணாகக் கடலுக்குள் செல்கிறது. ஆனால், சடையநேரி கால்வாய்க் குளங்களுக்குத் தேவையான மொத்தத் தண்ணீரின் அளவு 473.70 மில்லியன் கன அடி மட்டுமே. எனவே, தேவைப்படும் தண்ணீரை சடையநேரி கால்வாயில் மழைக் காலமான நவம்பர், டிசம்பர் மாதங்களில் நாள் ஒன்றுக்கு 17 கன அடி வீதம் 30 நாட்கள் முழுமையாக அனுப்ப வேண்டும். மேலும் ஒரு முறை மார்ச், ஏப்ரல் மாதங்களில் தண்ணீர் அனுப்ப வேண்டும். இவ்வாறு சடையநேரி கால்வாய்க் குளங்களை வருடத்திற்கு இரண்டு முறை நிரப்பி, இத்திட்டத்தின் பயன் முழுமையாக மக்களுக்குச் சென்றடைய, சடையநேரி கால்வாய்த் திட்டத்தை நிரந்தரக் கால்வாய் திட்டமாக அறிவித்து, அரசு ஆணை பிறப்பிக்கும்படித் தங்களை சாத்தான்குளம் தொகுதி மக்கள் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதிக நேரம் ஆகிவிட்டது. உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். தாமிரபரணி ஆற்றின் மூன்றாவது



அணைக்கட்டான கன்னடியன் அணைக்கட்டில் இருந்து கன்னடியன் கால்வாய்மூலம் செல்லும் தண்ணீர், மீண்டும் மேலச்செவல் அருகே உள்ள சொக்கலிங்கபுரத்தில் தாமிரபரணி ஆற்றில் கலக்கிறது. எனவே, மேலச்செவலில் இருந்து வெள்ள நீரைக் கொண்டு செல்ல ஒரு புதிய கால்வாய் வெட்டி, சாத்தான்குளம், ராதாபுரம், நாங்குநேரி ஆகிய மூன்று தாலுகாக்களின் வறண்ட குளங்களுக்குக் கொண்டு செல்லப் பொதுப் பணித் துறைத் திட்ட உருவாக்கல் பிரிவின்மூலம் ஒரு திட்ட மதிப்பீடு ரூபாய் 181.9 கோடியில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் இந்த அரசின் முந்தைய ஆட்சியின்போது உருவாக்கப்பட்டு, ஆய்வுக்கு எடுக்கப்பட்ட திட்டமாகும். அண்ணா தி.மு.க. அரசு இத்திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டது. நமது அரசு இப்பொழுது இத்திட்டத்தை நிறைவேற்றி, நாங்குநேரி, ராதாபுரம், சாத்தான்குளம் ஆகிய மூன்று தாலுகாக்களில் உள்ள சுமார் 45,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பயன் பெற வழி செய்ய வேண்டும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதால் 30 கிராமங்களிலுள்ள இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயனடைவார்கள். தற்போது இந்தக் கிராமங்களில் உள்ள மக்கள நிலத்தடி நீர் உப்பு நீராகிவிட்ட காரணத்தால் விவசாயம் செய்ய வழியில்லா நிலையில், பிற நகரங்களுக்குப் பிழைப்புத் தேடிச் செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது. இதன் விளைவாக, சாத்தான்குளம் தொகுதியில் 2003 ஆம் ஆண்டில் ஒரு இலட்சத்து எண்பதாயிரமாக இருந்த வாக்காளர்களின் எண்ணிக்கை, தற்பொழுது 2006-ல் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் வாக்காளர்களாகக் குறைந்துள்ளது.

பிற்பகல் 12-15

மேலும், மணிமுத்தாறு அணையிலிருந்து நாங்குநேரி வழியாக சாத்தான்குளம் பகுதிக்கு வரும் 3-வது, 4-வது ரீச் வாய்க்கால்கள்மூலம் மொத்தம் 179 குளங்கள் வாயிலாக 12,000 ஏக்கர் நிலங்களுக்கு ஒரு வருடம் விட்டு ஒரு வருடம் தண்ணீர் வழங்கப்படுகிறது. இந்தக் குளங்களும், குளங்களுக்குச் செல்லும் வாய்க்கால்கள் அனைத்தும் தூர்ந்து போய்விட்டன. ஆகையால் நமது அரசு இக்குளங்களையும், வாய்க்கால்களையும் தூர் வாரி, அனைத்துக் குளங்களிலும் தண்ணீர் நிரம்பிட ஆவன செய்ய சாத்தான்குளம் தொகுதி மக்கள் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் குதிரைமொழிதேரி, சிறப்பூர்தேரி பகுதிகளில் உள்ள மணல்களில் கனிம வளங்கள் (Minerals) உள்ளதாகத் தனியார் கம்பெனிகள் அலுவலகம் ஆரம்பித்து, ஆய்வு நடத்தி வருகிறார்கள். இந்த

ஆய்வு பற்றி ஒரு நிபுணர் குழுமூலம் ஆராய்ந்து, அந்த மணல்களில் இருந்து தாதுப் பொருட்களைப் பிரித்தெடுப்பது சம்பந்தமான தொழிற்சாலைகளை அரசின்மூலமாகவோ அல்லது தனியார்மூலமாகவோ தொடங்க நடவடிக்கை எடுத்து, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தொகுதியின் முக்கியமான சாலையான நாசரேத்திலிருந்து ஆழ்வார்திருநகரி செல்லும் சாலையில் இருபுறமும் வயல்வெளி இருப்பதால், சாலையின் இருபுறமும் தடுப்புச் சுவர் கட்டி, சாலையை இரு வழிச் சாலையாக மாற்றிக் கொடுக்கும்படிப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், சாத்தான்குளம்—வள்ளியூர் சாலை, சாத்தான்குளம் (பேய்குளம் வழியாக)—திருநெல்வேலி சாலை, நாசரேத்—குரும்பூர் சாலை, கருங்குளம்—மூலக்கரைப்பட்டி சாலை, பேய்குளம்—திருவைகுண்டம் சாலை, செய்துங்கநல்லூர்—வசவப்புரம் சாலை, தட்டார்மடம்—திசையன்விளை சாலை, தட்டார்மடம்—உடன்குடி சாலை மற்றும் சாத்தான்குளம்—தட்டார்மடம் சாலை ஆகிய சாலைகள் அனைத்தையும் இரு வழி தார்ச் சாலைகளாக மாற்றிக் கொடுக்கும்படித் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆழ்வார்திருநகரி பேரூராட்சியைச் சேர்ந்த வேலன் காலனிக்கு இதுவரை சாலை வசதி என்பதே கிடையாது. அங்குள்ளவர்கள் வயல்வெளியில்தான் நடந்து வர வேண்டும். ஆகவே, வேலன் காலனி ஊரிலிருந்து ஆழ்வார்திருநகரிக்குப் புதிய சாலை வசதி செய்து கொடுக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது சாத்தான்குளம் தொகுதியில் பல்வேறு பேருந்து வழித்தடங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. முக்கியமான 14 பேருந்துத் தடங்கள் நிறுத்தப்பட்டுள்ளன. அவற்றை மீண்டும் இயக்கிட அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தான்குளம் அரசு மருத்துவமனையில் தினமும் 400 முதல் 500 புற நோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகின்றனர். ஆனால், இங்கு மருத்துவர்கள், ஊழியர்கள், செவிலியர்கள், இரத்தப் பரிசோதகர்கள், எக்ஸ்ரே ஊழியர்கள், துப்புரவுப் பணியாளர்கள் போதிய அளவில் இல்லை. 50 படுக்கைகள் வசதி இருந்தும், நோயாளிகள் சிகிச்சை பெற சிரமப்படுகிறார்கள். ஆகவே, போதிய மருத்துவர்களையும், ஊழியர்களையும் நியமிக்கும்படிப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நாசரேத்திலும், சாலைப்புதூரிலும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் இயங்கி வருகின்றன. இப்பகுதிகளில் அதிகமான கிராமங்கள் உள்ளன.



எனவே, கிராம மக்கள் மருத்துவமனையில் தங்கி மருத்துவம் பெறக்கூடிய அளவில் 50 படுக்கைகள் வசதி கொண்ட அரசு மருத்துவமனையாக இவற்றைத் தரம் உயர்த்தித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

தட்டார்மடம் பகுதியில் கிராம மக்கள் மருத்துவமனைக்குச் செல்ல 10 கி.மீ. தூரம் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, வயதானவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், சிறு குழந்தைகள் ஆகியோரின் சிரமத்தைக் கருத்தில் கொண்டு, மக்கள் நலனுக்காகத் தட்டார்மடத்தில் ஒரு புதிய அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்கும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கருங்குளம், ஆழ்வார்திருநகரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்குத் தினமும் அதிகமான நோயாளிகள் மருத்துவமனைக்கு வந்து செல்கிறார்கள். 30 படுக்கைகள் வசதி இருக்கிறது. போதிய மருத்துவர்கள் இருக்கிறார்கள். ஆனால், செவிலியர்களும், மற்ற ஊழியர்களும் இல்லை. ஆகையால், இந்த மருத்துவமனைக்குப் போதிய செவிலியர்களையும், ஊழியர்களையும், துப்புரவுப் பணியாளர்களையும் நியமிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடற்கரைக் கிராமமான பெரியதாழையில் பத்தாயிரத்திற்கும் அதிகமான மீனவ மக்கள் வாழ்கின்றனர். அங்கு மருத்துவமனை கிடையாது. அந்த ஊரின் அருகில் உள்ள படுக்கப்பத்து (மணியடிக்கப்பெற்றது) அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து தினமும் ஒரு மருத்துவரை மாலை வேளையில் பெரியதாழை மக்களுக்குச் சிகிச்சையளிக்கச் சென்று வர அரசு ஆவன செய்ய வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இதற்குத் தேவையான இட வசதிகளை இலவசமாக அந்த ஊர் மக்களே செய்து கொடுப்பதாக உறுதியளித்துள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியதாழை கடற்கரையில் 800 மீட்டர் அளவுக்குத் தூண்டில் பாலம் அமைக்கப்பட்டுள்ளது. அந்த அளவு தூண்டில் பாலம் போதுமான பலன் கொடுக்காததால், அதனை மேலும் 200 மீட்டர் நீளம் அதிகரித்துக் கொடுக்கும்படியும், மீனவர்களுக்கு மீன் பிடிக்கச் செல்லும் மோட்டார் படகிற்கு அரசு மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** கருங்குளத்திலிருந்து கொங்கராயகுறிச்சிக்கு மக்கள் செல்ல வேண்டுமானால், தாமிரபரணி ஆற்றில் இறங்கித்தான் செல்ல வேண்டும். தண்ணீர் இருந்தால்

10 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் சுற்றிச் சென்றுதான் செல்ல வேண்டும். ஆகையால், பொது மக்களின் நலன் கருதி ஒரு புதிய ஆற்றுப் பாலம் அமைக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன். இதை அமைக்கையில், அதனையே ஒரு தடுப்பணையாகக் கட்டி, அதன் மேல் சாலை வசதி ஏற்படுத்தினால், நிலத்தடி நீர் இங்கு தேங்க வாய்ப்புள்ளது.

*பிற்பகல் 12–20*

கருங்குளம் ஒன்றியத்தில் உள்ள வள்ளுவர் காலனிக்குக் குடிநீர் வசதி இதுவரை செய்யப்படவில்லை. மழைக் காலங்களில் மழை நீர் ஊருக்குள் புகுந்துவிடுகின்றது. அவர்களுக்குக் குடிநீர் வசதியும், மழை நீர் ஊருக்குள் புகுந்துவிடுவதை வெளியேற்ற நடவடிக்கையும் எடுக்கும்படித் தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியின் தலைமையிடமான சாத்தான்குளத்தில் வருவாய்த் துறைக்குச் சொந்தமான கச்சேரிப் புறம்போக்கு நிலம், சர்வே எண் 530/சி1 சுமார் 5 ஏக்கருக்குமேல் காலியாக உள்ளது. தற்போது அந்த இடத்தில் தாலுகா அலுவலகம் மட்டும்தான் இயங்கி வருகிறது. எனவே, மற்ற துறைகளான காவல் நிலையம், காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் அலுவலகம், நீதிமன்றம், நீதிபதிகள் குடியிருப்புகள், சார் கருவூலம் ஆகிய அரசு அலுவலகங்களையும் அந்த இடத்தில் அமைத்தால் பொது மக்களுக்கு நலமாக இருக்கும். இப்பணியை முடித்துக் கொடுக்க அன்புடன் வேண்டுகிறேன்.

ஆழ்வார்திருநகரி ஒன்றியத்தில் உள்ள கிராமப்புறப் பள்ளிகளான மாவடிப்பண்ணை அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும், கருங்குளம் ஒன்றியத்தில் இராமானுஜம்புதூரில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்திக் கொடுத்து, கிராமப்புறக் கல்வியை மேம்படுத்தும்படித் தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

சாத்தான்குளத்திற்கு முக்கனிகளாக மூன்று மாபெரும் திட்டங்கள் தேவை: அவை, நாசரேத்தில் மில் திறப்பது; தாமிரபரணி நதியின் உபரி நீரைச் சடையநேரி கால்வாயிலும், இன்னொரு வெள்ளக் கால்வாய்மூலமும் உபயோகித்தல்; குதிரை மொழிதேரி, சிறப்பூர்தேரி ஆகிய இடங்களில் உள்ள minerals–ஐ வெளியில் கொணர்தலும் ஆகும். இத்திட்டங்களைத் தமிழகத் தலைவராம் முதல்வர் அவர்கள் சற்றே நோக்கினால், அவர்தம் அமைச்சர்கள் சடுதியில் அவற்றைச் செய்வார்கள் என சாத்தான்குளம் மக்கள் நம்பிக்கையோடு எதிர்பார்க்கிறார்கள்.



முல்லைக்கொடி போல் அரசின் தேரை எதிர்பார்க்கவில்லை; அரசின் கடைக்கண் பார்வையையே கோருகிறோம்.

நமது முதல்வர் எப்பொழுதும் அமைதியினை நிலைநாட்டும் கருவியாகவும், வெறுப்பை அகற்றி, அன்பினை விதைப்பவராகவும், சந்தேகங்கள் எழுகையில் நம்பிக்கை தருபவராகவும், இருள் அகற்றி ஒளி தருபவராகவும், துயர் ஒழித்து பூரிப்பும், மகிழ்ச்சியும் தருபவராகவும் இருப்பது நாம் அறிந்த உண்மை. இதற்கான சான்றுகள் ஒரு சில: நெல்லையில் இரு வழி மேம்பாலமும், சென்னை சைதையிலும், அடையாறிலும் சீர்மிகு பாலங்களும், புதிய அரசு அலுவலகங்களும், ஏழைகள் குடியிருப்புகளுக்குச் செல்ல சிமெண்ட் ரோடுகளும், மகளிர் மேம்பாட்டிற்குப் பலப்பல திட்டங்களும் என அடுக்கிக்கொண்டே போகலாம். நேரமில்லை.

தொகுதியின் கோரிக்கைகள் பலவற்றை இந்த அரசின் முதல்வர் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளேன். அந்தந்தத் துறையைச் சார்ந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் என்னுடைய கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவார்கள் என்ற நம்பிக்கையோடு, மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் கட்சியின் சட்டமன்றக் தலைவர் மாண்புமிகு சுதர்சனம் அவர்களுக்கும், கொறடா மாண்புமிகு பீட்டர் அல்போன்ஸ் அவர்களுக்கும், அக்கா மாண்புமிகு யசோதா அவர்களுக்கும், இந்த மாமன்றத்தில் உள்ள அவையோர் அனைவருக்கும் நன்றி கூறி, உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாகிருஷ்ணன்.

***திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சான்றோர்களும், அறிஞர்களும் உரையாற்றியுள்ள மாபெரும் இப்பேரவையில் பேசுகின்ற நிலைக்கு என்னை உருவாக்கிய, தமிழகத்தைத் தன்னிறைவு மாநிலமாக உயர்த்திடவும், உலக அரங்கில் பெண் குலத்தைத் தலை நிமிர வைத்த தங்கத் தாரகை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) பொற்பாதம் பணிந்து வணங்கி, என்னை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த கோவில்பட்டி சட்டமன்ற வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்கு உண்மையாகவும், உத்வேகத்துடனும் அயராது உழைத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தொண்டர்கள், தலைவர்கள், தோழமை உணர்வோடு எங்களோடு கூட்டணி வைத்து வெற்றிக்கு உழைத்திட்ட இயக்கங்களின் தலைவர்கள்,

தொண்டர்கள், நண்பர்கள் அத்துணை பேர்களுக்கும், என்னைப் பெற்றெடுத்த பெற்றோர்களுக்கும் எனது இதயத்தின் அடித்தளத்திலிருந்து நன்றியினைத் தெரிவித்து, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

இதய தெய்வம் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆசியுடன் 1986—ல் தோணுகால் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்து, 1996—ல் அம்மா அவர்கள் நல்லாசியுடன் கோவில்பட்டி சட்டமன்ற வேட்பாளராகப் போட்டியிட்டுக் குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தாலும், மீண்டும் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆசியுடன் உள்ளாட்சித் தேர்தலில் 1996—ல் தூத்துக்குடி மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினராகவும், 2001—ல் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆசியுடன் கோவில்பட்டி ஒன்றியக் குழு உறுப்பினராகவும் மக்கள் பணியாற்றிய என்னை 2006—ல் சரித்திரப் புகழ் வாய்ந்த மாபெரும் இப்பேரவையில் பேசும் நிலைக்கு ஆளாக்கிய எங்கள் குடும்பத்தினர் வணங்கும் மாதர் குல தெய்வம், தமிழக அனைத்து மக்களின் வாழ்வு உயர அன்றாடம் பாடுபட்டு வரும் தங்கத் தாரகை விருது பெற்ற எங்கள் காவல் தெய்வம் அம்மா அவர்களை வணங்கி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிற சமூக நலத் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் என்னுடைய கருத்துகளை எடுத்து வைக்க விரும்புகிறேன். தந்தை பெரியார் அவர்கள், சமூகத்தில் பெண்களுக்குச் சம அந்தஸ்தும், சமூகத்தில் உயர்வும் கொண்டு வர வேண்டுமென்று கூறி வந்தார்கள். அதை நிறைவேற்றிடும் வகையில், ஆணுக்குப் பெண் சமம் என்று உறுதியோடு, எதையும் துணிவுடன் எதிர்கொள்ளும் சிங்க நிகர்த் தலைவி, மாதர் குலம் போற்றும் பெண்ணரசி, தமிழகத்தின் வரலாற்றுத் தலைவி எங்கள் அம்மா அவர்கள், குழந்தைகளின் பெயருக்கு முன்னால் தாயின் பெயரில் உள்ள முதல் எழுத்தை விரும்பினால் போடலாம் என சட்டம் இயற்றி, பெண்களுக்குச் சமூகத்தில் அந்தஸ்தை ஏற்படுத்தினார்கள் என்பதை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–25*

சமூக நலனில் அக்கறை கொண்ட எங்கள் அம்மாவின் ஆட்சியில் தமிழகத்தில் எவ்வித சாதி மத மோதலும் இல்லாமல், அனைத்துச் சமூகத்தினரும் சகோதர உணர்வுடன் அமைதியாக வாழ்க்கை வாழ்ந்தனர்.



பேரவைத் தலைவர் அவர்களே, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம், 1–1–2002–லிருந்து மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டதாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆனால், அதே நிதிநிலை அறிக்கையில் பக்கம் 41—ல், பத்தி 107—ல் குறிப்பிட்டுள்ள, இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படும்போது இடையில் நுழைந்து ஆதாயம் பெற முனைவோர் யாராயினும் கடுமையான சட்ட நடவடிக்கைகளுக்கு ஆட்படுத்தப்படுவர் என்பதை இந்த அரசு எச்சரிக்கக் கடமைப்பட்டுள்ளது' என்பதே, மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரின் நினைவு திருமண நிதியுதவித் திட்டத்தில் தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முறைகேடுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன என்பதற்குச் சான்றாகும். ஆனால், இன்றைய ஆட்சியாளர்கள் இத்திட்டத்திற்கு ஒதுக்கிய நிதி வெறும் 50 கோடி ரூபாய் மட்டுமே. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொருவருக்கும் 15 ஆயிரம் ரூபாய் உதவி கிடைக்கும் என்ற அறிவிப்பின்மூலம் தமிழகத்தில் பயன் பெறுவதாகக் கூறப்படுவது 33 ஆயிரம் பயனாளிகள் மட்டுமே. ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு, ஆண்டு ஒன்றுக்கு 112 பயனாளிகளுக்கு மட்டுமே திருமண நிதியுதவி கிடைக்கும் என்ற நிலையில், இத்திட்டம் வெறும் கானல் நீர்த் திட்டம் என்று கூறுவது சாலச் சிறந்ததாகும்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் ஈ.வெ.ரா மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவித் திட்டம், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம், தமிழக அரசு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் ஆகிய திருமண உதவித் திட்டங்களின்மூலம் 10 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை நிதியுதவியைப் பயனாளிகள் பெற்று வந்தனர் என்பதை இந்த அவையில் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாரம் இரு முட்டைகள் வழங்கப்படும் என்று கூறும் ஆட்சியாளர்களுக்கு, நேரத்தின் அருமை கருதி இத்திட்டத்தின்மூலம் நடைபெறும் முறைகேடுகளில் ஓர் உதாரணத்தை மட்டும், இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். கரூர் சட்டமன்றத் தொகுதி, இனாம்கரூர் நகராட்சி, பெரியகுளத்துப்பாளையம், சின்னகுளத்துப்பாளையம் பகுதிகளில் அரசு முத்திரையுடன்கூடிய சுமார் 150 முட்டைகள் ஒரு ரூபாய்க்கு விற்பனை செய்த நிலையில், பொது மக்களுடன் சேர்ந்து நகர இளைஞர் காங்கிரஸ் தலைவர்,

செயலாளர் ஆகிய இருவரையும், அவர்களை விரட்டிப் பிடித்ததையும் இந்த அவையில் பதிவு செய்கிறேன். அத்தோடு, வாரத்தில் இரண்டு முட்டை என்று கூறிவிட்டு, வாரம் ஒரு முட்டை, அந்த முட்டையில் ஒரு மாணவருக்குத் தலா அரை முட்டை வீதம் வழங்கப்பட்டு, மீதமுள்ள முட்டைகள்தான் வெளிச் சந்தைக்கு விற்பனைக்கு வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். அழுகிய முட்டைகளைச் சாப்பிட்ட மாணவ, மாணவிகள் பாதிக்கப்பட்டு, மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவல நிலையை இந்த நாட்டு மக்கள் நன்கு அறிவர்.

ஒரு நாடு எந்த அளவிற்கு முன்னேறி உள்ளது என்பது, அந்த நாட்டிலுள்ள பெண்களை அது எப்படி நடத்துகிறது என்பதை வைத்துத்தான் என்பதை உணர்ந்த எங்கள் அம்மா அவர்கள், பெண் சிசுக் கொலையைத் தடுத்திடும் வகையில் தொட்டில் குழந்தைத் திட்டம் தந்தார்கள். அதனை அகற்றப் போவதாக இந்த அரசு அறிவித்திருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

எப்போதும் இல்லாத வகையில் 19 பெண் உறுப்பினர்களைச் சட்டமன்றத்தில் உருவாக்கிச் சாதனை படைத்தவர்தான் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) பெற்றவர்களே பெரும் சுமையாகக் கருதுகின்ற பெண் குழந்தைகளைப் பேணிக் காக்கும் விதமாகக் கல்வி தந்து, திருமணத்திற்கு உதவுவதற்காகப் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம் தந்தவர் எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

ஒரு பெண் குழந்தை மட்டுமே இருந்து, பெற்றோரில் ஒருவர் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டால், அரசு தொடக்க வைப்பீடாக ரூ.22 ஆயிரமும், இரண்டு பெண் குழந்தைகள் மட்டும் இருந்தால் குழந்தைகளுக்குத் தலா ரூ.15 ஆயிரமும் வைப்பீடாகச் செலுத்தி இத்திட்டத்தை அம்மா அவர்கள் முன்னோடித் திட்டமாகச் செயல்படுத்தினார்கள்.

பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் மிதிவண்டி இலவசமாக வழங்கி, சமூக நலனில் முன்னுதாரணமாக இருந்ததும் எங்கள் அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

சமுதாயத்தோடு இணைந்து ஊனமுற்றோர் இயல்பான வாழ்க்கையில் முழுமையாக ஈடுபடும் வகையில், அவர்களுக்குச் சம வாய்ப்பு அளிக்கவும், அவர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாக்கவும், கடந்த 1995-ல் கருணையுள்ளம் கொண்ட அம்மா அவர்களால்



இயற்றப்பட்ட ஊனமுற்றோருக்கான சட்டம், ஊனமுற்றோருக்கு ஒரு வரப்பிரசாதமாகும். முதியோர், ஊனமுற்றோர், கணவனை இழந்த கைம்பெண்கள் ஆகியோர் அரசு உதவித் தொகை கோரி மனுச் செய்த 15 தினங்களுக்குள் வழங்கிட நடவடிக்கை எடுத்திட பேரவைத் தலைவர் அவர்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழைகள் வீட்டிற்கு இலவச கேஸ் அடுப்பு வழங்கப் போவதாகக் கூறும் தமிழக அரசு, ஏழைகளின் நெஞ்சங்களில் நிறைந்து இருக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட, பள்ளிக் குழந்தைகள் சத்துணவுக் கூடங்களில், பெண் சமையலர்கள் விறகுடன் போராடும் நிலையை மாற்றும் வகையில் இலவசமாக சமையல் எரிவாயு இணைப்பும், அடுப்பும் வழங்க வேண்டும் எனப் பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

அம்மாவின் ஆட்சிக் காலத்தில்தான் 25 ஆயிரம் நெசவாளர்கள் குடும்பங்களுக்கு மாதம் 20 கிலோ அரிசி வீதம், மூன்று மாதங்களுக்கு 60 கிலோ தரமான அரிசி வழங்கப்பட்டது நெசவாளர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில், ஏழையெளியோர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தை அதிகப்படுத்தி, 256 கோடி ரூபாய் செலவில் 1 கோடியே 65 இலட்சம் சேலைகளும், 1 கோடியே 65 இலட்சம் வேஷ்டிகளும் வழங்கி, நெசவாளர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்புக் கிடைக்க வழி செய்தார்கள்.

அம்மாவின் ஆட்சிக் காலத்தில், தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழு இயக்கம் வேரூன்றி இருந்த அந்த இயக்கப் புரட்சி, புது மலராகப் பூத்துக் குலுங்குகிறது. 1,005.23 கோடி ரூபாய் சேமிப்பும், 1,699.81 கோடி ரூபாய் அதிகமான கடன் வசதியுடன் 3,15,722 மகளிர் சுய உதவிக் குழுக்களில் 50,37,832 சுய உதவி உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். 217 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புது வாழ்வுத் திட்டம் தொடங்கப்பட்டது. 1,11,586 பெண் குழந்தைகள் பயன் அடைந்துள்ள திட்டம்தான் அம்மா அவர்கள் தீட்டிய திட்டம்.

நமது நாட்டின் மக்கள் தொகையில் 70 சதவிகிதம் பேர் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். ரசாயன உரங்கள் மற்றும் டிராக்டர் வந்த பின், கால்நடைகள்மீது அக்கறையும், பயனும் குறைந்துவிட்டது. விவசாயத் தொழிலில் கால்நடைகளின் பங்கு இன்றியமையாதது. கால்நடைகளின் கழிவு, இயற்கை விவசாய முறைகளுக்குப் பயன்படுகிறது. நாட்டின் வெண்மைப் புரட்சிக்குப் பசுக்கள்தான் காரணம். கால்நடைகளை

மறந்து, இயற்கை விவசாயத்தைக் கைவிட்டு, இரசாயன உரங்களுடன் நாம் சென்றதால் வந்துவிட்டோம். எங்கு கண்டாலும் இயற்கையான என்று முன்பு நாம் வாழ்ந்த நாட்டில் விவசாயம் உள்ளிட்ட அனைத்திலும் செயற்கைதான் மேலோங்கி உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்குக் கொடுத்தது 7 நிமிடங்கள். ஆனால், 11 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** நாட்டுப் பசுக்களை இறைச்சிக்காக அடிமாடுகளாக விற்பனைக்கு அனுப்பாமல், அவை தரும் வழங்கல்களைப் பஞ்சகவ்யமாகவும், மண்புழு உரமாகவும் மாற்றிப் பலனை பெற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நல்ல இனக் கால்நடைகளான காங்கேயம், ஓங்கோல், சிந்து, தார்பார்கர் ஆகியவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு, ஜெர்சி இன மாடுகளை வாங்கி நோய்களைப் பரப்பிவிட்டோம். கால்நடை கழிவுகள் மூலமாகக் கிடைக்கும் சாணம் நல்ல இயற்கை உரமாகும். கால்நடைகள் குறைந்ததால் இரசாயன உரங்களுக்கு மாறி, விளை நிலங்களைப் பாழ்படுத்தி விட்டோம். நாமே நம் மண்ணைப் பாழ்படுத்திவிட்டோம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** கால்நடைகளைப் பெருக்கி... (குறுக்கீடு) கண்ணீர்ப் பேச்சு.

(உறுப்பினர் தண்ணீர் அருந்தினார்) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கண்ணீர்ப் பேச்சுதான். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது கண்ணீர்ப் பேச்சா அல்லது தண்ணீர்ப் பேச்சா என்று தெரியவில்லை.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள்கூட தண்ணீர் குடித்துக்கொண்டு பேசினால், அப்போது தண்ணீர்ப் பேச்சா என்பதை நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம். நீங்கள் தண்ணீர் தாருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள், ராதாகிருஷ்ணன்.



**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** தொகுதி குறித்து மட்டும் பேசுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவில்பட்டி மக்களுக்கு எல்லாம் தெரியும். சீக்கிரம்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** தண்ணீர்ப் பிரச்சினையைப் பற்றி மட்டும் பேசி முடித்துவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் சீவலப்பேரி குடிதண்ணீர்த் திட்டம் தொடங்கப்பட்டபோது, தினசரி சீராகக் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டது. தற்போது நகரப் பகுதி விரிவடைந்து, மக்கள் தொகை அதிகரித்துள்ளதுடன், கயத்தார், கடம்பூர், கழுகுமலை, எட்டயபுரம், மேலும், விருதுநகர் மாவட்டம், சாத்தூர் ஆகியவற்றிற்குக் குடிநீர் ஒரே லைனில் சப்ளை செய்யப்படுவதால், கோவில்பட்டி நகர மக்களுக்கு 15 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுகிறது. இதய தெய்வம் அம்மா ஆட்சியில் அனுமதிக்கப்பட்ட இரண்டாவது பைப்லைன் வேலை முடியும் தருவாயில் உள்ளது. அப்பணியை விரைந்து முடித்து, இரண்டாவது பைப்லைன் மூலமாகக் குடிதண்ணீர் பயன்பாட்டுக்கு வர அரசு நடவடிக்கை எடுப்பதுடன், அம்மா ஆட்சியில் ஆய்வில் இருந்த புளியம்பட்டி, கடம்பூர், குருமலை, ஊத்துப்பட்டி வழியாகக் கோவில்பட்டிக்கு சீவலப்பேரியிலிருந்து மூன்றாவது பைப்லைன் திட்டத்திற்கும் அனுமதி வழங்கி, வளர்ந்து வரும் பெரிய நகரமான கோவில்பட்டி நகர மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்திட வேண்டும் என்று பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள். Time ஆகி விட்டது. No, No. நன்றி சொல்லி பேச்சை முடியுங்கள்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மருத்துவமனையை மட்டும் சொல்லி விடுகிறேன். கோவில்பட்டி தொகுதியில் உள்ள மருத்துவமனை பெயரளவில் மாவட்டத் தலைமை மருத்துவமனையாக உள்ளது. C.T. ஸ்கேன் வசதி, கட்டட வசதி, அதிகப்படியான மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் வசதி, தனித்தனியாக அந்தந்த நோய்களுக்கான சிறப்புப் பிரிவுகள், சிறப்பு மருத்துவர்கள் நியமனம் செய்து, அனைத்து வசதிகளும் கிடைத்திட அரசு ஆணை பிறப்பித்திட மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். கோவில்பட்டி தொகுதியிலுள்ள திருவேங்கடம் கிராமம், சுற்றுவட்டாரத்தில் உள்ள

அதிகமான கிராம மக்கள் பயன்பாட்டிற்கான ஊராகும். அங்கு அரசு மருத்துவமனை அமைத்து, கிராம மக்கள் பயன் பெறும் வகையில் ஆணை வழங்கிட மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகக் கேட்டுக்கொண்டு, கோவில்பட்டி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள். அடுத்தாற்போல்...

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** ...கேட்டுக்கொண்டு, இவ்வளவு நேரம் பேச வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறிக்கொள்வதோடு, ஓரே ஒரு கோரிக்கையை வைத்து விடைபெறலாமென்று இருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இன்னொன்றா?

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும்—நமது சட்டமன்ற விடுதியில் மழையாலும், வெயிலாலும் கீறல்கள் விழாத அளவுக்கு வெளிச் சுவர்களுக்கு வர்ணம் பூசி, அங்கு கொசுத் தொல்லையை நீக்குவதற்குத் தினமும் கொசு மருந்து அடிப்பதற்கும், அந்த விடுதியிலுள்ள...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நான் பார்த்துக்கொள்கிறேன். உட்காருங்கள்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** அந்த விடுதியிலுள்ள இரண்டு bed-களில் ஒரு bed—அந்த ரூமுக்குள்ளேயே நுழைய முடியவில்லை. ஏனென்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** அதிலுள்ள ரப்பர் கெட்டுவிட்டதனால் நுழைய முடியாத அளவுக்கு அந்த வாசம் இருக்கிறது. அதையும் மாற்றியமைத்துக் கொடுக்கப் பேரவைத் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** தான் பெற்ற பிள்ளையினை ஆட்சிக் கட்டிலில் அமர வைத்து அழகு பார்க்கும் இன்றைய அரசியல் தலைவர்கள் மத்தியில் ஊரார் பெற்ற பிள்ளைகள் வாழ்விற்கு, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தை உலகத்திலேயே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடு)

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** தமிழகத்தில் முதன்முதலாக அறிமுகப்படுத்திய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மீண்டும் பாதம் பணிந்து நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No. No. மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள்.

**•திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்ற எனக்கு இந்த அரிய வாய்ப்பை அளித்த பெண் உரிமைக் காவலரும், சமூக நீதிப் போராளியும், ஒடுக்கப்பட்ட மக்களின் இட ஒதுக்கீட்டு நாயகருமான மருத்துவர் அய்யா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பாட்டாளி மக்கள் கட்சியின் இளைஞரணித் தலைவரும், அமெரிக்காவின் லூத்தர் எல். டெர்ரி என்ற உயர்ந்த விருதையும் பெற்று இந்தியாவின் பெருமையை உலக அரங்கில் உயர்த்தியவரும், புகையிலை உபயோகத்திற்குத் தடைச் சட்டம் கொண்டு வந்து, இந்திய மக்களின் வெகுவான பாராட்டைப் பெற்றவருமான மாண்புமிகு மத்திய நல்வாழ்வுத் துறை அமைச்சர் எங்கள் மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவரும், சட்டமன்றக் கட்சித் தலைவருமாக இருந்து, சட்டமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் சட்டமன்ற உறுப்பினர்களையும், கட்சியினரையும் செவ்வனே வழி நடத்துகின்ற, எங்கள் ஐயா அவர்களாலே ஓய்வறியா உழைப்பாளி என்றும், தியாகச் செம்மல் என்றும் பாராட்டப்படுகின்ற எங்கள் தலைவர் ஜி.கே.எம். அவர்களுக்கும், என்னைச் சட்டமன்ற உறுப்பினராக்க வேண்டுமென்று அரும்பாடுபட்ட, என்னைப் பெற்ற தாயைவிட நான் மேலாகப் போற்றுகின்ற அன்புத் தாயார் சரஸ்வதி இராமதாஸ் அம்மா அவர்களுக்கும், என்னுடைய வெற்றிக்கு இரவு, பகல் பாராமல் கடுமையாக உழைத்து, என்னை வெற்றி பெறச் செய்த நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான திரு. ஆ.கி. மூர்த்தி அவர்களுக்கும், வானுயர வள்ளுவர் சிலையைக் குமரி முனையில் நிலைநாட்டி வாழும் வள்ளுவர், என் வெற்றியை உறுதி செய்து, ஆசி வழங்கிய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என் வெற்றிக்காகக் காஞ்சிபுரம் வந்து, சுழன்றடிக்கும் சூறாவளியாய், அனல் பறக்கும் தன் ஆற்றல்மிகு பிரச்சாரத்தால் எதிர் அணியை ஏப்பம்

விட்டு, உள்ளாட்சித் துறைக்குப் பொறுப்பேற்று, நல்லாட்சியை நடத்தி வரும், என் அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய மாண்புமிகு தளபதி அவர்களுக்கும், பாசமிகு சகோதரர், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அகில இந்திய அளவில், பதவி இல்லாமல், பார் போற்றும் தலைவியாக விளங்கும் காங்கிரஸ் பேரியக்கத்தின் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சி, புரட்சி பாரதம் ஆகிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்களுக்கும், எனக்கு இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பு வழங்கி, என்னை வெற்றி பெறச் செய்த காஞ்சிபுரம் தொகுதி வாக்காளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

2006-2007 ஆம் ஆண்டிற்கான சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கால்நடை வளர்ப்பு, விவசாயிகளின் சார்புத் தொழிலாகவும், பெண்களின் குடும்ப வருமானத்தை ஈட்டும் முக்கியத் தொழிலாகவும் உள்ளது. கிராமப் பொருளாதார மேம்பாட்டுக்கு, கிராமப்புறத்தில் பெண்கள் கறவை மாடுகள் வளர்க்கவும், ஆடுகள் வளர்க்கவும், கோழிகள் வளர்க்கவும் மானியத்துடன்கூடிய கடன் வழங்கி உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, கிராமப்புறங்களில் செயல்படும் கால்நடை பராமரிப்பு நிலையங்களில் சுமார் 1,700 கால்நடை ஆய்வாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சியை உடன் தொடங்கி, மேற்கண்ட காலி இடங்களை நிரப்ப வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். விடுபட்ட கால்நடை ஆய்வாளர்களுக்கும், ஆராய்ந்து சட்டப்படி வழங்கிட வேண்டும். நிலையான பயணப் படியினை உயர்த்தி வழங்கிட வேண்டும். பதவி உயர்வு வாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு, SVLS பதவிகளை அதிகப்படுத்திட வேண்டும். கால்நடை மருத்துவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.



சத்துணவுத் திட்ட அங்கன்வாடிப் பணியாளர் கோரிக்கைகள்: சத்துணவு, ஊட்டச் சத்துப் பணியாளர்கள் கோரிக்கையைப் பற்றி எங்கள் கட்சித் தலைவர் ஜி.கே.மணி அவர்கள் பொது விவாதத்தில் வலியுறுத்திப் பேசினார்கள். இது மிகவும் முக்கியமான பிரச்சினை. 60,000-க்கும் மேற்பட்டோர் பணியாற்றி வருகின்ற சத்துணவு மற்றும் ஊட்டச் சத்து ஆகியவற்றில் நீண்ட காலமாகப் பணியாற்றி வரும் அமைப்பாளர்கள், சமையலர், உதவியாளர் ஆகியோர் மிகக் குறைவான ஊதியத்தில் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும்; ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்; கல்வித் தகுதிக்கு ஏற்ற வேலைவாய்ப்பு வழங்க வேண்டும். சத்துணவு மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கிட வேண்டும். சத்துணவு சமைத்திடும் பொருட்களுக்கு வழங்கும் மானியத்தை உயர்த்தித் தர வேண்டும். பணியின்போது இறந்துவிட்ட பணியாளர்களின் வாரிசுகளுக்கு வேலை வழங்கிட வேண்டும்.

செங்கற்பட்டில் உள்ள அரசுப் பாதுகாப்பு இல்லத்தில் பணியாற்றிய ஆசிரியர்கள் கடந்த கால ஆட்சியில் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்களை மீண்டும் பணியமர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவாக ஏழைப் பெண்களுக்குக் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டு வந்த திருமண உதவித் தொகை கடந்த காலத்தில் பெண் முதலமைச்சரால் நிறுத்தி வைக்கப்பட்டது. ஆனால், பெண்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 33 சதவிகித ஒதுக்கீடு வழங்கிய பெருமைக்குரிய தலைவர் கலைஞர் அவர்கள், தற்போது ஏழைப் பெண்களின் திருமண உதவிக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கி, பெண்களின் கண்ணீரைத் துடைத்தவர் கலைஞர் ஆவார். (மேசையைத் தட்டும் ஒலி)

கர்ப்பிணிப் பெண்களுக்குப் பிரசவ காலத்திற்கு முன் 3 மாதத்திற்கு ரூபாய் 1,000 வீதமும், பிரசவத்திற்குப் பின் 3 மாதத்திற்கு மாதம் ரூபாய் 1,000 வீதமும், ரூபாய் 6,000 வழங்கிய கலைஞரை 'தாயுமானத் தாய்' என்றால் மிகையாகாது.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் பயிற்சிக்கு 7 ரூபாய் என்று இருந்ததை, 35 ரூபாயாக உயர்த்தியது மிகப் பெரிய வரவேற்புக்குரியது.

இடித்துத் தள்ளிய கண்ணகி சிலையை, அருங்காட்சியகத்தில் முடக்கி வைத்த கண்ணகி சிலையை மீண்டும் அதே இடத்தில் நிறுவி தமிழ்ச் சமுதாயக் கலாச்சாரத்திற்குப் பெருமை சேர்த்த கலைஞரை, பெண்

சமுதாயத்தின் சார்பாகத் தலை வணங்கிப் பாராட்டுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஏழைப் பெண்கள் திருமண உதவித் தொகையாக ரூபாய் 15 ஆயிரம் வழங்குவதை பாமக மனதார வரவேற்கிறது. உதவித் தொகை வழங்கும் திருமணத்தைத் தமிழ் முறைத் திருமணமாக நடத்த வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பெண்ணுரிமைக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களின் பேரன் திருமணத்திற்குக் கடந்த ஆண்டு தலைவர் கலைஞர் அவர்கள் வருகை தந்து திருமணத்தை நடத்தி வைத்த நேரத்தில் மருத்துவர் அய்யா அவர்கள் சொன்னார்கள், 'கலைஞர் அவர்களே, தாங்கள்தான் தமிழ்நாட்டின் அடுத்த முதலமைச்சராக வரப் போகிறீர்கள்.' (மேசையைத் தட்டும் ஒலி) 'அப்படி நீங்கள் முதலமைச்சராக வந்தவுடன் நீங்கள் இங்கே நடத்தி வைத்த தமிழ் முறைத் திருமணம்போல நடக்கின்ற திருமணங்களுக்கு உதவித் தொகை வழங்கி ஊக்குவிக்க வேண்டுமென்று' கேட்டுக்கொண்டார்கள். எனவே, தாங்கள் தங்கள் ஆட்சியிலே தமிழ் முறையிலே செய்யப்படும் திருமணங்களுக்கு உதவித் தொகை வழங்கி ஊக்குவிக்க வேண்டுமென நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-15

ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சரானவுடன் இந்தியாவிலேயே முதல மாநிலமாக ஆக்குவேன் என்று சொன்னார். ** (குறுக்கீடுகள்) குடிப்பழக்கம் உள்ள கணவன்களால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். சொல்கிறேன்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** குடிப்பழக்கம் உள்ள கணவனால் ஆறாத் துயரில் அல்லல்படும் மனைவிகள் ஏராளம், ஏராளம். (குறுக்கீடுகள்) சீரழியும் குடும்பங்கள் கணக்கில் அடங்காது. எனவே, பெண்களின் கண்ணீரைத் துடைக்கும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** கிராமப்புறத்தில் படிப்பறிவற்ற பாமர ஆண்கள் குடிப்பழக்கத்தினால்...

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையைச் சீக்கிரம் முடியுங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** பெண்களைக் கொடுமைப்படுத்தியதைத் தடுத்து நிறுத்துகின்ற எண்ணத்திலே கிராமப்புற மதுக் கடைகளை மூட வேண்டுமென்று– (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பிலேயிருந்து அவர்கள் சொன்ன அந்த வார்த்தைகளை நீக்கியாயிற்று. உட்காருங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மதுக் கடைகளே கூடாது என்று, பாட்டாளி மக்கள் கட்சியின் மகளிர் அணியின் சார்பிலே மதுக் கடைகளை என் தலைமையிலே மூட வலியுறுத்தினோம். மதுக் கடைகளை மூடுவோம், மூடுவோம் என்று சொன்னோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலேயிருந்து உறுப்பினர் சொன்ன வார்த்தைகளை நீக்கச் சொல்லிவிட்டேன். உட்காருங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** எங்களை முன்கூட்டியே தடுத்துக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள், பெண் முதலமைச்சர் ஆட்சிக் காலத்திலே. (குறுக்கீடுகள்) எனவே, பெண்களுக்குப் பாதுகாவலராக விளங்கிடும் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கிராமத்து மதுக் கடைகளை மூடி, பெண்களுடைய அவல நிலையைப் போக்கி, பெண்களின் கண்ணீரைத் துடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1996–லிருந்து 2001 வரையிலான நம் ஆட்சியில் குறைவான மதுக் கடைகளே இருந்தன. தலைவர் கலைஞர் ஆட்சியிலே குறைவான மதுக் கடைகளே இருந்தன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கியாயிற்று. உட்காருங்கள், சத்தம் போடாதீர்கள். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் தயவுசெய்து வேறு பிரச்சினைக்குச் செல்லும்படிக் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நீங்கள் (குறுக்கீடுகள்) அடுத்த சப்ஜெக்ட்டுக்கு பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திருமதி பெ. கமலாம்பாள்:** எங்களுக்குத்தானே தெரியும்? குடியினாலே எவ்வளவு பெண்கள் கண்ணீரிலே, தாலியும் எவ்வளவு போகிறது என்று எங்களுக்குத்தானே தெரியும்? உங்களுக்கு யாருக்குத் தெரியும்? (குறுக்கீடுகள்) அனைவரும் மதிக்க வேண்டிய தாயாக, மனைவியாக, சகோதரியாக, மகளாக இருக்கும் பெண்களைத் திரைப்படங்களிலும், சில வார ஏடுகளிலும், செய்தி ஏடுகளிலும், விளம்பரங்களிலும் ஆபாசமாக, அருவருப்பாக, கேவலமாக வெளியிடப்படும் காட்சிகள் புற்றீசல்போல எங்கு பார்த்தாலும் காணப்படுகின்றன. இதைக் கண்டித்தும், தடை செய்ய வலியுறுத்தியும், கடந்த பெண் முதலமைச்சர் ஆட்சிக் காலத்திலே பாட்டாளி மக்கள் கட்சி மகளிர் அணி சார்பிலே என் தலைமையிலே பல முறை போராடினோம். எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) கேட்டால் சொல்கிறார்கள்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடங்கள் ஆயிற்று. (குறுக்கீடுகள்) என்ன? அவர்கள் போராட்டம் நடத்தியதைச் சொல்கிறார்கள். அதிலே என்ன தவறு இருக்கிறது? (குறுக்கீடு) அதிலே என்ன point of order இருக்கிறது? உட்காருங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** உண்மையைத்தான் சொன்னோம், யதார்த்தத்தைத்தான் சொன்னோம் என்று அவர்கள் சொல்கிறார்கள். அவரவர் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களை இப்படிப் படமாக, காட்சிப் பொருளாக வெளியிட ஒத்துக்கொள்வார்களா? சொல்லுங்கள். சிலர் சொல்கிறார்கள், உண்மையைத்தான் சொன்னோம், யதார்த்தத்தைத்தான் சொன்னோம், வெளியிடுகிறோம் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களே, நீங்கள் கொஞ்சம் சப்ஜெக்ட்டை மாற்றி, அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடு) Controversial ஆன சப்ஜெக்ட்டுக்குள்ளே ஏன் போகிறீர்கள்? சுருக்கமாகப் பேசுங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** எனவே, பெண்களை ஆபாசமாக, அருவருப்பாக, கேவலமாக, படமாக வெளியிடுவதைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பூலான் தேவியை அழைத்து வந்து மகளிர் அணி சார்பில் அண்ணா அறிவாலய வளாகத்தில்



மாநாடு நடத்தினோம். அதிலே, சாராய பாட்டிலை உடைத்தோம். ஆபாசப் படங்களைக் கொளுத்தினோம். பெண்களுக்கு எதிராக நடைபெறும் கொடுமைகள், கிண்டல், கேலி செய்தல், பாலியல் பலாத்காரம், ஈவ் டீசிங் போன்றவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உரையை முடியுங்கள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** என்னுடைய தொகுதிப் பிரச்சினைக்கு இப்போதுதான் வருகிறேன். என்னுடைய தொகுதிப் பிரச்சினை மிகவும் முக்கியமான பிரச்சினை. காஞ்சிபுரம் தொகுதி முக்கியமான தொகுதி. இதைக் கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். கடந்த காலத்தில் நெசவாளர்களின் வறுமையைப் போக்கி கஞ்சித் தொட்டியைத் திறந்து நெசவாளர்களைக் காப்பாற்றிய முதலமைச்சருக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் கிட்டத்தட்ட 6, 7 பேர் பேச வேண்டும். இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் சகோதரி கமலாம்பாள் அவர்கள் காஞ்சிபுரம் தொகுதிப் பிரச்சினை எதுவாக இருந்தாலும் அமைச்சர்களிடத்திலே கொடுத்துவிட்டால், நாங்கள் நிச்சயமாகச் செய்து கொடுக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, (குறுக்கீடு) நேரம் கிடையாது. தயவுசெய்து அவருடைய பேச்சை முடிக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி கமலாம்பாள் அவர்களே, இதைவிட உங்களுக்கு வேறென்ன வாக்குறுதி வேண்டும்? எல்லாக் கோரிக்கைகளையும் செய்து தருகிறோம் என்று சொல்லிவிட்டார்கள். உரையை முடியுங்கள்.

பிற்பகல் 12–50

**திருமதி பெ. கமலாம்பாள்:** என்னுடைய தொகுதிப் பிரச்சினைகள் நிறைய இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு அமைச்சர்கள் எல்லோரும் என் தொகுதிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார்கள். கலைஞர் அவர்களும், அன்புத் தளபதி அவர்களும், ஆற்காட்டார் அவர்களும், இங்கேயிருக்கிற எல்லோரும் என் தொகுதிப்

பிரச்சினைகளைத் தீர்த்திடக் கவனம் செலுத்த வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். என் நேரத்துக்கும் நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை ஆகியவற்றின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கிய திராவிட முன்னேற்றக் கழக அரசு, மேற்கு வங்க மாநிலத்தைப் போன்று, கேரள அமைச்சரவை போன்று, இங்கே 3 பெண் அமைச்சர்களை 3 துறைகளுக்கு நியமித்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, இந்தத் துறையில், டாக்டர் என்ற உயர் கல்வியை படித்து, சேவை அனுபவங்களோடு வருகை தந்திருக்கக்கூடிய சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், கால்நடை பராமரிப்புத் துறையினுடைய அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

சத்துணவுத் திட்டம், ஏழை, எளிய குழந்தைகளுக்கு உணவு அளிக்கக்கூடிய ஒரு நல்ல திட்டமாகும். வாரம் 2 முட்டை, உருளைக்கிழங்கு, பயறு வகைகளோடு உண்மையான சத்துணவுத் திட்டமாக அதனை மாற்றிக் கொடுத்த தமிழக முதல்வர் அவர்களுக்கு மீண்டும் எனது நன்றியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அரசியல் விருப்பு, வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டு இந்தத் திட்டத்தை ஆரம்பம் முதலே கைவிடாமல் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எனது பாராட்டுக்களை உரித்தாக்கிக்கொள்கின்றேன். இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்த தலைவர்கள்மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்ததற்காகப் பெருமைப்படுகிறபோது, அதற்குக் காரணமாக இருக்கக்கூடிய தமிழகத்தினுடைய வறுமையும், குழந்தைகளுக்குக்கூட சத்துணவு கொடுக்க முடியாத 21 ஆம் நூற்றாண்டின் தமிழகத்துக் குடும்பங்களின்



பொருளாதார நிலைமையும் எதிர்காலத்தில் மாற்றப்பட வேண்டும் என்ற உணர்வோடு இந்தத் திட்டம் பலப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

23 ஆண்டு காலமாக இத்திட்டத்தில் பணியாற்றும் அங்கன்வாடி ஊழியர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், சத்துணவுப் பணியாளர்கள் என 2 இலட்சம் பேர் மிகக் குறைந்த மதிப்பூதியத்தைப் பெற்றுப் பணிபுரிந்து வருகிறார்கள். உணவு வழங்கக்கூடிய இவர்களுக்கு ஓய்வு பெறக்கூடிய காலத்திலே யார் உணவு வழங்குவார்கள் என்ற அச்சம் அவர்களிடத்திலே எழுந்திருக்கிறது. அதனை நமது அரசு போக்க வேண்டும். சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் அனைவரையும் நிரந்தரப்படுத்தி, கால முறை ஊதியம் வழங்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசு அங்கன்வாடி ஊழியர்களுக்கு வழங்கிய சிறப்பு ஊதியமான ரூபாய் 500/—ம், ரூபாய் 200/—ம் கூட நம் அரசால் இவர்களுக்கு வழங்கப்படவில்லை. அந்த ஊதியம் எந்தத் தேதியில் மத்திய அரசு வழங்க உத்தரவிட்டதோ, அந்தத் தேதியிலிருந்து இன்று வரை நிலுவைத் தொகையோடு சேர்த்து வழங்க நமது அரசு முயற்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, சத்துணவு ஊழியர்களில் பட்டப் படிப்பு, முதுநிலைப் படிப்பு, தொழிற்கல்விப் பயிற்சி முடித்தவர்கள், தட்டச்சு முடித்தவர்கள், இவர்கள் அனைவரும் நிரந்தர அரசுப் பணிப் பிரிவுகளுக்கு மாற்றப்பட வேண்டும். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு, B.Ed. முடித்தவர்களுக்குத் தேர்வு நடத்தி, சான்றிதழ் சரிபார்ப்பு வரை செய்தார்கள். ஆனால், அவர்களுக்கு ஆசிரியர் வேலை வழங்கவில்லை. சத்துணவுப் பணியாளர்களுக்கும் வழங்கவில்லை. அவர்களுக்கும் ஆசிரியர் வேலை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சத்துணவுப் பணியாளர்கள் ஓய்வடைகிறபொழுது, மாத pension கிடைப்பதற்கு ஒரு புதிய pension திட்டத்தை அரசு உருவாக்கிட வேண்டும். பல்லாயிரக்கணக்கான காலியான பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அவை நிரப்பப்பட வேண்டும்.

சமையலில் சாம்பாரில் பல்லி விழுவது, சாம்பாரிலே குழந்தைகள் தவறி விழுவது, கும்பகோணத்தினுடைய தீ விபத்துச் சம்பவங்களெல்லாம் நம் நினைவுக்கு வருகின்றன. சமையல் எரிவாயுமூலமாக 14 லிட்டர் குக்கர் மூலமாக சமையல் செய்வது இத்தகைய விபத்துகளைத் தவிர்ப்பதற்கு உதவி செய்யும்.

சமையற்கூடங்களை நல்ல முறையிலே கட்டிக் கொடுப்பதற்கு அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

[illegible] தமிழகத்தில் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் பராமரிப்பிற்கு ரூபாய் ஆயிரம் வழங்கப்பட வேண்டும். ஐந்து வகையான உடல் ஊனமுற்றோருக்கான மாநில அளவிலான ஒரு கொள்கையை அரசு உருவாக்க வேண்டும். கடும் ஊனமுற்றோருக்கு வருமான வரம்பை நீக்கி, இலவச பஸ் பாஸ் வசதியும் மாவட்டத் தலைநகரங்களில் தொழிற்கூடங்களும், தங்கும் இடங்களும் அமைத்துக் கொடுக்க வேண்டும். வெளியூர் செல்லும் புறநகர்ப் பேருந்துகளில் ஊனமுற்றோர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்கிட வேண்டும். அரசுத் துறைகளில் மூன்று சதவிகிதம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, அவர்களுக்குப் பணி வழங்க வேண்டும். வரக்கூடிய மாதங்களில் கண் பார்வையற்ற ஊனமான அந்த இளைஞர்கள் 15,000 பேர் மாநில அளவிலே மாநாடு நடத்தவிருக்கிறார்கள். அந்த மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்துகொள்வதற்குக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று அதிகாலை நேரத்தில் சந்தித்த கண் தெரியாத அந்த வாலிபர்களுடைய வேண்டுகோளை இந்த அரசுக்கு, முதல்வர் அவர்களுக்குச் சமர்ப்பிக்கின்றேன்.

*பிற்பகல் 12–55*

விதவை முதியோர் பெண்களுக்கு ரூபாய் 400 உதவித் தொகை உயர்த்திய அரசினுடைய நடவடிக்கை பாராட்டுக்குரியது. ஆண் வாரிசு இருக்க வேண்டும் என்ற விதி இப்போதும் தொடர்கிறது. தமிழகத்தில் மகாகவி பாரதியார், புரட்சிக் கவி பாரதிதாசன், அதேபோன்று, தந்தை பெரியார் போன்றவர்கள் எல்லாம் ஆணுக்குப் பெண் சமம் என்ற கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆனால், விதவை முதியோர் பெண்களுக்கு ஆண்தான் வாரிசு என்ற விதி தொடர்வது விந்தையாக இருக்கிறது.

1998–லே திராவிட முன்னேற்றக் கழக அரசு விதவைப் பெண்களுக்கு ஆண் வாரிசு இருந்தாலும் பென்ஷன் கொடுக்கலாம் என்று அரசாணை போட்டார்கள். 2003–ல் அ.தி.மு.க. அரசு விதவைப் பெண்கள் விண்ணப்பிக்கிறபொழுது, அதை சுய உதவிக் குழுக்களுக்கு அனுப்புங்கள் என்ற அரசாணை போட்டார்கள். இரண்டும் ஆதாரமாக இருக்கின்றன. ஆகவே, விதவை முதியோர் பெண்களுக்கு ஆண் மகன்கள் இருந்தாலும், அவர்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழே இருந்தால், பொருளாதார நிலையிலே நலிந்திருந்தால், அவர்களுக்கு



400 ரூபாய் உதவித் தொகை தரலாம் என்ற நடவடிக்கை குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களும், சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும் முடிவு எடுக்க வேண்டும்.

அதேபோன்று, விதவைகளுக்கு மறுமணம் செய்தல், தமிழகத்திலே தந்தை பெரியார் போன்றவர்கள் எல்லாம் போராடிப் பெற்ற உரிமையாகும். ஆனால், கணவர் இறந்துவிட்ட சூழ்நிலையில் அவர்களுடைய வேலையைப் பெற்ற விதவைப் பெண் மீண்டும் மறுமணம் செய்கிறபோது, அவர்களுடைய வேலை பறிக்கப்படுகிறது. மாநில அரசு, மத்திய அரசு இரண்டுமே, அந்த விதவைப் பெண்கள் மறுமணம் செய்தால் வேலையைப் பறித்துக்கொள்கின்றன. அது மிகவும் முரணானதாகவும், அரசுத் துறைகளிலே விதவைப் பெண்களுடைய மறுமணம் அனுமதிக்கப்படவில்லையோ என்ற உணர்வையும் ஏற்படுத்துகிறது. சென்ற முறையும் இதே கருத்தை இதே மன்றத்தில் நான் வலியுறுத்தியிருக்கிறேன். ஆகவே, தயவுசெய்து அரசுத் துறைகளில் கணவர் இறந்த பிற்பாடு வேலையைப் பெற்ற பெண்கள் மீண்டும் திருமணம் செய்தால், அவர்களுக்கு அந்த வேலை என்பது தொடர வேண்டும்.

இராணுவத்தில் பணியாற்றிய இளம் வீரர் மரணத்திற்குப் பின், அவர்களுடைய பெற்றோரைப் பாதுகாக்க ஒரு சகோதரி வேலை வழங்குவதற்கு விண்ணப்பித்தால், அந்தப் பெண் திருமணம் ஆகாதவராக இருக்க வேண்டும். திருமணம் ஆனால் வேலை பறிக்கப்படும் என்று மத்திய அரசும் அச்சுறுத்துகிறது. இது மாற்றப்பட வேண்டும். தந்தையின் வேலைக்கு ஆண் மகனுக்கு முன்னுரிமை கொடுக்கிற அரசு, அவருடைய சம்மதம் பெற்றுத்தான் மகளுக்கு வேலை தர முன்வருகிறது. ஆண் மகன் திருமணம் செய்துகொண்டாலும், அவர்கள் தந்தையின் வேலையைத் தொடர்ந்து பார்க்க முடியும். ஆனால், மகள் திருமணம் செய்துகொண்டால், அந்தப் பெண்ணுடைய வேலை பறிக்கப்படுகிறது. இது தமிழகத்தினுடைய காவல் துறையிலும் நீடிக்கிறது. ஆகவே, இப்படி விதவைப் பெண்கள் அல்லது பெண் வாரிசு என்பதைச் சட்ட ரீதியாக அங்கீகாரம் செய்வதற்கு, நம்முடைய அரசு மாறுதல்களைக் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

உழைக்கும் பெண்கள்: இன்றைக்குச் சென்னை மாதிரியான மாநகரங்களில் மிகப் பெரிய ஐடி நிறுவனங்களிலும், மிகப் பெரிய தனியார் மருத்துவமனைகளிலும், மிகப் பெரிய தனியார் பள்ளி,

கல்லூரிகளிலும் வேலைக்குச் செல்லக்கூடிய பெண்களுடைய வேலை நேரம் அதிகரித்திருக்கிறது. ஆனால், மிகக் குறைந்த ஊதியம்தான் வழங்கப்படுகிறது. கட்டட வேலை, கல் உடைக்கும் வேலை, நடைபாதை சிறு வியாபாரப் பெண்கள், பூ வியாபாரம் செய்பவர்கள், காய்கறி வியாபாரம் செய்யக்கூடிய பெண்கள், தெரு ஓரங்களிலே இட்லிக் கடை வைத்திருக்கக்கூடிய பெண்கள், பெட்ரோல் பங்குகளில் வேலை பார்க்கக்கூடிய பெண்கள் உட்படப் பல முறைசாராத் தொழில்களில் வேலை செய்யக்கூடிய பெண்கள் பணிப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு என்ன ஊதியம் வழங்கப்படுகிறது என்பதுகூடத் தெரியவில்லை. பெண்களுடைய உழைப்புச் சுரண்டல் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் மிகத் தீவிரமாக நடந்துகொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் கண்காணிப்பதற்கும், இவற்றை முறைப்படுத்துவதற்கும், அதேபோன்று, எவ்வளவு ஊதியம் என்று தீர்மானிப்பதற்கும் பெண்கள் ஆணையம் என்பதைச் சட்ட ரீதியாகத் தமிழகத்திலே உருவாக்க வேண்டும். அந்தப் பெண்கள் ஆணையத்தின்மூலமாக, இதுபோன்ற உழைப்பாளிப் பெண்களுக்கான உரிமைகளை, அவர்களுடைய பணிப் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்த முடியும். ஆகவேதான், பெண்கள் ஆணையம் என்பதை உருவாக்குவதற்கு இந்தத் துறை என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

வரதட்சணைக் கொடுமை, ஈவ் டீசிங், குடும்ப வன்முறை, வேலை பார்க்கும் இடங்களிலே பாலியல் துன்புறுத்தல்கள், சமூக வன்முறைகள் பெண்களுக்கு எதிராகத் தமிழகத்திலே வளர்ந்துகொண்டு இருக்கின்றன. இவற்றைத் தடுத்து நிறுவத்துவதற்கு, குடும்ப நீதிமன்றம், மகளிர் காவல் நிலையங்கள் மற்றும் பல்வேறு சட்ட நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட வேண்டும். ஆண், பெண் சமத்துவக் கருத்தை வலிமையாக இங்கே கொண்டு செல்வதற்கான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று, கால்நடை ஆய்வாளர்கள் பயிற்சியினை உடனடியாகத் தொடங்கி, கிராமப்புறங்களிலே காலியாக உள்ள 1,800 கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களில் ஆய்வாளர் பதவிகள் நிரப்பப்பட வேண்டும். தமிழகத்தில் +2 முடித்துவிட்டுக் காத்திருக்கக்கூடிய இளைஞர்களுக்கு ஆய்வாளர் பயிற்சியைக் கொடுத்து, 1,800 கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களில்



உடனடியாக அந்தப் பதவிகள் நிரப்பப்பட வேண்டும். விடுபட்டுள்ள கால்நடை ஆய்வாளர்கள் அனைவருக்கும் ஆபத்து ஈட்டுப் படி வழங்கிட வேண்டும். கால்நடை ஆய்வாளர்களின் ஒரே பதவி உயர்வான SVLS என்று சொல்லக்கூடிய பணியிடங்கள் அதிகப்படுத்தப்பட வேண்டும். நிலையான பயணப் படியை, சுகாதார ஆய்வாளர்களுக்கு வழங்கியதைப்போல், கால்நடை ஆய்வாளர்களுக்கும் உயர்த்தி வழங்கிட வேண்டும்.

அதேபோன்று, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்புப் பயிற்சி அளித்து, அதன்மூலம் பொருளாதார முன்னேற்றம் அடையச் செய்யவும், கால்நடை விரிவாக்க அலுவலர் பதவிகள் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் நடமாடும் கால்நடை மருந்தகங்களைச் செயல்படுத்தவும் இந்த அரசு நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

தேனி மாவட்டத்தில் 40 ஆயிரம் மாடுகளை மலைகளிலே கொண்டு வந்து மேய்ச்சலுக்கு அனுப்புகிறார்கள். இது மாடு வளர்ப்பு. அதேபோன்று மாடு பராமரித்தல் கடந்த பல நூற்றாண்டுகளாகத் தேனி மாவட்டத்திலே இருந்துகொண்டு இருக்கிறது. இப்பொழுது வனத் துறை மாடுகளை மேலே கொண்டு வருவதற்குத் தடை விதிக்கிறார்கள். மாடுகளின் கழுத்திலே மணி கட்டினால் வன விலங்குகள் பயந்து ஓடுகின்றன என்று அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள். ஆனால், மாட்டைப் பராமரிக்கக்கூடிய விவசாயிகள் மாடுகளுக்கு மணி கட்டவில்லை என்று சொன்னால், வன விலங்குகள் அடித்துக் கொன்றுவிடும் என்று இவர்கள் சொல்கிறார்கள். இந்தப் பிரச்சினையில் யதார்த்தமாகக் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் என்பதும், அந்த மலைப் பகுதிகளிலேயே வன விலங்குகளுக்குப் பாதிப்பு இல்லாமல், காலங்காலமாக மேய்ந்து வளர்ந்துகொண்டிருப்பதன் காரணமாக மாடுகளையும், அந்த விவசாயிகளுக்கான உரிமையையும் அனுமதிக்கக்கூடிய வகையிலே வனத் துறையோடு பேசி, அவர்களுக்கு அனுமதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

அந்த மாடுகள் பேரணி—ஊர்வலத்திலே, நமது சட்டமன்ற உறுப்பினர் தோழர் திரு. நன்மாறன் அவர்கள்கூடக் கலந்து கொண்டிருக்கிறார்கள். இது குறித்து அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு செல்வோம் என்றும் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வகையிலே இத்தகைய கோரிக்கைகளை நிறைவேற்றிடக் கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

## 7. விதி 110-ன்கீழ் அறிக்கை

### தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் வேலைநிறுத்தம் செய்த காலத்தைப் பணிக் காலமாகக் கருதி ஊதியம் வழங்கிடும் ஆணை—மாண்புமிகு உணவுத் துறை அமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110-ன்கீழ் இங்கே ஓர் அறிக்கை அளிப்பதற்காக அனுமதி தந்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்களின் 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளிலே போனஸ் கோரி நடைபெற்ற வேலைநிறுத்தக் காலத்தைப் பணிக் காலமாக அறிவித்தல் 1997–1998, 1998–1999 மற்றும் 1999–2000 ஆகிய மூன்று ஆண்டுகளுக்குத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழக அரசால் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்களுக்கு 20 சதவீத போனஸ் தொகை வழங்கப்பட்டு வந்தது. அ.தி.மு.க. அரசு பதவியேற்றதும் 2001 ஆம் ஆண்டிலேயே பணியாளர்கள் பெற்று வந்த போனஸ் 8.33 சதவீதமாகக் குறைக்கப்பட்டுவிட்டது. இதனால் 6,000 ரூபாய் போனஸ் பெற்று வந்த தொழிலாளர்கள், ரூபாய் 2,500/– தான் பெறக்கூடிய நிலை ஏற்பட்டது. இவ்வாறு, பணியாளர்கள் அனுபவித்து வந்த சலுகையை அ.தி.மு.க அரசு தன்னிச்சையாகப் பறித்துக்கொண்டதால், இதற்கு ஆட்சேபம் தெரிவித்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திலேயிருக்கிற தொழிலாளர் சங்கங்கள் 2001 ஆம் ஆண்டில் 17 நாட்கள் வேலைநிறுத்தம் செய்தனர்; மற்றும் 2002 ஆம் ஆண்டில் 1 நாள் வேலைநிறுத்தம் செய்தனர். வேலைநிறுத்தம் செய்த 18 நாட்களுக்கும் அ.தி.மு.க. அரசு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க மறுத்துவிட்டது.

பிற்பகல் 1–05

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தொழிலாளர்கள் முன்னேற்றச் சங்கம் (325/LPF) மற்றும் தோழமைக் கட்சிகளைச் சேர்ந்த சங்கங்கள் எல்லாம் 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற





வேலைநிறுத்த நாட்களைப் பணிக் காலமாகக் கருதி ஆணையிடக் கோரின. வேலைநிறுத்த நாட்களைப் பணிக் காலமாகக் கருதி ஆணையிடக் கோரின. தொழிற்சங்கங்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய கோரிக்கையை

வேலைநிறுத்த நாட்களைப் பணிக் காலமாகக் கருதி ஆணையிடக் கோரின. தொழிலாளர்களுடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்தோடு கனிவுடன் பரிசீலனை செய்து, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்கள் 2001 மற்றும் 2002-ல் மேற்கொண்ட வேலைநிறுத்தக் காலமான 18 நாட்களை, விடுமுறை தினங்கள் உட்பட, பணிக் காலமாகக் கருதி ஊதியம் வழங்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் சுமார் 1,000 தொழிலாளர்கள் பயனடைகிறார்கள் என்பதையும் பெருமகிழ்ச்சியோடு இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 45–சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை —தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 6–கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை–கால்நடை பராமரிப்பு —தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கைகளில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கும், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது வணக்கத்தை முதற்கண் உரித்தாக்கிக்கொள்கின்றேன். 'ஆணும், பெண்ணும் நிகரெனக் கொள்வதால், அறிவில் ஓங்கி வையகம் தழைக்கும்' என்ற கவிஞரின் வாக்கை நிறைவேற்றக்கூடிய வகையில், சமுதாயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள பெண்கள், வாழ்க்கையில் சமூகப் பொருளாதாரத்தில் முன்னேற, மேம்பட பல்வேறு நலத் திட்டங்களை, நல்ல திட்டங்களை வழங்கியிருக்கின்ற தமிழக அரசையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் இந்த நேரத்திலே நாங்கள் பாராட்டுகின்றோம்.

ஏழையெளிய குடும்பங்களிலுள்ள 10 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூபாய் 15,000 திருமண உதவித் திட்டம் வழங்கியிருப்பதை

நாங்கள் வரவேற்கின்றோம். சாதாரணக் குடும்பத்தில் இருக்கின்றவர்கள், ஏழையெளிய மக்கள், 10 ஆம் வகுப்பு வரையில் குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாத நிலையில் இருக்கின்றவர்கள் ஏராளமானவர்கள் இருக்கின்றார்கள். குறிப்பாக, சென்ற திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 8 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு ரூபாய் 10,000 என்று அறிவித்தார்கள். அதற்குப் பிறகு வந்த அ.தி.மு.க. ஆட்சியில், அது 10 ஆம் வகுப்பு என்று மாற்றப்பட்டு, அந்தத் திட்டமே கைவிடப்பட்டது. இப்பொழுது நமது ஆட்சியில் 10,000 ரூபாயை 15,000 ரூபாயாக உயர்த்திக் கொடுத்திருக்கின்றார்கள். இந்த உயர்வை நாங்கள் ஏற்றுக்கொண்டாலும், 10 ஆம் வகுப்பு என்பதைக் குறைத்து, 8 ஆம் வகுப்பாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, கர்ப்பிணிப் பெண்களுக்கு, பிரசவ பேறுகாலத்திற்கு முன்பு மூன்று மாதம், பின்பு மூன்று மாதம் தலா 1,000 ரூபாய் வீதம் 6,000 ரூபாய் வழங்கக்கூடிய நல்ல திட்டத்தை மனதார நாங்கள் வரவேற்கின்றோம். கர்ப்பிணிப் பெண்கள் பிரச்சினையில், குறிப்பாகக் கிராமப்புறங்களிலே வாழ்கின்ற சாதாரண, ஏழையெளிய மக்கள், வயல்வெளிகளில் வேலை செய்கின்ற மக்கள், தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் வேலை செய்கின்ற பெண்கள்தான் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றார்கள். ஐக்கிய நாட்டுச் சபையினுடைய ஒரு புள்ளிவிவரமே, இப்படிப்பட்ட இந்தப் பெண்களுக்குத்தான் புற்று நோய் போன்ற கொடுமையான வியாதிகள் வருகின்றன என்று அந்த ஆராய்ச்சி மையமே சொல்லுகிறது. எனவே, அந்த நிலையில் அவர்களுக்குப் போதிய சத்தான பொருட்கள் உடம்பில் இல்லாத காரணத்தால், எளிதாக நோய்கள் தாக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதைப் போக்கக்கூடிய வகையிலே, மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் ஆறாயிரம் ரூபாய் வழங்குவதை நாங்கள் வரவேற்கின்றோம்.

பிற்பகல் 1–10

அதுபோன்று, இலவச கேஸ் அடுப்புகள். இப்படிப்பட்ட நல்ல திட்டங்களை வரவேற்கின்ற இந்த நேரத்தில், திருமண உதவித் திட்டத்தில் விதவைப் பெண்கள், விதவைப் பெண்களுடைய மகள் திருமண உதவித் திட்டத்தை இங்கே அறிவித்திருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அதே சமயத்தில் அதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. மகன் இருக்கக்கூடாது, வீடு இருக்கக்கூடாது; இப்படிப்பட்ட சில பிரச்சினைகளால்,



உண்மையிலேயே கிடைக்கக்கூடியவர்கள் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். எனவே, அந்த மாதிரியான விதிகளையெல்லாம் கொஞ்சம் தளர்த்தி, விதவைப் பெண்கள், அவர்களுடைய மகள் திருமணத்திற்கான உதவியை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, கணவனால் கைவிடப்பட்ட பெண்களுடைய மகளுக்கும் அந்தத் திருமண உதவித் திட்டத்தில் இடம் தர வழிவகுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, கலப்புத் திருமணம் செய்துகொள்கின்ற தம்பதிகளுக்கு, முழுப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். பல்வேறு இடங்களில் பல்வேறு விதமான சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன. எனவே, கலப்புத் திருமணத் தம்பதிகளை ஆதரித்து அவர்களுக்குப் பரிசு வழங்குகின்ற இந்த அரசு, அவர்களுக்கு உரிய முறையில், சட்டபூர்வமான முறையில் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, அவர்களுக்கு அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை வழங்க வேண்டுமென்பதையும் இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுக் கூறுகின்றேன்.

ஆதரவற்ற பெண்களுக்கு திருமண உதவித் தொகை பத்தாயிரம் ரூபாய் என்று அறிவித்திருக்கிறார்கள். முற்றிலுமே எந்தவித ஆதரவும் இல்லாத அந்தப் பெண்களுக்கு ரூபாய் பத்தாயிரம் என்று அறிவித்திருப்பதை, ரூபாய் பதினைந்தாயிரமாக உயர்த்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பெண்களுக்கான சேவை இல்லங்களை அதிகப்படுத்த வேண்டும். ஒரு சில மாவட்டங்களில்தான் இருக்கின்றன. அவற்றைத் தமிழகம் முழுவதும் அதிகப்படுத்தி, அனாதைப் பெண்கள், சேவை மனப்பான்மையில் இருக்கின்ற பெண்களெல்லாம் ஆதரவு கொடுக்கக்கூடிய வகையிலே ஆதரித்து, சேவை இல்லங்களை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோன்று, குழந்தை சம்பந்தப்பட்ட பிரச்சினைகள். குழந்தை உழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பேசுகின்றபோது, இன்றைக்குப் பிறப்பிலேயே பெண் குழந்தை வேண்டாம் என்ற நிலை அதிகரித்து, பெண்ணுடைய பிறப்பு விகிதாச்சாரம் என்பது மிகவும் குறைந்து வருகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று

சொன்னால், மருத்துவமனைக்குச் சென்றாலே, வாவா, செலவா என்று— அங்கே வேலை செய்கிறவர்கள், பணியாற்றுகின்றவர்கள், பிறப்பது வாவா, செலவா என்று கேட்கக்கூடிய நிலை இன்றைக்கு உருவாகிவிட்டது. ஆண் குழந்தையா, பெண் குழந்தையா என்று கேட்பதற்குப் பதிலாக, வரவா, செலவா என்று கேட்கக்கூடிய நிலை உருவாகியிருக்கிறது. வரவு என்றால் ஆண் குழந்தை, செலவு என்றால் பெண் குழந்தை. அதற்கேற்ப, வரவாக இருந்தால், அதற்கு ஒரு பணம், அதாவது வாங்கக்கூடிய பணம். அதேபோன்று செலவாக இருந்தால், அதற்குரிய தொகை இவ்வளவு என்று நிர்ணயிக்கக்கூடிய நிலை எல்லாம் இன்றைக்கு வளர்ந்திருக்கிறது. எனவே, ஆணா, பெண்ணா என்று கண்டறியக்கூடிய அந்த நவீனக் கருவிகளைப் பயன்படுத்தி, கருவிலேயே கலைக்கப்படுகின்ற இந்த நிலைமைகளை முற்றிலும் ஒழிக்க அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு, இன்றைக்கு சத்துணவு அங்கன்வாடிப் பணியாளர்கள் பற்றிய பிரச்சினைகளை இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். குறிப்பாக, சத்துணவு அங்கன்வாடியில் பணிபுரிகின்றவர்கள், ஒரு பெண் கருவுற்றது முதல், அந்தக் குழந்தையை ஈன்று, அதற்குப் பிறகு அந்தக் குழந்தையை வளர்த்து, அதுவும் இன்றும் வளரும் மகளிர் என்ற முறையிலே, அவர்களை வளர்த்து முடிக்கிற வரையில் அவர்கள் தொடர்ந்து சேவை செய்யக்கூடிய சேவையாளர்களாக, ஒரு சேவை மனப்பான்மை மிக்கவர்களாக இருக்கிறார்கள். எனவே, அதிலே அப்படிப்பட்ட அந்தப் பொறுப்பிலே பணியாற்றுகின்றவர்கள், கிட்டத்தட்ட 20 ஆண்டு காலம், 25 ஆண்டு காலம் ஒரே பணியை, எந்தப் பதவி உயர்வும் இல்லாமலும், ஊதிய உயர்வு மற்றும் ஓய்வூதியம், இப்படிப்பட்ட எதுவுமே இல்லாமல் தொடர்ச்சியாக அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலே, சத்துணவு மையத்திலே பணிபுரிகின்றவர்கள், ஆசிரியர் பட்டயப் படிப்பு முடித்திருந்தால், அவர்களுக்கு ஆசிரியர் பணி கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதே சமயத்தில் அப்படி ஆசிரியர் பட்டயப் படிப்பு முடித்தவர்கள் அந்த அமைப்பிலே பணியாற்றவில்லை, இருக்கவில்லை என்று ஒரு கணக்கு, புள்ளிவிவரம் தருகிறது. படித்தவர்கள், பட்டதாரிகள் எல்லாம் அதிகமாக இருக்கின்றார்கள். அப்படிப் படித்த பட்டதாரிகள் பல்வேறு தொழில்களில், தொழிற்துறைகளில், அங்கே இருக்கின்ற வேலைவாய்ப்பிற்குத்



தகுந்தாற்போல பணியில் அமர்த்தப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அதுபோன்றுதான், அங்கன்வாடியிலும் படித்த பட்டதாரிகளெல்லாம் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் பதவி உயர்வு கொடுக்க வேண்டும். 20, 25 ஆண்டு காலமாகப் பணியாற்றுகின்றவர்கள், 10 ஆண்டு காலமாக அதே சத்துணவு மையத்தில் பணியாற்றுகின்றவர்கள்— அந்த 20 ஆண்டு காலமாக பணியாற்றுகின்றவர்களுக்கும், 10 ஆண்டு காலமாகப் பணியாற்றுகின்றவர்களுக்கும் ஒரே ஊதியம்தான் வழங்கப்படுகிறது. எனவே, அவர்களுக்கு ஊதிய உயர்வு என்பது கிடைக்கவில்லை. அதேபோன்று, இன்றும் அதிலே பணிபுரிகின்ற தொழிலாளிகள், சமையலாளர், உதவியாளர், ஆகியோருக்கும் சமமான ஊதியம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-15

அவர்கள் காலை 7-00 மணி முதல் மாலை 4-30 மணி வரை பணியாற்றுகிறார்கள். அந்தப் பணி நேரத்தைச் சிறிது மாற்றியமைக்க வேண்டும். காலை 9-00 மணியிலிருந்து மாலை 4-30 மணி வரையில் என அந்தப் பணி நேரத்தை மாற்றிக் கொடுக்க வேண்டும். காரணம், காலை எழுந்தவுடனேயே அவர்கள் அந்தப் பணிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட நேரம் அவர்களுக்குச் சரியாக அமையவில்லை. இப்படி வேலை செய்கின்றவர்களுக்குத்தான் நிறையப் பிரச்சினைகள் இருக்கின்றன. எனவே, இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதோடு, வசதி படைத்தவர்கள் படிக்க வேண்டிய L.K.G., U.K.G. போன்ற அந்தப் படிப்பை, இவர்கள் மழலையர் பள்ளி என்று சொல்வதுபோன்று, அந்தக் குழந்தைகளுக்குப் பாடம் நடத்திக் கொடுக்கிறார்கள். எனவே, அந்த முறையில் அவர்கள் service-ஐக் கணக்கில் எடுத்துக்கொண்டு, அவர்களை அந்த ஆரம்பப் பள்ளிகளில் 1-வது, 2-வது வகுப்பு ஆசிரியர்களாகப் போடலாம் என்ற கருத்தை இந்த நேரத்திலே நான் வலியுறுத்துகிறேன்.

அதேபோன்று, இன்னும் பல்வேறு பிரச்சினைகள்; அவர்களுக்கு கேஸ் அடுப்பு வழங்க வேண்டும்; அதை நான் வரவேற்கிறேன். கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோன்று, இந்தச் செலவுகள், பராமரிப்புச் செலவுகள் ரூ.50 என்பதை ரூ.100 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டும். காய்கறி விலை, மளிகை விலை போன்றவையெல்லாம் ஏறியிருப்பதால், ரூ.100 வரை உயர்த்த வேண்டும். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம். (குறுக்கீடு) சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திருமதி பி. பத்மாவதி:** சரி, கால்நடை பராமரிப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இருக்கின்றன. இருப்பினும், நேரத்தின் அருமை கருதி, வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி சொல்லி, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம். நிறைய நேரம் எடுக்கக்கூடாது. Time நிறைய ஆகிவிட்டது.

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சவலைக் குழந்தைகள். எங்களை நீங்கள் நிறையப் பேச அனுமதிக்க வேண்டும். சிறுபான்மையாக இருக்கின்ற காரணத்தினால், அனுமதி அளித்தாக வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றியும், கால்நடைத் துறை பற்றியும், பேச அனுமதியளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய குழந்தைகள் நாளைய தலைவர்கள். நம் நாட்டில் நல்ல குழந்தைகள் பராமரிப்புச் சேவை அமைந்தால் மட்டுமே, நம் நாட்டை நல்ல மனித வளம் உள்ள நாடாக மாற்ற முடியும். தமிழக முதல்வர் அவர்கள், தமிழக அமைச்சரவையிலே, மருத்துவப் படிப்பு முடித்த ஓர் உறுப்பினரை இந்தத் துறைக்கு அமைச்சராக்கி இருக்கிறார். ஒரு நல்ல திறமையான அதிகாரியை இந்தத் துறைக்கு இயக்குநராக ஆக்கியிருக்கிறார்.

எனனுடைய தொகுதியிலே கடந்த 10 ஆம் தேதி, சத்தியவாடி பள்ளிக்கூடத்திலே 900–க்கும் மேற்பட்ட குழந்தைகள் பல்லி விழுந்த, உணவை உட்கொண்டு, ஆபத்தான நிலையிலே விருத்தாசலம் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், எப்பொழுது பத்திரிகைகளைப் பார்த்தாலும், ஊடகங்களைப் பார்த்தாலும், இந்தப் பள்ளிகளிலே, பல்லி விழுந்த உணவைக் குழந்தைகள் உட்கொண்டார்கள். இதனால் வாந்தி, மயக்கம்



அனுமதிக்கப்பட்டார்கள் என்ற ஏற்பட்டு மருத்துவமனையிலே படித்துக்கொண்டிருக்கிறோம். செய்தியை நாம் தினந்தினம் அவர்களும், இந்தத் துறையைச் இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் முதல்வர் அவர்கள் சார்ந்த இயக்குநர் அவர்களும், நம்முடைய ஒரு முடிவு கட்ட வீற்றிருக்கின்ற அமைச்சரவையிலே இதற்கு நீங்கள் தாய்மார்கள், வேண்டும். குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்ட வாந்தி எடுக்காமல், தந்தைமார்கள் எல்லாம், நம்முடைய குழந்தைகள் அவல நிலை மயக்கம் போடாமல் திரும்புவார்களா என்று நினைக்கும் குறிப்பாக, கடந்த காலங்களிலே ஏற்பட்டுக்கொண்டிருந்தது. நான் சென்று என்னுடைய தொகுதியிலே இந்தச் சம்பவம் நடந்தபோது ஆய்வு பார்த்தேன். அங்கே பார்த்தால், அந்த அதிகாரிகளிடம் கூடம் செய்தபோது, பராமரிக்கப்பட்ட ஒரு நல்ல சமையல் வெளியிலே போவதற்குக்கூட, அங்கேயில்லை. அங்கே புகை எல்லாம் ஒரு சமையல் காற்று வெளியிலே போவதற்குக்கூட இடம் இல்லாமல் அந்த கூடம் கட்டித் தரப்பட்டுள்ளது. அந்தப் புகை எல்லாம், அங்கே பணியாற்றுகின்ற சமையல் கூடத்தைச் சுற்றிச் சுற்றி வருவதால், எல்லாம் சமையலை சமையல்காரர்கள், சத்துணவு அமைப்பாளர்கள் மரத்தடியிலே மரத்தடியில் செய்கின்ற அவல நிலை ஏற்பட்டு இருக்கிறது. அனலும் மேலே சமையல் செய்வதால், இந்த ஆவியும், நெருப்பு விஷமுள்ள போகின்றபோது, அந்த மரத்தில் இருக்கின்ற கொடிய இதையெல்லாம் பூச்சிகள் சமையலிலே தவறி விழுந்துவிடுகின்றன. அதிகாரி அமைச்சர் அவர்களும், இந்தத் துறையைச் சார்ந்த குறைகளைப் போக்க அவர்களும் உண்மையிலேயே கவனித்தால் இந்தக் தாய்மார்கள், இந்தச் முடியும்; நம்முடைய கிராமத்தில் வசிக்கின்ற ஆரோக்கியத்துடன் சத்துணவால் பயன் பெறும் குழந்தைகள் எல்லாம் வாழ முடியும்.

பிற்பகல் 1–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்தச் சமையல் கூடத்தை நவீன சமையல் கூடமாகக் [illegible] வேண்டும். குறிப்பாக, gas கூடங்களிலே, அடுப்புகளை உடனடியாக அந்தந்த சத்துணவுக் அமைக்க வேண்டும். படிப்படியாக, 3 அங்கன்வாடிகளிலே முடிக்கலாம் ஆண்டுகளிலே இதை முயற்சித்தால்கூட, இதைச் செய்து கூடத்தை என்ற ஒரு நம்பிக்கையிருக்கிறது. ஒரு சமையல் ஆயிரம் ரூபாய் நவீனப்படுத்த வேண்டுமென்றால், குறைந்தபட்சம் 20 செலவாகும் என்று அந்த அதிகாரிகள் அன்றைக்கு விருத்தாசலத்திலே தெரிவித்தார்கள்.

அதேபோன்று, காய்கறி வாங்குவதற்கும், தாளிக்கும் பொருள் வாங்குவதற்கும், விறகுகள் வாங்குவதற்கும், ஒரு குழந்தைக்கு இந்த அரசு 35 பைசா கொடுக்கிறது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே ஒரு முட்டை போட்டார்கள்; உங்கள் ஆட்சியிலே இரண்டு முட்டைகள் போடுகிறீர்கள். இந்த இரண்டு முட்டைகள் போடுவதற்கும் 35 பைசா; ஒரு முட்டை இருக்கும்போதும் 35 பைசா. ஆகவே, அந்தச் சத்துணவு அமைப்பாளர்கள், சமையல்காரர்கள் எப்படித் தரமான உணவை அந்தக் குழந்தைகளுக்கு வழங்க முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று, தரமான காய்கறிகளை அவர்கள் வாங்குவதில்லை. இரண்டு முட்டைகள் போடுகிறோம் என்று நம்முடைய அரசு அறிவிப்புச் செய்திருக்கிறது. அந்த முட்டைகளைப் பார்த்தால், அதைக் கொள்முதல் செய்யும்போது, சிறிய முட்டைகளாகவும், கெட்டுப் போன முட்டைகளாகவும் வருகின்றன. அங்கிருக்கின்ற மாணவ, மாணவிகளுக்குள், ஏறக்குறைய 10 சதவிகிதம் குழந்தைகளுக்கு அந்த முட்டைகள் போதாமல் போகின்றன. இதை நம்முடைய அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சத்துணவு அமைப்பாளர்கள், சமையல்காரர்கள், உதவியாளர்கள் எல்லாம் எம்.ஏ., படித்தவர்களாகவும், பி.ஏ., படித்தவர்களாகவும், பட்டப் படிப்புப் படித்தவர்களாகவும் அந்தப் பதவியிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்றுத் துறையிலே வேலைவாய்ப்பு வரும்போது, அந்தச் சத்துணவு அமைப்பாளர்களையும், பணியாளர்களையும், நீங்கள் அந்த வேலையிலே அமர்த்துவதற்கு நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டும்.

அதேபோன்று, அரசு ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்கள் தமிழகத்திலே 25 இருக்கின்றன என்று கேள்விப்பட்டேன். சொந்தக் கட்டடங்களில் 10-ம், வாடகைக் கட்டடங்களில் 15-ம் இருப்பதாகத் தெரிவித்தார்கள். 25 கட்டடங்கள் இருக்கின்றன என்றால், மாவட்டத்திற்கு மாவட்டம் ஒரு வேறுபாடு இருப்பதாகக் கருதத் தோன்றும். ஆக, 31 மாவட்டங்களிலும் இந்தக் காப்பகங்களை அமைக்க வேண்டும். வாடகையில் உள்ள கட்டடங்களுக்குப் பதிலாக அரசு சொந்தமாகக் கட்டடங்கள் கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை உண்மையிலே செய்து முடித்தால், 31 மாவட்டங்களிலும் 3 ஆண்டுகளிலே கட்டி முடிக்கலாம்.



மூவலூர் இராமாமிர்தம் மூதாட்டியார் நினைவுத் திருமண உதவித் திட்டத்தை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் மீண்டும் கொண்டு வந்திருக்கிறார். இந்தத் திருமண உதவித் திட்டத்திற்கு 50 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதாக நான் அறிகிறேன். ரூ.50 கோடி என்றால், அந்தத் தொகையை 33,333 பேர்தான் பெற முடியும். ஆக, மீதியுள்ளவர்களுக்கு இந்த அரசு கொடுக்குமா, கொடுக்காதா? அல்லது மனுக்கள் வந்தால், அவற்றைப் பரிசீலிப்பார்களா, பரிசீலிக்கமாட்டார்களா? அப்படி அதிகமாக மனுக்கள் வரும்போது, அவற்றை எப்பொழுது பரிசீலிப்பார்கள் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் தெரியப்படுத்த வேண்டும். ஏனென்றால், இது ஒரு நல்ல திட்டம். இதற்கு ஏற்கெனவே கடந்த காலத்தில் முதலமைச்சர் அவர்கள் இருக்கும்போது, 60 கோடி ரூபாய், 80 கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறார். இந்த நிதிநிலை அறிக்கையிலே, வெறும் 50 கோடி ரூபாய் மட்டும்தான் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது

தமிழக அரசு கலப்புத் திருமண உதவித் திட்டத்தில், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் 20 ஆயிரம் ரூபாய் தரப்படுகிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரைப்படங்களிலே கதை, வசனங்களெல்லாம் எழுதியிருக்கிறார். கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற அவருடைய வசனங்களையெல்லாம் நாம் கேட்டிருக்கிறோம். ஆக, 20 ஆயிரம் ரூபாய் கொடுத்தால், இந்தச் சமூகத்திலே மாற்றம் வராது. சாதி, பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க, இந்த நிதியினை ரூ.20 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்த வேண்டும்.

சத்துணவில் வழங்கப்படும் முட்டைகளைத் தரம் பார்ப்பதற்காகச் சில ஆய்வாளர்களை நியமிக்க வேண்டும். 3,300 காலிப் பணியிடங்கள் இருப்பதாக நான் அறிகிறேன். அவற்றை உடனடியாக நிரப்ப வேண்டும்.

பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்கு, 2006-2007-ல் ரூ.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது பெண் சிசுக் கொலையைத் தடுக்கும் நோக்கம் கொண்ட திட்டம். இதனைத் தொடர்ந்து அரசு அமலாக்க வேண்டும். அரசுப் பணிகளில் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சதவிகிதம் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன; ஒரு சதவிகிதம் கண் பார்வை குறைந்தோர், ஒரு சதவிகிதம் காது கேட்கும் திறன் குறைந்தோர், ஒரு சதவிகிதம் மற்ற வகையைச் சார்ந்தவர்கள். ஆனால், கல்வித் துறையிலே இரண்டு சதவிகிதம் கண் பார்வையற்றவர்களுக்கும், ஒரு சதவிகிதம் மற்றவர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அப்படியே இந்தத் துறைகள் இதைச் செய்ய

வேண்டும். குழந்தைகள் நடு வீதிகளில் ஆங்காங்கே பிச்சையெடுக்கும் அவல நிலை தமிழகத்திலே ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. இந்தக் குழந்தைகளை எல்லாம் அடையாளம் கண்டு, அவர்களுடைய படிப்பிற்கான செலவுகளை உயர் கல்வி வரை நம்முடைய அரசு ஏற்க வேண்டும். அங்கன்வாடி மையங்கள் இல்லாத அனைத்துக் குடியிருப்புகளிலும், குறிப்பாக, ஆதி திராவிட மக்கள், பழங்குடி மக்கள், மலைவாழ் மக்கள் வசிக்கும் பகுதிகளில் நடப்பாண்டிலே அவற்றை ஏற்படுத்த வேண்டும்.

*பிற்பகல் 1–25*

அங்கன்வாடி மையங்களில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் இணை உணவு தரம் இல்லாத உணவாக இருக்கிறது என்று நாம் அறியப் பெறுகிறோம். ஆகவே, உடனே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இணை உணவைத் தரமான உணவாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஆதரவற்ற பிள்ளைகளாலும், உறவினர்களாலும் புறக்கணிக்கப்பட்ட முதியோர்களுக்கான இல்லங்களைத் தற்போது தொண்டு நிறுவனங்கள்தான் நடத்தி வருகின்றன. 16 முதியோர் இல்லங்களில் சுமார் 620 பேர் தங்கிட, மாநில அரசு மாதம் தலா ரூபாய் 500 வீதம் மானியமாக அளிக்கிறது. அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் முதியோரைப் பராமரிக்க அரசுகளே எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. தமிழ்நாடு அரசும் மாவட்டத்திற்கு ஒரு முதியோர் இல்லத்தை, நூறு பேர் தங்கிப் பயன் பெறும் வகையிலே தொடங்கிட வேண்டும். 60 விழுக்காடு குழந்தைகள் மட்டுமே ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பயனடைகிறார்கள். எனவே, உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, universalisation என்று, அனைத்துச் சிறு குழந்தைகளும் இந்தத் திட்டத்தில் பயனடையும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட வேண்டும்.

கால்நடை பராமரிப்புத் துறையிலே தாழ்த்தப்பட்டோர், பழங்குடி மக்களுக்கு reservation—இட ஒதுக்கீட்டிலே 67 உதவி மருத்துவர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. கடந்த ஆண்டுகளிலே அவை பூர்த்தி செய்யப்படாமல் இருக்கின்றன. தற்போது 250 கால்நடை உதவியாளர்களைத் தமிழ்நாடு தேர்வாணையத்தின்மூலமாக எடுக்கப் போவதாக அறிகிறோம். முதலில் இந்த 67 உதவி மருத்துவர்களை அமர்த்திவிட்டு, மீதி உள்ள இடங்களில் அந்த ஒதுக்கீட்டை அமல்படுத்த வேண்டும். ஏற்கெனவே துறைச் செயலாளர்மூலம் கடிதம் அனுப்பப்பட்டதாக அறியப்படுகிறது. அனைத்து ஊராட்சி



ஒன்றியங்களிலும் நடமாடும் கால்நடை மருத்துவமனைகளைத் திறக்க வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சமூக நலத் துறை அமைச்சர் அவர்களும், அதிகாரிகளும் நான் பேசிய, நான் சொன்ன கோரிக்கைகளைக் கண்டிப்பாக நிறைவேற்றுவார்கள் என்று நம்பி, விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம். ஐந்து நிமிடங்கள்தான்.

***திரு. எம்.ஆர். சுந்தரம்:** மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் ஒரு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதிக்கு சர்க்கரை ஆலை வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என்னுடைய மாவட்டத் தலைவரும், வேளாண்மைத் துறை அமைச்சருமான மரியாதைக்குரிய வீரபாண்டியார் அவர்களுக்கும் என் சார்பாகவும், என் தொகுதியினுடைய வாக்காளர்களின் சார்பாகவும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் கால்நடை பராமரிப்புத் துறையிலும், சத்துணவுத் துறையிலும், சமூக நலத் துறையிலும் பேச அனுமதி வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களது கட்சியினுடைய தலைவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை ஆரம்பிக்கின்றேன்.

தமிழகத்தில் தற்போது கால்நடைகள் அதிக அளவில் பெருகி வளர்ச்சி அடைந்துள்ளன. சிந்து, ஜெர்சி போன்ற அதிகம் பால் கொடுக்கும் மாடுகள் அதிக அளவில் வளர்க்கப்படுகின்றன. சேலம், ஈரோடு மாவட்டங்களிலும், குறிப்பாக ஆத்தூரில் பல இடங்களிலும் மாட்டுப் பண்ணைகள் சிறப்பாகத் தனியார்களால் நடத்தப்படுகின்றன. மேலும், சிறு விவசாயிகள், தாழ்த்தப்பட்ட மக்கள், ஏழை எளிய மக்கள் இதனைத் தங்களது குடும்பத் தொழிலாகவும் செய்து வருகின்றனர்.

பெருகி வரும் கால்நடைகளின் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், பால் உற்பத்தித் தொழிலை வளப்படுத்தவும் அரசு அவர்களுக்குக் கூடுதலாகப் பல உதவிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தற்போது கால்நடை இனப்பெருக்கத்திற்காகக் கால்நடை மருத்துவமனைகளிலும், பால் சேகரிக்கும் நிலையங்களிலும் மட்டுமே இனப்பெருக்க ஊசிகள் போடப்படுகின்றன. மக்கள் நெருக்கமாக உள்ள சில இடங்களில்

மருத்துவமனைகளிலும், பால் சேகரிப்பு நிலையங்களிலும் இனப்பெருக்க ஊசிகள் போடப்படுகின்றன. அதே சமயத்தில், கால்நடைகளை அப்பகுதிகளுக்குக் கொண்டு செல்லும்போது பல விபத்துக்கள் நேரிடுகின்றன. ஆகவே, அண்டை மாநிலத்தில் உள்ளதுபோல் நமது மாநிலத்திலும் நடமாடும் கால்நடை மருத்துவமனை ஒன்றை ஒவ்வொரு தாலுகா வாரியாகவும் ஏற்படுத்தி, கால்நடை வளர்ப்போருக்கு உதவ வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 1-30

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல் பால் சேகரிப்பு நிலையம் பல இடங்களில் நீண்ட தூரங்களில் அமைந்துள்ளது. இது விவசாயிகளுக்குக் கால விரயத்தை ஏற்படுத்தி வருகின்றது. பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி, 25 பேருக்கு ஓர் இடம் என்ற அளவில் பால் சேகரிப்பு நிலையங்களைக் கூடுதலாக அமைக்கலாம் என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

கால்நடைகளால் கிடைக்கும் மாட்டுச் சாணம் விவசாய உரமாகவும், சாண எரிவாயுவாகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், இந்த எரிவாயு உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு முதலீடு செய்ய சிறு விவசாயிகள் மற்றும் ஏழைகளால் முடிவதில்லை. எரிவாயு தயாரிக்கப்பட்ட பின் வெளிவரும் மாட்டுச் சாணம் அதிக வீரிய சக்தி வாய்ந்த விவசாய உரமாகப் பயன்படுகின்றது எனவே, இத்தகைய எரிவாயுத் தயாரிப்புச் செலவிற்கு விவசாயிகளை ஊக்கப்படுத்தும் வகையில், அரசு முழு மானிய நிதியுதவி வழங்கி, மண்வளம் காக்க, கலப்பில்லாத நல்ல தரமான விவசாய உரம் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் பகுதியிலும், ஆத்தூர் வட்டாரத்திலும் பால் உற்பத்தி மிகவும் கூடுதலாகச் செய்யப்படுகின்றது. நாளொன்றிற்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகின்றது. இதனைக் கருத்தில் கொண்டு, ஆத்தூர் தொகுதியில் பால் பவுடர் மற்றும் பிற உபபொருட்கள்



உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக உள்ளது. தமிழகத்தில் தொழில் வளர்ச்சி, தொழிற்சாலை வளர்ச்சி, முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் காலத்தில்தான் எப்பொழுதும் சிறப்பாக அமைந்திருக்கின்றது என்பது தமிழகமே ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாகும். எனவே, விவசாயிகளின் வேதனையைத் தீர்க்க, தலைவர் அவர்கள் ஆத்தூர் தொகுதியின் வளர்ச்சிக்காக ஆத்தூரில் பால் பவுடர் மற்றும் பாலிலிருந்து உபபொருட்கள் உற்பத்தி செய்திடும் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்திட வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூர் ஒன்றியம், அம்மம்பாளையம் ஊராட்சி, தேசிய நெடுஞ்சாலை அருகில் அமைந்துள்ள பால் குளிரூட்டும் நிலையத்தில் நாளொன்றுக்கு 1 இலட்சத்து 30 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. பால் குளிரூட்டும் நிலையத்தில் பாலைச் சேமித்து வைக்கக்கூடிய அளவிற்குப் போதுமான வசதியில்லை. அது மாதிரி உள்ள பால் குளிரூட்டும் நிலையங்களுக்கு அதிகக் கொள்ளளவு கொண்ட நிலையம் அமைக்க வேண்டுகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதால், எனக்குத் தெரிந்த சில வேண்டுகோள்களை மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் வைக்க விரும்புகின்றேன். தமிழக மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றாகள். தற்போது சரியான மழையில்லாததால் விவசாயிகள் பால் தொழிலையே விரும்பிச் செய்து வருகின்றார்கள். அதன்படி, விவசாயிகள் பால் தொழிலை ஒரு இணைத் தொழிலாகச் செய்து வருவதால், தரமான கறவைகளை வாங்கிப் பராமரித்து வருகிறார்கள். பெரும்பாலான விவசாயிகள் சுமார் 5 கறவை மாடுகளுக்கு மேல் வைத்துள்ளதாலும், ஒரு கறவை மாடு சுமார் 10 லிட்டர் வரை கறப்பதாக உள்ளதாலும் சிரமம் ஏற்படுகின்றது. ஏனென்றால், இந்தப் பாலைக் கறப்பது பெரும்பாலும் தாய்மார்கள். அதனால் இந்தப் பாலைக் கறப்பதற்கு, நமது அரசு மானிய விலையில் இயந்திரம் வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

விவசாயிகள் பெரும்பாலும் உயரினக் கலப்பினக் கறவைகளை வைத்திருப்பதாலும், அதிக அளவில் கறவைகள் வைத்திருப்பதாலும்...
(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** அதாவது, கால்நடைகளுக்குத் தரமான புல்லை வழங்க நமது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் புல்லைச் சிறு சிறு துண்டுகளாக வெட்டி, அந்த மாடுகளுக்கு நாம் வழங்கினால், easy ஆக ஜீரணமாகும். மாடுகளும் நன்கு பாலைக் கொடுக்கும் என்பதால், அதற்குத் தகுந்த machine—ஐ வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயரினக் கறவைகள் அதிக அளவில் பால் கறப்பதால், தாது உப்புக் குறைவின் காரணமாக நோய் தாக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுவதுடன், பாலின் தரமும் குறைய வாய்ப்புள்ளதால், தாது உப்புக் கலவையைக் கால்நடைத் துறைமூலம் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கினால், கறவைகளை நோயின்றிக் காப்பாற்ற முடியும். கறவைகள் சினை பிடிக்காமலிருப்பதைப் பெரிதும் தவிர்ப்பதால் பாலின் தரமும் உயர வாய்ப்புள்ளது. இதற்கு அரசு ஆவன செய்து, இலவசமாக வழங்க உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கேரளா போன்ற அண்டை மாநிலங்களில் பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களின் நலனைக் காக்க, உயர் ரக போயர் இன ஆடுகளை மானிய விலையில் வழங்கி, அவர்களின் நலன் காக்கப்பட்டுள்ளதுபோல், தமிழகத்திலும் பொருளாதாரத்தில் நலிவடைந்த விவசாயிகளின நலனைக் காக்க, போயர் இன உயர் ரக ஆடுகளை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு வழங்குவதன்மூலம், விவசாயிகளின் பொருளாதாரம் மேம்படும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம். அதேபோல், கிராமப்புறப் பொருளாதாரத்தையும், குழந்தைகளின் வளர்ச்சியையும் அதிகரிக்க, குழந்தைகளின் நலனில் அக்கறை கொண்டுள்ள அரசு, சத்துணவில் பாலையும் கலந்து குழந்தைகளுக்கு வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, கடந்த காலத்தில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு ரூபாய் சேர்த்து வழங்கப்பட்டது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி. (குறுக்கீடு) சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** முடித்துவிடுகிறேன். ஆனால், நுகர்வோருக்கு அந்தப் பால் விலையைக் கூட்டவில்லை. கூட்டாததன் காரணமாக, சேலம் மாவட்டத்தில் மட்டும் ஒரு நாளைக்கு ஒன்றரை இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுகின்றது. விவசாயிகளுக்குப் பால் பணம் 10 நாளைக்கு ஒரு முறை பட்டுவாடா செய்யப்பட வேணடும். அவர்கள விவசாயிகளுக்கு ஒரு ரூபாய் ஏற்றிக் கொடுத்தார்கள். ஆனால் ரூபாய் கொடுக்கவில்லை. அதைக் கடனாகவே வைத்துக்கொண்டு, மாதக் கணக்கில் அந்தப் பட்டுவாடா வழங்கப்படாமலிருக்கின்றது. நமது அரசு ஏழைகளின் குறைகளைத் தீர்க்கின்ற அரசாக உள்ளதால், பால் உற்பத்தியாளர்களுக்காக இந்தப் பணத்தை மானியமாகவோ அல்லது அரசே வழங்கியோ, 10 நாட்களுக்கு ஒரு முறை பால் பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெற்றுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி, five minutes.

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே உள்ளாட்சி அமைப்புகளிலும், நேற்றையதினத்திலிருந்து அறநிலையத் துறையிலும் பெண்களும் பணியாற்ற வேண்டும் என்று இட ஒதுக்கீட்டை உருவாக்கித் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அய்யா கலைஞர் அவர்களுக்கு மகளிர் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாய்மை, தூய்மை, நேர்மை, தாய்மை என்ற புனிதச் சொற்களை எல்லோரும் வாசித்து வரும் வேளையில், அதை முழுவதுமாய் வாழ்ந்து காட்டிய கலைஞரே, முத்தமிழ் அறிஞரே, உங்களை வணங்குகிறேன்.

வார்த்தைக்கும், வாழ்க்கைக்கும் வேறுபாடின்றி வாழ்ந்து சிறக்கும் கலைஞரே, சொல்வதைச் செய்து, செய்வதையே சொல்லி, இந்தியாவின் கலங்கரை விளக்கமாய்த் திகழும் முத்தமிழ் அறிஞரே, மனித நேயமே, தமிழ்க் கருவூலமே, உன் நா அசையும்போதும், உன் விரல் அசையும்போதும் தமிழ், தமிழர்களின் வாழ்வு வளம் பெறுகிறது.

பாலைவன மனமெல்லாம் சோலைவனமாய்ப் பூக்கச் செய்யும் சூத்திரதாரியே, நீ ஒட்டுமொத்தத் தமிழரின் தமிழ் ஆசான்.

*கற்புக் கண்ணகியையும் காத்து நின்றவரே,*
*வள்ளுவரை வான்முட்ட வைத்தவரே,*
*"பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான்*
*புவிபேணி வளர்த்திடும் ஈசன்"*

என்ற பாரதியை மறந்த இச்சமூகம், பெண்களைக் கட்டில் அறையிலும் சமையல் அறையிலும் வாசம் புரிய வைத்த நிலையை மாற்றி,

*'பட்டங்க ளாள்வதுஞ், சட்டங்கள் செய்வதும்*
*பாரினிற் பெண்கள் நிகழ்த்த வேண்டுமென்று'*

கருணையோடு சிந்தித்து, உள்ளாட்சி அமைப்புகளின் எல்லாப் பதவிகளிலும் பெண்களை அமரச் செய்து, மகுடம் சூடிய மகத்துவத்தை எப்படிச் சொல்ல! (மேசையைத் தட்டும் ஒலி)

மனுநீதிச் சோழன், சென்னை சென்ற கடந்த காலத்தில் உம் அடைக்கலம் புகுந்தோம். மதுரையம்பதியில் இறைவன், தானும் ஒரு புலவனாய் இருந்து தமிழ் ஆய்ந்ததும், பதினோராம் திருமறையில் திருமுகபாசுரம் அருளியதும், திருவாசகத்தைத் தாமே கைப்பட எழுதியதையும் மெய்யாக்க வேண்டி, திருமுறைகளைக் கருவறையில் ஒலிக்க அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்று திட்டம் வகுத்த தமிழ்க் கடவுளே, உமக்குக் கற்கோயில் கட்ட இயலாததனால், தமிழர்களின் உள்ளந்தோறும் சொற்கோயில் கட்டித் தொழுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் இம்மாமன்றத்திற்கு வருவதற்கு வாய்ப்பளித்த எங்கள் தலைவர் அய்யா முதல்வர் அவர்களுக்கும், எங்கள் நிதி அமைச்சர் அவர்களுக்கும், எங்கள் தமிழகத்தின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம், அண்ணன் தளபதி அவர்களுக்கும், எங்கள் உயர் கல்வித் துறை அமைச்சர் அண்ணன் மாவட்டச் செயலாளர் அவர்களுக்கும், சங்கராபுரம் தொகுதியில் என்னை வெற்றி பெறச் செய்யப் பாடுபட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணிப் பொறுப்பாளர் தோழர்களுக்கும், வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'By the people, for the people, of the people' என்ற மக்களாட்சித் தத்துவத்தின் மறுபதிப்பே! உங்கள் மக்கள் சேவைகளைப் பட்டியலிட என் வயிற்கும், வார்த்தைக்கும் வலிமையில்லை என்பதால், ஒரு சிலவற்றைத் தொட்டு வைக்கிறேன்.



கால்நடை, சமூக நலத் துறைகளின் மானியங்களில் சில கருத்துகளைச் சொல்ல விரும்புகின்றேன். சென்ற ஆட்சியில் உடல் ஊனமுற்றவர்கள் சான்று பெற வேண்டுமானால், மாவட்டத் தலைநகரிலுள்ள மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும். மருத்துவ அலுவலர்களான இணை இயக்குநர், முடநீக்கியியல் நிபுணர், காது, மூக்கு, தொண்டை நிபுணர், கண் மருத்துவர், இந்த ஐவர் கொண்ட குழுதான், கை போனவர்கள், கால் போனவர்கள், கண் தெரியாதவர்கள், ஊமை ஆகியவர்களுக்கு ஊனமுற்றோர் சான்று வழங்குவார்கள். இவர்கள் ஒன்றாகக் கூடி மாவட்டத் தலைநகரில் வழங்கும் நிலையும், இவர்களில் யாரேனும் ஒருவர் வராத நிலையில், அச்சான்று வழங்க முடியாத நிலையும், இதன் காரணமாக உடல் ஊனத்தோடு சென்று, இரண்டு ஊனத்தோடு வரும் அவல நிலையை மாற்றிட, எம்தம் கலைஞர் மக்களின் நாடி அறிந்த மாமனிதர், ஊனமுற்றோர் இடத்திற்கே சென்று சம்பந்தப்பட்ட அலுவலர் குழுவை ஒரு ஒன்றியத்திற்கு 4 மையங்களை அமைத்து, அவர்களுக்கு அங்கேயே கையெழுத்திட்டு உடல் ஊனமுற்றோர் சான்று வழங்குவது நம் கலைஞர் ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி)

திருமண உதவி. ஏழைப் பெண்களின் திருமண நிதி உதவியாக 18 வயது நிரம்பிய பெண்களுக்கு 1989 ஆம் ஆண்டு ரூ.5,000/– கொடுத்தார். இடையிலே வந்த பெண் முதல்வர் ஜெயலலிதா இத்திட்டத்தை நிறுத்திவிட்டார். மீண்டும் 1996 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்றபோது, நிறுத்தப்பட்ட ரூ.5,000/–ஐ ரூ.10,000/–ஆக உயர்த்தித் தந்தார். மீண்டும் இடையில் வந்த ஜெயலலிதா அரசு இத்திட்டத்தை நிறுத்திவிட்டது.

மீண்டும் 2006 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தவுடன், தேர்தல் அறிக்கையில் சொன்னபடி ரூ.10,000/–ஐ ரூ.15,000/–ஆக உயர்த்தித் தந்தவர் எங்கள் தலைவர் கலைஞர். (மேசையைத் தட்டும் ஒலி)

யாரோ ஒரு சிலர் பெண்களுக்குத் தரம் உயர்த்துபவர் நாங்கள்தான் என்று தம்பட்டம் அடிப்பது வேடிக்கையானது, வினோதமானது. (மேசையைத் தட்டும் ஒலி)

பெண்களுக்கு வாழ்வு கொடுப்பதும், வளம் சேர்ப்பதும் எங்கள் தலைவர் கலைஞர் அல்லவா! பள்ளி மாணவர்களுக்குப் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளில் முட்டை வழங்கி, கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து வழங்கும் திட்டத்தை எங்கள் தலைவர் கலைஞர் அறிவித்திருக்கிறார்.

பிற்பகல் 1-40

கால்நடை மானியக் கோரிக்கை—கிராமப்புற விவசாயிகளுக்கு உறுதுணையாக இருப்பதும், பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாய் இருப்பதும் கால்நடை வளர்ப்பே. இது அவர்களுக்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். ஆடு வளர்ப்பதும், மாடு வளர்ப்பதும், கோழி வளர்ப்பதும் ஆகிய இவை அனைத்தும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் பெரும் பங்கு வகிப்பது ஆகும். மாடுகளுக்கும், கன்றுகளுக்கும், தீவனங்களுக்கும் அரசுமூலமாக மானியம் வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடர் தீவனம் 50 கிலோ 350 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இவ்வளவு அதிக விலையைக் கொடுத்து விவசாயிகளால் வாங்க முடியாத நிலை உள்ளது. இந்த அடர் தீவனத்தைப் பால் மாட்டிற்கு வழங்கினால் பால் உற்பத்தி அதிகமாகும். ஆகவே, நம் கழக அரசு அடர் தீவனத்தை மானிய விலையில் வழங்க ஆவன செய்ய வேண்டும். அதேபோல், கலப்பினக் கன்று வளர்ப்புத் திட்டத்தில் கிடேரிக் கன்றுகளுக்கு மானிய விலையில் தீவனம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பச்சைப் புல் தீவனங்களாகிய கோ-1, கோ-2, கினிகிராஸ் சவுண்டல் விதைகளாக இருந்தாலும், கரணைகளாக இருந்தாலும், விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

கலப்பின முறையில் சினை ஊசி போடுகிறபோது கால்நடை மருத்துவமனைகளில் 15 ரூபாய் பணம் வசூலிக்கப்படுகிறது. இதில் பாதி விலை மானியமாகத் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாடுகளுக்குக் கருத்தரிக்காத நேரத்தில் கருப்பையைச் சுத்தம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அரசு கால்நடை மருத்துவமனைகளில் கருப்பை சுத்தம் செய்யும் மருந்தான லூக்காடீன் மிகக் குறைவான அளவே வழங்கப்பட்டு வருகிறது. ஆகையால், விவசாயிகளால் வெளிச் சந்தையில் அதிக விலைக்கு வாங்குகின்ற நிலை ஏற்படுகிறது. அதைச் சீர் செய்ய நமது கழக அரசு கூடுதலாய், தேவைக்குத் தகுந்த மருந்துகளை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொளகிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் நடமாடும் கால்நடை மருத்துவரை உருவாக்கித் தந்திட வேண்டும். அது, கால்நடை மருத்துவர் அந்தந்தக் கிராமத்திற்கு நேரிடையாகச் சென்று ஆடு, மாடு, கோழிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்குப் பயனாக அமையும்.



செல்லப் பிராணிகளான நாய், பூனை ஆகியவை நோயுறும்போது, மருத்துவமனைக்குச் சென்றால், அனுமதிக் கட்டணம் ரூபாய் ஐந்தும், சிகிச்சைக் கட்டணம் ரூபாய் ஐந்தும், தொடர்ந்து சென்றால், சிகிச்சைக் கட்டணம் ரூபாய் மூன்றும், அறுவை சிகிச்சை செய்தால் ரூபாய் 75-ம் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. இவையெல்லாவற்றையும் நம் தலைவர் கலைஞர் ஆட்சியில் வாயில்லா ஜீவன்களுக்கு இலவசமாய் வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

செல்லப் பிராணி நாய்க்கு, வெறி நோய்த் தடுப்பூசி, ஏ.ஆர்.வி., ரூபாய் 65 கொடுத்து வாங்கப்படுகிறது. இதை மானியத்தில் வழங்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு வட்டத்திலும் மருத்துவமனையின் தரத்தை உயர்த்தி எக்ஸ்ரே யூனிட்டும், ஸ்கேன் மற்றும் ஆப்பரேஷன் தியேட்டரும் உருவாக்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மாடுகளுக்கு வழங்கப்படும் தீவனங்களில் இரும்பு சம்பந்தப்பட்ட கம்பி, ஊசி, பால்ரஸ் போன்றவை மாடுகளின் வயிற்றுக்குள் சென்றுவிட்டால், கண்டறிய மருத்துவர்களால் முடியாமல் கால்நடைகள் இறக்க நேரிடுகின்றன. நாமக்கல், சென்னை, மதுரை போன்ற இடங்களில்தான் இந்த வசதி இருப்பதாக அறிகிறேன். ஏழையெளிய விவசாயிகள் இக்கால்நடைகளை நீண்ட தூரம் சென்று பரிசோதிக்க இயலாது. ஆகையால், எக்ஸ்ரே, ஸ்கேன், ஆப்பரேஷன் தியேட்டர் வசதிகள் செய்து தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை ஆய்வாளர் பயிற்சி மையங்கள் 5 ஆண்டுகளாக மூடிய நிலையில் உள்ளன. ஓசூர், ஒரத்தநாடு மாவட்டக் கால்நடை பயிற்சிப் பண்ணையில் இந்தப் பயிற்சி மையத்தை உருவாக்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

சப்-சென்டர்களில் செயற்கைக் கருவூட்டல், ஆண்மை நீக்கம் செய்தல், தடுப்பூசி போடுதல், சினை பரிசோதனை, கன்று ஆய்வு, குடற்புழு நீக்கம் என, கால்நடைகளுக்கு சிகிச்சையை அளிப்பதற்குக் கால்நடை ஆய்வாளர்கள் தேவைப்படுகிறார்கள். 15 முதல் 18 கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க இந்தக் கால்நடை ஆய்வாளர் பயிற்சி மையத்தைத் தந்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை ஆய்வாளர், நிலை 2—ல் உள்ளவர்கள் 20 ஆண்டு, 25 ஆண்டு பணியாற்றிய பின், நிலை 1 ஆக உயர்த்தப்படுகிறார்கள். இதற்குப் பிறகு முதுநிலை கால்நடை மேற்பார்வையாளராகப் பதவி இடங்களை அதிகப்படுத்த வேண்டும். VLS, 49 பேர் பணியாற்றுகின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நன்றி உரையை சொல்லி முடியுங்கள்.

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** இவற்றை SVLS—ஆக உயர்த்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

1989 ஆம் ஆண்டு கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, வெள்ளி விழா மாநாட்டில் இவர்களுக்கு ஆபத்து ஈட்டுப் படி 50 ரூபாய் வழங்கப்பட்டது. பாதிப் பேருக்கு வழங்கப்பட்டு, மீதமுள்ளவர்களுக்கு வழங்கப்படாத நிலை உள்ளது. அதை வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** எங்கள் விழுப்புரம் மாவட்டத்தில் சின்னசேலம் தொகுதியில் ஆட்டுப் பண்ணை உள்ளது. 1,800 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில் ஜமுனாபாரி ஆடுகள் 65, மேச்சேரி, செம்மறி ஆடுகள் 700, சென்னை சிவப்பு ஆடுகள் 125, வெண்பன்றிகள் 15 உள்ளன. 1,860 ஏக்கர் நிலப்பரப்பு உள்ள பண்ணையில், மிகக் குறைந்த அளவே உள்ளது. மேற்படி இன ஆடுகளை அதிகப்படுத்தித் தர வேண்டுகிறேன். இந்தப் பண்ணையில் தலைச்சேரி, கொடியாடு, கருப்புச் செம்மறியாடு போன்ற ஆட்டு வகைகளையும், ஜெர்சி, முர்ரா, போடி போன்ற மாட்டு வகைகளையும் பண்ணைக்கு இறக்குமதி செய்து, பண்ணையை விரிவாக்கம் செய்து, எங்கள் பகுதி மக்களுக்கு உதவிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வராயன் மலை, சேராப்பட்டு மலைப் பகுதிகள் என் தொகுதியில் உள்ளதால் நிறையக் கால்நடை வளர்ப்புகள் நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அங்கையற்கண்ணி, நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**செல்வி ஆ. அங்கையற்கண்ணி:** சங்கராபுரம், கள்ளக்குறிச்சி வட்ட மையங்களில் கால்நடை மருத்துவமனைகளில் எக்ஸ்ரே,



ஸ்கேன், ஆப்பரேஷன் தியேட்டர் போன்ற அனைத்து மருத்துவ வசதிகளும் வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன்.

சின்னசேலத்தில் இருப்பதுபோல், பால் குளிரூட்டும் நிலையம் சங்கராபுரத்தில் புதியதாக அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னை இம்மாமன்றத்தில் பேச வைத்த பேரவைத் தலைவருக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கி, முடிக்கிறேன். நன்றி, வணக்கம். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

பிற்பகல் 1—45

***திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சாதாரணக் குடும்பத்தில் பிறந்த எனக்கு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்ததற்கும், என்னை முதன்முறையாக 1996—ல் பரங்கிப்பேட்டை பேரூராட்சி மன்றத் தலைவராகவும், 2001—ல் மறு முறையும் பரங்கிப்பேட்டை பேரூராட்சி மன்றத் தலைவராகவும், கழகத்தில் என்னை மாவட்ட மகளிர் அணிச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் ஆக்கி, தற்பொழுது புவனகிரியின் சட்டமன்ற வேட்பாளராக என்னை நிறுத்தி, 14,823 வாக்குகள் வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்த எங்களின் இதய தெய்வம், தங்கத் தாரகை, புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இருக்கும் திசை நோக்கி வணங்கி என்னுடைய உரையைத் தொடங்குகிறேன். என்னைப் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்த புவனகிரி தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், எனது வெற்றிக்கு அரும்பாடுபட்ட கூட்டணிக் கட்சித் தோழர்களுக்கும், கழகச் சகோதரர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறைமீது என்னுடைய கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த சமூக நலத்தினுடைய திட்டங்கள் மட்டுமே நிறைவேறினால் இந்த மாநிலம் முழு வளர்ச்சி பெறும் என்பது எல்லோருடைய கருத்தாக இருக்க முடியும். மகளிர் மேம்பாடு,

குழந்தைகள் நலம், நலிவடைந்தோர் மற்றும் ஊனமுற்றோர் மேம்பாடு, வயதான முதியோர்களுக்கு ஆதரவு ஆகிய இலட்சியங்களை முன்னிறுத்தி இந்த சமூக நலத் துறை செயல்பட்டு வருகிறது.

அரசின் நிதிநிலை அறிக்கையிலே, முதியோர், கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற விதவைகள் மற்றும் ஊனமுற்றோர் போன்றவர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித் தொகை ரூ.200—லிருந்து ரூ.100 ஆக உயர்த்தித் தரப்படும் எனக் கூறியுள்ளீர்கள். இந்தத் திட்டத்தின்கீழ் ரூ.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அப்படிப் பார்த்தால், ஒரு தொகுதியில் 110 பேர்களுக்குத்தான் நிதி உதவி அளிக்க முடியும். இது போதாது. மேலும், தகுதியுள்ள நபர்கள் அனைவருக்கும் உரிய நேரத்தில் வழங்குமாறு இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்மூலம் அளிக்கப்படும் நிதியுதவி ரூ.10,000—லிருந்து ரூ.15,000 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று கூறியுள்ளீர்கள். விதவைகள், முதியோர் உதவித் தொகைத் திட்டங்கள்மூலம் தகுதியுள்ளவர்கள் மனுக் கொடுத்தும் பயனடைய முடியாது மக்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள். உனக்கு வீடு இருக்கிறது என்றும், பிள்ளைகள் இல்லாமல் இருந்தாலும், பிள்ளைகள் இருக்கிறது என்று கூறி, கையெழுத்துக்கள் போடாமல் லஞ்சம் பெற்றுக்கொண்டும், அவர்களுக்கு உதவித் தொகை கிடைக்காமல் அவதிக்குள்ளாகிறார்கள். வயதான தாய்மார்கள் ரூபாய் 10—க்கும், 5—க்கும் சிரமப்படுகின்ற சூழ்நிலையில், இந்தப் பணத்தைப் பெற எங்காவது கடன் பெற்றுக் கொடுத்தாலும், கடைசி வரை உதவித் தொகையைப் பெற முடியாத சூழ்நிலைதான் இருந்து வருகிறது. இந்த நிலை மாற வேண்டும். அனைவருக்கும் கிடைக்கும் வகையில் செய்யுமாறு இந்த அரசை வலியுறுத்துகிறேன். மேலும், ஊனமுற்றவர்களுக்கும் இந்த நிலைதான் நீடிக்கிறது. அவர்கள் ஊனமுற்றோர் அடையாள அட்டை வைத்திருந்தும், மனுக் கொடுத்தும் கிடைக்காத சூழ்நிலையில்தான் சிரமப்படுகிறார்கள்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் மனுக் கொடுப்பவர்கள், 40 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பம் செய்ய வேண்டுமென்று விதிமுறைகள் உள்ளன. இது தவறு. இப்பொழுதுள்ள பாமர மக்கள் 20 நாட்களுக்குள் திருமணத்தை முடித்து வைக்கிறார்கள். இந்த விதிமுறையைத் தளர்த்த வேண்டும். மேலும், தகுதியுள்ள, விண்ணப்பித்தவர்கள் அனைவருக்கும் கிடைக்கச்



செய்யுமாறு இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அரசால் நிதி ஒதுக்கப்பட்டு, குறிப்பிட்ட நபர்களுக்கு மட்டும் உதவித் தொகை வழங்கப்பட்டால், மற்றவர்கள் ஏமாந்து போவார்கள். இந்த நிலை மாற வேண்டும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் சிந்தனையில் உதித்த ஒப்பற்ற திட்டங்கள்தான் தொட்டில் குழந்தைத் திட்டம், பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) பெண் சிசுவதையை ஒழிப்பதற்காக அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்தினை அன்னை தெரசா அவர்கள், அம்மா அவர்களை நேரில் சந்தித்து, 'மகளே, நான் செய்ய நினைத்ததை நீ செய்திருக்கிறாய்' என்று மிக மிகழ்ச்சியோடு அம்மாவைப் பாராட்டிச் சென்றார்கள். தாயின் முகம் பார்க்காமல், தந்தையின் கரம் தொடாமல், அறுந்த தொப்புள் கொடியோடும், அழுது, அழுது சிவந்த கண்களோடும், குப்பை மேடுகளில் விழுந்து கிடந்த அனாதைப் பிள்ளைகளுக்குத் தொட்டில் குழந்தைத் திட்டம் கொண்டு வந்தாரே எங்கள் அம்மா, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மகத்தான மனித நேயத்தை உங்கள் மனம் பார்ப்பதற்கு மறுப்பதேன்? இது புரட்சி இல்லையா? பெண் சிசுக் கொலை என்ற காரணத்தால் மதிமுகம் பாராமல், மழலைச் சொல் கேளாமல், எத்தனையோ மாணிக்கங்கள் கள்ளிப் பாலையே கடைசிப் பாலாக அருந்தி, இந்த மண்ணுக்குள்ளே மடிந்து போன கொடுமை எங்கள் அம்மா அவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னமும் இந்தச் சமுதாயத்திலே பெண் குழந்தைகள் இரண்டாம்பட்சமாகவே கருதப்படுகிறார்கள். இந்த ஒப்பற்ற திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிடாமல் சீர்தூக்கிப் பார்த்து, சிறப்பாகச் செயல்படுத்தித் தருமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—50

மேலும், நிறையப் பெண்கள் ஆண் குழந்தை வேண்டும் என்கின்ற காரணத்தால் தனியார் மருத்துவமனைகளில் scan—ல் ஆணா, பெண்ணா என்று தெரிந்து, பெண்ணாக இருந்தால், 7 மாதமாக இருந்தாலும் அந்தக் கருவை அழித்து விடுகின்ற சூழ்நிலைதான் இன்றும் நிலவிக்கொண்டு இருக்கிறது.

"மாதர் தம்மை இழிவு செய்யு
மடமை யைக்கொ ளுத்துவோம்"

என்று பாரதி பாடினார். இன்று மாதரையே கொளுத்துகின்ற மடமையானது சமுதாயத்திலே வளர்ந்திருப்பது துரதிருஷ்டவசமானது.

காரணம், வறுமை, வரதட்சணைக் கொடுமை, பாலியல் கொடுமை, கற்பழிப்பு போன்ற சம்பவங்கள்தான். 10 வயது சிறுமியைப் பாலியல் பலாத்காரம் செய்து கொன்றுவிடுகிறார்கள் காமக் கொடூரர்கள். இந்தச் செயலையெல்லாம் கடுமையான தண்டனை கொடுத்து அடக்க வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாகக் கூறிக்கொள்கிறேன்.

வரதட்சணைக் கொடுமை: தங்கத்தின் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆனால் வரதட்சணை கேட்பவர்கள் குறைத்துக் கேட்பதில்லை. எத்தனை சவரன் போடுகிறீர்கள் என்றுதான் கேட்கிறார்கள். இந்த நிலை மாறுமா? எப்பொழுது இருந்தாலும் பெண்களுக்குத்தான் இந்தச் சூழ்நிலை உருவாகிறது.

தற்பொழுது பெண்கள் எளிதில் divorce கேட்டு வாங்கிவிடுகிறார்கள். காரணம், இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் வாழ முடியாத நிலைதான். நாங்கள் ஓட்டுக் கேட்டுச் சென்றபோது, பல பெண்கள் தங்கத்தின் விலையை முதலில் குறையுங்கள் என்றுதான் எங்களிடம் கேட்டார்கள். அவர்களுக்கு என்ன தெரியும், தங்கத்தின் விலையை யார் ஏற்றுகிறார்கள் என்று?

பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம். கிராமப்புறப் பெண்கள் மிகத் தெளிவாக இரண்டு பெண் குழந்தைகளுடன் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொள்கிறார்கள். காரணம், அம்மா அவர்கள் கொண்டு வந்த பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம். பெண் சிசுக் கொலையைத் தடுப்பதற்கும், ஆண் குழந்தைதான் வேண்டும் என்கிற எண்ணத்தை மாற்றவும், குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஊக்கமளிக்கக்கூடிய வகையில் இத்திட்டம் 1992–லேயே அம்மா அவர்களால் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பெண்கள் கட்டாயமாகக் கல்வி கற்க வேண்டுமென்கிற ஒரு விதியை உருவாக்கினார்கள். கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தை எங்கள் அம்மா கொண்டு வந்தார்கள் என்ற காரணத்திற்காகவே, இந்தத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட நிதியைக்கூட சரியான முறையிலே அந்தப் பெண் பிள்ளைகளுக்கு வழங்காமல், அந்தப் பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டத்தையே கவனிக்காமல் அப்படியே கிடப்பில் போட்டார்கள். அப்பொழுது வழங்கப்பட்ட தொகை, ஒரு பெண் குழந்தைக்கு 3,000 ரூபாய், இரண்டு பெண் குழந்தைகள் இருந்தால் தலா 1,500 ரூபாய் வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது, ஒரு ஒப்புக்காக, இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள்



மறுபடியும் முதலமைச்சராக வந்தவுடன், இத்திட்டத்தின் செயல்பாடுகளை முழுக்க, முழுக்க மாற்றி, 2001–லே அம்மா அவர்கள், ஒரு பெண் குழந்தை பிறந்து, ஆணோ, பெண்ணோ கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொண்டால், 22,200 ரூபாய், (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டு பெண் குழந்தைகள் பிறந்தால், தலா 15,200 ரூபாய் வீதம் வழங்க உத்தரவிட்டார்கள். பெண் குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். இந்தக் காரணத்தினால்தான், இந்த அரசு இத்திட்டத்தினைக் கிடப்பில் போட்டுவிடாமல் சிறப்பாகச் செயல்படுத்தித் தருமாறு இம்மன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நன்றி சொல்லி உரையை முடியுங்கள்

**திருமதி செல்வி ராமஜெயம்:** சமூகத்தில் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு இலவச வேட்டி, சேலை வழங்குகிறோம். தேர்தல் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு மீண்டும் இலவச வேட்டி, சேலைகளை உடனே வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஊனமுற்றவர்கள் மற்றும் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய 5 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அம்மாவின் ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப்பட்டது. அது செயல்பாட்டில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள் அம்மா, சீக்கிரம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** இந்த அரசு இரண்டு முட்டைகள் வழங்குவதாகக் கூறியுள்ளது. இரண்டு முட்டைகளை அழுகாத முட்டைகளாக அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், எங்கள் ஆட்சிக் காலத்தில் வழங்கிய புரதச் சத்து நிறைந்த பச்சைப் பயறு, கொண்டைக் கடலை, உருளைக்கிழங்கு போன்றவற்றைக் குழந்தைகளுக்குத் தொடர்ந்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்பொழுது வழங்கப்படும் உணவு, குழந்தைகளுக்குப் போதுமானதாக இல்லை. இந்த அளவை உயர்த்திக் கொடுக்குமாறு தங்களின் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள சத்துணவு மையங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் இல்லாமல் பல இடங்களில் மரத்தடியில் சமையல் செய்கிறார்கள். அவ்வாறு சமையல் செய்யும்போது பல்லி, பூரான்

போன்றவை உணவில் கலந்துவிடுகின்றன. இதனால் குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள். எல்லாச் சத்துணவு மையங்களுக்கும் உடனடியாகச் சத்துணவுக் கட்டடங்கள் கட்டித் தருமாறு இந்த அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

மேலும், என்னுடைய கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதியில் கடந்த 26–12–2004–ல் கடுமையான சுனாமியாலும், சென்ற ஆண்டு நிகழ்ந்த வெள்ளத்தினாலும் மிகவும் பாதிக்கப்பட்ட தொகுதியாகும். என்னுடைய தொகுதியில் மீனவ மக்களும், விவசாயப் பெருங்குடி மக்களும் மிகுந்த அவதிக்குள்ளானார்கள். புவனகிரி தொகுதி, பரங்கிப்பேட்டை, அண்ணன்கோவில் பகுதியில் ஆழிப் பேரலையால் மிகவும் பாதிக்கப்பட்ட இடமாகும். அண்ணன்கோவில் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தருமாறு இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், அண்ணன்கோவில் பகுதியில், வெள்ளாறு கடலில் கலக்கும் இடத்தில் மீனவர்கள் மீன் பிடிக்க முடியாதவாறு முகத்துவாரம் தூர்ந்துவிட்டது. அண்ணன்கோவில் பகுதியில் முகத்துவாரத்தைத் தூர் வாரித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, முழுக்குதுறை, எம்.ஜி.ஆர். திட்டுப் பகுதியில் வாழும் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாமல் சிரமப்படுகிறார்கள், அங்கேயும் முகத்துவாரத்தைத் தூர் வாரித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது.)

பிற்பகல் 1–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லுங்கள். (குறுக்கீடு) 3 தடவை bell அடித்துவிட்டேன். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள், நன்றி சொல்லி உரையை முடியுங்கள். அமைச்சர், உட்காருங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள். நன்றி சொல்லுங்கள்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** இம்மாமன்றத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின பதிலுரை.

***மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆரூர் அளித்திட்ட சோழன்–எங்கள்
அஞ்சுகத் தாய் பெற்றெடுத்த வீரன்–இந்தப்
பாருலகை ஆளுகின்ற வேந்தன்–எங்கள்
பைந்தமிழைக் காக்கின்ற தீரன்
ஊருலகம் வியக்கும் வண்ணம்–பல
வெற்றிகளைக் குவிக்கின்ற மாறன்–
யாருண்டு இவரை விட்டால் தமிழனுக்கு
யாண்டுக்கும் இவர்தானே நம் தலைவர்
அச்சத்திற் கிவரைக் கண்டால் அச்சம் வரும்
அன்றாடம் போர்க்களங்கள் இவருக்கு
இச்சையுடன் விரும்பும் ஒரு பொழுதுபோக்கு
எத்தனை கோணத்திலும் எதிரிகள்
நச்சரிப்புச் செய்தாலும் நாளெல்லாம்
அறிக்கைப் போர்! அக்கப்போர்! செய்தபோதும்
துச்சமென அதை நினைத்து, துயிலாது
தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக உழைப்பவரிவர்!

(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முத்தமிழ் அறிஞர், எங்கள் குடும்பத் தலைவர், தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என் முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். 5 ஆண்டுகளாக மாவட்ட ஊராட்சித் தலைவராகவும், மாவட்ட ஊராட்சி உறுப்பினராகவும் பணிபுரிய வாய்ப்பளித்து, இந்த முறை சட்டமன்ற உறுப்பினராகப் போட்டியிட வாய்ப்புக் கொடுத்து, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சராகப் பணியாற்றிட வாய்ப்பு அளித்துள்ள

முத்தமிழ் வித்தகர், எங்கள் குடும்பத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சிங்கமென்று முழங்கும் எங்கள் தங்கத் தலைவரின் புதல்வர், எங்களது வழிகாட்டி, நல்லாட்சி அமைந்திருக்கும் இவ்வேளையில் உள்ளாட்சித் துறை அமைச்சராக வீற்றிருக்கும் குறிஞ்சி மலர், (மேசையைத் தட்டும் ஒலி) நாளைய தமிழகத்தின் எழுஞாயிறு, எங்கள் தளபதியாருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு அவ்வப்போது நல்லாலோசனைகளை வழங்கி வரும் மாண்புமிகு நிதி அமைச்சர், இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க சட்டப் பேரவையில் உரையாற்றிட என்னைத் தேர்ந்தெடுத்து அனுப்பிய தூத்துக்குடி தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், எனது தந்தையார், தூத்துக்குடி திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர் திரு. என். பெரியசாமி அவர்களுக்கும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சார்ந்த இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் உள்ளிட்ட அனைத்துக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும், தோழர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

'தமிழன் தலைநிமிர்ந்து வாழத்தான், நான் தலைகுனிந்து எழுதுகிறேன்' என்று இன்றளவும் தமிழகத்தைத் தன் பேனா முனையினால் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் நமது முதல்வர் அவர்களின் அமைச்சரவையில் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள நான், மானியக் கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு சார்பான என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

கால்நடை பாராமரிப்பு மற்றும் வேளாண்மை ஆகிய இரு தொழில்களும் ஒன்றோடொன்று இணைந்த பொருளாதார அமைப்பாகத் திகழ்கின்றன. கால்நடை பராமரிப்பு கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதுடன், கிராமியப் பொருளாதாரத்திற்கும் புத்துயிரூட்டுகிறது. பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப புரதத் தேவையை பால், முட்டை மற்றும் இறைச்சி வடிவில் பூர்த்தி செய்வதில் கால்நடைகளின் பங்கு முத்திரை அளிப்பதாக உள்ளது.



மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தியாவில் எந்த மாநிலமும் சிந்திக்கும் முன்பே, தான் சிந்தித்து, கால்நடைச் செல்வங்களின் நலன் காக்க அறிவித்ததுதான் கால்நடை பாதுகாப்புத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டம் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில், 2000 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 18 ஆம் நாள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டது என்பதை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், திருநெல்வேலி மாவட்டம், திருவம்பலாபுரம மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான கால்நடை மருந்தகம் தொடங்க உத்தரவிட்டுள்ளார் என்பதை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநிலத்தில் கோழி வளர்ப்பு ஒரு முக்கியத் தொழிலாகும். இந்திய நாட்டின் மொத்த முட்டை உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. மாநிலத்தில் முட்டைத் தொழில் வளர்ச்சி கணிசமாக அதிகரித்தபோதிலும், அண்மையில் மகாராஷ்டிரா மற்றும குஜராத் மாநிலங்களைத் தாக்கிய பறவைக் காய்ச்சல் நோயினால் விவசாயிகள் பெரும் பாதிப்படைந்துள்ளனர். இதனால், கோழியினப் பொருட்களின் ஏற்றுமதி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. கோழி உற்பத்தியாளர்கள் இதனால் பெரிதும் நஷ்டமடைந்தனர். பறவைக் காய்ச்சல் நோய் நமது மாநிலத்தில் பாவாமல் இருக்க, அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இந்தியா பறவைக் காய்ச்சல் இல்லாத நாடாக மத்திய அரசால் 11—8—2006 அன்று அறிவிக்கப்பட்டது. இதனை கால்நடை சுகாதாரத்திற்கான பன்னாட்டு அமைப்பும் ஏற்றுக்கொண்டுவிட்டது. இதனால் தமிழ்நாட்டிலிருந்து கோழி மற்றும் முட்டை ஏற்றுமதிகள் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. எனினும், தமிழக அரசு பறவைக் காய்ச்சல் வராமல் இருக்கப் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வருகிறது. சத்துணவுத் திட்டத்தில் வாரம் இரண்டு முட்டை வழங்குவதன்மூலம் கோழி வளர்ப்புத் தொழில் ஊக்குவிக்கப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

பிற்பகல் 2—00

"சிக்குன்குன்யா" பற்றி சில தவறான வதந்திகளை, சில விவரம் அறியாதவர்கள் பரப்பிக்கொண்டுள்ளனர். இது குறித்த விளக்கத்தினை

இம்மாமன்றத்தில் தெரிவிப்பது எனது கடமையாகும். "சிக்குன்குன்யா" என்பது வைரஸ் நோய் தாக்கப்பட்ட கொசுக்கள், மனிதர்களைக் கடிப்பதனால் ஏற்படும் நோயாகும். இது பகல் நேரத்தில் கடிக்கும் கொசுவாகும். "சிக்குன்குன்யா" என்ற வார்த்தை கிழக்கு ஆப்பிரிக்காவில் வசிக்கும் ஸ்வாஹிலி (Swahili) மக்களால் உபயோகப்படுத்தப்படும் ஒரு வார்த்தையாகும். இதன் பொருள் "மடிந்துகொள்வது" என்பதாகும் இந்நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் கோழியைப்போல முடங்கிவிடுவதால், இதற்கு "சிக்குன்குன்யா" என்று பெயர் வந்தது. (சிரிப்பு) "சிக்குன்குன்யா" நோய்க்கும், கோழி முட்டைக்கும் எந்தவிதச் சம்பந்தமும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கோழி முட்டையினைப் பயமின்றி விரும்பிச் சாப்பிடலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (சிரிப்பு) இன்னும் சொல்லப் போனால், மைசூர்பாகுக்கும், மைசூருக்கும் உள்ள தொடர்பே "சிக்குன்குன்யா"விற்கும், சிக்கனுக்கும் உள்ள தொடர்பாகும். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) விவரம் தெரியாமல் இதுபோன்ற தவறான தகவல்களை வதந்திகளாகப் பரப்பி வருபவர்கள் இனிமேலாவது அறிக்கை வெளியிடுவதற்கு முன் ஆராய்ந்து, தெளிந்து அறிக்கை வெளியிட வேண்டும் என இம்மாமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இதுபோன்ற தவறான, உண்மைக்குப் புறம்பான தகவல்களால் தமிழகத்தில் உள்ள கோழி உற்பத்தியாளர்கள், முட்டை உற்பத்தியாளர்கள், மற்றும் விவசாயிகள் மிகவும் பாதிப்படைவார்கள் என்பதை மனதில் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் வட்டம், தாளவாடி கிராமத்தில் ஆந்த்ராக்ஸ் நோயினால் ஒரு யானை கடந்த 14–8–2006 அன்று இறந்துவிட்டதாக வந்த செய்தியையடுத்து, தாளவாடி கிராமத்தைச் சுற்றியுள்ள அனைத்துக் கிராமங்களிலும் உள்ள கால்நடைகளுக்கு ஆந்த்ராக்ஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது என்ற தகவலை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆந்த்ராக்ஸ் என்ற கொடிய நோய் தமிழகத்தில் நுழையாதபடி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் கால்நடை உற்பத்தியைப் பெருக்க, மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்போடு பல்வேறு திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைக்கு



2004–2005 மற்றும் 2005–2006 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 12 கோடியே 68 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் ஆகும். ஆனால், 31–3–2006 வரை 7 கோடியே 5 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாய் மட்டுமே கடந்த ஆட்சியால் செலவு செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 கோடியே 63 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய்க்குக் கழக அரசால் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தேசிய பசு மற்றும் எருமை இனப்பெருக்கத் திட்டத்தின்மூலம் தமிழ்நாட்டிலுள்ள கறவை மாடுகளின் தரத்தை உயர்த்தவும், செயற்கை முறைக் கருவூட்டல் எண்ணிக்கையை உயர்த்தும் வகையிலும், விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று செயற்கை முறைக் கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கென இத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 8 கோடியே 57 இலட்சம் ரூபாய் நிதியில், கடலோரப் பகுதியில் பழுதடைந்த 16 கால்நடை மருத்துவமனைக் கட்டடங்கள் சீரமைக்கப்படவும், 25 புதிய கால்நடை மருத்துவ நிலையங்கள் மற்றும் 70 கிளை நிலையங்கள் கட்டப்படவுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு, விரிவான வாழ்க்கை ஆதாரத் திட்டம் ஒன்றினை இத்துறை தயாரித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ், கால்நடை பராமரிப்பில் ஆர்வமுள்ள மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்களின் சுய உதவிக் குழுக்களுக்கு, சிறந்த கால்நடை பராமரிப்பு மற்றும் மேலாண்மை பற்றித் தீவிரப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவடைந்தவுடன், பயிற்சி பெற்றவர்களுக்குக் கறவை மாடுகள், வெள்ளாடுகள் மற்றும் கோழிகள் வழங்கப்படும். இதனால் மகளிர்களுக்கும், இளைஞர்களுக்கும் நிரந்தர வாழ்க்கை ஆதாரம் மற்றும் வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படுவதுடன், அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படவும் வழிவகுக்கும். இத்திட்டத்தில் 'ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியைக் கொண்டு, சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்டங்களில் 10,000 நபர்களும், கிராம வளர்ச்சி நிதியுதவியைக் கொண்டு மற்ற மாவட்டங்களில் உள்ள 20,000 உறுப்பினர்களும் பயனடைவர்.

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20 ஆம் நாள் முதல்வர் கலைஞர் அவர்களால் அமைக்கப்பட்டது. இது இந்தியாவிலே மட்டுமல்ல,

ஆசியாவிலேயே கால்நடை மருத்துவத்திற்கான முதல் பல்கலைக்கழக
என்ற பெருமையைப் பெற்றது. இந்தப் பெருமையை நட
தமிழகத்திற்குச் சேர்ப்பித்த பெருமை நமது தமிழக முதலமைச்ச
கலைஞர் அவர்களையே சாரும். இன்று இப்பல்கலைக்கழக
உள்கட்டமைப்பு வசதியிலும் சரி, ஆராய்ச்சியிலும் சரி, தொழில்நுட்ப
துறைகளிலும் சரி, நமது நாட்டிற்கே வழிகாட்டியாக இருக்கிறது
ஆராய்ச்சியாளர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், கால்நடை மருத்துவ
வல்லுநர்களுக்கும் இக்கால "நாலந்தா"வாகத் திகழ்கிறது.

பிற்பகல் 2-05

கால்நடை மருத்துவர்கள் திறனை மேம்படுத்திட
அமெரிக்காவிலுள்ள மிச்சிகன் ஸ்டேட் பல்கலைக்கழகமும், தமிழ்நாடு
கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகமும் இணைந்து
செயல்பட முடிவெடுத்துள்ளன. பல்கலைக்கழக அறிவியல் அறிஞர்கள்
மற்றும் மாணவர்கள் பரிமாற்றம், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி
திட்டங்களில் இணைந்து ஐந்து ஆண்டுகள் செயல்பட ஒப்பந்தம்
கையெழுத்திடப்பட்டுள்ளது.

ஆராய்ச்சிப் பணிகள்மூலம் கிடைக்கும் தொழில்நுட்பங்கள
விவசாயிகளை எளிதில் சென்றடைய பல்கலைக்கழகம், கால்நடைத்
துறை மற்றும் விவசாயப் பிரதிநிதிகளின் ஒருங்கிணைப்புக் கூட்டம்
இவ்வாண்டு முதல் மூன்று மாதங்களுக்கொரு முறை நடத்தப்படத்
திட்டமிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை பராமரிப்புத் துறை சம்பந்தமாக நடப்பு ஆண்டிற்கான
புதிய அறிவிப்புகளை தற்போது இம்மாமன்றத்தில் அறிவிக்க
விரும்புகிறேன்:

கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கால்நடைகள் அதிகளவு
பயனடைவதற்காக நடப்பாண்டில் குக்கிராமம் மற்றும் மலைப் பகுதிகளில்
கூடுதலாக 500 முகாம்கள் நடத்திட மாண்புமிகு தமிழக முதல்வர்
அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கால்நடைகளுக்கான நோய்களைக் கண்காணித்துக் கட்டுப்படுத்திட
நாகப்பட்டினம், கரூர், கிருஷ்ணகிரி மற்றும் விருதுநகர் ஆகிய
மாவட்டங்களில் 4 கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் 6
இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்திட முத்தமிழ் வித்தகர் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் அனுமதி அளித்துள்ளார்கள். (மேசையைத்
தட்டும் ஒலி)



குக்கிராமங்களில் வசிக்கும் விவசாயிகள் பயனடைவதற்காக 55
நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன.
இவற்றில் 12 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் கடந்த 5
ஆண்டுகளாகச் செயல்படவில்லை. அவற்றில் 6 கால்நடை மருத்துவப்
பிரிவுகளுக்கு வாகனங்கள் வாங்கவும் மற்றும் அனைத்து நடமாடும்
கால்நடை மருத்துவப் பிரிவுகளுக்கும் புதிய உபகரணங்கள் வாங்கவும்
40 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் நடப்பு ஆண்டில் செலவு செய்யப்பட
உள்ளது.

மண்டல இயக்குநர்கள் கண்காணிப்புப் பணிகளைச் சிறப்பாக
மேற்கொள்ளும் வகையில் இரண்டு மண்டல இணை இயக்குநர்களுக்கு
இரண்டு புதிய கார்கள் 9 இலட்சம் ரூபாயில் வாங்கப்பட உள்ளது.

நடப்பாண்டில் தாலுகா தலைமையிடங்களில் செயல்படும்
தொலைபேசி வசதியில்லாத கால்நடை மருத்துவ நிலையங்களின்
தகவல் தொடர்பு வசதிகளை வலுப்படுத்திட மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் 10 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் செல்போன்கள்
வழங்க உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தின்
ஆய்வுக் கூடத்தை வலுப்படுத்திட 38 இலட்சம் ரூபாய் செலவில் ஆய்வக
உபகரணங்கள் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
உத்தரவிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஓசூர் மற்றும் செட்டிநாட்டிலுள்ள மாவட்டக் கால்நடைப்
பண்ணைகளில், பசுந்தீவனம் பற்றாக்குறையாக உள்ள காலங்களில்
பயன்படுத்திட, சைலோ உரக்குழிகள் அமைக்க மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் 40 இலட்சம் ரூபாய் வழங்கி உத்தரவிட்டுள்ளார்கள்.
(மேசையைத் தட்டும் ஒலி)

மலைப் பகுதி மற்றும் குக்கிராமப் பகுதிகளில் செயல்படும்
200 கால்நடை மருத்துவக் கிளை நிலையங்களுக்குத் தேவையான
உபகரணங்கள் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
20 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளார்கள்.

நடப்பு நிதியாண்டில் புதியதாக 10 கால்நடை மருந்தகங்கள்
தொடங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நடப்பு நிதியாண்டில் அதேபோல் 30 கால்நடை கிளை நிலையங்கள் ஆரம்பித்திட முத்தமிழறிஞர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அனுமதித்துள்ளார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் கோழியின நோய் ஆய்வகம் கட்டுவதற்காக 18 இலட்சம் ரூபாய் வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

தென் மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் வருமானத்தையும், வாழ்க்கை ஆதாரத்தையும் உயர்த்திடும் நோக்கில் மரபின ஆடுகளின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவும் வகையில், 30 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் செலவில், திருநெல்வேலியில் ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை அமைத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கால்நடை பராமரிப்புத் துறையில் அரசு அலுவலர்களுக்குப் பதவி உயர்வு அளிக்கவும், காலியாக உள்ள பணியிடங்களை விரைவில் நிரப்பிடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின்மூலமாக 250 கால்நடை உதவி மருத்துவர்கள் விரைவில் பணி நியமனம் செய்யப்படுவார்கள் என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பறவைக் காய்ச்சல் பீதியால் பாதிக்கப்பட்டிருந்த தமிழகக் கோழிப் பண்ணையாளர்களின் துயர் துடைத்து, அவர்கள் பயன் பெறும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அரிய முயற்சிகளால், முதற்கட்டமாக 25,000 மெட்ரிக் டன் மக்காச்சோளத்தை மானிய விலையில் கோழித் தீவனத்திற்காக மத்திய அரசு தமிழகத்திற்கு வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை இழப்புகளால் ஏற்படும் இடர்ப்பாட்டிலிருந்து ஏழை, கிராமப்புற மக்களைப் பாதுகாத்திட ஒரு முன்னோடித் திட்டமாக மத்திய அரசு நிதி உதவியுடன் தேசிய கால்நடை காப்பீட்டுத் திட்டம் தமிழகத்தில் கோவை, ஈரோடு, சேலம், நாமக்கல் மற்றும் வேலூர் ஆகிய 5 மாவட்டங்களில் நடப்பாண்டில் செயல்படுத்தப்படவுள்ளது. இக்காப்பீட்டுத் திட்டத்தின்மூலம் ஒரு இலட்சம் கறவை மாடுகளும், எருமைகளும் பயன் பெறும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



இனப்பெருக்கக் கோளாறுகள் உள்ள கால்நடைகளை அடையாளம் கண்டு, ஆராய்ந்து சிகிச்சை மற்றும் தாது உப்புக்கள் வழங்கி, அவற்றின் மலட்டுத் தன்மையைப் போக்க, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் மூலமாக 770 சிறப்பு மலட்டு நீக்க முகாம்கள் நடத்திட 20 இலட்சத்து [illegible] ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

[illegible] 2–10

தேசிய பசு மற்றும் எருமை இனப்பெருக்கத் திட்டத்தின்மூலம் செயற்கை முறைக் கருவூட்டல் பணி மேற்கொள்ள, கிராமப்புற வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. முந்தைய அரசு அவர்களுக்குப் பயிற்சி அளித்ததோடு விட்டுவிட்டது. தற்போது பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குத் தொடக்கப் பணிக் காலத்தில் ரூபாய் 2,700 மதிப்புள்ள உபகரணங்கள் ஒரு முறை மானியமாக வழங்கப்பட உள்ளன. மாதம் ஒன்றுக்கு 75 செயற்கை முறைக் கருவூட்டல்கள் வீதம் தொடர்ந்து மூன்று மாதங்களுக்குச் செய்து வரும் பணியாளர்களுக்கு, வங்கியின்மூலம் இரண்டு சக்கர வாகனக் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்முகமையினால் இதுவரை பயிற்சி வழங்கப்பட்டுள்ள 501 நபர்களில் 159 நபர்கள் பெண்களாவர். ஆக, இதில் பெண்களின் பங்களிப்பு 32 சதவீதமாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளை ஏற்று கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தில் உணவு பதனிடும் தொழில்நுட்பவியலில் இளங்கலைப் பட்டப் படிப்பு (B.Tech.-Food Processing), செல்லப் பிராணிகள் பராமரிப்பிற்கான ஓராண்டு முதுகலைப் பட்டயப் படிப்பு (Post Graduate Diploma in Companion Animal Practice), மேலும், கால்நடை மருத்துவ நோயறி ஆய்வக முறைகள் பற்றிய ஓராண்டு முதுகலைப் பட்டயப் படிப்பு (Post Graduate Diploma in Veterinary Laboratory Diagnosis) ஆகிய பாடப் பிரிவுகள் இக்கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் கால்நடை பட்டப் படிப்பு முடித்து உள்ளுறைப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை ரூபாய் 1,150 என்பதை ரூ.500 உயர்த்தி, இனி மாதம் ஒன்றிக்கு ரூ.1,650 என வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை, அடையாறில், பி.எஸ். குமாரசாமி ராஜா சாலையில் செல்லப் பிராணிகள் சிகிச்சை நிலையம் ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**"சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் அரிது"**

என்ற அய்யன் வள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாக, உதாரணமாக வாழும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பாதையில், அவரது அறிவுரைகளின்படி தமிழக மக்களுக்கு எனது பணியைச் செவ்வனே செய்வேன் என்ற உறுதியை இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அரிய கருத்துகளை எடுத்துக் கூறியுள்ளீர்கள். உங்களுடைய மேலான கருத்துகளையும், ஆலோசனைகளையும் கவனத்தில் கொண்டு இத்துறை மேன்மேலும் சிறப்பான முறையில் செயல்பட தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள 223 வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறையின் மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடல் கூறுகளை ஆராய்ந்து பார்த்து மருத்துவம் செய்துகொண்டிருந்த என்னை, தனி மனிதர்களின் நோய் தீர்க்கும் பணி மகத்தான பணி என நான் நினைத்துக்கொண்டிருந்தபோது, வா என் அன்பு மகளே, இந்தச் சமுதாயத்தின் நோய் நாடி, நோய் முதல் நாடி, நாம் தீர்க்க வேண்டிய சமுதாயச் சீர்திருத்தங்கள், தந்தை பெரியாரின் பாதையில், நம்மை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணாவின் பாதையில் நாம் காண வேண்டிய சமதர்மச் சமுதாயப் பணிகள் இன்னும் ஏராளமாக உள்ளன. மருத்துவச் சேவையைப்போல் மக்கள் சேவையும் ஒரு சிறந்த பணி என எனக்குக் கோடிட்டுக் காட்டி, என்னை மட்டுமின்றி, இந்தப் பழம்பெருமை வாய்ந்த தமிழ்ச் சமுதாயத்தையே ஒரு மிகச் சிறப்பான, உன்னதமான பாதையில் அழைத்துச்



சரித்திரமாய் சென்றுகொண்டிருக்கும், சரித்திரம் படைத்துக்கொண்டே சரித்திரமாய் வாழ்ந்துகொண்டிருக்கும் சரித்திர நாயகரே, எத்தகைய சூழ்நிலையிலும் என்னையும், என் குடும்பத்தினரையும் ஏற்று அரவணைத்து, ஆதரவு அளித்து, எப்படி ஒரு கோழி தன் குஞ்சுகளைப் பாதுகாக்குமோ, அதேபோல, எங்களைப் பாதுகாத்து வரும் எங்கள் தாயுமானவரே, தந்தையுமானவரே. (மேசையைத் தட்டும் ஒலி)

**"மண்பதைக் காக்கும் தென்புலக் காவலர்**
**முன்னவர் பெருமையெல்லாம்**
**மன்னவர்க்கோ தென்னவருக்கே உரிமையாக்கும் மன்னவர்க்கோ**
**ஒரு மாமணியாய்ப் பிறந்து திருமாமணியாய் வளர்ந்து,**
**புகழ் மாமணியாய்ப் பிரகாசித்துக்கொண்டிருக்கும்**
**ஒளி ஞாயிறு"**

என என் அன்புத் தந்தை, உங்கள் அருமைத் தம்பி அருணா அவர்கள் புகழ்ந்து பாடிய ஒப்பற்ற தமிழினத் தலைவரே, முதலில் தங்களுக்கு என் பணிவான வணக்கத்தையும், நன்றியினையும் காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, தனக்கென தொகுதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், இங்கே வெற்றிப் புன்னகையோடு அமர்ந்திருக்கின்ற கழக உறுப்பினர்கள் மட்டுமல்ல, நம் தோழமைக் கட்சி உறுப்பினர்கள் உட்பட அனைவரின் தொகுதிகளிலும் அயராது சுற்றுப்பயணம் செய்து, வாக்குகளைச் சேகரித்து, எதிரிகள் வீசிய பொய்க் குற்றச்சாட்டுகளை, அவதூறுகளைத் தவிடுபொடியாக்கி, எங்கள் அனைவரின் வெற்றியினையும் உறுதி செய்த எங்கள் குடும்பத்தின் மூத்த தலைமகனே, எங்கள் உள்ளங்களில் மட்டுமல்ல, தமிழக மக்கள் ஒவ்வொருவரின் உள்ளங்களிலும் ஆட்சி செய்கின்ற மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் பாசமிகு அண்ணன் தளபதியார் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) தங்களுக்கும் என் பணிவான வணக்கத்தையும், நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயிர் கொடுக்கும் சின்னமான உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்து சட்டமன்றத்திற்கு அனுப்பி, அமைச்சராகும் அரிய வாய்ப்பினை எனக்கு ஏற்படுத்தித் தந்த ஆலங்குளம் தொகுதி மக்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—[illegible]

மக்கள் [illegible] மக்களின் [illegible] சிறிய [illegible] அவர்களை [illegible] வாழும் ஒவ்வொரு பச்சைத் தமிழனுக்கும் என் கோடானு கோடி நன்றியினை அவர்களின் பாத மலர்களில் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இது என் கன்னிப் பேச்சு. அகர முதல படிக்கும்போது, அவசரத்தில் தவறு ஏற்படுவது இயற்கைதான். அப்படி ஏதும் ஏற்பட்டால் என்னைப் பொறுத்துக்கொள்ளுமாறு அவையோரிடம் பணிவுடன் வேண்டுகிறேன்.

சமூக நலத் துறையின்கீழ் இந்த அரசு செய்துகொண்டு இருக்கும் சாதனைகளையும், செயல்படுத்தப்படும் திட்டங்களையும், பதிலுரையாக இந்த மாமன்றத்தில் விளக்க விரும்புகிறேன்:

பெண்களுக்குக் கல்வி அறிவைப் பெருக்கி, அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்றிடவும், தாய், தந்தை, தமக்கை, தமையன், தம்பி, தங்கை என நேசமான, பாசமான உறவுகளுக்கு வித்திட்டு, சமுதாயத்தின் அடித்தளத்தைப் பலப்படுத்தும் தொன்மையான, புனிதமான திருமண உறவை மேம்படுத்திடவும், 3—6—1989 அன்று, ஏழைப் பெண்களுக்காக, மூவலூர் இராமாமிர்தம் மூதாட்டியின் நினைவாக திருமண நிதியுதவித் திட்டம் நமது முதல்வரால் தொடங்கப்பட்டது. ஏழைப் பெண்களை வெகுவாகக் கவர்ந்திட்ட இத்திட்டத்தை 1—4—2002—ல், காரணமே இல்லாமல் முந்தைய அரசு நிறுத்தியது கொடுமையிலும் கொடுமை. மீண்டும் 3—6—2006 ஆம் நாள் இந்தத் திட்டத்தை நமது முதல்வர் அவர்கள் தொடங்கியது மட்டுமல்லாமல், உதவித் தொகையை ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.15 ஆயிரம் அளவிற்கு உயர்த்தி உள்ளார் என அவையோருக்குப் பெருமையுடன் நினைவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாண்டு இத்திட்டத்திற்காக ரூ.50 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, 33,333 பெண்கள் பயன் பெறுவார்கள்.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவைப் பெண்கள் திருமண நிதி உதவித் திட்டம், தமிழக அரசின் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம், கை, கால் ஊனமுற்றோர் மற்றும் காது கேளாதோர்,



திருமணம் செய்துகொள்ளும் கண் பார்வையற்றோர் ஆகியோரைத் திருமணம் நிதி உதவித் திட்டம் ஊனம் இல்லாத நபர்களுக்கு திருமண நிதி உதவித் திட்டங்களும் நமது போன்ற அனைத்துத் திருமண நிதி உதவித் திட்டங்களும் நமது முதல்வர் அவர்கள் ஆட்சிப் பீடத்தில் இருந்த காலங்களின்போதுதான் அறிமுகப்படுத்தப்பட்டன என இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டங்கள் அனைத்தும் புதுப் பொலிவுடன், உரிய பயனாளிகளுக்கு முழுமையாகப் பயன் அடையும்வண்ணம் நன்கு செயல்படுத்தப்படும். சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்திற்கு 1,20,99,000 ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஆதரவற்ற பெண்கள், விதவைகள் ஆகியோருக்குச் சேவை இல்லங்களின்மூலம் பாதுகாப்பளிப்பதற்கு நடப்பாண்டில் 2,62,18,000 ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஏழை விதவைத் தாய்மார்களின் மாணவச் செல்வங்கள் பயன் பெற 13,19,000 ரூபாய் மதிப்புள்ள பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் சுமார் 10,000 மாணவ, மாணவியர் பயன் பெறுகின்றனர். சமுதாயத்தில் ஆதரவற்றுப் பரிதவிக்கும் குழந்தைகளுக்கு உண்ண, உடுக்க, படிக்க, காத்திட இந்த அரசாங்கம் செயல்படுத்தி வரும் திட்டத்திற்கு 5,96,92,000 ரூபாயும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் காப்பகங்களுக்கு 3 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. பெண் குழந்தைகளை விரும்பி ஏற்று, சிறப்பாக வளர்க்கும் உணர்வை நமது சமுதாயம் பெற வேண்டும் என்பதற்காக, பெண் குழந்தைகளின் பாதுகாப்புத் திட்டத்திற்கு நடப்பாண்டில் 75 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

குற்றம் புரிந்த சிறுவர், சிறுமியர், இரவலர் ஆகியோருக்கு, ஒரு மனமாற்றம் பெற்று திருந்த வேண்டும் என்பதற்காக, சீர்திருத்தப் பள்ளிகளின்மூலம், ஏழைகளின் மறுவாழ்வு இல்லங்களின்மூலம், சேவை செய்வதில் தமிழகம் முன்னணியில் இருக்கிறது. இவர்களைப் பராமரிக்க 2,47,37,000 ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முதியோர் பாதுகாப்பில் முதன்மை மாநிலமாகத் திகழ்வது தமிழகம் ஆகும். தொண்டு நிறுவனங்கள் நடத்தும் முதியோர் இல்லங்களுக்கு மானியமாக 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

'அரிது, அரிது மானிடர் ஆதல்; மானிடர் ஆயினும்
கூன் குருடு செவிடு பேடு நீங்கிப் பிறத்தல் அரிது;'

என்ற வரிகளின் ஆழமான உண்மையைப் புரிந்துகொண்ட ஒரே தலைவர் நமது தமிழக முதல்வர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் மொத்தம் 10,12,197 ஊனமுற்றோர் உள்ளனர். ஆண்களில்தான் அதிக அளவு கை, கால் ஊனமுற்றோர் இருக்கின்றனர். ஒரு பெண் ஊனமுற்றவராக இருந்தால், அப்பெண்ணுக்குக் கல்வியறிவைப் பெற்றிடும் வாய்ப்பு, ஊனமுள்ள ஆணைவிட 10 மடங்கு குறைவாக உள்ளது. 75 சதவிகிதம் ஊனமுற்றவர்கள் கிராமங்களில்தான் வாழ்கின்றனர். ஆனால், பெருவாரியான தொண்டு நிறுவனங்கள் நகரப்புறங்களில்தான் உள்ளன. அதனால், இனி வருங்காலங்களில் ஊனமுற்றோரின் கல்வியறிவை வளர்த்திட, தொண்டு நிறுவனங்கள் கிராமங்களில் தொடங்கிட இந்த அரசாங்கம் ஊக்குவிக்கும். ஊனமுற்றோரின் வாழ்க்கையின் மேம்பாட்டிற்காகப் பலப்பல சிறப்பான திட்டங்களுக்கு 38,22,63,000 ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது.

பிற்பகல் 2—20

சிககன நடவடிக்கைகள் என்ற பெயரால் மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றை முந்தைய அரசாங்கம் தடை செய்தது. ஏன், வாரம் ஒரு முட்டை என்று குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட திட்டத்தைக்கூட முந்தைய அரசு நிறுத்தி வைத்தது. உணவுப் பொருட்களிலே அதிகப் புரதச் சத்துள்ள முட்டையின் முக்கியத்துவத்தை அறிந்து, ஊட்டச் சத்துக் குறைவில்லாத தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்று தொலைநோக்குப் பார்வையோடு கூடுதலாக ஒரு முட்டை வழங்கி, வாரம் 2 முட்டைத் திட்டத்தை அறிமுகப்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) ஆசியக் கண்டத்திலேயே மதிய உணவுத் திட்டத்தை ஒரு ஈடு இணையற்ற திட்டமாக மாற்றி, வளர்ந்த, முன்னேறிய நாடுகளுக்கு இணையாக உயர்த்திய பெருமை, தாயுள்ளம் கொண்ட நமது முதலமைச்சர், சமூக விஞ்ஞானி (Social Scientist) அவர்களையே சாரும்.

டெல்லி உச்ச நீதிமன்றம் குழந்தைகளுக்கு 300 கலோரி சக்தியும், 8—12 கிராம் புரதச் சத்துள்ள உணவும் குறைந்தபட்சம் 200 நாட்களுக்கு வழங்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கியுள்ளது. ஆனால், இந்தியாவில் தமிழகத்தில் மட்டும்தான் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் வருடத்தில் 365 நாட்களில் தினந்தோறும் 435 கலோரி சக்தியும், 10.6 கிராம் புரதச் சத்தும் கிடைக்கும் அளவிற்கு இந்தச் சத்துணவுத்



திட்டத்தை உயர்த்திய பெருமைக்குரியவர் நமது முதல்வர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டமானது, குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், வளரிளம் பெண்கள் ஆகிய 4 பிரிவினரைக் குறி வைத்து மத்திய அரசு உதவியுடன், வருகின்ற காலங்களில் இன்னும் சிறப்பாகச் செயல்படுத்தப் பல நடவடிக்கைகள் எடுக்கப்படும். தமிழகத்தில் சுமார் 55 லட்சம் வளரிளம் பெண்கள் எதிர்காலத்தில் மழலைச் செல்வங்களை உருவாக்கும் தாய்மார்கள் ஆவர். தாய், சேய் நலப் பணிகள் சிறக்கவும், சிசு மரணம், கர்ப்பிணிப் பெண்கள் மரண விழுக்காட்டைக் குறைக்கவும், அவர்களுக்கு விழிப்புணர்ச்சியையும், மன மாற்றத்தையும் ஏற்படுத்தவும், சுகாதாரக் கல்வியை அறிவுறுத்தவும் இவ்வாசு 'கிஷோரி சக்தி யோஜனா' என்ற திட்டத்தை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டத்தின்மூலம் களப் பணியாளர்களின் அறிவாற்றலையும், திறமையையும் ஊக்குவிக்கப் புதிய பயற்சிகளை மேற்கொள்ள 5 கோடியே 26 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

வளரிளம் பெண்களுக்கான தேசிய உணவுத் திட்டம் என்ற சிறப்பான திட்டத்தின்கீழ், எடை குறைந்த வளரிளம் பெண்களுக்கு மாதம் 6 கிலோ அரிசியை வழங்கி இராமநாதபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காகும் செலவினம் ரூ.4 கோடி ஆகும்.

ஊட்டச் சத்துக் குறைபாடு மற்றும் எடைக் குறைவுடன் பிறக்கும் குழந்தைகள் அதிகமாக இருக்கும் நாடு இந்திய நாடு என ஒரு உலக வங்கி கூறுகிறது. ஆதலால், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்மூலம் செயல்படும் அங்கன்வாடிகளின்மூலம் குழந்தைகளின் உடல் எடை, ஊட்டச் சத்து நிலை, முன் பருவக் கல்வி, சுகாதார நிலை ஆகியவற்றின் தரத்தை உயர்த்த இன்னும் சிறப்பாகச் செயல்படப் பல நடவடிக்கைகள் எடுக்கப்படும். இத்திட்டத்தின்கீழ் தற்போது இயங்கி வரும் 42 ஆயிரத்து 677 அங்கன்வாடிக் கட்டட மையங்கள் ஒரே சீராக இருப்பதற்கும், குடிநீர், மின்சாரம் போன்ற வசதிகளைப் படிப்படியாக ஏற்படுத்திடவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், இவ்வாண்டில் கூடுதலாக 3,049 புதிய அங்கன்வாடி மையங்கள் ஏற்படுத்த இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், அங்கன்வாடி மையங்களுக்கு மருந்து உபகரணப் படி 2 கோடியே 74 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

1982 ஆம் ஆண்டிலிருந்து பரிந்துரை செய்த மருந்து உபகரணங்களை மாற்றி, இவ்வருடத்திலிருந்து குழந்தைகளுக்குப் பயன்படும் வகையில் மருந்துகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த 2 ஆண்டுகளாக மருந்து உபகரணப் பெட்டிகளுக்கான நிதியை, சென்ற அரசாங்கம் பயன்படுத்தவே இல்லையெனக் கேட்டபோது வேதனை அடைந்தேன். உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, அறிவியல் திறன், மொழி வளர்ச்சி, சமூக அறிவு ஆகிய 5 வகையான வளர்ச்சிகளை ஒருங்கே பெறுவதற்கு முன்பருவக் கல்வி முறையை விளையாட்டுக்களின்மூலம் செயல்படுத்தத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும். விளையாட்டு முறைக் கல்வியை ஊக்குவிக்கும்பொருட்டு, விளையாட்டுப் பொருட்களைப் பெறுவதற்குத் தலா ரூ.2,000-ஐப் புதிய மையங்களுக்கு அரசாங்கம் வழங்குகிறது.

கருவுற்று, பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 3 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்குத் தரமான இணை உணவு கிடைத்திட, 6.5 கோடி ரூபாய் நடப்பு ஆண்டில் செலவிடப்படும். 1996—லிருந்து 2001 ஆம் ஆண்டு வரை நமது முதல்வர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஊட்டச் சத்துக் குறைபாடு இல்லாத குழந்தைகளின் சதவிகிதம் 34.32—லிருந்து 50 சதவிகிதம் அதிகம் ஆனது. சுமாராக 16 விழுக்காடு அதிகம். ஆனால், 2001—லிருந்து 2006 ஆம் ஆண்டு 50 சதவிகிதத்திலிருந்து 61 சதவிகிதமாகத்தான் அதிகரித்தது. சுமார் 11 விழுக்காடுதான் அதிகம். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தை நமது அரசுதான் மிகவும் சிறப்பாக நடத்தியது என்பதற்கு இதைவிடச் சிறந்த ஆதாரம் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) வருகின்ற காலங்களில் ஊட்டச் சத்துக் குறைபாடு இல்லாத நிலையை, தற்போதுள்ள 61.50 சதவிகிதத்தை, வளர்ந்துள்ள நாடுகளுக்கு இணையாக 90 சதவிகிதத்திற்கு உயர்த்துவதற்கு இவ்வரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும்.

ஏன் இந்தச் சிறு குழந்தைகளின்மேல் இத்தனை கரிசனம், இத்தனை அக்கறை, இத்தனை ஆயிரக்கணக்கான அங்கன்வாடி மையங்கள் எனச் சிலர் நினைக்கலாம். எப்படி ஒரு சிறிய விளக்கு பெரிய இருளை அகற்றுகிறதோ, எப்படி ஒரு சிறிய திறவுகோல் பெரிய மாளிகையைத் திறக்கிறதோ, எப்படி ஒரு சிறிய பொத்தானை அழுத்தினால் மிகப் பெரிய அரசியல் மாற்றங்கள் ஏற்படுகின்றனவோ, அதேபோலத்தான் இந்தச் சிறு குழந்தைகளின் சீரிய வளர்ச்சிதான் நாளை ஒரு மிகப் பெரிய வளமான தமிழகம் அமைவதற்கான அடித்தளம் என்பதால், (மேசையைத் தட்டும் ஒலி) இப்பச்சிளம் குழந்தைகள் ஊட்டச் சத்துக் குறைபாடு இல்லாமல், அவர்களின் உடல், மூளை நன்கு



வளர்ச்சியடைந்து, நோய்களின் தாக்கம் இல்லாமல், சிறப்பாகக் கல்வி கற்று, ஒரு சிறந்த தனி மனிதனாக மட்டும் வளர்ச்சி அடையாமல், ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்பவனாக உருவாக்க இந்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் அடித்தளமாக அமையும் எனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2—25

**புதிய அறிவிப்புகள்:** பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தாயாரின் நினைவாக 'சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்' (மேசையைத் தட்டும் ஒலி) என 2000 ஆம் ஆண்டில் பெயர் சூட்டிய பெருமை நமது முதல்வர் அவர்களையே சாரும். ஆனால், முந்தைய அரசாங்கத்திற்குப் பெருந்தலைவர் காமராஜர் மேல் என்ன வருத்தமோ, வெறுப்போ தெரியவில்லை. அந்தக் கர்ம வீரரின் நூற்றாண்டு விழாவைக்கூடச் சிறப்பாகக் கொண்டாடவில்லை. மேலும், சிவகாமி அம்மையாரின் பெயரையும் அகற்றி, 'பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்' என்று பெயர் மாற்றம் ஏற்பட்டது. தமிழகத்தில் கல்வி வளர்ச்சிக்குப் பாடுபட்ட பெருந்தலைவரின் அன்னையின் நினைவாக இவ்வரசு மீண்டும் இத்திட்டத்திற்கு, 'சிவகாமி அம்மையார் நினைவு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் (மேசையைத் தட்டும் ஒலி)' எனப் பெயர் சூட்டிச் செயல்பட வழிவகை செய்துள்ளது.

சத்துணவுத் திட்டத்தின் அமலாக்கத்தினை அறிவியல் அடிப்படையில் கண்காணித்து, அத்திட்டத்தைச் செவ்வனே செயல்படுத்திடும் வகையில், மாநிலத்தில் உள்ள அனைத்து ஒன்றியங்களையும், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களையும் இணைத்து, 20 இலட்சம் ரூபாய் செலவில் பரந்த அளவிலான ஒரு இணையதளம் ஏற்படுத்தப்படும்.

சமூக நலத் துறையால் நிறைவேற்றப்படும் பல்வேறு திட்டப் பணிகளின் முன்னேற்றம் மற்றும் செயல்பாட்டைக் கண்காணிக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் "பறக்கும் படைகள்"—Flying Squads அமைக்கப்படும்.

அரசு மற்றும் அரசு மானியம் பெறும் செவித் திறன் குறையுடைய மழலையருக்கான முன் பருவப் பள்ளிகளில் பணியாற்றும் முன் பருவப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பேச்சுப் பயிற்சியாளர்களுக்குப் புத்தறிவுப் பயிற்சிக்கு நடப்பாண்டில் 6.5 ஆயிரம் ரூபாய் அளிக்கப்படும்.

ஆண்டுதோறும் 25,000 செவித் திறன் குறைந்த குழந்தைகள் பிறக்கின்றன. அதாவது, ஆயிரம் குழந்தைகள் பிறந்தால், 4 குழந்தைகள் காது கேளாதோராகப் பிறக்கின்றனர். செவித் திறன் அற்ற குழந்தைகள் சுமார் 10—லிருந்து 20 சதவிகிதத்தினர்தான் பள்ளிகளுக்குச் செல்கிறார்கள். ஆனால், 12 வயதிற்குள் 50 சதவிகித மாணவ, மாணவியர் பள்ளிப் படிப்பை நிறுத்திவிடுகின்றனர் என்பது பரிதாபத்திற்குரியது. அதற்காக, செவித் திறன் குறையுடையோரை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து, பேசுவதற்குப் பயிற்சி அளித்து, மற்ற குழந்தைகள் பயிலும் Regular Schools—பள்ளிகளில் கற்பதற்காக அவர்களை ஊக்குவிக்கும் வகையில், 30 இலட்சம் ரூபாய் செலவில், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, திருவாரூர், சேலம், கன்னியாகுமரி, திருவள்ளூர், திண்டுக்கல் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் தலா ஒரு மையம் ஏற்படுத்தப்படும். இப்பயிற்சியின் சிறப்பு என்னவென்றால், விரைவாக, சிறிய வயதிலேயே இந்த வித்தியாசமான பயிற்சியை இக்குழந்தைகளுக்கு அளித்தால், காது கேளாதோர் பள்ளி போன்ற சிறப்புப் பள்ளிகளுக்குப் போக வேண்டிய அவசியமில்லை. ஆங்கிலத்தில் இதனை Inclusive Education என்பார்கள். இந்தப் பயிற்சியைப் பற்றி மேலும் அறிய வேண்டுமென்றால், அடையாறில் உள்ள Bala Vidhyalaya School for the Young Deaf Children என்ற பள்ளியைப் போய்ப் பாருங்கள். அவர்கள் பேசுவதைக் கேட்டால், அவர்கள் செவித் திறன் இல்லாதவர்கள் என்று நம்பவே முடியாது. அந்த அளவிற்கு இயல்பாகப் பேசுவார்கள். கல்வியிலும் சிறந்து விளங்குகின்றார்கள்.

இந்தியாவிலேயே முதன்முறையாக, சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரியில் செவித் திறன் குறைந்தோர் பயன் பெறும் வகையில் B.Com., B.C.A. பட்டப் படிப்பு தொடங்க அரசு ஆணையிட்டுள்ளது.

அரசு பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளிகளில் பிரெய்லி கணினி மூலம் பார்வையற்ற மாணவ, மாணவியர்களுக்கு 14 இலட்சத்து 66 ஆயிரம் ரூபாய் செலவில் பயிற்சி வழங்கப்படும்.

பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு வரையிலும் பயிலும் மாணவர்களுக்கு, பாடங்கள் பதிவு செய்யப்பட்ட ஒலிநாடாக்கள் (Cassettes) மற்றும் ஒலிநாடா இயக்கிகள் (Tape Recorders) வழங்கும் திட்டத்திற்கு ஒரு இலட்சத்து 83 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.



ஊனமுற்றோர் பற்றிய புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு, அவர்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்தும் வகையில், ஊனமுற்றோர் குறித்த தகவல் களஞ்சியம் (Database on disabled persons) 5 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

ஊனமுற்றோருக்கான தொலைபேசி உதவி மையம் (Helpline for Disabled persons) மொத்தம் 5 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுதும்போது, 'சொல்ல எழுதுபவர்களாகப்' (Scribe Assistant) பணியாற்றுபவர்களுக்கு, 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளை எழுதுவதற்கு, உதவித் தொகையாகப் பாடம் ஒன்றுக்கு 50 ரூபாய் வழங்கப்படும். ஆண்டொன்றுக்கு 75 ஆயிரம் ரூபாய் இதற்கெனச் செலவிடப்படும்.

ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் ஊனம் இல்லாதவர்களுக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை 10,000 ரூபாயிலிருந்து 20,000 ரூபாயாக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கென ஆண்டொன்றுக்குத் தற்போது ஒதுக்கீடு செய்யப்படும் 39 இலட்சம் ரூபாயுடன் கூடுதலாக 39 இலட்சம் ரூபாய் சேர்த்து, மொத்தம் 78 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

பிற்பகல் 2—30

முதற்கட்டமாக, 7,000 அங்கன்வாடிகளுக்கு 1 கோடியே 3 இலட்சத்து 55 ஆயிரம் ரூபாய் செலவில் சமையல் பாத்திரங்கள், டம்ளர்கள், தட்டுகள் ஆகியவை வாங்கி வழங்கப்படும்.

1,000 அங்கன்வாடி மையங்களுக்கு முதற்கட்டமாக 15 இலட்சம் ரூபாய் செலவில் ஒரே மாதிரியான வர்ணம் அடிக்கப்படும்.

1982 ஆம் ஆண்டிலிருந்து சத்துணவு மையங்களுக்கு எந்தச் சமையல் பாத்திரங்களும் சரிவர வழங்கப்படவில்லை. எனவே, இவ்வாண்டு முதற்கட்டமாக 16 ஆயிரத்து 605 சத்துணவு மையங்களுக்குத் தலா 3 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 50 இலட்சம் ரூபாய் செலவில் சமையல் பாத்திரங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) சத்துணவு உட்கொள்ளும் 15 இலட்சத்து 15 ஆயிரம் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வாங்க 50 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

முதற்கட்டமாக, நீங்கள் அனைவரும் கேட்டீர்கள். சத்துணவு மையங்களுக்கு எரிவாயு இணைப்பு வசதி ஏற்படுத்தித் தர ஒரு சத்துணவு மையத்திற்கு 20,000 ரூபாய் வீதம் 750 மையங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) 1.50 கோடி ரூபாய் நிதி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. எரிவாயு இணைப்பு வழங்குவதன்மூலம், பல்லி மற்றும் பூச்சிகள் விழுவது தடுக்கப்படுவது மட்டுமல்லாமல், அடுப்பு எரிப்பதற்காக மரங்கள் வெட்டப்படுவதும் தவிர்க்கப்படும். புகை படிவதால் ஏற்படும் சுற்றுப்புறச் சூழல் மாசு குறைக்கப்படுவதுடன், அதனால் ஏற்படும் சுகாதாரக் கேடுகளும் தவிர்க்கப்படும்.

சென்னை, திருநெல்வேலி மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களை நவீனப்படுத்த சமையல் அறைகளுக்கு எரிவாயு இணைப்பு மற்றும் பிரஷர் குக்கர் ஆகியவை 72 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும். பிரஷர் குக்கரைப் பயன்படுத்துவதால், உணவு சமைக்கும்போது நேரம் குறைவது மட்டுமல்லாமல், உணவில் ஊட்டச் சத்து இழப்பும் ஏற்படுவதில்லை. மேலும், எரிவாயு மற்றும் பிரஷர் குக்கர் ஆகியவற்றைப் பயன்படுத்துவதில் அதற்கான பாதுகாப்பு விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

நமது தமிழகத்தில் உள்ள 25 குழந்தைகள் காப்பகங்களில், 7 காப்பகங்கள்தான் சொந்தக் கட்டடங்களில் உள்ளன. 2 காப்பகங்கள் வாடகையில்லாக் கட்டடங்களிலும், 16 காப்பகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் இயங்கி வருகின்றன. வாடகைக் கட்டடங்களில் உள்ள காப்பகங்கள் சரியான வசதியில்லாமல் இயங்கிக்கொண்டிருக்கின்றன. முதற்கட்டமாக, திருநெல்வேலி, ஈரோடு மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் புதிய கட்டடங்கள் கட்ட ரூபாய் 97.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

ரூபல்லா என்னும் வைரஸ் கிருமியினால் கர்ப்பிணிப் பெண்கள் தாக்கப்பட்டால் செவிட்டுத் தன்மை, கண் பார்வையின்மை, மூளை வளர்ச்சியின்மை போன்ற கடும் ஊனங்கள் வயிற்றில் வளரும் சிசுக்களைத் தாக்கும் அபாயம் உண்டு. தமிழ்நாட்டில் 40 சதவீதக் காது கேளாமைக்கு முக்கியக் காரணம், ரூபல்லா என்னும் கொடிய வைரஸ் கிருமிதான். எனவே, ஊனமுற்ற குழந்தைகளைப் பராமரிக்க நமது அரசு 50 கோடி ரூபாய் செலவு செய்கிறது. இதை எதிர்காலத்தில் தடுப்பதற்காக, 15 வயது வளர் இளம் பெண்களுக்கு ஒரே ஒரு முறை,



25 ரூபாய் மதிப்புள்ள ரூபல்லா தடுப்பூசியினைச் செலுத்தினால், இக்கிருமியினால் ஏற்படும் அனைத்து ஊனங்களையும் அறவே தடுத்திடலாம். ஆகவே, ஆண்டுதோறும் 15 வயதுள்ள பெண்களுக்கு ரூபல்லா தடுப்பூசி போடும் திட்டம் செயல்படுத்தப்படும்.

மதிய உணவு—சத்துணவுத் திட்டத்தின்கீழ், சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், அங்கன்வாடிப் பணியாளர்கள் மற்றும் அங்கன்வாடி உதவியாளர்கள் பணியிடங்களில் காலியாகவுள்ள 10,028 பணியிடங்களுக்குப் புதிய பணியாளர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஐ.நா. சபை, பெண்களின் பொருளாதார வளர்ச்சி, குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலை, ஊனமுற்றோரின் நிலை ஆகியவற்றைக் கண்டறிந்த பிறகு, ஆய்வு செய்த பின்புதான் ஒரு நாடு முன்னேற்றப் பாதையை நோக்கி வெற்றி நடை போடுகிறதா எனக் கூறுகிறது.

தமிழ்ச் சமுதாயத்தில் வாழ்கின்ற நலிந்த குழந்தைகள், பெண்கள், முதியோர், ஊனமுற்றோர் ஆகியோரின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திட சமூக நலத் துறை புதிய மற்றும் தற்போது நடைமுறையில் உள்ள அனைத்துத் திட்டங்களுக்கும் இவ்வரசு செம்மையாக, உண்மையாக, நேர்மையாக செயல் வடிவம் தரும் என உறுதியுடன் கூறுகிறேன்.

பெண் குழந்தைகளின்மேல் இந்தச் சமுதாயம் தீண்டாமை போன்ற ஒரு தவறான கண்ணோட்டத்தைக் கொண்டுள்ளது. அந்தத் தவறான கண்ணோட்டத்தை மாற்ற, ஆணுக்கு நிகர் பெண்களையும் ஏற்றுக்கொள்ள நமது முதல்வர் அவர்கள் பெண்களைப் பாதுகாப்பதற்காக அளித்த திட்டங்கள் அனைத்தும் எந்தவிதச் சேதாரமும் இல்லாமல் பெண்களைச் சென்றடையும் என அனைவருக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

வருங்காலங்களில் ஊனமுற்றோரை மாற்றுச் சிறப்புத் திறமை உள்ள மக்களாகக் கருதி, சமூக ரீதியிலான காழ்ப்புணர்ச்சிகளைக் களைந்தெறிந்து, அவர்களும் சராசரி மனிதர்களே என்ற நிலை உருவாக இந்த அரசாங்கம் பாடுபடும்.

இன்று பார்வையற்றோருக்கு விலையுயர்ந்த பிரெயில் கடிகாரங்கள், கணினிகள், ஒலி நாடா இயக்கிகள் அளிக்கப்பட்டுள்ளன.

செவித் திறன் அற்றோருக்குக் காதொலிக் கருவி வழங்கப்பட்டுள்ளது.

கால் ஊனமுற்றோருக்குச் சக்கர சிறப்பு வண்டி வழங்கப்பட்டுள்ளது.

மன வளர்ச்சி குன்றியோருக்கு உதவித் தொகை ரூபாய் 200-லிருந்து ரூ. 400 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

ஆனால், நம்முடைய முதல்வரின் நோக்கம், இத்தகைய உதவிகள் பெறாதவர்களின் எண்ணிக்கை அதிகமாகி, அதாவது ஊனமுற்றோரின் எண்ணிக்கை குறைய வேண்டும். ஏன்? சிக்கன நடவடிக்கை எனத் தவறுதலாகப் புரிந்துகொள்ள வேண்டாம். எவ்வளவுக்கெவ்வளவு ஊனமுற்றோரின் எண்ணிக்கை குறைகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஊனமுற்றோரின் நிதி மிச்சமாகும். அந்த எஞ்சியுள்ள நிதியை இன்னும் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கு, வளர்ந்த நாடுகளில் செயல்படுத்தும் திட்டங்களைக் கண்டறிந்து, ஊனமுற்றோர்களின் வாழ்க்கையை இன்னும் சிறப்பாக மேம்படுத்தலாம் என்பதே நமது முதல்வர் அவர்களின் உயர்ந்த எண்ணமும், இலட்சியமும் ஆகும்.

எனக்கோ பொது நலம் கலந்த சுய நலம். ஏன் ஊனமுற்றோரின் எண்ணிக்கை குறைய வேண்டும் தெரியுமா? தமிழ்நாட்டில் இத்தனை செம்மையான திட்டங்களைத் தீட்டி ஒப்புதல் வழங்கும் முத்தான கையெழுத்தைப் பார்க்க முடியவில்லையே என வருந்தும் பார்வையற்றோர்களின் எண்ணிக்கை குறைய வேண்டும். இத்தச் சிறப்பான திட்டங்களை அறிவிக்கும் கம்பீரமான குரலைக் கேட்க முடியவில்லையே என ஆதங்கப்படும் காது கேளாதோரின் எண்ணிக்கை குறைய வேண்டும். அவர் ஆற்றுகின்ற ஆழமான உரைகளைப் புரிந்துகொள்ள முடியவில்லையே என்றிருக்கும் மூளை வளர்ச்சி குன்றியோரின் எண்ணிக்கை குறைய வேண்டும். அவரிடம் வேகமாக ஓடித் தஞ்சம் புக முடியவில்லையே எனப் பரிதவிக்கும் ஊனமுற்றோர் எண்ணிக்கை குறைய வேண்டும். ஆம், நமது தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் கருணை உள்ள முகத்தைப் பார்ப்பதற்கு, கனிவான குரலைக் கேட்பதற்கு, அவரிடம் ஓடோடி வந்து, தஞ்சம்கொள்வோரில் ஊனமுற்றோரே இருக்கக்கூடாது என்பது எனது மனப்பூர்வமான ஆசை.

பிற்பகல் 2-35

நான் கடந்த 3 மாதங்களாக அங்கன்வாடிகளிலும், குழந்தைகள் காப்பகங்களிலும், சத்துணவுக் கூடங்களிலும் பலதரப்பட்ட குழந்தைகள், மழலைச் செல்வங்களைக் கண்டபோது, நோபல் பரிசு பெற்ற சில்வி



மிஸ்ட்ரல் என்ற கவிகளின் வரிகள்தான் நாட்டைச் சார்ந்த கேப்ரியலா மிஸ்ட்ரல் வரிகளாக நினைவுக்கு வருகின்றன. "We are எனது மனதைத் தொட்ட வரிகளாக guilty of many errors, many faults. But, the worst crime is, abandoning the children, neglecting the fountain of life. Many of the things we need can wait. The child cannot. Right now is the time, its bones are being formed, its blood is being made and its senses are being developed. To him we cannot answer tomorrow, his name is today." குழந்தைகள் சொன்னால், குழந்தைகளின் வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகளுக்கு நாளை என்று பதில் அளிக்காமல் இன்றைக்கே நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே இவ்வரிகளின் அர்த்தமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வரிகளுக்கு உயிர் கொடுத்த தமிழகத்தின் மழலைச் செல்வங்களின் வாழ்வு உயர, பதவியேற்ற அன்றைக்கே வாரம் இருமுறை முட்டை வழங்கும் திட்டத்திற்குக் கையெழுத்திட்ட பெருமை நமது முதல்வர் அவர்களைச் சாரும்.

இறுதியாக, என் தந்தையின் உயர்மிகு இந்த அவையுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். பகுத்தறிவுப் பாதையில் ஊறித் திளைத்து வளர்ந்த எனது தந்தை, இறைவன், கடவுள், தெய்வம் என்று என்றுமே உச்சரித்தது கிடையாது. அவர் சொல்லி நான் கேட்டது, அரசியல் மேடையில்தான். எனக்குக் கடவுளைத் தெரியாது, கலைஞரைத்தான் தெரியும் என்று. என் தந்தையின் உயர்வை நானும் பெற்று, நமது முதல்வர் அவர்களின் சீரிய தலைமையில் இந்த சமூக நலத் துறையின்மூலம் ஒரு நலமான சமுதாயத்தை உருவாக்க அனைத்து முயற்சிகளையும் எடுப்பேன் எனக் கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, சமூக நலத் துறை மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், செங்கோட்டையன்.

மணி 2-37.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசுகிறபோது, பெருந்தலைவர் காமராஜருடைய அந்த நூற்றாண்டு விழாக்கூட சரியான முறையிலே எடுக்கப்படவில்லை என்ற ஒரு தவறான கருத்தை இந்த மாமன்றத்திலே தெரிவித்திருக்கிறார்கள். அவர் பிறந்த விருதுநகர் மண்ணில் நினைவுச் சின்னங்களும், அது மட்டுமல்ல, மணிமண்டபமும் கட்டியதோடு, மாவட்டத் தலைநகரங்களிலே

சிறப்பான முறையிலே அவருடைய விழாக்கள் நடைபெற்றுக்கின்றன என்பதையும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அப்படிப்பட்ட தியாகப் பரம்பரையிலே வந்திருக்கிற காமராஜர் போன்றோருடைய நினைவாகப் பிறந்த நாள் நூற்றாண்டு விழா மட்டுமல்ல, எல்லாத் தியாகிகளுடைய நூற்றாண்டு விழாக்களை நடத்தி தமிழகத்திலே இருக்கிற மக்கள் தெரிந்துகொள்வதற்கு, தியாகிகளுடைய நூற்றாண்டு விழா வருகிறபோது அனைத்து நூற்றாண்டு விழாக்களையும் நடத்திக் காட்டியவர் மாண்புமிகு அம்மா அவர்கள் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டினத்தடிகளும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையைத் தவிர, வேறு எதைப் பற்றியும் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) சொல்வோம், உட்காருங்கள்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** பட்டினத்தடிகளும், வடலூர் இராமலிங்க அடிகளார்கூட புறக்கணிக்காத தாய் உறவைத் தன்னுடைய அரசியல் துறவறத்தால் புறக்கணித்து, வாழ்க்கை முழுவதும் தன் தாயைத் தள்ளி வைத்து, தியாகப் பிழம்பாக வாழ்ந்த எங்கள் பெருந்தலைவருடைய தாயினுடைய பெயரை, குழந்தைகளுக்கு உணவு வழங்குகின்ற அற்புதமான திட்டத்திற்கு மீண்டும் சூட்டி, அந்தச் சிவகாமி அன்னைக்குப் புகழ் சேர்த்த தமிழக அரசுக்குக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றி சொல்லி, அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெயக்குமார், என்ன? சொல்லுங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மைக் கொடுக்கவில்லை, சார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவையும் மாண்புமிகு அம்மா அவர்கள் அரசின் சார்பிலே கொண்டாடினார்கள். அதேபோன்று, பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள விழாவும் அரசின் சார்பிலே கொண்டாடப்பட்டது. அன்றைக்கு அந்த அமைச்சரவையிலேகூட நான் இருந்தேன். சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்திலே அது கொண்டாடப்பட்டது.

அமைச்சர் அவர்களுக்கு இப்போது ஒரு கேள்வி.
**மாண்புமிகு** அமைச்சர் அவர்களுக்கு இப்போது ஒரு கேள்வி. Integrated Child Development Project-ஐப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அதாவது, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம். இந்த வளர்ச்சித் திட்டத்தைப் பொறுத்தவரையில் மேலைநாடுகளில் இப்போதுள்ள நிலை, 'Theory is different than practical' என்று சொல்வார்கள். அதாவது, யதார்த்த ரீதியிலே உலக விஷயங்களை நாம் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், குழந்தைகளை நாம் வெளியில் கல்விச் சுற்றுலாவிற்கு அழைத்துச் செல்ல வேண்டியது கடமை. எனவே, இந்த Integrated Child Development Project-லே கல்விச் சுற்றுலாவை நீங்கள் சேர்ப்பதற்கு, சத்துணவுக் கூடங்களில் பயிலுகின்ற குழந்தைகளுக்கு மட்டுமாவது இந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அமைச்சர்மூலம் அறிய விரும்புகின்றேன்.

பிற்பகல் 2—40

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:** கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும். முக்கியமாக, விளையாட்டுப் பொருட்கள் விஷயத்தில் ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஒவ்வொரு புது மையங்களுக்கும் 2,000 ரூபாய் மதிப்புள்ள விளையாட்டுப் பொருட்கள் கொடுக்கப்படும், கல்வி முறைக்காக. சென்ற வருடம், முந்தைய அரசாங்கம் 2,000 ரூபாய் மதிப்புள்ள விளையாட்டுப் பொருட்களுக்கு, 150 ரூபாய் மதிப்புள்ள விளையாட்டுப் பொருட்கள்தான் வாங்கியது என்பதற்கு ஆதாரபூர்வமான தகவல்கள் இருக்கின்றன. அந்த விளையாட்டு பொம்மைகளை நீங்கள் வேண்டுமானாலும் வந்து பாருங்கள், உங்களுக்குக் காட்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுக் கூடத்திற்கு இலவச எரிவாயு இணைப்பு அறிவிப்புத் தந்தமைக்காகத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும், சத்துணவு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டு, புதிய பாத்திரங்கள் வழங்கி, அந்தக் குழந்தைகளுக்குத் தரமான உணவைத் தருவதோடு மட்டுமல்லாமல், குக்கரையும் வழங்குவேன் என்று அறிவித்திருக்கிற அறிவிப்புக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியான காங்கேயம் என்பது பாரம்பரியம் மிக்க காங்கேயம் காளை மாடுகளுக்குப் பிரசித்தி பெற்ற இடமாகும். பிரசித்தி

பெற்ற காளை மாடுகள் இனத்தை இனப்பெருக்கம் செய்து தர, அந்த இனத்தைக் காப்பாற்ற அரசிடம் ஏதாவது சிறப்புத் திட்டம் இருக்கிறதா என்பதைத் தங்கள்மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்**: ஏற்கெனவே காங்கேயம், உம்பளாச்சேரி, தோடா போன்ற உள்நாட்டு மரபினங்களைப் பாதுகாப்பதற்கான திட்டம் உள்ளது. நாங்கள் பராமரித்து வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. கே.வி. ராமநாதன்.

**திரு. கே.வி. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த.அ. மேகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வெ. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. சேகர். இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. ஜான் ஜோசப்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. ஜான் ஜோசப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.



**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. சுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சின்னசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.



**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெடடுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஞா. செந்தமிழன்.

**திரு. ஞா. செந்தமிழன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞா. செந்தமிழன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.



**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 45 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.967,27,91,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.3,000/— ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

## (ஆ) கோரிக்கை என் 6—கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை என் 6—கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வி. ராமநாதன்.

**திரு. கே.வி. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. செந்தமிழ்ச்செல்வன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. ஜெயக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ், இருக்கையில் இல்லை.

திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இரா. துரைக்கண்ணு.

**திரு. இரா. துரைக்கண்ணு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. துரைக்கண்ணு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி செல்வி ராமஜெயம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** இலலை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜி. லதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ரா. லீமா ரோஸ்.

**திருமதி ரா. லீமா ரோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா ரோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. இராஜேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பி. பதமாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி.



**திரு. மா. சந்திரகாசி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.

திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சின்னசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லி பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.



**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கால்நடை பராமரிப்பு, பால வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.210,87,79,000/–, மூலதனக் கணக்கில் ரூ.41,54,97,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.27,48,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23–8–2006) புதன்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–13 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

—ஏதுமில்லை—

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

75. மானியக் கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006—2007. (தமிழ், ஆங்கிலம்)

76. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய செயல்முறைத் திட்டம், 2006—2007. (தமிழ், ஆங்கிலம்)

77. சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை பற்றிய 'மக்கள் சாசனம்' (தமிழ், ஆங்கிலம்)

78. மானியக் கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006—2007. (தமிழ், ஆங்கிலம்)

79. மானியக் கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பிற்குத் திருத்தம், 2006—2007. (ஆங்கிலம்)

80. நெடுஞ்சாலைகள் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2006—2007. (தமிழ்)

81. நெடுஞ்சாலைகள் துறை மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளுக்கு இணைப்பு, 2006—2007. (தமிழ்)

— — —





## இணைப்பு 1

*(100 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006-2007

## அத்தியாயம் 1

**முன்னுரை**

சமுதாயத்தில் மிகவும் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கைத் தரத்தை உடலளவிலும், உள்ளத்தளவிலும் மற்றும் பொருளாதார ரீதியாகவும் உயர்த்துவதில் தமிழகம் எப்போதுமே முன்னோடியாக இருந்துள்ளது. இந்தியாவில் மகளிர், குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர்களுக்கு உதவுவதிலும் மற்றும் அவர்களின் முன்னேற்றத்திற்காகக் குரல் எழுப்புவதிலும் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முதன்மையானவராகத் திகழ்கிறார். இதனால் மனித நேயத்தோடு, சிறப்பாகச் செயல்படும் துறைகளில் ஒன்றாக சமூக நலத் துறை விளங்குகிறது.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் மற்றும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டம் ஆகியவற்றிற்குக் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து, அனைத்து வயதினரிடையே ஊட்டச் சத்துக் குறைபாடுள்ளோர் எண்ணிக்கையினைக் குறைத்தல், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு விரிவான சுகாதாரக் கல்வி அளித்தல் ஆகியவை இவ்வாண்டின் நமது முக்கியக் குறிக்கோள்களாகும். இது தமிழகத்தில் சிசு இறப்பு மற்றும் மகளிர் பேறுகால இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு உதவும்.

ஊனமுற்றோருக்குச் சம வாய்ப்பளித்தல், ஊனத்தின்பால் சமுதாயம் கொண்டுள்ள தவறான எண்ணத்தை அகற்ற கல்வி புகட்டுதல் மற்றும் ஊனமுற்றோர் முழுமையான வாழ்க்கை வாழ மனதார வகை செய்தல் ஆகியவற்றிற்காக ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத் துறை தொடர்ந்து கடும் பணியாற்றி வருகிறது.

நமது சமுதாயத்தில் பெண்கள் கருவறை முதல் சுடுகாட்டை அடைதல் வரையும், வரதட்சணைக் கொடுமை முதல் கற்பழிப்புக் கொடுமை வரையும் பல கொடுமைகளைச் சந்தித்து வருகின்றனர். எனவே, சமாளிக்க இயலாத இச்சமுதாயத் தடைகளைத் தகர்த்து, பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாராட்டத்தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

> "ஒரு நாட்டில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் அவர்கள் சுயமாக முடிவெடுக்கும் வயதை எட்டும் வரை சிறந்த உறைவிடம், உடை, உணவு மற்றும் கல்வி கிடைக்கின்றதா என்பதை உறுதி செய்வதே ஒரு அரசின் தலையாய கடமையாகும் என்பது மறுக்க முடியாதது"

என்பது ஜான் ரஸ்கின் அவர்களின் நெஞ்சைத் தொடும் வார்த்தைகளாகும். மனிதநேயம், தயாள குணம் மற்றும் ஆற்றல்மிகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையின்கீழ் இயங்கும் இவ்வரசின் நோக்கமும் இதுவேயாகும்.

**"சூழாமல் தானே முடிவெய்தும் தங்குடியைத்**
**தாழா துஞற்று பவர்க்கு"**

என்னும் அய்யன் திருவள்ளுவரின் பொன்மொழிகளுக்கு இணங்க, வாக்காளர்களுக்கு அளிக்கப்பட்ட முக்கிய வாக்குறுதிகளைச் செயல்படுத்துவதற்கான ஆணைகளில் பதவியேற்ற நாளன்றே கையெழுத்திட்டதன்மூலம் நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இக்குறளுக்குத் தான் ஒரு வாழும் உதாரணம் என்பதை நிரூபித்துள்ளார். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்கீழ் சமுதாயத்தின் எளிய பிரிவினரை உயர்த்துவதற்கான வாக்குறுதிகளை நிறைவேற்ற இத்துறை ஊக்கத்தோடு அயராது செயல்படும்.



# அத்தியாயம் 2

## மகளிர் மற்றும் குழந்தைகள் நலம்

**2.1** மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு அத்தியாவசிய சேவைகளான சுகாதாரம், ஊட்டச் சத்து, குழந்தைகள் நலம், மகளிர் நலம் ஆகியவற்றை எளிதில் பெறுவது, அவர்கள் வாழும் சூழ்நிலையை மேம்படுத்துதல் ஆகிய பணிகளின்மூலம் மகளிர் மற்றும் குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியை மேம்படுத்துவது போன்ற பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழக அரசு முதன்மை மாநிலமாகத் திகழ்கிறது. சமூக நலத் துறையானது பல்வேறு சூழ்நிலைகளில் உள்ள பெண்கள் மற்றும் சிறார்களுக்கு கல்வி கற்க, திருமணம்/மறுமணம் செய்ய நிதியுதவி வழங்கி, பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. பெண் குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு ஏற்ற மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்காகவும், பாலின வேறுபாட்டைக் களைவதற்காகவும் பல்வேறு கொள்கைகளை ஏற்படுத்தி வருகின்றது. வளர் இளம் பெண்களின் நிலையினை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுத்தப்படுகின்றன.

### 2.2 மகளிர் நலத் திட்டங்கள்

### திருமண உதவித் திட்டங்கள்

ஏழைப் பெற்றோர்கள்/பாதுகாவலர்கள் தங்களுடைய மகள்களுக்குத் திருமணம் செய்ய அவர்கள்படும இன்னல்களைத் தவிர்ப்பதற்காக சமூக நலத் துறைமூலம் திருமண நிதி உதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. அத்திட்டங்களின்மூலம் பயனடைய கீழ்க்கண்ட தகுதிகள் தேவை:

- மணமகள் 18 முதல் 30 வயதுடையுவராக இருத்தல் வேண்டும். (டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண உதவித் திட்டம 20 முதல் 30 வயதுடையவராக இருத்தல் வேண்டும்)
- ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் மட்டுமே பயனடைய முடியும்.

### 2.2.1 மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதியுதவித் திட்டம்

வறுமைச் சூழ்நிலையில் உள்ள பெற்றோர்கள் தங்கள் பெண்களின் திருமணத்திற்கென நிதியுதவி பெறவும, பெண்களின் கல்வி நிலையினை

மேம்படுத்துவதற்காகவும் 3–6–1989–ல் தொடங்கப்பட்ட இத்திட்டம் 1–1–2002–க்குப் பின் தொடராமல் கைவிடப்பட்டது.

வறிய நிலையில் உள்ள பெற்றோருக்கு உதவிடும் வகையிலும், தேர்தலுக்கு முந்தைய வாக்குறுதியை நிறைவேற்றிடும் வகையிலும், இவ்வரசு 3–6–2006 முதல் மீண்டும் இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தொடங்கியதோடு, ஏற்கெனவே ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்பட்டு வந்த நிதியுதவியான ரூ.10,000/–லிருந்து ரூ.15,000/–ஆக உயர்த்தியும் அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் பயன் பெற பெண்ணின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/–க்குக் குறைவாக இருத்தல் வேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு பெண் மட்டுமே இவ்வுதவி பெறத் தகுதியுடையவர் ஆவார்.

### 2.2.2 ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைப் பெண்களின் மகள் திருமண நிதியுதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் ஆண்டு வருமானம் ரூ.12,000/–க்குக் குறைவாக உள்ள ஏழை விதவையரது மகளிர் திருமணத்திற்காக ரூ.10,000/– வழங்கப்படுகிறது. திருமண உதவி கோரும் மகளிர் 18 வயதிலிருந்து 30 வயதிற்குள் இருத்தல் வேண்டும். இத்திட்டத்தின்கீழ் நிதியுதவி குடும்பத்திற்கு ஒரு பெண்ணிற்கு மட்டுமே வழங்கப்படும்.

### 2.2.3 டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், விதவை மறுமணத்தை ஊக்குவிக்கும்பொருட்டு தம்பதியருக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெறக் குடும்ப வருமான வரம்பு ஏதும் இல்லை. விதவை மறுமணம் செய்துகொள்ளும் தம்பதியரது பெயரில் கூட்டாக ரூ.7,000/–க்கான தேசிய சேமிப்புச் சான்றிதழ் மற்றும் ரூ.3,000/–க்கான காசோலை/வரைவோலையும் வழங்கப்படுகிறது. இத்திட்ட உதவி 20 வயது முதல் 30 வயதுடைய விதவைகளுக்கு மட்டுமே வழங்கப்படுகிறது.

### 2.2.4 அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்களுக்கான திருமண நிதி உதவித் திட்டம்

ஆண்டு வருமானம் ரூ.12,000/–க்குக் குறைவாக உள்ள பாதுகாவலர்களால் பராமரிக்கப்படும் 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட ஆதரவற்ற பெண்களின் திருமணத்திற்கு, பயனாளி ஒருவருக்கு ரூ.10,000/– வீதம் நிதி உதவி அளிக்கப்படுகிறது.





### 2.2.5 தமிழக அரசு கலப்புத் திருமண நிதி உதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் பயனடைய வருமான வரம்பு ஏதுமில்லை. கலப்பு மணம் செய்து கொண்ட தம்பதியரில் ஒருவர் ஆதி திராவிடர் அல்லது பழங்குடியினத்தவராகவும், மற்றொருவர் வேறு இனத்தைச் சார்ந்தவராகவும் இருக்கும்பட்சத்தில் ரூ.20,000/– நிதியுதவி (திருமணச் செலவிற்கு காசோலை/வரைவோலையாக ரூ.10,000/–ம், தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ.10,000/–ம்) வழங்கி, கலப்புத் திருமணத்தை அரசு ஊக்குவிக்கிறது. முற்பட்ட இனத்தைச் சேர்ந்த ஒருவர் பிற்படுத்தப்பட்ட அல்லது மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவரை கலப்புத் திருமணம் செய்துகொண்டால் திருமணச் செலவிற்காக ரூ.3,000/– (காசோலை/வரைவோலை) மற்றும் தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ.7,000/–ம், ஆக மொத்தம் ரூ.10,000/– வழங்கப்படுகிறது.

### 2.3 சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ள விதவைகள், கணவனால் கைவிடப்பட்டோர், ஆதரவற்ற பெண்கள் மற்றும் ஊனமுற்ற ஆண்கள் மற்றும் பெண்களின் சுய வேலைவாய்ப்புத் திறனைப் பெருக்கி, அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட உதவி அளிக்கும் நோக்குடன் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

### 2.4 சேவை இல்லங்கள்

வாழ்வாதாரமற்ற விதவைகள், ஆதரவற்ற மற்றும் உதவிக்கு எவருமில்லாத பெண்கள் ஆகியோருக்குப் பாதுகாப்பு தேவைப்படுகிறது. இத்தகைய பெண்களுக்குப் பாதுகாப்பு அளித்திடவும், அவர்கள் தங்களது வாழ்க்கையை மீண்டும் செம்மையாக அமைத்துக்கொள்ள உதவிடவும், சமூக நலத் துறை, தாம்பரம், கடலூர், சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, சிவகங்கை, மதுரை ஆகிய 7 இடங்களில் சேவை இல்லங்களை நடத்தி வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனாமி அலைகளால் பாதிக்கப்பட்ட 14 முதல் 18 வயது வரையுள்ள வளர் இளம் பெண்களுக்கும், 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட சிறப்புச் சேவை இல்லத்தில் உள்ளுறையும் நபர்கள் குறைந்துவிட்ட காரணத்தால், சுனாமியினால் பாதிக்கப்படாத பிற நபர்களும் பயன் பெறும் வகையில் இந்த சிறப்புச் சேவை இல்லம் பொதுச் சேவை இல்லமாக மாற்றப்பட்டது. இச்சேவை

இல்லங்கள், உள்ளுறைவோருக்குத் தங்குமிடம், உணவு, கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சி ஆகியவற்றை அளிக்கின்றன. சுனாமிப் பேரலைகளால் பாதிக்கப்பட்டோர்களுக்கென மேலும் ஒரு சிறப்புச் சேவை இல்லம் நாகப்பட்டினத்தில் செயல்பட்டு வருகிறது. 11 முதல் 18 வயது வரையிலான மற்றும் 18 வயதுக்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்கென இச்சேவை இல்லம் செயல்பட்டு வருகிறது. இதில் தங்குமிடம், உணவு, கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. இச்சேவை இல்லங்களில் உள்ளுறையும் மகளிர் தமது குழந்தைகளைத் தங்களுடன் வைத்துக்கொள்ள அனுமதிப்பதுடன் இக்குழந்தைகளுக்குக் கல்வி வசதியும் அளிக்கப்பட்டு வருகிறது.

அனைத்து சேவை இல்லங்களிலும் மேல்நிலை வகுப்புகளும், தொழிற் கல்வியும் இல்லத்திலேயே வழங்கப்படுகிறது. உணவூட்டுச் செலவினமாக மாதம் ஒன்றுக்கு, பெரியவர்களுக்குத் தலா ரூ.300/– வீதமும், குழந்தைகளுக்குத் தலா ரூ.225/– வீதமும் வழங்கப்படுகிறது. பெரியவர்களுக்கு ரூ.500/– மதிப்பில் ஒவ்வோர் ஆண்டும் இலவசச் சீருடை வழங்கப்படுகிறது. மேலும் இச்சேவை இல்ல சிறுவர்களுக்கு ஆண்டிற்கொரு முறை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் சீருடைத் துணியினைக் கொண்டு சீருடை தைத்து வழங்கப்படுகிறது. இவ்வில்லங்களில் தங்கியிருப்போர்களுக்குத் தேவையான பாட நூல்கள் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாட நூல் நிறுவனத்திடமிருந்து வாங்கி, இலவசமாக வழங்கப்படுகிறது. உடல் ஊனமுற்றோருக்கெனத் தனியாக ஒரு பிரிவு தாம்பரம் சேவை இல்லத்தில் இயங்கி வருகிறது.

தாம்பரம், கடலூர் மற்றும் தஞ்சாவூர் சேவையில்லங்களில் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்துப் பாடங்களில் ஓராண்டு காலத்திற்கு 65 பெண்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சிக்குப் பின் அவர்கள் அரசு தொழில்நுட்பத் தேர்வு எழுதத் தகுதியுடையவராகின்றனர். மேல்நிலை வகுப்புகளில் பயில்பவர்களுக்கு செவிலியர், துணி மற்றும் வடிவமைப்பு, ஆய்வகத் தொழில்நுட்பப் பயிற்சி போன்றவை திருநெல்வேலி, கடலூர், சேலம், சிவகங்கை மற்றும் தாம்பரம் ஆகிய சேவை இல்லங்களில் அளிக்கப்படுகின்றது. அனைத்து சேவை இல்லங்களிலும் 10–ம் வகுப்பு முடித்த சேவை இல்ல மாணவிகளுக்கு நவீன தொழில்நுட்பத்தில் ஈடுபாடுகொள்ளும் வகையில் கணிப்பொறிப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 10–ம் வகுப்பு முடித்த பெண்கள் பல்நோக்கு சுகாதாரப் பணியாளர் பயிற்சிக்குப் பரிந்துரைக்கப்படுகின்றனர். மதுரை சேவை இல்லத்தில் தையல் பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.





**2.5 தொண்டு நிறுவனங்களால் செயல்படுத்தப்படும் சேவை இல்லங்களுக்கு அரசு மானிய உதவி**

கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள் மற்றும் ஆதரவற்றோர் ஆகியோருக்காக காந்திகிராமத்திலுள்ள கஸ்தூரிபாய் சேவாஸ்ரமம், சென்னையில் உள்ள ஸ்ரீசேவா மந்திர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சரணாலயம் ஆகிய மூன்று சேவை இல்லங்கள் அரசு நிதி உதவியுடன் நடத்தப்படுகின்றன. இச்சேவை இல்லங்களின் உள்ளுறைவோருக்குப் பயிற்சி உதவித் தொகையும், ஆசிரியர்களுக்கான ஊதியமும் மானியமாக வழங்கப்படுகிறது.

**2.6 பணிபுரியும் பெண்கள் விடுதிகள்**

பணிக்குச் செல்லும் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அவர்கள் தங்குவதற்கு ஏற்ற பாதுகாப்பான இடவசதியின் தேவையும் அதிகரிக்கிறது. பெண்கள் அவர்கள் பணிபுரியும் இடம் அல்லது அதன் அருகிலேயே தங்குவதற்குத் தக்க இடவசதியினை நாட வேண்டியுள்ளது. எனவே, பணிபுரியும் பெண்களுக்கு உதவும் வகையில் சென்னையில் 2, கடலூர், மதுரை, புதுக்கோட்டை, தூத்துக்குடி, திருச்சி மற்றும் ஓசூரில் தலா ஒன்று வீதம் 8 பணிபுரியும் மகளிர் விடுதிகள் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. பணிபுரியும் மகளிர் விடுதியில் சேருவதற்கான மாத வருமான உச்சவரம்பாக ரூ.10,000/– நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வாடகையாக மாதமொன்றுக்கு சென்னையில் உள்ள விடுதிகளில் ரூ.200/–ம், இதர மாவட்டங்களில் ரூ.150/– வீதமும் வசூலிக்கப்படுகிறது. தண்ணீர், மின்சாரம் மற்றும் உணவு ஆகியவற்றிற்கான செலவினங்கள் உள்ளுறைவோர்களால் சரிசமமாகப் பகிர்ந்துகொள்ளப்படுகின்றது. இவ்விடுதியில் பணிபுரியும் கண்காணிப்பாளர், உதவியாளர், சமையலர், துப்புரவாளர் மற்றும் இதர பணியாளர்களின் ஊதியம் அரசால் வழங்கப்படுகிறது.

**2.7 வழிகாட்டி மையம்**

பெண்களின் நலனுக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் பல்வேறு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்டு வழிகாட்டி மையம் 1979 ஆம் ஆண்டு முதல் 20 மாவட்டங்களில் மாவட்ட சமூக நல அலுவலரின் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வருகிறது. இந்த வழிகாட்டி மையங்கள் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சிறு தொழில் தொடங்க கடனுக்கான விண்ணப்பப் படிவங்களை தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்குப் பரிந்துரை செய்து அனுப்புவதோடு, மாவட்ட சமூக நல அலுவலர்களால்

கையாளப்படும் வரதட்சணைக் கொடுமை குறித்த புகார்கள், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான பணிகளையும் மேற்கொள்கிறது.

## 2.8 ஏழை விதவைத் தாய்மார்களின் குழந்தைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்குதல்

ஆண்டு வருமானம் ரூ.12,000/-க்குக் குறைவாகப் பெறும் விதவைத் தாய்மார்களின் பள்ளி செல்லும் குழந்தைகள் பயனடையும் வகையில் இத்திட்டத்தின்மூலம் பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன:

| வகுப்பு | ஆண்டொன்றுக்கு ஒரு குழந்தைக்கு வழங்கப்படும் புத்தகம் மற்றும் குறிப்பேடுகளின் மதிப்பு |
|---|---|
| 1 மற்றும் 2 ஆம் வகுப்பு | ரூ.50/- |
| 3 முதல் 5 ஆம் வகுப்பு வரை | ரூ.125/- |
| 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை | ரூ.175/- |
| 9 மற்றும் 10 ஆம் வகுப்பு | ரூ.300/- |
| +1 மற்றும் + 2 வகுப்பு | ரூ.600/- |

## 2.9 வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகளுக்கான காப்பகம்

வேலைக்குச் செல்லும் மற்றும் நோய்வாய்ப்பட்ட தாய்மார்களின் குழந்தைகள், அவர்களுக்குப் பின் பிறந்திடும் மழலையர்களைக் கவனிக்க வேண்டிய சூழ்நிலையால் பள்ளிக்குச் செல்லாமல் நின்றுவிடுகின்றனர். இவர்களில் சிலர் சமூக விரோதச் செயல்களிலும் ஈடுபடுகின்றனர். இத்தகைய குழந்தைகளை, தமது சகோதர, சகோதரிகளைக் கவனித்துக்கொள்ள வேண்டிய பொறுப்பிலிருந்து விடுவிக்கவும், சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து, அவர்களைப் பள்ளிக்குச் செல்ல ஊக்குவிக்கும்பொருட்டும் தொண்டு நிறுவனங்கள்மூலம், ஒரு குழந்தைக் காப்பகத்திற்கு 25 குழந்தைகள் வீதம், 106 குழந்தைகள் காப்பகங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றிற்கு அரசு மானியமாக ஆண்டொன்றுக்கு தலா ரூ.25,400/- வீதம் வழங்கப்படுகிறது.



## 2.10 பெண்களுக்கான சமூகப் பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள்

(I) மகளிர், சமூகப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் அடைவதை உறுதி செய்யும் வகையில் கூட்டுறவு அமைப்புக்களின் நிர்வாகத்தில் மகளிர் பங்கேற்க வாய்ப்பளிக்கும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

(II) மகளிரை மட்டும் அங்கத்தினர்களாகக் கொண்ட தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்துவதன்மூலம் சமூக முன்னேற்றம் அடைய வழிவகை செய்யப்படுகிறது. இந்த வகையில் 104 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நல இயக்குநரின் கட்டுப்பாட்டிலும், 25 இணை உணவு தயாரிக்கும் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட ஒருங்கிணைப்பாளரின்கீழும் செயல்படுகின்றன. இத்தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் சமூக நலத் துறை செயல்படுத்தும் திட்டங்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்வதன்மூலமும், இதர பணிகள்மூலமும் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் பெண்களுக்கு வருமானம் ஈட்டக்கூடிய வேலைவாய்ப்பினை வழங்குபவையாக விளங்குகின்றன.

| வரிசை எண் | கூட்டுறவுச் சங்கத்தின் வகைப்பாடு | கூட்டுறவுச் சங்கங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் | 80 | 42,136 |
| 2. | எழுதுபொருள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் | 16 | 877 |
| 3. | இதர சங்கங்கள் | 8 | 1,054 |
| | மொத்தம் | 104 | 44,067 |

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் பயன் பெறும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாலியஸ்டர் மற்றும் நூல் இழை கலந்த துணியாலான இலவச சீருடைகளைத் தைக்கும் பணியில் 80 தையல் தொழிற்கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள 42,136 அங்கத்தினர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

எழுதுபொருள் தொழிற்கூட்டுறவுச் சங்கங்கள் அரசு அலுவலகங்களுக்கும், அரசு நிறுவனங்களுக்கும் தேவையான பதிவேடுகளைத் தயாரிக்கும் பணியினை மேற்கொள்வதன்மூலம் சங்கப் பெண் அங்கத்தினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்றன.

35 தையல் பயிற்சி மையங்களையும், 2 பனை ஓலை, 1 பாய் நெசவு மற்றும் 1 தும்பு பயிற்சி மையங்களோடு 3 உற்பத்தி நிலையங்களையும் அரசு செயல்படுத்தி வருகிறது. இப்பயிற்சி மையங்கள் ஆண்டொன்றுக்கு 778 மகளிருக்குப் பல்வேறு வகையான தொழிற்பயிற்சி அளிக்கின்றன.

பழங்குடி மகளிர் மட்டுமே பயனடையும் வகையில் சேலம் மாவட்டத்தில் இரண்டும், நாமக்கல் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் தலா ஒன்றுமாக, மொத்தம் 4 தையற்பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன. இப்பயிற்சி மையங்களின் வாயிலாக ஒவ்வோர் ஆண்டும் 65 பழங்குடி மகளிருக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றன.

பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மகளிருக்காக 8 தையற்பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன.

பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர் மரபினருக்காகக் குடிசைத் தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

## குழந்தை நலத் திட்டங்கள்

### 2.11 அரசு குழந்தைகள் காப்பகங்கள்

சமுதாயத்தில் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகளை நாட்டின் சிறந்த குடிமக்களாக்க வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையுடன் தமிழ்நாடு முழுவதிலும் 25 ஆதரவற்ற குழந்தைகள் காப்பகங்களை அரசு நடத்தி வருகிறது. இக்காப்பகங்களில் உள்ளுறையும் குழந்தைகளுக்கு உணவு, உடை, இருப்பிடம், கல்வி மற்றும் மருத்துவச் செலவினம் ஆகியவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

கீழ்க்காணும் நிலையிலான குழந்தைகள் இக்காப்பகங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்:

- பெற்றோரோ/உறவினரோ இல்லாத ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள்.



- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.12,000/–க்கும் குறைவாகப் பெறும் குடும்பத்தைச் சார்ந்த தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவர் இறந்துவிட்ட/நீண்ட நாள் கைதியாக இருப்பின், தாய் அல்லது தந்தையால் பாதுகாக்க முடியாத நிலையில் உள்ள குழந்தைகள்.
- தொழுநோய்/மனநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோரால் கவனிக்க இயலாத குழந்தைகள்.

அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்குக் கீழ்க்கண்ட வசதிகள் வழங்கப்படுகின்றன:

- ஒரு குழந்தைக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.225/– வீதம் உணவிற்குச் செலவிடப்படுகிறது.
- 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை வகுப்புகள் நடத்தப்படுகின்றன.
- 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பெண் குழந்தைகள் வெளிப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றனர்.
- இக்காப்பகக் குழந்தைகள் தன்னிறைவுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு தொழிற்கல்வியும் அளிக்கப்படுகிறது.
- அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் கல்வி பயில, தேவையான புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் தமிழ்நாடு பாட நூல் கழகம்மூலம் வாங்கி வழங்கப்படுகிறது.
- அரசு குழந்தைகள் காப்பகங்களில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பயனாளிகளுக்கு வழங்கப்படும் சீருடைத் துணிகளைக் கொண்டு இரண்டு ஜதை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன.
- 6 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலும் மற்றும் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலும் வெளிப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கு ஆண்டுதோறும் முறையே ரூ.400/– மற்றும் ரூ.500/– மதிப்பீட்டில், இரண்டு ஜதை சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன.

- அரசு குழந்தைகள் காப்பக உள்ளுறைவோர் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்குத் தலா ரூ.150/- வீதம் படுக்கை செலவினத்திற்காக வழங்கப்படுகிறது (நீலகிரி மாவட்ட அரசு குழந்தைகள் காப்பகத்திற்கு மட்டும் ஒரு குழந்தைக்கு ரூ.250/- வீதம் படுக்கை செலவினத்திற்காக வழங்கப்படுகிறது)

- அரசு குழந்தைகள் காப்பகக் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்குத் தலா ரூ.50/- மதிப்புள்ள தோலினாலான காலணிகள் வழங்கப்படுகின்றன.

- மருத்துவ வசதி:

  250 குழந்தைகள் வீதம் உள்ள 20 அரசு குழந்தைகள் காப்பகங்களில் உள்ள குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,000/- வீதமும்;

  100 குழந்தைகள் வீதம் உள்ள 5 அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500/- வீதமும்; மருத்துவச் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- வெளி உலகத் தொடர்பு வாய்ப்பு ஏற்படுத்தித் தரும்பொருட்டும், குழந்தைகளை ஒரே மாதிரியான சூழ்நிலையில் வாழும் தினசரி வாழ்க்கையிலிருந்து வேறுபடுத்தும்பொருட்டும், அவர்கள், அருகிலுள்ள சுற்றுலாத் தலங்களுக்கு ஆண்டிற்கொரு முறை சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

காப்பகங்களை அவ்வப்போது ஆய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்மூலம் ஆதரவற்ற குழந்தைகளுக்கு சிறந்த சேவை அளிக்கப்படுகிறது. இக்காப்பகங்கள் சிறப்பாகச் செயல்படுவதற்காக ஆலோசனை அளிப்பதற்கென, சமூகப் பணியாளர்களை உள்ளடக்கிய குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. இக்காப்பகங்கள் நல்ல நிர்வாக அமைப்புடன் இயங்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் கீழ்க்கண்ட 7 உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழுவை அரசு ஏற்படுத்தி உள்ளது:

1. மாவட்ட ஆட்சித் தலைவர் — தலைவர்
2. மாவட்டக் கல்வி அலுவலர் — உறுப்பினர்
3. பகுதிநேர மருத்துவ அலுவலர் — உறுப்பினர்
4. மாவட்ட சமூக நல அலுவலர் — உறுப்பினர்





5. மாநில சமூக நல வாரிய உறுப்பினர் — அலுவல் சாரா உறுப்பினர்
6. மாவட்ட ஆட்சியரால் நியமிக்கப்படும் சமூகப் பணியில் உள்ள இரண்டு சமூக சேவகர்கள் — அலுவல் சாரா உறுப்பினர்கள்

இக்குழு, மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி காப்பகங்களின் முன்னேற்றத்தினையும், குழந்தைகளின் கல்வி, ஆரோக்கியம் மற்றும் குழந்தைகளைக் காப்பகத்தில் சேர்த்தல் ஆகியவை குறித்துக் கண்காணிக்கிறது. காப்பகங்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்கு மாவட்ட சமூக நல அலுவலருக்கு இக்குழு உதவுகிறது.

## 2.12 குழந்தைகள் நலனில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பங்கேற்பு

காப்பகங்களை நடத்தும் தொண்டு நிறுவனங்களுக்கு 1-4-1992 முதல் பாதுகாப்பும், பராமரிப்பும் தேவைப்படும் குழந்தைகளுக்கு உணவு, உடை போன்ற செலவினங்களுக்காக, 80% பராமரிப்பு மானியமாக, ஒரு குழந்தைக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.200/- வீதம் அரசு வழங்குகிறது. மீதமுள்ள 20 சதவிகித செலவினத் தொகையான ரூ.50/-ஐ அந்நிறுவனங்களே ஏற்றுக்கொள்கின்றன. தற்போது 174 தொண்டு நிறுவனங்கள் 12,477 குழந்தைகளைப் பராமரிப்பதற்காக இம்மானியத்தைப் பெறுகின்றன.

## 2.13 பெண் குழந்தைப் பாதுகாப்புத் திட்டம்

குடும்பக் கட்டுப்பாடு மற்றும் பெண் சிசுவதை ஒழிப்பு ஆகியவற்றிற்கு ஊக்கமளித்து ஆண் குழந்தைகளை மட்டுமே விரும்பிப் பெற்றுக்கொள்ளும் போக்கைக் கட்டுப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். பெண்கள் இச்சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையாகக் கல்வி கற்க வாய்ப்பு ஏற்படுத்தப்படுவதை இத்திட்டம் உறுதி செய்கிறது.

இத்திட்டத்தின்கீழ் வேறு குழந்தைகள் எவரும் இல்லாமல் ஒரே ஒரு பெண் குழந்தை மட்டுமே உள்ள குடும்பங்களில் பெற்றோரில் எவரேனும் ஒருவர் 35 வயதுக்கு முனனதாகக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்டு இருந்தால், அக்குழந்தையின் பெயரில், தமிழ்நாடு மின்விசை நிதி அடிப்படை மேம்பாட்டு நிறுவனத்தில் தொடக்க வைப்பீடாக ரூ.22,200/- அரசால் செலுத்தப்படுகிறது. இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும்

வட்டித் தொகையிலிருந்து மாதம் ஒன்றுக்கு ரூ.150/—ஐ அப்பெண் குழந்தை, முதல் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை கல்வி பயிலும் செலவிற்காக வழங்கப்படுகிறது. 20 ஆம் ஆண்டில், வைப்பீடு செய்யப்பட்ட ஆண்டிலிருந்து முழுமையாக வட்டியுடன்கூடிய முதிர்வுத் தொகை அப்பெண்ணின் மேற்கல்வி/திருமணச் செலவிற்கு உதவும்.

இரண்டு பெண் குழந்தைகள் மட்டுமே இருந்து ஆண் குழந்தை இல்லாத குடும்பங்களில் அப்பெண் குழந்தைகள் ஒவ்வொருவரின் பெயரிலும் தமிழ்நாடு மின்விசை நிதி அடிப்படை மேம்பாட்டு நிறுவனத்தில் ரூ.15,200/—ஐத் தொடக்க வைப்பீடாக அரசு செலுத்துகிறது. இத்தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு அப்பெண் குழந்தைகள் 1 முதல் 10—ம் வகுப்பு வரை ஒவ்வொருவருக்கும் கல்வி பயில மாதம் ஒன்றுக்கு ரூ.150/— வழங்கப்படும். 20 ஆண்டுகளுக்குப் பிறகு வட்டியுடன்கூடிய முதிர்வுத் தொகை முழுமையாக ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும். இது அக்குழந்தைகள் மேற்கல்வி பெற/திருமணச் செலவை ஈடு செய்ய உதவிடும்.

## 2.14 தொட்டில் குழந்தைத் திட்டம்

தொட்டில் குழந்தைத் திட்டம் முதன்முதலில் சேலம் மாவட்டத்தில் பெண் சிசுக் கொலையினை அறவே ஒழிக்கும் நோக்கோடு ஏற்படுத்தப்பட்டது. பின்னர் பெண் சிசுக் கொலை அதிகமாக நடக்கின்ற மாவட்டங்களாகக் கண்டறியப்பட்ட மதுரை, தேனி, திண்டுக்கல் மற்றும் தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்கு இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்கள், போதிய பணியாளர்கள், உள்கட்டமைப்பு வசதிகளான மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், தொலைபேசி வசதி, குளிர்சாதனப் பெட்டி வசதி ஆகியவற்றுடன் தொடங்கப்பட்டுள்ளன. தொட்டில்கள் மாவட்ட சமூக நல அலுவலகங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள், அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார மையம்/துணை மையம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டு குழந்தைகள் பெறப்படுகின்றன.

இந்த வரவேற்பு மையங்கள் கைவிடப்பட்ட/தேவையில்லை என ஒதுக்கப்பட்ட சிசுக்களைப் பெற்று, அவற்றின் உயிரைக் காப்பதில் முக்கியப் பங்காற்றுகின்றன.





மாவட்ட சமூக நல அலுவலர்கள் இத்திட்டத்தில் ஒருங்கிணைப்பாளர்களாகச் செயல்படுகின்றனர்.

பெண் சிசுவதையைத் தடுப்பதில் மற்ற துறைகளுடன் மாவட்ட நிர்வாகம் ஒருங்கிணைந்து செயலாற்றுகிறது.

## 2.15 தத்து எடுத்தல்

தத்து திட்டமானது அனாதையாக்கப்பட்ட, கைவிடப்பட்ட, ஆதரவற்ற, ஒதுக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தக்கதொரு குடும்பச் சூழலை ஏற்படுத்திக் கொடுத்து, அதன்மூலம் அக்குழந்தைகளுக்குப் பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அன்பும், அரவணைப்பும் கிடைக்கவும், அவர்களிடமுள்ள செயல் திறன் மற்றும் உள்ளாற்றலை வெளிப்படுத்தவும் உதவுகிறது. மேலும், குழந்தையில்லாக் கணவன்—மனைவிக்கு, தங்களுக்கென குழந்தையைப் பேணிப் பராமரிக்கும் வாய்ப்பும், மகிழ்ச்சியும் இத்திட்டம் வழங்குகிறது. குழந்தைகள் உடலாலும், உள்ளத்தாலும் இயல்பான வளர்ச்சியைப் பெறவும், அறிவாற்றலையும், பொருளாதார நிலையையும் உயர்த்திக்கொள்ளவும், குழந்தைகள் தவறான முறைகளில் ஈடுபடுத்தப்படுவதைத் தடுப்பதிலும், அனாதைக் குழந்தைகள் சமூகத்தால் சிறுமைப்படுத்தப்படுவதைத் தடுப்பதிலும் இத்திட்டம் முக்கியப் பங்காற்றுகிறது.

உள்நாட்டில் தத்துக் கொடுக்க 21 நிறுவனங்களுக்கு உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனங்கள் சென்னை, கோவை, தருமபுரி, திருச்சி, தூத்துக்குடி, மதுரை, சேலம், நாமக்கல், திண்டுக்கல், நாகப்பட்டினம், திருநெல்வேலி, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் செயல்படுகின்றன. உரிமம் பெற்ற நிறுவனங்களில் 9 நிறுவனங்களுக்கு வெளிநாட்டினருக்கு தத்துக் கொடுக்கவும் உரிமம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் மாவட்டத்திற்கு குறைந்தபட்சம் ஒரு தத்து நிறுவனத்தைக் கண்டறிய அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உரிமம் அளிக்கப்பட்ட எல்லா நிறுவனங்களும் சட்டபூர்வ தத்தெடுத்தலை மேற்கொள்ள அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பொது மக்களிடையே தத்தெடுத்தல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதன்மூலம், கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகளைத் தத்தெடுப்பதற்கு அரசு ஊக்கமளித்து வருகிறது. இத்திட்டத்திற்கு மாவட்ட சமூக நல அலுவலர்கள் ஒருங்கிணைப்பு அலுவலர்களாக நியமிக்கப்பட்டு உள்ளனர்.

## 2.16 முதியோர் இல்லங்கள்

மக்கள் தொகை அமைப்பில் ஏற்பட்டுள்ள மாறுதல்களாலும், வாழ்நாள் நீட்சியின் காரணத்தினாலும் முதியோர்களின் எண்ணிக்கை மிகவும் வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தியாவில் நவீன வாழ்க்கை மற்றும் நகர வளர்ச்சியின் காரணமாக முதியோர்கள் கவனிக்கப்படாமல் ஒதுக்கப்படுகிறார்கள். வறுமை நிலையில் உள்ள குடும்பத்தைச் சார்ந்த முதியோர்களும், ஆதரவற்ற நிலையில் உள்ள முதியோர்களுமே அன்றாட வாழ்வில் உணவு, உடை, உறைவிடம் இன்றி அதிகம் பாதிக்கப்படுகின்றனர். அவர்களின் இன்னல்களைக் களைய, 16 தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு முதியோர் இல்லங்களை நடத்த அரசு மானியம் அனுமதித்துள்ளது. ஒவ்வோர் இல்லத்திலும் 40 முதியோர்கள் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வில்லங்களில் 620 முதியோர்களுக்கு உணவு மற்றும் இருக்க இருப்பிட வசதி அளிக்கப்படுகின்றது. முதியோர்களுக்குப் பராமரிப்புச் செலவிற்காக மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு ரூ.300/– வீதம் மானியமாக மாநில அரசு வழங்கி வருகிறது. இவ்வில்லங்கள் அவ்வப்போது அலுவலர்களால் ஆய்வு செய்யப்படுகின்றன.

## 2.17 சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத் திட்டங்கள்

சுனாமிப் பேரலையின் பாதிப்பால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், கன்னியாகுமரி, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்க சமூக நலத் துறையின்மூலமாகக் கீழ்க்கண்ட நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:

### (அ) சிறப்பு குழந்தைகள் காப்பகம்

சுனாமிப் பேரலையால் ஆதரவற்றோராக்கப்பட்ட, குறிப்பாகக் குழந்தைகள் மற்றும் பெண்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும்பொருட்டு, மூன்று அரசு சிறப்பு குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்கண்ட உன்னதமான நோக்கத்திற்காக, அரசு சிறப்பு குழந்தைகள் காப்பகங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ரூ.15.92 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.17.76 இலட்சம் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டது. தற்சமயம் நாகப்பட்டினம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் மட்டுமே 0–11 வரையிலான வயதுடைய தலா 100 குழந்தைகள் பயன் பெறும் வகையில் இக்காப்பகங்கள் செயல்பட்டு வருகின்றன. கன்னியாகுமரி



மாவட்டத்தில் தொடங்கப்பட்ட சிறப்பு குழந்தைகள் காப்பகம் போதிய குழந்தைகள் இல்லாத காரணத்தால் 11–3–2006 முதல் நாகர்கோவிலிலுள்ள அரசு குழந்தைகள் காப்பகத்துடன் இணைக்கப்பட்டது.

### (ஆ) வளர் இளம் பெண்கள் (14–18) மற்றும் 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்கான சிறப்புச் சேவை இல்லம்

11 வயது முதல் 18 வயதிற்குட்பட்ட வளர் இளம் பெண்களுக்காகவும், 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்காகவும், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சிறப்புச் சேவை இல்லங்கள் முறையே 6–1–2005 மற்றும் 18–1–2005 ஆகிய தேதிகளில் தொடங்கப்பட்டன. தற்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட தகுதியான உள்ளுறைவோர் இல்லாத காரணத்தால் கன்னியாகுமரி அரசு சிறப்புச் சேவை இல்லமானது மற்ற குழந்தைகளும் பயன் பெறும் வகையில் பொதுச் சேவை இல்லமாக மாற்றப்பட்டுள்ளது. மேற்கண்ட சிறப்புச் சேவை இல்லங்களுக்கு இல்லம் ஒன்றிற்குத் தலா ரூ.20.87 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.11.71 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### (இ) நிதி உதவித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், சுனாமி பேரலையால் பெற்றோரை இழந்து நிராதரவாக உள்ள 11 வயது வரையிலான சிறார்கள் (இரு பாலர்) மற்றும் 11 முதல் 18 வயது வரையிலான வளர் இளம் பெண்களுக்குத் தலா ரூ.5 இலட்சமும், 18 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத பெண்களுக்குத் தலா ரூ.3 இலட்சமும் தமிழ்நாடு மின்விசை நிதி அடிப்படை மேம்பாட்டு நிறுவனத்தில் பயனாளியின் பெயரில் நிதி வைப்பீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை முதிர்வு அடைந்தவுடன் பயனாளியின் உயர் கல்விக்கோ அல்லது சுய வேலைவாய்ப்பிற்கோ பயன்படும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை ரூ.7,11,26,664/– முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்தும், இயற்கைப் பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும் பெறப்பட்டு வைப்பீடு செய்யப்பட்டதன்மூலம் 223 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

### (ஈ) சுனாமியால் பாதிக்கப்பட்டோர்க்கு உளவியல் ரீதியான அரவணைப்புப் பயிற்சி

தமிழ்நாடு அரசு ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) நிதியுதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக உளவியல்ரீதியான அரவணைப்புப் பயிற்சி இத்துறையின்மூலமாக (இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை நீங்கலாக) 11 கடலோர

மாவட்டங்களில் நடத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. மேற்கண்ட திட்டத்தின்கீழ், இதுவரை 2,813 சமுதாய அளவிலான பயிற்சியாளர்களுக்குப் பயிற்சி வழங்கப்பட்டு அவர்கள்மூலம் 32,852 குடும்பங்களுக்கும், 1,51,424 நபர்களுக்கும் உளவியல் ரீதியான ஆலோசனை (counselling) வழங்கப்பட்டது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களிடையே குடிப்பழக்கத்தைத் தடுப்பதற்கான ஒரு சிறப்புத் திட்டம் தொடங்கப்பட்டு, அதன் தொடர்ச்சியாக உலக சுகாதார மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் டி.டி.கே. இரங்கநாதன் மருத்துவ ஆராய்ச்சி மையத்தால் சமுதாய களப் பணியாளர்களுக்குப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட நபர்களிடம் உள்ள குடிப்பழக்கத்திலிருந்து அவர்கள் மீண்டு வரும் வகையில் அவர்களுக்கு சமுதாய நலப் பணியாளர்கள் தக்க ஆலோசனை வழங்கி வருகின்றனர்.

## 2.18 தமிழ்நாடு சமூக நல வாரியம், சென்னை

1954—ல் தொடங்கப்பட்ட தமிழ்நாடு சமூக நல வாரியம், கீழ்க்கண்ட நோக்கங்களுடன் செயல்பட்டு வருகிறது:

1. சமூக நல தன்னார்வ அமைப்புகளை உருவாக்குவதை ஊக்குவித்தல்.
2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித் திறனை மேம்படுத்துவதற்கு தொழில்நுட்பம் மற்றும் நிதியுதவி அளித்து அவற்றின் தரத்தினை உயர்த்துதல்.
3. அரசு நிதி உதவிமூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.

1953—ல் தொடங்கப்பட்டது முதல் சமூகத்தில் மகளிரின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டினை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு மத்தியில் சமூக நல வாரியம் செயல்பட்டு வருகிறது. இந்நோக்கத்தை எட்டும் வகையில், மத்திய சமூக நல வாரியம் கல்வி, பயிற்சி, விழிப்புணர்வை ஏற்படுத்துதல், வருவாய்ப் பெருக்க வழிகள், மற்றும் இதர சேவைகள் போன்றவைமூலம் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு உதவி புரிகிறது. தொண்டு நிறுவனங்களுக்குத் திட்டங்களின் தன்மையைப் பொறுத்து 50 சதவிகிதம் முதல் 90 சதவிகிதம் வரை நிதியுதவி அளிக்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் நிதியுதவியும்கூட வழங்கப்படுகிறது.

கடந்த நிதியாண்டில், 810 தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கும் 1,453 தொண்டு அலகுகளுக்கு ரூ.452.84 இலட்சம் மத்திய அரசிடமிருந்து



நிதியுதவி பெற்று வழங்கப்பட்டுள்ளது. மாநில அரசின் நிதியுதவியான ரூ.14.80 இலட்சம் 206 தன்னார்வ அலகுகளைக் கொண்ட 206 தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 2.19 தமிழ்நாடு சமூக நல வாரியத்தின்கீழ் கிராமப்புறங்களில் செயல்படும் தொண்டு நிறுவனங்களுக்குத் தமிழக அரசின் மானியம்

கிராமப்புறங்களில் மக்கள் நலனுக்காகச் செயல்படும் 200 தொண்டு நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டு, குறைந்தபட்சம் மூன்று வருடங்கள் நல்ல நிலையில் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெறுகின்றன. திறன் பயிற்சி அளிப்பதற்கான தையல் இயந்திரங்கள், தட்டச்சு இயந்திரங்கள், கயிறு இராட்டினங்கள் முதலிய உபகரணங்களும் பகல் நேரப் பராமரிப்பு மையங்களில் உள்ள குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் போன்றவை வாங்குவதற்கு ஒவ்வோர் ஆண்டும் 200 தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குத் தலா ரூ.5,000/— வீதம் மானியமாக அரசால் வழங்கப்படுகிறது. இத்தொண்டு நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு சமூக நல வாரியம்மூலம் நிதியுதவி அளிக்கப்படுகிறது.

## 2.20 குடும்ப ஆலோசனை மையம்

குடும்ப ஆலோசனை மையத்தின் நோக்கமானது, குடும்பத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகளைக் களைந்து ஒற்றுமையை நிலவச் செய்வதாகும். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நாமக்கல், கரூர், ஈரோடு, விழுப்புரம், வேலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று வரும் 6 குடும்ப ஆலோசனை மையங்களுக்கு, தமிழ்நாடு சமூக நல வாரியத்தின் வாயிலாக அரசு நிதி உதவி அளித்து வருகிறது. இம்மையங்கள் வரதட்சணைக் கொடுமை, குடும்பத்தில் நிலவும் கருத்து வேறுபாடுகள், குடிப்பழக்கம் ஆகிய இன்னல்களுடன் அணுகும் பெண்களுக்கு அவற்றை நீக்க உதவி செய்வதுடன், எச்.ஐ.வி./எய்ட்ஸ் நோயாளிகளுக்குத் தகுந்த ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றன.

## 2.21 தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம்

தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம் 1993—ல் பெண்களின் நலனுக்காகவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் தொடங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட பெண்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, உடனடியாக உரிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டு, குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை கிடைக்க வகை செய்யப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 22

இதன்மூலம், பல பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியும், நிவாரணமும், பாதுகாப்பும் கிடைக்குமாறும் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பல பெண்களுக்கு இதன் மூலம் உதவி கிடைத்துள்ளது.

### 2006–2007 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்

### சமூக நலம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ.எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | அரசு சேவை இல்லங்களுக்கு அவசர மின் விளக்கு வழங்குதல் | 0.42 |
| 2 | அரசு குழந்தைகள் காப்பகங்களுக்கு அவசர மின் விளக்குகள் வாங்குதல் | 0.25 |
| 3 | திருவண்ணாமலை, தூத்துக்குடி, கடலூர், கன்னியாகுமரி, சிவகங்கை மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட சமூக நல அலுவலகங்களுக்கு புதிய ஈப்பு வாங்குதல் | 26.30 |
| 4 | சர்வதேச முதியோர் தினம் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் 1 ஆம் நாள் கொண்டாடுதல் | 5.50 |
| 5 | அனைத்து மாவட்ட சமூக நல அலுவலகங்களுக்கும் நகல் எடுக்கும் இயந்திரம் வாங்குதல் | 18.00 |
| 6 | அனைத்து மாவட்ட சமூக நல அலுவலகங்களுக்கும் தொலை அச்சுக் கருவி வாங்குதல் | 1.80 |
| 7 | சமூக நல இயக்ககத்திற்கு 2 ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்குதல் | 1.20 |
| 8 | அனைத்து மாவட்ட சமூக நல அலுவலகங்களுக்கும் கணினி மற்றும் இதர பாகங்கள் வாங்குதல் | 15.00 |
| 9 | சமூக நல இயக்ககத்தில் உள்ள அலுவலர்களுக்கு கணினி வாங்குதல் | 4.00 |
| 10 | தஞ்சாவூர் அரசு குழந்தைகள் காப்பகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல் | 4.40 |
| 11 | தஞ்சாவூர் அரசு சேவை இல்லத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல் | 36.00 |
| 12 | விருந்தினராகத் தங்கும் மகளிர் விடுதி சென்னையில் ஆரம்பித்தல் | 1.82 |
| | மொத்தம் | 114.69 |



2006 ஆகஸ்ட் 22]

# அத்தியாயம் 3

## சத்துணவு

### 3.1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

சத்துணவு அளித்தல் மற்றும் தமிழ்நாட்டை ஊட்டச் சத்துக் குறைபாடற்ற மாநிலமாக மாற்றல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு தமிழக அரசு, வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்வோரின், குறிப்பாக குழந்தைகள் மற்றும் முதியோரின் ஊட்டச் சத்து நிலையை மேம்படுத்த முனைந்து வருகிறது.

1982–ல் அறிமுகப்படுத்தப்பட்ட புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம், முதலில் ஊரகப் பகுதிகளிலுள்ள குழந்தைகள் நல மையங்களில் 2–5 வயதிற்குட்பட்ட முன் பருவக் கல்வி பயிலும் குழந்தைகள் மற்றும் 5–9 வயதிற்குட்பட்ட ஆரம்பப் பள்ளிக் குழந்தைகள் ஆகியோர் பயனடையும் வண்ணம் 1–7–1982 முதல் செயல்படுத்தப்பட்டது. பின்னர், 15–9–1982 முதல் இத்திட்டம் நகர்ப் பகுதிகளிலுள்ள சத்துணவு மையங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு, 15–9–1984 முதல் 10–15 வயது வரையிலான பள்ளி மாணவ, மாணவிகளும் பயனடையும் வகையில் மேலும் விரிவுபடுத்தப்பட்டது. 15–1–1983 முதல், ஓய்வூதியம் பெறும் முதியோரும் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற்று வருகின்றனர்.

பொருளாதார அடிப்படையில் பின்தங்கிய குழந்தைகளுக்குத் தேவையான ஊட்டச் சத்து நிறைந்த உணவினை வழங்குவதன்மூலம் குழந்தைகளிடையே காணப்படும் ஊட்டச் சத்துக் குறைவினைச் சரிசெய்ய முயற்சி செய்வதோடு, குழந்தைகளின் கல்வியறிவு விகிதத்தினை அதிகரிக்கவும், பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கையை அதிகரித்து, பள்ளிக்குச் செல்லாமல் இடையில் நின்றுவிடும் குழந்தைகள் எண்ணிக்கையைக் குறைப்பது இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

[2006 ஆகஸ்ட் 22

**அங்கன்வாடிகளில் உள்ள சத்துணவு மையங்கள் (31-3-2006 நிலவரப்படி)**

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | குழந்தைகள் | | | கருவுற்ற/பாலூட்டும் தாய்மார்கள் (+) முதியோர் உதவித் தொகை பெறுவோர் | மொத்தம் |
| | | | இணை உணவு | | மதிய உணவு | | |
| | | | 6-24 மாதங்கள் | 25-36 மாதங்கள் | 24-60 மாதங்கள் | | |
| 1. | ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் | 23177 | 181657 | 128590 | 330763 | 150371 (+) 12711 | 804092 |
| 2. | உலக வங்கி உதவி பெறும் ஒ.கு.வ.ப.-3 திட்டம்* | 19500 | 214568 | 130391 | 740674 | 349249 (+) 30705 | 1465587 |
| | மொத்தம் | 42677** | 396225 | 258981 | 1071437 | 543036 | 2269679 |

* 1-4-2006 முதல், 434 திட்டப் பகுதிகளில் உள்ள 42,677 அங்கன்வாடி மையங்களும் மைய அரசின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணியின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

** இந்த நிதியாண்டில் மைய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 3,049 புதிய அங்கன்வாடி மையங்கள் கூடுதலாகத் தொடங்கப்படுவதற்கு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

**பள்ளி சத்துணவு மையங்கள்**

| வ. எண் | திட்டம் | மையங்களின் எண்ணிக்கை | பயனடைவோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (கிராமப்புறம்) | 39,597 | 54,98,309 |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் (நகர்ப்புறம்) | 1,747 | 3,76,693 |
| | மொத்தம் | 41,344 | 58,75,002 |

**மொத்தப் பயனாளிகள் எண்ணிக்கை 22,69,679 + 58,75,002 = 81,44,681**



2006 ஆகஸ்ட் 22]

**நாள் ஒன்றுக்கு ஒவ்வொரு பயனாளிக்கும் வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவு விதம்**

| வ. எண் | உணவுப் பொருட்கள் | வயதுப் பிரிவுகள் (வருடங்களில்) | | | | முதியோர் உதவித் தொகை பெறுவோர் |
|---|---|---|---|---|---|---|
| | | 2-5 | 5-9 | 10-15 | | |
| | | | 1-5 ஆம் வகுப்பு | 6-8 ஆம் வகுப்பு | 9-10 ஆம் வகுப்பு | |
| 1 | அரிசி | 80 கிராம் | 100 கிராம் | 100 கிராம் | 120கிராம் | 200 கிராம் |
| 2 | பருப்பு | 10 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் | 15 கிராம் |
| 3 | எண்ணெய் | 2 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் | 1 கிராம் |
| 4 | உப்பு | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் | 1.9 கிராம் |
| 5 | காய்கறிகள், தாளிதம், மற்றும் எரிபொருள் | 35 பைசா | 35 பைசா | 35 பைசா | 35 பைசா | 35 பைசா |

சத்துணவு மையங்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்குகிறது. காய்கறிகள் (15 பைசா), தாளிதம் (9 பைசா) மற்றும் எரிபொருள் (11 பைசா) ஆகியவற்றிற்கென பயனாளி ஒருவருக்கு ஒரு நாளைக்கு 35 பைசா வீதம் நிதியுதவியும் வழங்கப்படுகிறது.

**புரதச் சத்து மிகுந்த உணவு**

2 வயது முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியருக்கு 3-6-1989 முதல் சத்துணவுடன் வேக வைத்த ஒரு முட்டை வழங்கப்பட்டு வந்தது.

2006 ஆம் ஆண்டு முதல், பெருந்தலைவர் காமராசர் பிறந்த ஜூலைத் திங்கள் 15 ஆம் நாள் 'கல்வி வளர்ச்சி நாள்' ஆகக் கொண்டாடப்படுகிறது. இவ்வரசால் அறிவிக்கப்பட்டபடி, 15-7-2006 முதல் 2-15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியருக்கு வாரத்திற்கு 2 முட்டைகள் திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் வழங்கப்பட்டு வருகின்றன. இதனால் ஏற்படும் கூடுதல் செலவினம் ஆண்டுக்கு சுமார் 40 கோடி ரூபாய் ஆகும்.

இது தவிர, வியாழக்கிழமைகளில் 20 கிராம் முழுக் கொண்டைக் கடலை அல்லது 20 கிராம் முழு பச்சைப் பயறு (மாற்றி மாற்றி) மற்றும்

53-238—18

[2006 ஆகஸ்ட் 22

வெள்ளிக்கிழமைகளில் 20 கிராம் வேக வைத்த உருளைக்கிழங்கு ஆகியவை 2–15 வயதிற்குட்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படுகிறது. மேற்கண்டவற்றால், ஒவ்வொரு பயனாளிக்கும் வாரத்திற்குக் கூடுதலாக 250.60 கலோரி சக்தியும், 15.98 கிராம் புரதச் சத்தும் கிடைக்கின்றது.

**உப்பு**

2–15 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே பொதுவாகக் காணப்படும் ஊட்டச் சத்துக் குறைபாட்டு விளைவுகளான இரும்புச் சத்து குறைபாடு/இரத்தச் சோகை ஆகியவற்றைக் கட்டுப்படுத்தவும், வராமல் தடுக்கவும் இரும்புச் சத்து மிகுந்த (Iron Fortified) உப்பு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் உணவு தயாரிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது. இருமுறை செறிவூட்டப்பட்ட உப்பு, நீலகிரி, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, கரூர், பெரம்பலூர் மற்றும் நாமக்கல் ஆகிய ஏழு மாவட்டங்களில் சத்துணவு மையங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**உணவுப் பொருட்கள் வழங்கல்**

வட்டார வளர்ச்சி அலுவலர்கள்/குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள் அளிக்கும் தேவைப் பட்டியலின் அடிப்படையில், அரிசி, பருப்பு மற்றும் எண்ணெய் ஆகியவற்றை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தனது வட்டக் கிடங்கிலிருந்து நேரடியாக சத்துணவு மையங்களுக்கு/அங்கன்வாடி மையங்களுக்கு வழங்கி வருகிறது. பொதுவாக ஒவ்வொரு மாதமும் 10 ஆம் தேதி மற்றும் 25 ஆம் தேதி ஆகியவற்றுக்கு இடைப்பட்ட காலத்தில் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சத்துணவுப் பொருட்கள் வழங்கப்பட்டமைக்கான தொகைகளை (நகராட்சி நிர்வாக ஆணையரால் வழங்கப்படும் சென்னை மாநகராட்சிப் பள்ளி மையங்களுக்கு வழங்கப்பட்ட உணவுப் பொருட்களுக்கான தொகைகள் தவிர) மாவட்ட ஆட்சித் தலைவர்கள், சம்பந்தப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முதுநிலை மண்டல மேலாளர்களுக்கு வழங்குகின்றனர். காய்கறிகள், தாளிதம் மற்றும் விறகு ஆகியவை சத்துணவு அமைப்பாளர்களால் உள்ளூரில் வாங்கப்படுகின்றன. மேற்கண்டவை தவிர, சில்லறைச் செலவினங்களான துப்புரவு பொருட்கள் (சோப்பு, பினாயில் முதலியவை), துடைப்பம் வாங்குவதற்கென மையம் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.20/–ம் (பயனாளிகள் எண்ணிக்கை 500 வரை) மற்றும் ரூ.30/–ம் (500–க்கு மேலான பயனாளிகள்) வழங்கப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 22]

**சர்க்கரைப் பொங்கல்**

மதிப்பு வாய்ந்த தலைவர்கள் பிறந்த நாளன்று மதிய உணவுத் திட்டப் பயனாளிகளுக்கு சர்க்கரைப் பொங்கல் வழங்கப்பட்டு வருகிறது.

**எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ப்ளர் வழங்குதல்**

அங்கன்வாடி மற்றும் பள்ளி சத்துணவுக் கூடங்களின் பயனாளிகளான குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியருக்கென எவர் சில்வர் தட்டு மற்றும் டம்ப்ளர் வாங்கி வழங்கப்படும்.

**பெண்களுக்கான வேலைவாய்ப்பு**

இத்திட்டம் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் வாழும் பெண்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்குகிறது. விதவைகள் மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு மையமும் ஒரு சத்துணவு அமைப்பாளர், ஒரு சமையலர் மற்றும் ஓர் உதவியாளர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பளிக்கிறது. 500–க்கு மேற்பட்ட பயனாளிகளைக் கொண்ட மையங்களுக்குக் கூடுதலாக ஒரு சமையலர் மற்றும் ஓர் உதவியாளர் வழங்கப்படுகின்றனர். கோழிப் பண்ணைகளை அமைத்து, சத்துணவுத் திட்டத்திற்குத் தேவையான முட்டைகளை விநியோகிக்க மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஊக்கப்படுத்தப்படுகின்றனர்.

**3.2 தேசிய ஆரம்பப் பள்ளிக் கல்விக்கான ஊட்டச் சத்து உதவித் திட்டம்**

தேசிய ஆரம்பப் பள்ளிக் கல்விக்கான ஊட்டச் சத்து உதவித் திட்டம் தமிழ்நாட்டில் 15–8–1995 அன்று தொடங்கி வைக்கப்பட்டது இத்திட்டத்தின்கீழ், 1–5 ஆம் வகுப்பு வரை பயிலும் ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளுக்கு ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு 100 கிராம் வீதம் ஒரு கல்வி ஆண்டில் 10 மாதங்களுக்கு (200 நாட்களுக்கு) மதிய உணவு வழங்குவதற்கென மத்திய அரசின் மனித வள மேம்பாடு மற்றும் கல்வித் துறையினால் இலவச அரிசி வழங்கப்படுகிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தில் உள்ள சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளைக் கொண்டு, இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி சமைத்த உணவாக்கப்பட்டு குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. ஒரு குழந்தைக்கு நாள் ஒன்றுக்கு ரூ.1.50 வீதம் சமைக்கும் செலவு மத்திய அரசினால் மீள அளிக்கப்படுகிறது.

## 3.3. கண்காணித்தல்

சத்துணவு மையங்களில் மாணவர்களின் வருகைக்குத் தக்கவாறு உரிய அளவில் தரமான உணவு வழங்கப்படுவதை உறுதிப்படுத்த, மாநில அளவிலான ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் அங்கன்வாடி மையங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க மாவட்ட/வட்டார/மாநகராட்சி/நகராட்சி மற்றும் ஊராட்சி மன்ற அளவில் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழுக்களில் அலுவலர்களுடன் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் இடம் பெற்றுள்ளனர்.

சத்துணவு உட்கொள்ளும் மாணவ, மாணவியரின் தாய்மார்களில், விருப்பமுள்ள ஒருவர் அல்லது இருவர் முறைப் பணியில், சுகாதாரமான முறையில் தரமான உணவு தயாரிக்கப்பட்டு, மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுவதைக் கண்காணித்து வருகின்றனர்.

## 3.4. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள்

ஒரு சமுதாயத்தின் ஒட்டுமொத்த நல்வாழ்க்கை அதன் ஊட்டச் சத்து நிலையின்மூலமே தீர்மானிக்கப்படுகிறது. முன் பருவக் கல்விப் பருவத்தில் உள்ள குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலை சமுதாயத்தின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தைப் பிரதிபலிக்கிறது. தமிழ்நாட்டில், குழந்தைகளின் ஊட்டச் சத்து நிலை கடந்த வருடங்களில் கணிசமான அளவில் மேம்பட்டு, 1992–93 ஆம் ஆண்டு 41.40 விழுக்காடாக இருந்த இயல்பு நிலை குழந்தைகள் சதவிகிதம், 2005–06 ஆம் ஆண்டு 61.45 விழுக்காடாக உயர்ந்துள்ளது. 1999 ஆம் ஆண்டில் 0.45 விழுக்காடாக இருந்த கடுமையான ஊட்டச் சத்துக் குறைபாடு மார்ச் 2006-ல் 0.07 விழுக்காடாகக் குறைந்துள்ளது. குழந்தைகளின் இறப்பு விகிதம், உயிருடன் பிறந்த 1000 குழந்தைகளில் 53 (1998) ஆக இருந்தது, 42 (2003) ஆகக் குறைந்துள்ளது.

ஊட்டச் சத்து நிலை உயர்த்தல் தமிழக அரசியல் கொள்கைகளில் எப்பொழுதும் ஒரு முக்கிய இடத்தைப் பெற்று வருகிறது. குழந்தைகள் மற்றும் பெண்களுக்காகப் பல்வேறு ஊட்டச் சத்துத் திட்டங்கள் தமிழகத்தில் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மார்ச் 2006 வரையில் உலக வங்கி உதவி பெற்ற ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் 3-வது திட்டத்தின்கீழ் 318 கிராமப்புற வட்டாரங்களில் செயல்படும் 19,500 மையங்களின் மூலமாக சுகாதார மற்றும் ஊட்டச் சத்துப் பணிகள் அளிக்கப்பட்டு



வந்தன. இதே சேவைகள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் (பொது) திட்டத்தின்கீழ் 116 நகர்/கிராமப்புறத் திட்டப் பகுதிகளில் செயல்படும் 23,177 மையங்களின் மூலமாகவும் அளிக்கப்பட்டு வந்தன. 1–4–2006 முதல் அனைத்து 434 திட்டப் பகுதிகளிலும் உள்ள 42,677 அங்கன்வாடி மையங்கள் மத்திய அரசின் நிதி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

### புதிய அங்கன்வாடி மையங்கள்

திருத்தி அமைக்கப்பட்ட விதிமுறைகளின்படி, சமவெளிப் பகுதிகளில் 500 – 1,500 மக்களுக்கு ஒரு மையமும், மலைப் பகுதிகளில் 300 – 1,500 மக்களுக்கு ஒரு மையமும் ஏற்படுத்தப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் அனைத்து உறைவிடங்களையும் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறச் செய்யவும் மற்றும் உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளை நிறைவேற்றும் முகமாகவும் கூடுதலாக 3,049 அங்கன்வாடி மையங்களைத் தொடங்க தமிழகத்திற்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. இம்மையங்களைத் தொடங்க அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### 3.4.1. குறிக்கோள்கள்

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகளின் குறிக்கோள்களாவன:

(அ) குழந்தைப் பராமரிப்புப் பழக்கங்களைக் குடும்ப அளவில் மேம்படுத்துவதோடு 0–5 வயதுக் குழந்தைகளின் ஊட்டச் சத்து, சுகாதாரம், மன மற்றும் சமூக நிலையினை மேம்படுத்துதல், குறிப்பாக 3 வயதிற்குட்பட்ட குழந்தைகளிடையே ஊட்டச் சத்துக் குறைபாட்டைத் தடுத்தல்

(ஆ) பெண்களிடையே, குறிப்பாக கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்கள் ஆகியோரின் ஊட்டச் சத்து மற்றும் சுகாதார நிலையினை மேம்படுத்துதல்

(இ) பெண்களும், வளர் இளம் பெண்களும், தங்களுடைய மற்றும் தங்களது குடும்பங்களுடைய ஊட்டச் சத்து மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைத் திறமையுடன் எதிர்கொள்ளத் தேவையான கூடுதல் விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களை அதிகாரப் பகிர்வு பெறச் செய்தல்.

(ஈ) தமிழ்நாட்டை ஊட்டச் சத்துக் குறைபாடு இல்லாத மாநிலமாக மாற்றி, வறுமைக் கோட்டின்கீழ் உள்ளவர்களுக்கு முழு வாழ்க்கை சுழற்சிக்கு ஊட்டச் சத்துப் பாதுகாப்பு அளித்தல், குறிப்பாக கர்ப்பிணிகள், மழலையர், குழந்தைகள், வளர் இளம் பெண்கள் மற்றும் முதியோருக்கு ஊட்டச் சத்து அளித்தல்.

### 3.4.2. திட்டத்தின் பயனாளிகள்

- 0–3 வயது மற்றும் 3–5 வயதிலுள்ள குழந்தைகள்
- கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள்
- வளர் இளம் பெண்கள்
- ஓய்வூதியம் பெறும் முதியோர்
- சமுதாயக் குழுக்கள்/சமுதாயத் தலைவர்கள்

### 3.4.3. அளிக்கப்படும் சேவைகள் மற்றும் அவற்றை அளிப்பதற்கான செயல் உத்திகள்

- வளர்ச்சி நிலை உயர்த்துதல், தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு இணை உணவு அளித்தல், இளம் சிறார்களின் பாதுகாப்பு மற்றும் முன் பருவக் கல்வி ஆகியவை அங்கன்வாடி மைய அளவில் அளிக்கப்படுகின்றன
- சுகாதார மற்றும் ஊட்டச் சத்துப் பணியாளர்களை ஒருங்கிணைத்து, இலக்குப் பிரிவுகளுக்கு ஊட்டச் சத்து மற்றும் சுகாதார சேவைகள் அங்கன்வாடி மைய அளவில் அளிக்கப்படுகின்றன
- சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து மேற்பார்வையாளர்கள் இணைந்து ஆய்வுகளை மேற்கொள்கின்றனர்
- வட்டார மற்றும் மாவட்ட அளவில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இணை ஆய்வுகள் நடத்தப்படுகின்றன
- பயிற்சி மற்றும் தகவல் தொடர்புக் கூறுகளின்மூலம் திட்டத்திற்கு ஆதரவு அளிக்கப்படுகிறது
- கிராம அளவிலான மேலாண்மைக் குழுக்கள் மூலமாக, சமுதாயம் சார்ந்த செயல் உத்திகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன



### 3.4.4. 2006–2007 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்

சமீப காலமாக, இத்திட்டத்தின் அடிப்படை இலக்கு, "ஊட்டச் சத்துக் குறைபாடு மேலாண்மை" என்பதிலிருந்து "ஊட்டச் சத்துக் குறைபாட்டினைத் தவிர்த்தல்" ஆக மாறியுள்ளது. இதனை அடையும் முகமாக 2006–2007 ஆம் ஆண்டில் பல்வேறு கூறுகளின்கீழ் செயல் உத்திகளும், நடவடிக்கைகளும் உத்தேசிக்கப்பட்டுள்ளன. இவற்றில், குழந்தை பெறும் பருவத்திற்கு முந்தைய பருவத்தில் உள்ள வளர் இளம் பெண்களின் சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்து நிலைக்கு அதிகக் கவனம் செலுத்த முன்னுரிமை அளிக்கபபடும்.

தொடர்புடைய துறைகள் தனித்தனியே செயல்படுவதை விடுத்து, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து ஊட்டச் சத்து மற்றும் சுகாதார நிலையினை மேம்படுத்த செயல்படுகின்றன.

- அங்கன்வாடி மையங்கள், ஊட்டச் சத்து மற்றும் உடல் நலம் குறித்த முக்கியக் கருத்துகளை மக்களுக்கு விளக்கும் குவி மையங்களாகச் செயல்படுகின்றன
- தன் சுத்தம் மற்றும் சமுதாயச் சுத்தம் ஆகியவை சிறப்புக் கவனம் பெறுகின்றன
- அங்கன்வாடி மையங்கள் குழந்தைகளின் குறைபாடுகளைக் கண்டறியும் ஒருங்கிணைப்பு மையமாக விளங்கி அதன்மூலம் ஆரம்ப நிலையிலேயே குறைபாடுகளைக் கண்டறிவதற்கும், குணப்படுத்துவதற்கும் வசதி செய்கின்றன
- வறிய குடும்பங்கள் தங்களது வருமானத்தைப் பெருக்கிக்கொள்வதோடு, தங்களது குழந்தைகள் மற்றும் வளர் இளம் பெண்களின் ஊட்டச் சத்து நிலையினையும் மேம்படுத்த உதவிடும் வகையில், பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டங்களோடு, குழந்தை ஊட்டச் சத்துத் திட்டமும் சேர்த்து நடைமுறைப்படுத்தப்படுகிறது
- வளர் இளம் பெண்களின் உடல் நலத்தை மேம்படுத்த, சுகாதாரத் துறையுடன் இணைந்து, இரும்புச் சத்து மாத்திரைகள் மற்றும் வயிற்றுப் பூச்சி நீகக மருந்து ஆகியவை அளிக்கப்படுகின்றன. முன்னோடி ஆய்வுத் திட்டமாக

[2006 ஆகஸ்ட் 22

5 வட்டாரங்களில் வளர் இளம் பெண்களுக்கு ரூபெல்லா தடுப்பு ஊசி போடும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது

- கிராம அளவிலான மேலாண்மைக் குழு உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் குடும்பங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு பேறுகாலத் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், 0–3 வயதுக் குழந்தைகள், 3–5 வயதுக் குழந்தைகள் ஆகியோர் அங்கன்வாடி மையங்கள்மூலமாகப் பேணப்படுகின்றனர்
- அனைத்து கிராமங்களிலும் அயோடின் கலந்த உப்பின் உபயோகம் ஊக்கப்படுத்தப்படுகிறது

## 2006–2007 ஆம் ஆண்டில் உட்கூறுகளுக்கான திட்டங்கள்

### 1. தகவல், கல்வி மற்றும் தொடர்பு

தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் உள்ளிணைந்த கூறாகும். ஊட்டச் சத்துக் கல்வி மற்றும் ஊட்டச் சத்துப் பணிகள் உடன் நிகழ்வாக வழங்கப்பட்டு வருகிறது. இப்பிரிவின் செயல்பாடுகள், உடல் நலம் மற்றும் ஊட்டச் சத்துப் பணிகளை ஊக்கப்படுத்தி அங்கன்வாடி மையங்களின் மீதான நம்பிக்கை மற்றும் மதிப்பை உயர்த்துகின்றன. தகவல் தொடர்புப் பணிகள், சமுதாயப் பங்கேற்பை ஊக்கப்படுத்தி தாய் மற்றும் குழந்தையின் பாதுகாப்பு போன்றவற்றை உயர்த்தி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகளுக்கு ஆதரவளிக்க சமுதாயத்தை ஊக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

தகவல், கல்வித் தொடர்பின் இறுதி நோக்கமானது—சுகாதாரம் மற்றும் ஊட்டச் சத்துப் பழக்கவழக்கங்களில் உறுதியான மனமாற்றத்தைத் தனி நபர்கள் மற்றும் குடும்பம், சமுதாயம் ஆகியவற்றில் கொண்டு வந்து, அதன்மூலம் சமுதாயத்தில் ஊட்டச் சத்துப் பற்றாக்குறையைக் குறைக்க உதவுவதாகும். ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தில் தகவல், கல்வித் தொடர்புப் பணிகள் முக்கியமான பங்கு வகிப்பதால், இவை இத்திட்டத்தின் ஏனைய கூறுகளின் பணிகளோடு இணைந்து செயல்படுத்தப்படுகின்றன. நடைமுறை உள் இணைப்புகளுக்கு முன்னும், ஒவ்வொரு நடைமுறைக்குப் பின்னும், தகவல், கல்வித் தொடர்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பஞ்சாயத்துத் தலைவர்கள் மற்றும் உப தலைவர்களிடையே இத்திட்டத்திற்கு ஆதரவு திரட்டும் முகாம்கள், பெண் சிசுவதைத் தடுப்பு, இளவயதுத் திருமணங்களைத் தடுத்தல் மற்றும் ஆண், பெண் சமத்துவம் பற்றிய புத்தாக்கப் பயிற்சி போன்ற குறிப்பிட்ட



2006 ஆகஸ்ட் 22]

தேவையான சிறப்புத் திட்டங்கள், இரத்த சோகைத் இடங்களுக்குத் தேவையான சிறப்புத் திட்டங்கள், இரத்த சோகைத் தடுப்பு, அயோடின் சத்துக் குறைபாட்டால் வரும் சீர்குலைவு மற்றும் வைட்டமின் 'ஏ' சத்துக் குறைபாட்டால் வரும் சீர்குலைவு ஆகியவை பற்றிய முனைப்பான தகவல், கல்வி தொடர்பு இயக்கம், புதுமணத் தம்பதியருக்கான பணியரங்கம், வளர் இளம் பெண்களுக்கான உடல் நலன், ஊட்டச் சத்து மற்றும் குடும்ப வாழ்க்கை பற்றிய புத்தாக்கப் பயிற்சி, வளர் இளம் பெண்களுக்கான கல்வி, நாடகங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் என பல தகவல், கல்வி தொடர்புப் பணிகள் கடந்த வருடங்களில் நடத்தப்பட்டன. இப்பணிகள் பெரும்பாலான உடல் நலம் மற்றும் ஊட்டச் சத்துக் குறியீடுகளில் முன்னேற்றம் காணப் பெரிதும் பங்களித்துள்ளன. ஏற்கெனவே அடையப்பட்ட முன்னேற்றத்தைத் தக்க வைத்துக்கொள்ள வேண்டி, ஒவ்வோர் இடத்தின் தேவை மற்றும் இலக்குக்கு ஏற்ப ஒரு திட்டத்திற்கு ரூ.25,000/–வீதம் 434 குழந்தை வளர்ச்சித் திட்டங்களுக்கு மொத்தம் ரூ.108 இலட்சம் செலவில் 2006–2007 ஆம் ஆண்டில் பல்வேறு தகவல், கல்வி மற்றும் தொடர்புப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 2. சுகாதாரம்

பொதுச் சுகாதாரத் துறையுடனும், பிற துறைகளுடனும் ஒருங்கிணைந்து கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆகியோருக்கு சுகாதாரச் சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

### 2006–2007–ல்,

- மருந்து உபகரணப் பெட்டி ஒன்றுக்கு ரூ.600/– வீதம் 45,726 அங்கன்வாடி மையங்களுக்கு ரூ. 274.35 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்
- மருந்துகளை மீள நிரப்புவதற்கென நகர்ப்புறத் திட்டங்களுக்கு ரூ.5,000/–ம், கிராமப்புறத் திட்டங்களுக்கு ரூ.[illegible],000/–ம் வழங்கப்படும்.

### 3. ஊட்டச் சத்து

ரூ.5 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பயனாளிகளுக்கு இணை உணவு வழங்கும் பணி தொடரப்படும். இச்செலவினத்தில் 50 சதவிகிதத்தை மத்திய அரசு பங்கிட்டுக்கொள்ளும்.

[2006 ஆகஸ்ட் 22

**இணை சத்துணவுத் திட்டத்தின்கீழ் நாளொன்றுக்கு ஒரு பயனாளிக்கு வழங்கப்படும் இணை சத்துணவு விகிதம் பின்வருமாறு:**

| ஊட்டச் சத்து நிலை | சத்து மாவு அளவு | | |
|---|---|---|---|
| | குழந்தைகள் (6 24 மாதங்கள்) | குழந்தைகள் (25-36 மாதங்கள்) | கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் |
| சாதாரண நிலை | 50 கிராம் | 100 கிராம் | 100 கிராம் |
| நிலை 1 மற்றும் 2 | 50 கிராம் | 100 கிராம் | — |
| நிலை 3 மற்றும் 4 | 100 கிராம் | 150 கிராம் | — |

### 4. முறைப்படுத்துதல்

கடுமையான ஊட்டச் சத்துக் குறைபாட்டை ஆழ்ந்த குறிக்கோளுடன் தடுப்பதற்கும், சமாளிப்பதற்கும் ஒவ்வொரு கிராமத்திலும் அதே கிராமத்தைக் கொண்ட 15 உறுப்பினர்களைக் கொண்ட கிராம அளவிலான மேலாண்மைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கிராம அளவில் அங்கன்வாடி மையங்களின் செயல்பாடுகளை முறைப்படுத்துவது மற்றும் திட்டப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு அங்கன்வாடிப் பணியாளர்களுக்கு ஒத்துழைப்பினை அளிப்பது ஆகியவை இக்குழுக்களின் பொறுப்புகளாகும்.

### 5. பயிற்சி

களப் பணியாளர்களின் திறன்களைக் கட்டமைத்து, பணிகளில் தரத்தை உறுதிப்படுத்துவதற்குப் பயிற்சி பங்களித்து வருகிறது. மத்திய அரசு மற்றும் உலக வங்கி உதவியுடன் உதிஷா என்ற பயிற்சியின்கீழ் பல பணிப் பயிற்சிகள், புத்தறிவுப் பயிற்சிகள் மற்றும் புத்தாக்கப் பயிற்சிகள் 1999 முதல் மார்ச் 2006 வரை பணியாளர்கள், உதவியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்குத் தரப்பட்டுள்ளன. நிலுவையில் உள்ள பயிற்சிகளை முடிப்பதற்கென, 2006–2007–ல் பயிற்சித் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்த மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதற்கென ரூ.526.84 இலட்சம் மதிப்பீட்டில் மாநில அளவிலான செயல் திட்டத்திற்கு மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், துணை நிலைச் செவிலியர்கள், அங்கன்வாடிப் பணியாளர் ஆகியோருக்குப் பணிப் பயிற்சி மற்றும் புத்தறிவுப் பயிற்சி 2006–2007–ல் அளிக்கப்படும்.



2006 ஆகஸ்ட் 22]

### 3.4.5. மேலாண்மைத் தகவல் முறை

மாவட்டங்களிலிருந்து பெறப்படும் விவரங்களை முறைப்படுத்தி சேமித்து வைப்பதற்கென மேலாண்மைத் தகவல் முறை உருவாக்கப்பட்டு, மாநிலத் திட்ட முறைப்படுத்துதல் பிரிவில் நிறுவப்பட்டுள்ளதோடு, மேலாண்மைத் தகவல் முறைக்குத் தேவைப்படும் அறிக்கைகளைத் தயாரித்து அளிப்பதற்கென, மாவட்ட அளவிலான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. 316 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பகுதிகளுக்குக் கணினிகளும், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகப் பணியாளர்களுக்குப் போதுமான பயிற்சியும் வழங்கப்பட்டுள்ளன.

### 3.5. வளர் இளம் பெண்களுக்கான ஊட்டச் சத்துத் திட்டம்

#### ஊட்டச் சத்துக் குறைபாடுள்ள வளர் இளம் பெண்களுக்கு 6 கிலோ இலவச அரிசி வழங்குதல்

திருவண்ணாமலை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள ஊட்டச் சத்துக் குறைபாடுள்ள, 40 கிலோவிற்கும் குறைவான எடை உள்ள கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும், 35 கிலோவிற்கும் குறைவான எடை உள்ள வளர் இளம் பெண்களுக்கும் மாதமொன்றிற்குத் தலா 6 கிலோ அரிசி இலவசமாக வழங்கும் முன்னோடித் திட்டம் ரூ.118 இலட்சம் செலவில் 25–11–2002 முதல் செயல்படுத்தப்பட்டு வந்தது. மத்திய அரசின் வழிமுறைகளின்படி 2005 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலிருந்து மத்திய அரசின் வழிமுறைகளின்படி இத்திட்டம் திருத்தி அமைக்கப்பட்டு, வளர் இளம் பெண்களுக்கு மட்டுமே 6 கிலோ இலவச அரிசி வழங்கப்படுகிறது. 2006–2007–ல் இத்திட்டத்திற்கென ரூ.110 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 3.6. கிஷோரி சக்தி யோஜனா

வளர் இளம் பெண்களின் கல்வி நிலையை உயர்த்தியும், தொழிற் கல்வி அளித்தும் அவர்களை சிறப்பான குடிமக்களாக்கும் நோக்குடன்,

அவர்களின் நலனுக்காக மட்டுமே புதுக்கோட்டை, தருமபுரி, நாகப்பட்டினம், நீலகிரி, சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கடலூர், திண்டுக்கல் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் உள்ள 37 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகளில் 2001–2002 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ்,

- ஊட்டச் சத்து மற்றும் உடல் நலன், சட்ட உரிமைகள், வீட்டைப் பராமரித்தல், குழந்தை வளர்ப்பு ஆகியவற்றில் விழிப்புணர்ச்சி இயக்கங்கள் 11–15 வயது வளர் இளம் பெண்களுக்கு இரண்டு நாள் முகாம்களின்மூலம் நடத்தப்படுகின்றன.
- 16–18 வயது வளர் இளம் பெண்களுக்கு 60 நாள் தொழிற்கல்விப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆண்டுதோறும் ரூ.40.70 இலட்சம் நிதி ஒதுக்கப்படுகிறது. தற்பொழுது, 434 திட்டப் பகுதிகளுக்கும் இத்திட்டத்தை விரிவுபடுத்த மாநில அரசுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

### 3.7. முன் பருவப் பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல்

அங்கன்வாடி மையங்களில் முறைசாரா மற்றும் விளையாட்டு வழிமுறைகளில் முன் பருவக் கல்வி அளிக்கப்படுகிறது. 6–36 மாதக் குழந்தைகளுக்கு உபகரணப் பெட்டி 'ஏ' மற்றும் 36–60 மாதக் குழந்தைகளுக்கு கற்பிப்பதெற்கென உபகரணப் பெட்டி 'பி' ஆகியவை உபயோகப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு அங்கன்வாடி மையத்திற்கும் ஆண்டொன்றுக்கு ரூ.500/– செலவில் முன் பருவப் பள்ளி உபகரணங்களை அரசு வழங்குகிறது. இது தவிர, ஒவ்வொரு புதிய அங்கன்வாடி மையத்திற்கும் விளையாட்டுப் பொருட்கள் கொள்முதல் செய்வதற்கென ரூ.2,000/– ஒரு முறை மட்டும் அனுமதிக்கப்படுகிறது.

### 3.8. சமையல் பாத்திரங்கள் வழங்குதல்

இவ்வாண்டில் அங்கன்வாடி மையங்களுக்குப் புதிய சமையல் பாத்திரங்கள் வழங்கப்படும்.





## 2006–2007 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்

### ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம்–3

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| 1 | தரமணி, சென்னை–113-ல் அமைந்துள்ள தகவல் தொடர்பு மற்றும் பயிற்சி மைய வகுப்பறை உள் அமைப்பை மேம்படுத்துதல் | 1.35 |

### சமூக நலம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | ஒதுக்கீடு |
|---|---|---|
| | **சத்துணவுத் திட்டம்** | |
| 2 | சத்துணவு மையங்களுக்கு எடைத் தராசு மற்றும் அளக்கும் உபகரணங்கள் வழங்குதல் | 1.02 |
| 3 | 14 மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (ச.உ.தி.) மற்றும் ஊரக வளர்ச்சி இயக்கக இணை இயக்குநர் (ச.உ.தி.) ஆகியோருக்கு நேரடித் தொலைபேசி ஒதுக்கீடு செய்தல் | 0.30 |
| 4 | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டப் பயனீட்டாளர்களுக்கு எவர்சில்வர் டம்ப்ளர்கள் மற்றும் தட்டுகள் வழங்குதல் | 300.00 |
| | மொத்தம் | 302.67 |

# அத்தியாயம் 4

## ஊனமுற்றோர் மறுவாழ்வு

*4.1.* ஊனமுற்றோரும், ஊனமில்லாதவர்களும் ஓரே நிலையில் ஒன்றிணைந்து, செயலாற்றக்கூடிய சமுதாயத்தை உருவாக்கிட வேண்டும் என்பதே தமிழக அரசின் நோக்கமாகும். ஊனங்களைத் தடுப்பதையும், ஊனமுற்றோர், குடும்பத்திலும், சமுதாயத்திலும் இயன்றவரை இயல்பான வாழ்க்கை நடத்துவதற்கு உற்ற நோத்தில் உதவிக் கரம் நீட்டுவதையும் நோக்கமாகக் கொண்டு, ஊனமுற்றோருக்கான விரிவான திட்டமொன்றை இவ்வரசு வகுத்துள்ளது. ஊனத்தைத் தொடக்க நிலையிலேயே கண்டறியவும், ஊனமுற்றோர் தற்சார்புடைய குடிமக்களாக மாறி, அவர்கள் சமுதாயத்தின் ஓர் ஒருங்கிணைந்த அங்கமாகத் திகழ்கின்ற விதத்தில் மருத்துவம், வாழ்க்கைத் தொழில், பொருளாதாரம் மற்றும் சமூக நிலைகளில் அவர்களுக்குத் தேவையான விரிவான சேவைகளை ஆற்றுவதே இக்கொள்கையின் நோக்கமாகும். இக்கொள்கையின்படி அரசு, தொழில் முனைவோர், தயாள மனம் கொண்டோர் மற்றும் தொண்டு நிறுவனங்கள் உட்பட சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் ஊனமுற்றோரின் நலனில் கூட்டுப் பொறுப்பும், அக்கறையும் உள்ளது.

மாநிலக் கொள்கையைச் செயல்படுத்துவதற்காக, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறை பின்வரும் கடமைகளை நிறைவேற்றி வருகிறது:

- ஊனத்தைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து, போலியோ, அம்மை, ரூபெல்லா, பொன்னுக்கு வீங்கி முதலான தடுப்பு ஊசிகள் போடுவது உட்பட, ஊனமுற்றோர் பிரச்சினையின் தன்மையையும், கடுமையையும் மதிப்பிடுதல், ஊனமுற்றோர் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சிரமமின்றிச் சென்று வர ஏதுவாக அவர்களுக்கு ஏற்ற உதவி, உபகரணங்களை வழங்குதல்.
- மேலும், ஒவ்வோர் ஊனமுற்ற குழந்தையும், இலவச மற்றும் கட்டாய ஆரம்பக் கல்வி பெறவும், ஊனத்தின் அளவிற்கேற்றவாறு சிறப்புக் கல்வியோ அல்லது ஒருங்கிணைந்த கல்வியோ பெறுவதை உறுதிப்படுத்துதல், ஊனமுற்ற குழந்தைகள் மற்றவர்களோடு கலந்து பழகுவதை மேம்படுத்த அவர்களின் திறமை/தேவைக்கேற்ப ஒவ்வொரு நிலையிலும் உதவுதல்.





- ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்துவதன்மூலம் தேவையான பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உருவாக்குதல்; கல்வி நிறுவனங்கள்/பயிற்சி மையங்களில் ஊனமுற்றோரின் பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளக்கூடிய தகுதி படைத்த ஆசிரியர் குழுக்களை உருவாக்குதல்.
- ஊனமுற்றோர்களுக்கு சிறப்பு உதவிகளை வழங்கும் வகையில் கல்வி உதவித் தொகை, இலவசப் பயணச் சலுகை, கல்வி உபகரணங்கள், சிறப்பு உதவி உபகரணங்கள், சிறப்பு ஆசிரியர்கள் நியமனம், விடுதி வசதி ஆகியவற்றை அளித்து, ஊனமுற்றோர் உயர் கல்வி பெறத் தேவையான உதவிகள் செய்தல்.
- ஊனமுற்றோருக்கான உரிய தொழிலைத் தேர்ந்தெடுத்து, அத்தொழிலில் பயிற்சி அளிக்க பயிற்சி மையங்களை நடத்துதல்.
- ஊனமுற்ற பயிற்சியாளர்களுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கிட நிதி உதவிக்கு ஏற்பாடு செய்தல்.
- சுய தொழில் செய்திட வங்கி மற்றும் இதர நிறுவனங்கள் தாராள நிதி உதவி வழங்கிட வகை செய்தல்.
- அனைத்துக் கட்டடங்களிலும், ஊனமுற்றோருக்குக் கட்டட அமைப்பில் தடையற்ற சூழலை உருவாக்குதல் மற்றும் ஊனமுற்றோருக்கு ஏற்படும் அனைத்துத் தடைகளையும் வெற்றிகரமாக நீக்கி, ஊனமுற்றோருக்கு ஏற்ற வகையில் மாற்றுதல்.
- சாதாரணமானவர்களைப்போல ஊனமுற்றவர்களும் சமூக, கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும்வண்ணம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- ஊனமுற்றோருக்கு சம உரிமைகள் அளிக்கவும், முழுப் பங்கேற்பினை உறுதிப்படுத்தவும், உரிமைகளைப் பாதுகாக்கவும் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

### 4.2. ஊனமுற்றோருக்கான சட்டம், 1995–ஐ அமலாக்குதல்

ஊனமுற்றோர் சமுதாயத்தினரோடு இணைந்து இயல்பான வாழ்க்கையில் முழுமையாக ஈடுபடும் வகையில் அவர்களுக்கு

[2006 ஆகஸ்ட் 22

சம வாய்ப்பு அளிக்கவும், அவர்களுக்குரிய உரிமைகளைப் பாதுகாக்கவும் கடந்த 1995—ல் இயற்றப்பட்ட ஊனமுற்றோருக்கான சட்டம், ஊனமுற்றோருக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். தமிழ்நாட்டில் இச்சட்டம் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்க ஊனமுற்றோருக்கான மாநில ஆணையர் நியமிக்கப்பட்டு, ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறைத் தலைவராகவும் செயல்படுகிறார். இச்சட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக, அதன் பல்வேறு பிரிவுகளில் செய்யப்பட வேண்டிய திருத்தங்கள் குறித்து இவ்வரசிடமிருந்தும், தொண்டு நிறுவனங்களிடமிருந்தும் மத்திய அரசு ஆலோசனை கோரியுள்ளது.

**4.3. மாநிலத்தில் ஊனமுற்றோரின் எண்ணிக்கை**

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தில் ஊனமுற்றோரின் எண்ணிக்கை 16,42,497 எனக் கண்டறியப்பட்டுள்ளது. இது பற்றிய விவரங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| (i) | பார்வையற்றோர் | 9,64,063 |
| (ii) | காது கேளாதோர் | 1,97,115 |
| (iii) | கை, கால் ஊனமுற்றோர் | 3,53,798 |
| (iv) | மன வளர்ச்சி குன்றியோர் | 1,27,521 |

**4.4. ஊனமுற்றோருக்கான சிறப்புக் கல்வி**

ஒவ்வொரு குழந்தையின் வாழ்க்கையிலும் பள்ளிக் கல்வி என்பது முக்கியமானதொரு தொடக்கப் புள்ளியாகும். அதிலும் குறிப்பாக, ஊனமுற்ற குழந்தைகளுக்கு, பள்ளி எனப்படுவது அவர்களது தனிமைக்கு முற்றுப்புள்ளி வைத்து, சக வயதுடையோரிடம் கலந்து பழக நல்லதொரு தொடக்கமாக அமைகிறது. ஊனமுற்ற குழந்தைகளின் திறமைகளை வெளிக் கொணர்ந்து, அவர்கள் தங்களுடைய திறமைகளையும், ஆற்றல்களையும், ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திட உதவுவதே இவ்வரசின் நோக்கமாகும்.

அரசுப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், அரசு மானியம் பெற்று நடைபெறும் சிறப்புப் பள்ளிகள் மற்றும் மானியம் பெறாத சிறப்புப் பள்ளிகளின்மூலமாக ஊனமுற்ற சிறார்களுக்கு சிறப்புக் கல்வி அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் இயங்கி வரும் சிறப்புப் பள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு:



2006 ஆகஸ்ட் 22]

| வ. எண் | பள்ளியின் வகை | அரசுப் பள்ளிகள் | அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகள் | | நகராட்சிப் பள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | | மானியம் பெறும் பள்ளிகள் | மானியம் பெறாத பள்ளிகள் | | |
| 1 | பார்வையற்றோருக்கான பள்ளிகள் | 10 | 11 | 5 | – | 26 |
| 2(அ) | பேச்சுத் திறன் மற்றும் கேட்கும் திறன் குறைந்தோர் | 11 | 20 | 41 | 1 | 73 |
| (ஆ) | பள்ளி முன் பருவப் பள்ளிகள் | 2 | – | 4 | – | 6 |
| 3 | மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள் | 1 | 12 | 88 | - | 101 |
| 4 | கடும் கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் | 1 | 14 | 44 | – | 59 |
| 5 | தொழுநோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோருக்கான பள்ளி | .. | 1 | .. | – | 1 |
| | மொத்தம் | 25 | 58 | 182 | 1 | 266 |

**அரசு சிறப்புப் பள்ளிகள் பின்வரும் இடங்களில் இயங்கி வருகின்றன:**

| பார்வையற்றோருக்கான பள்ளிகள் | பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்தோருக்கான பள்ளிகள் | கடும் கை, கால் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் | மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள் |
|---|---|---|---|
| கோயம்புத்தூர் (1–5 ஆம் வகுப்பு) | கடலூர் (1-8 ஆம் வகுப்பு) | மதுரை (1–8 ஆம் வகுப்பு) | சென்னை (தாம்பரம்) (கல்வி மற்றும் பயிற்சி பெறக்கூடியவர்களுக்கு மட்டும்) |
| கடலூர் (1–5 ஆம் வகுப்பு) | தருமபுரி (1–12 ஆம் வகுப்பு) | | |
| தருமபுரி (1–5 ஆம் வகுப்பு) | ஈரோடு (1–10 ஆம் வகுப்பு) | | |
| மதுரை (1–6 ஆம் வகுப்பு) | காஞ்சிபுரம் (1–10 ஆம் வகுப்பு) | | |

[2006 ஆகஸ்ட் 22

| பார்வையற்றோருக்கான பள்ளிகள் | பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்தோருக்கான பள்ளிகள் | கடும் கை. கால் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் | மன வளர்ச்சி குன்றியோருக்கான பள்ளிகள் |
|---|---|---|---|
| பூவிருந்தவல்லி (1–12 ஆம் வகுப்பு) | தாம்பரம் (1 8 ஆம் வகுப்பு) | | |
| புதுக்கோட்டை (1–5 ஆம் வகுப்பு) | உதகமண்டலம் (1–10 ஆம் வகுப்பு) | | |
| சேலம் (1–8 ஆம் வகுப்பு) | புதுக்கோட்டை (1 8 ஆம் வகுப்பு) | | |
| சிவகங்கை (1–5 ஆம் வகுப்பு) | சேலம் (1–10 ஆம் வகுப்பு) | | |
| தஞ்சாவூர் • (1–10 ஆம் வகுப்பு) | தஞ்சாவூர் (1–12 ஆம் வகுப்பு) | | |
| திருச்சிராப்பள்ளி (1–12 ஆம் வகுப்பு) | விருதுநகர் (1–7 ஆம் வகுப்பு) | | |
| | இராமநாதபுரம் (முன் பருவப் பள்ளி மட்டும்) | | |
| | காரைக்குடி (1–5 ஆம் வகுப்பு) | | |

அரசு சிறப்புப் பள்ளிகளில் கல்வி பயிலும் ஊனமுற்ற மாணவர்களுக்கு இலவச சிறப்புக் கல்வி, இலவச உணவு மற்றும் உறைவிடம் மற்றும் ஒவ்வோர் ஆண்டும் இரண்டு இணை சீருடைகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

மாநிலத்தில் பேச்சுத் திறன் மற்றும் செவித் திறன் குறைந்துள்ள குழந்தைகளுக்கென 20 முன் பருவப் பள்ளிகள் கடலூர், தருமபுரி, ஈரோடு, காஞ்சிபுரம், சென்னை, உதகமண்டலம், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய இடங்களிலுள்ள காது கேளாதோருக்கான அரசுப் பள்ளிகளிலும், வேலூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, சிவகங்கை, கன்னியாகுமரி, தூத்துக்குடி, திண்டுக்கல் ஆகிய இடங்களிலுள்ள அரசு மானியம் பெறும் காது கேளாதோருக்கான சிறப்புப் பள்ளிகளிலும், மாவட்ட ஊனமுற்றோருக்கான மறுவாழ்வு அலுவலர்களின் கட்டுப்பாட்டில் இராமநாதபுரம் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் இயங்கி வருகின்றன.



2006 ஆகஸ்ட் 22]

### 4.5. (அ) ஊனமுற்றோருக்கான கல்வி உதவித் தொகை

இத்திட்டத்தின்கீழ் பட்ட மேற்படிப்பு வரை கல்வி பயிலும் ஊனமுற்றோருக்குப் படிப்பிற்கான பொருட்கள் வாங்குவதற்கு கீழ்க்குறிப்பிட்டவாறு கல்வி உதவித் தொகை மாநில அரசு வழங்கி வருகிறது.

| வகுப்பு / படிப்பு | ஆண்டு ஒன்றிற்கான கல்வி உதவித் தொகை |
|---|---|
| (அ) 1 – 5 ஆம் வகுப்பு வரை | ரூ.250/- |
| (ஆ) 6 – 8 ஆம் வகுப்பு வரை | ரூ.750/- |
| (இ) 9 – 12 ஆம் வகுப்பு வரை | ரூ.1,100/- |
| (ஈ) பட்டப் படிப்பு | ரூ.1,500/- |
| (உ) தொழில் மற்றும் பட்ட மேற்படிப்பு | ரூ.1,950/ |

### 4.5. (ஆ) வாசிப்பாளர் உதவித் தொகை

பார்வையற்ற மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையுடன் மாநில அரசால் கீழ்க்குறிப்பிடப்பட்ட வீதத்தில் வாசிப்பாளர் உதவித் தொகையும் வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | வகுப்பு / படிப்பு | வாசிப்பாளர் உதவித் தொகை |
|---|---|---|
| 1 | 9-12 ஆம் வகுப்பு வரை | ரூ. 750/- |
| 2 | பட்டப் படிப்பு | ரூ.1,250/ |
| 3 | பட்ட மேற்படிப்பு மற்றும் தொழில் படிப்பு | ரூ.1,500/ |

### 4.6. பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை

பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் பார்வையற்ற மாணவர்கள் பள்ளித் தேர்வு எழுத பார்வையுள்ள உதவியாளர் ஒருவரை அமர்த்திக்கொள்ள மாநில அரசு அனுமதி அளித்து வருகிறது. இவ்வாறு உதவிபுரிபவர்களுக்கு ஒரு தேர்வுத் தாளுக்கு ரூ.50/– வீதம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஒவ்வோர் ஆண்டும் கீழ்க்கண்ட பள்ளிகளில் பயிலும் 225 பார்வையற்ற மாணவர்கள் பயனடைகின்றனர்:

1. பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை
2. பார்வையற்றோருக்கான அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருச்சிராப்பள்ளி
3. பார்வையற்றோருக்கான சிறுமலர் மேல்நிலைப் பள்ளி, சென்னை
4. புனித லூயிஸ் காது கேளாதோர் மற்றும் பார்வையற்றோருக்கான நிறுவனம், சென்னை

### 4.7. அரசு மண்டல பிரெய்லி அச்சகம்

பார்வையற்றோருக்கான பள்ளிகளில் பயிலும் பார்வையற்ற மாணவர்களுக்கு பிரெய்லி புத்தகங்கள் அச்சடித்து வழங்கி வரும் பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசுப் பள்ளியில் இயங்கி வரும் மண்டல பிரெய்லி அச்சகம் இரண்டு புதிய கணினிமயமாக்கப்பட்ட சிறிய பிரெய்லி அச்சு இயந்திரங்கள் பொருத்தப்பட்டு நவீன மயமாக்கப்பட்டுள்ளது.

### 4.8. சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சி

பல்வகை ஊனத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பாடம் கற்பிக்கும் வகையில் பல்வேறு சிறப்புப் பள்ளி ஆசிரியர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த சிறப்புப் பயிற்சியின் காலம் பத்து மாதங்களாகும். பயிற்சிகளின் விவரங்கள் கீழவருமாறு:

| வ எண் | பயிற்சி நிறுவனத்தின் பெயர் | அளிக்கப்படும் பயிற்சி | பயிற்சி பெற்ற ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பார்வையற்றோருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி, சென்னை 56 | பார்வையற்றோருக்கு போதிப்பதற்கான இளநிலைப் பட்டயம் | 15 |
| 2 | பாலவிஹார் பயிற்சிப் பள்ளி, கீழ்ப்பாக்கம், சென்னை 10 | மனவளர்ச்சி குன்றியோருக்கு போதிப்பதற்கான இளநிலை/ முதுநிலைப் பட்டயம் | 25 |
| 3 | சிறுமலர் காது கேளாதோருக்கான மேல்நிலைப் பள்ளி, சென்னை -6 | காது கேளாதோருக்கு போதிப்பதற்கான இளநிலை/ முதுநிலைப் பட்டயம் | 50 |





### 4.9. சென்னை, பூவிருந்தவல்லி அரசு மேல்நிலைப் பள்ளியில் பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கான இடைநிலை ஆசிரியர் பயிற்சி (ஆசிரியர் கல்விப் பட்டயம்)

ஊனமுற்றோர்களுக்குத் தகுந்த பயிற்சிகள் அளித்து வேலைவாய்ப்பினைப் பெருக்குவதே இவ்வரசின் நோக்கமாகும். பூவிருந்தவல்லி, பார்வையற்றோருக்கான அரசு மேனிலைப் பள்ளியில், இடைநிலை ஆசிரியர் பயிற்சி (ஆசிரியர் கல்விப் பட்டயம்) நடத்தப்பட்டு வருகிறது. இம்மையத்தில் 20 பார்வையற்ற நபர்களும், 20 கை, கால் ஊனமுற்ற நபர்களும் இரண்டாம் ஆண்டு பட்டயப் பயிற்சியும், 25 பார்வையற்ற நபர்களும், 25 கை, கால் ஊனமுற்ற நபர்களும் முதலாம் ஆண்டு பட்டயப் பயிற்சியும் பெற்று வருகிறார்கள். இப்பயிற்சியைப் பெறுவதன்மூலம் பார்வையற்றோர் மற்றும் கை, கால் ஊனமுற்றோருக்கு அதிக வேலைவாய்ப்பு கிடைப்பது உறுதிபடுத்தப்படும்.

### 4.10. நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம், கிண்டி, சென்னை-32

சென்னை, கிண்டியில் அமைந்துள்ள நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்கூடம் தற்சமயம் ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. இங்கு, மாவட்ட மறுவாழ்வு மையங்களின் தேவைகளுக்கு ஏற்ப ஆண்டுதோறும் உடல் ஊனமுற்ற நபர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் வடிவமைக்கப்பட்டு, தயாரிக்கப்படுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட மூன்று சக்கர வண்டிகள் மற்றும் சக்கர நாற்காலிகள் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தேவையுள்ள ஊனமுற்றோர்களுக்கு வழங்கப்படுகின்றன.

### 4.11. பார்வையற்ற பெண்களுக்கான தங்குமிடத்துடன்கூடிய தொழிற்கூடம், அரசு மறுவாழ்வு இல்லம், பூவிருந்தவல்லி

ஆதரவற்ற, அனாதையான, பார்வையில்லாத பெண்களுக்கு வருமானம் ஈட்ட ஏதுவாக, மாநில அரசு பயிற்சி அளித்து வருகிறது. 18 வயதிலிருந்து 40 வயது வரையிலான (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) ஆதரவற்ற, அனாதை, பார்வையற்ற பெண்களுக்கு பூவிருந்தவல்லியில் அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ள தங்குமிடத்துடன்கூடிய தொழிற்கூடத்தில் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதிலும், துணி நெய்வதிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி

நிறைவு பெற்ற பின்னர், அவர்களுக்கு இவ்வில்லத்திலேயே படுக்கை விரிப்புகள், துண்டுகள், கடடுத் துணிகள் மற்றும் சாக்குக் கட்டிகள் தயாரிப்பதில் வேலை அளிக்கப்படுகிறது. இப்பொருட்கள் அரசு மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இந்த இல்லத்தில் தற்போது 26 பார்வையற்ற பெண்கள் தங்கி உள்ளனர்.

## 4.12. ஊனமுற்றோர் மாவட்ட மறுவாழ்வு மையங்கள்மூலம் ஊனமுற்றோருக்கான பயிற்சிகள்

ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின்கீழ் சென்னை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்படும் மாவட்ட மறுவாழ்வு மையங்களின் வாயிலாக ஊனமுற்றோருக்கு கீழ்க்கண்ட பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

1. மருத்துவ ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பட்டயப் பயிற்சி
   (டி.எம்.எல்.டி)
   ஈராண்டு காலம்
   (சென்னை, சேலம், கோவை, திருச்சி, தஞ்சாவூர், மதுரை)

2. கணினிப் பயிற்சி
   ஆறு மாத காலம்
   கை, கால் ஊனமுற்றோர் மற்றும் செவித் திறன் குறையுடையோருக்கு அனைத்து மாவட்டங்களிலும்.
   பார்வையற்றோருக்கு சென்னையில் மட்டும்.

இப்பயிற்சித் திட்டங்கள் யாவும் இலவசமாக நடத்தப்படுவதுடன் பயிற்சியாளர்களுக்கு மாதம் ரூ.300/– வீதம் உதவித் தொகையும் வழங்கப்படுகிறது. கல்விக் கட்டணம் மற்றும் பயிற்சிக் கட்டணம் வகையிலான செலவை அரசே ஏற்றுக்கொள்கிறது.

## 4.13. ஊனமுற்றோருக்கான பயிற்சி

ஊனமுற்றோருக்கான மறுவாழ்வுத் துறையால், சென்னை, பூவிருந்தவல்லியில் உள்ள பார்வையற்றோருக்கான அரசு தொழிற்பயிற்சி மையத்தில் பார்வையற்றோருக்கு கீழ்க்கண்ட பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன.

1. பொருத்துநர் மற்றும் அடிப்படை இயந்திரம் இயக்குபவர் (ஓராண்டு காலம்)





2. புத்தகம் கட்டுபவர் (ஓராண்டு காலம்)
3. வெட்டுதல் மற்றும் தையல் பயிற்சி (பெண்களுக்கு மட்டும்) (ஓராண்டு காலம்)

மேற்கூறப்பட்ட பயிற்சித் திட்டத்தில் பார்வையற்ற 24 நபர்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் கல்விக் கட்டணம், பயிற்சி, உணவு, இருப்பிடம் மற்றும் இரண்டு சீருடைகள் ஆகியன அடங்கும். மேலும், கிண்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் காது கேளாத 16 நபர்களுக்கு பொருத்துநர் பிரிவில் இரண்டு ஆண்டுகள் பயிற்சி அளிக்கப்பட்டு, பயிற்சியின்போது மாதம் ரூ.100/– வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

## 4.14. போலியோ மற்றும் முதுகுத் தண்டுவடம் பாதித்தோருக்கு சரிசெய்தலுக்கான இலவச அறுவை சிகிச்சை

இத்துறை மாவட்ட மறுவாழ்வு மையங்களின்மூலம் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தி அந்தந்த மாவட்டப் பகுதிகளில் போலியோ மற்றும் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்களைக் கண்டறிந்து, பின்னர் அவர்கள் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு, மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு, அவர்கள் சுலபமாக நடக்கவும், அவர்களது அன்றாடப் பணிகளை அவர்களே பிறருடைய உதவியின்றி மேற்கொள்ளவும், அதன் மூலம் அவர்களே சுயமாக வாழவும் வழிவகை செய்கிறது.

இந்த அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் ஊனமுற்ற நபர்களுக்கு மருத்துவமனையில் தங்கியிருக்கும்போது செலவிற்காக ரூ.500/– வழங்கப்படுவதுடன், அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு மதிப்பூதியமாக ரூ.300/–ம் வழங்கப்படுகிறது.

## 4.15. ஊனமுற்றோருக்கு இலவச உதவி உபகரணங்கள் வழங்குதல்

மாவட்ட மறுவாழ்வு மையங்கள்மூலம் இனங்கண்டறியப்பட்ட, தேவையுள்ள ஊனமுற்றோருக்கு அவர்களின் தகுதி, திறன், பாதிப்பு மற்றும் தேவைக்கேற்ப கீழ்க்கண்ட உதவி உபகரணங்கள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

அ. மூன்று சக்கர வண்டி

ஆ. சக்கர நாற்காலி

இ. கறுப்புக் கண்ணாடி

ஈ. மடக்கு ஊன்றுகோல்

உ. பிரெய்ல் கைக் கடிகாரம்

ஊ. காது கேட்புக் கருவி

எ. சூரிய ஒளியினால் மறு செறிவூட்டக்கூடிய பாட்டரி

ஏ. கால் தாங்கி

ஐ. தோள்பட்டை தாங்கி மற்றும்

ஒ. செயற்கை அவயம்

மேற்கூறப்பட்ட அனைத்து உதவி உபகரணங்கள் ஊனமுற்ற நபர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு சுலபமாகச் சென்று, தன்னிச்சையாகச் செயல்பட வகை செய்கின்றன.

### 4.16. ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீடு

ஊனமுற்றோருக்கான இட ஒதுக்கீட்டினை சரியாக, திறம்பட அமல்படுத்த இவ்வரசு உறுதி பூண்டுள்ளது. அரசு மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களில் (அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் உள்ளாட்சி நிர்வாகம்) எழும் பணியிடங்கள் மற்றும் பயிற்சியிடங்களில் 3 சதவீதம் ஊனமுற்றோருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 3 சதவீதத்தில், 1 சதவீதம் பார்வையற்றோருக்கும், 1 சதவீதம் பேசும் திறன் இழந்த காது கேளாதோருக்கும், 1 சதவீதம் கை, கால் ஊனமுற்றோருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வித் துறையில், ஆசிரியர்கள் பணியிடத்தில் பார்வையற்றவர்களுக்கு 2 சதவீதமும், ஆசிரியர் அல்லாத பணியிடங்களில் காது கேளாத, பேசும் திறனற்றவர்களுக்கு 2 சதவீதமும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.17. வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை

வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு 10 வருட காலத்திற்கு அல்லது 40 வயது வரை (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) அல்லது வேலை கிடைக்கும் வரை, இதில் எது முன்னரோ அது வரை நிவாரணத் தொகை வழங்கப்படுகிறது.



| கல்வித் தகுதி | வேலைவாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|
| 1. பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகள் | ரூ.450/ |
| 2. புகுமுக வகுப்பு/மேல்நிலை வகுப்பு/பட்டப் படிப்புக்குக்கீழ் படித்தவர்கள் | ரூ.375/ |
| 3. பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கும் குறைவாகப் படித்தவர்கள் | ரூ.300/ |

(அ) 18 வயதிற்கு மேல் 40 வயதிற்குள் (தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு 45 வயது வரை) இருக்க வேண்டும்.

(ஆ) வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்து குறைந்தபட்சம் ஓராண்டுக்கு மேல் காத்திருப்பவராக இருக்க வேண்டும்.

### 4.18. சுய வேலைவாய்ப்பு

சுய தொழிலில் ஈடுபட ஊனமுற்றோரைத் தயார் செய்யும் பொருட்டு, அவர்களின் திறனை வளர்க்கப் பல்வேறு பயிற்சித் திட்டங்கள் நடத்தப்படுகின்றன. ஊனமுற்றோர் பெட்டிக் கடை வைத்து நடத்துவது உட்பட சுய வேலைவாய்ப்பில் ஈடுபடுவதற்காக, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் கடன் பெற்றுக்கொள்ளவும் இத்துறை பயனுள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது. ரூ.3000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு, இதில் எது குறைவோ அது அரசு மானியமாக வழங்கப்படுகிறது. பொது இடங்களில் பெட்டிக் கடை வைக்க விரும்பும் ஊனமுற்ற நபருக்கு ரூ.5000/- அல்லது மொத்தக் கடன் தொகையில் மூன்றில் ஒரு பங்கு, இதில் எது குறைவோ, அது மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 1,050 ஊனமுற்ற நபர்கள் பயனடைவர்.

மத்திய அரசினால் செயல்படுத்தப்படும், தேசிய ஊனமுற்றோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத் திட்டத்தினைத் திறம்படச் செயல்படுத்தி, அதன்மூலம் ஊனமுற்றோர் அதிக அளவில் சுய வேலைவாய்ப்புப் பெற மாநில அரசு திறம்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## 4.19. அடையாள அட்டை வழங்குதல்

ஊனமுற்றோருக்கு மருத்துவச் சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் வழங்க ஒற்றைச் சாளர முறையை இத்துறை அறிமுகப்படுத்தியுள்ளது. மருத்துவ அலுவலர்கள் (காது, மூக்கு, தொண்டை நிபுணர், மனநல மருத்துவர், முடநீக்கியல் நிபுணர், கண் மருத்துவர் போன்றோர்) மாவட்ட மறுவாழ்வு மையங்களுக்கு வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் வருகை புரிந்து, ஊனமுற்றோரைச் சோதித்து, அந்தந்த நாளிலேயே அடையாள அட்டைகள்/மருத்துவச் சான்றிதழ்கள் வழங்குகின்றனர். மருத்துவச் சான்றிதழ்கள்/அடையாள அட்டைகள் வாங்குவதில் ஊனமுற்றோருக்கு ஏற்படும் சிரமங்கள் இதன்மூலம் களையப்பட்டுள்ளன.

## 4.20. ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்ளும் ஊனமில்லாத நபர்களுக்கான சலுகைகள்

ஊனமில்லாதவர், ஊனமுற்றோரைத் திருமணம் செய்துகொள்வதை ஊக்குவிக்கும்வண்ணம், கீழ்க்குறிப்பிட்டவாறு சலுகைகள் அரசால் வழங்கப்படுகின்றன:

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் உதவி | பயனாளிகள் எண்ணிக்கை | 2006-2007-ல் நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | பார்வையற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபருக்கான சலுகைகள் | 1. திருமணச் செலவிற்கு ரொக்கத் தொகை ரூ.3,000/-<br>2. ரூ.7,000/-க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 100 | 10.00 |
| 2 | ஒரு கை அல்லது கால் இல்லாதவரைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபருக்கான சலுகைகள் | 1. திருமணச் செலவிற்கு ரொக்கத் தொகை ரூ.3,000/-<br>2. ரூ.7,000/-க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 145 | 14.50 |



| வ. எண் | திட்டத்தின் பெயர் | வழங்கப்படும் உதவி | பயனாளிகள் எண்ணிக்கை | 2006-2007 ல் நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 3 | காது கேளாத வாய் பேசாத நபர்களைத் திருமணம் செய்து கொள்ளும் ஊனமில்லாத நபருக்கான சலுகைகள் | 1. திருமணச் செலவிற்கு ரொக்கத் தொகை ரூ.3,000/-<br>2. ரூ.7,000/-க்கு தேசிய சேமிப்புப் பத்திரம் | 145 | 14.50 |

## 4.21. உடல் ஊனமுற்றவர்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை

ஊனமுற்றோர் பயன் பெறும்வண்ணம் அனைத்து வகை ஊனமுற்றோருக்கும் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் மாநில அளவில் இலவசப் பயணச் சலுகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பார்வையற்றோர் எவ்வித நிபந்தனையுமின்றி தமது வசிப்பிடத்திலிருந்து 100 கிலோமீட்டர் தூரம் வரை அரசுப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். ஏனைய உடல் ஊனமுற்றவர்களுக்கு இச்சலுகை சில நிபந்தனைகளுக்குட்பட்டு, அவர்கள் கல்விக்கூடம், மருத்துவமனை, தொழிற்பயிற்சி மற்றும் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று வர வழங்கப்படுகிறது. பார்வையற்றவர்களும், கால் முடமானோரும் விரைவுப் பேருந்துகளில் மாநிலத்திற்குள் ஆண்டுக்கு ஒரு முறை தமது சொந்த ஊருக்குச் சென்றுவர இலவசமாகப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர். இச்சலுகையைப் பெற மனவளர்ச்சி குன்றியவர்களைப் பொறுத்தமட்டில், ஆண்டு வருமானம் ரூ.12,000/–க்கு மிகாமல் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விலக்கப்பட்டுள்ளது. மனவளர்ச்சி குன்றியவர்கள், உதவியாளர் ஒருவருடன் இலவசப் பேருந்துப் பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

## 4.22. ஊனமுற்றோர் மறுவாழ்வுக்கென பணியாற்றும் அரசு சாரா நிறுவனங்களைப் பதிவு செய்தல்

ஊனமுற்றோருக்கென சேவை புரியும் அரசு சாரா நிறுவனங்கள் அனைத்தும் ஊனமுற்றோர் சட்டம், 1995–ன்கீழ் பதிவு

செய்துகொள்ளுதல் கட்டாயமாகும். அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் ஊனமுற்றோருக்கென எவ்வித மறுவாழ்வுப் பணியை மேற்கொண்டிருந்தாலும், அத்தகைய அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் அனைத்தும், ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமைப் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்பு) சட்டம், 1995—ன் 52—வது பிரிவின்கீழ் பதிவு செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ள ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரிடம் பதிவு செய்துகொள்ளுதல் வேண்டும்.

## 4.23. ஊனமுற்றோருக்குத் தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்துதல்

ஊனமுற்றோர், சமுதாயத்தின் மற்றைய பிரிவினருடன் இணைந்து வாழ ஏதுவாக ஊனமுற்றோருக்குத் தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தர மாநில அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ஊனமுற்றோர் (சம வாய்ப்புகள், உரிமைப் பாதுகாப்பு மற்றும் முழுப் பங்கேற்பு) சட்டம், 1995—ல் குறிப்பிட்டுள்ளவாறு, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் வளர்ச்சிக் கட்டுப்பாட்டு விதிகளில் (DCR) தேவையான திருத்தங்களை வெளியிட்டு, அதன்மூலம், ஊனமுற்றோருக்குத் தடையில்லாச் சூழ்நிலையை ஏற்படுத்தி, உடல் ஊனமுற்றோர் பயனடையும் வகையில் பொதுக் கட்டடங்களில் சாய்வு தளம் மற்றும் இதர தடையில்லாச் சூழ்நிலையை ஏற்படுத்த அரசால் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஊனமுற்றோர் சமுதாயத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் முழுமையாகப் பங்கேற்பதை உறுதி செய்யத் தேவையான தடையற்ற சூழ்நிலையை ஏற்படுத்தித் தரக் கோரி பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை, போக்குவரத்துத் துறை மற்றும் நகராட்சி நிருவாகத் துறை ஆகிய அரசுத் துறைகளை மாநில அரசு அறிவுறுத்தியுள்ளது.

## 4.24. கடும் ஊனமுற்றோருக்கான பராமரிப்பு உதவித் தொகை

கடுமையான ஊனமுற்றோர்களுக்கு மாதம் ரூ.200/— வீதம் பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்படுகிறது. பராமரிப்பு உதவித் தொகை, பயனாளிகளுக்குப் பண அஞ்சல் (Money order) வாயிலாக மாதந்தோறும் அவர்களுடைய வீட்டிற்கே அனுப்பப்படுகிறது. 8,400 கடும் ஊனமுற்ற நபர்கள் இதனால் பயனடைந்து வருகின்றனர். 22—7—2006 அன்று நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்து மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையில் இவ்வுதவித் தொகை ரூ.200/— லிருந்து ரூ.500/— ஆக உயர்த்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



## 4.25.1. மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கான பாதுகாப்பு இல்லம்

மனவளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிரைப் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிரைப்
14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய வயது வந்த மகளிரைப் பாதுகாக்கும் வகையில் பாதுகாப்பு இல்லம் நடத்துவதற்காகத் தொண்டு நிறுவனங்களுக்கு மாநில அரசால் மானிய உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் மதுரை, சேலம், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள 5 நிறுவனங்களுக்குத் தலா 30 பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக ஆண்டுதோறும் ரூ.2.50 இலட்சம் வீதம் மானியம் வழங்கப்பட்டு வருகிறது.

## 4.25.2. மனநிலை பாதிக்கப்பட்டோருக்கான இல்லம்

மனநலம் பாதிக்கப்பட்டோரைப் பராமரிக்கவென வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில், உதவும் உள்ளங்கள் எனப்படும் உள்ளூர் தொண்டு நிறுவனத்தின்மூலம் மனநலம் பாதிக்கப்பட்டோர் இல்லம் அரசின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வில்லமானது, மனநலம் பாதிக்கப்பட்டோரின் திறமைகள் குறித்துப் பொது மக்களிடையே சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது. இவ்வில்லத்தில், 25 மனநலம் குன்றியோர் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

## 4.26. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்காக அரசு சாரா அமைப்பு தேனி மாவட்டத்தில் பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் நடத்துதல்

60 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயனடையும் வகையில் தேனி மாவட்டத்தில் மூன்று பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. தமிழக அரசு வழங்கும் மானிய உதவியைக் கொண்டு அரசு சாரா அமைப்புகள் இம்மையங்களை நடத்தி வருகின்றன.

## 4.27. தேனி மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு மையம் நடத்த மானிய உதவி

மனவளர்ச்சி குன்றிய 25 குழந்தைகள் பயனடையும் வகையில் தேனி மாவட்டத்தில் அரசின் நிதியுதவியுடன் விடுதியுடன்கூடிய சிறப்பு மையம் ஒன்று தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[2006 ஆகஸ்ட் 22

### 4.28. மனநலம் குன்றியோர் மறுவாழ்வு மையங்களைப் பதிவு செய்தல்

மனநோயினால் பாதிக்கப்பட்டோருக்கான மறுவாழ்வு இல்லங்களை ஒழுங்குமுறைப்படுத்த வேண்டி, இந்தியாவிலேயே முதன்முறையாக தமிழ்நாடு மனநலம் குன்றியோர் மறுவாழ்வு மையங்கள் விதிகள், 2002 இயற்றியுள்ளது. இவ்விதியின்கீழ் மனநலம் குன்றியோர் மறுவாழ்வு நிறுவனங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட வேண்டும்.

### 4.29. சட்டப் படிப்பு முடித்த ஊனமுற்றோருக்கு உதவி

சட்டப் படிப்பு முடித்த 10 உடல் ஊனமுற்ற பட்டதாரிகள், வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்துகொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் ஒவ்வொரு பட்டதாரிக்கும் ரூ.3,000/– வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 4.30. அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள்

ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தின்படி, ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் "அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளாகக்" கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. ஊனமுற்றோர் தமது கலை மற்றும் விளையாட்டுத் திறமைகளை வெளிக்காட்ட ஊக்கப்படுத்துவதே இந்த நாளைக் கடைப்பிடிப்பதன் முக்கிய நோக்கமாகும். இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக, ஊனமுற்ற குழந்தைகளுக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இப்போட்டிகளில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சுமார் 5,000 ஊனமுற்ற மாணவ, மாணவியர் கலந்துகொள்கின்றனர். 102 வகையான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு, வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளும், மற்றவர்களுக்கு பங்கேற்புச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. இதன் தொடர்ச்சியாக, டிசம்பர் 3 ஆம் நாள் ஊனமுற்ற குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். இவ்விழாவில் ஊனமுற்றோருக்கு மிகச் சிறந்த சேவை புரிந்த ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பு அளித்தவர், சிறந்த சமூகப் பணியாளர், சிறந்த பணியாளர், சிறந்த ஆசிரியர் மற்றும் சிறந்த நிறுவனத்திற்கான மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன. இந்த நாளில் ஊனமுற்றோருக்கு உதவி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.



2006 ஆகஸ்ட் 22]

### 4.31. மாநில விருதுகள்

ஊனமுற்றோருக்கான சேவையில் ஈடுபட்டுள்ள நபர்கள்/ நிறுவனங்களைப் பாராட்டி, ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் மாநில அரசால் சுதந்திர தினத்தன்றும், அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்றும் கீழ்க்கண்ட மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன:

ஆண்டுதோறும் சுதந்திர நாள் விழாவன்று வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்:

| வ.எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1 | ஊனமுற்றோருக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | ஊனமுற்றோருக்கு சேவை செய்யும் சிறந்த நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ.50,000/ ரொக்கப் பரிசு |
| 3 | மகளிருக்கு சேவை செய்யும் சிறந்த நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், ரூ.50,000/- ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 4 | ஊனமுற்றோருக்கு சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | மகளிருக்கு சேவை புரிந்த சிறந்த சமூகப் பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 6 | ஊனமுற்றோருக்கு சேவை புரிந்த சிறந்த மருத்துவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 7 | ஊனமுற்றோர் நலனுக்காக அரும் பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், ரூ.25,000/- ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் |
| 8 | சிறந்த மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாளன்று (டிசம்பர் மாதம் மூன்றாம் தேதி) வழங்கப்படும் மாநில விருதுகள் விவரம்

| வ.எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1 | ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பளித்த தொழிலதிபர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | ஊனமுற்றோரில் மிகச் சிறந்த பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 3 | ஊனமுற்றோருக்குக் கல்வி கற்பிப்பதில் மிகச் சிறந்த ஆசிரியர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 4 | சிறந்த நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | இலட்சுமிகாந்தம் அம்மாள் விருது (பார்வையற்ற சிறந்த மாணவர்களுக்கானது) | சான்றிதழ் மற்றும் ரொக்கப் பரிசு ரூ.1,200/- |

### 4.32 தேசிய விருதுகள்

ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் திங்கள் 3 ஆம் நாள் அனைத்து நாடுகள் ஊனமுற்றோர் நாள் விழாவின்போது மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகம்மூலம் தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன. சிறந்த ஊனமுற்ற பணியாளர், தொழிலதிபர், பணியமர்த்தும் அலுவலர், நிறுவனம், தனி நபர், தனித்திறன் பெற்ற ஊனமுற்ற நபர், தனித்திறன் பெற்ற ஊனமுற்ற குழந்தை, முன்னோடி ஊனமுற்ற நபர் மற்றும் ஊனமுற்றோர் பயன்படுத்தும் வகையிலான சிறந்த தொழில்நுட்பங்கள் ஆகிய பிரிவுகளில் தேசிய விருதுகள் வழங்கப்படுகின்றன. சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கும் அமைச்சகம் ஒவ்வோர் ஆண்டும் 12 பிரிவுகளில், 70 தேசிய விருதுகளை வழங்குகிறது. இவ்விருதுகளைப் பெறுவதில் தமிழ்நாடு இதர மாநிலங்களைவிட முன்னிலை வகித்து வருகிறது.

### 4.33 மாவட்ட மறுவாழ்வு மையங்கள்

பல்வேறு ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்கவென, அனைத்து மாவட்டங்களிலும் மறுவாழ்வு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம் செங்கற்பட்டில், மாவட்ட மறுவாழ்வு மையம்





ஒன்று செயல்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் இம்மையம் மத்திய அரசின் நிதி உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டது. இம்மையத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டினை இவ்வாண்டு முதல் (2006–2007) மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது. ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2000 ஊனமுற்ற நபர்கள இம்மையத்தின்மூலம் பயனடைந்து வருகிறார்கள்.

மாநிலத்தின் இதர 29 மாவட்டங்களிலும் இதைப்போன்ற மாவட்ட மறுவாழ்வு மையங்கள் மாநில அரசின் நிதி உதவியுடன் செயல்பட்டு வருகின்றன. இம்மாவட்ட மறுவாழ்வு மையங்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ள ஊனமுற்றவர்களைக் கண்டறிந்து, அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்றவாறு மறுவாழ்வு உதவிகள் வழங்குகின்றன.

### 4.34 மாவட்ட மறுவாழ்வு மையங்களில் பணியாற்றும் பார்வையற்ற பணியாளர்கள்

தற்போது, சென்னை மற்றும் மதுரை நீங்கலாக, இதர மாவட்ட மறுவாழ்வு மையங்களில் ரூ.2,550–55–2,660–60–3,200 என்ற சம்பள ஏற்ற முறையில், 27 நாற்காலி ஒயர் பின்னும் பார்வையற்ற பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

### 4.35 ஊனமுற்றோருக்கான தேசிய மறுவாழ்வுத் திட்டம் (National Programme for Rehabilitation of Persons with Disabilities)

ஊனமுற்றோருக்கு சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகளை வழங்கும் ஊனமுற்றோருக்கான தேசிய மறுவாழ்வுத் திட்டம் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, தேனி மற்றும் இராமநாதபுரம் ஆகிய 4 மாவட்டங்களில் முதல் கட்டமாகச் செயல்படுத்தப்பட்டது. மேற்கண்ட மாவட்டங்களில் மறுவாழ்வுப் பணிகள், மாவட்டம், ஒன்றியம் மற்றும் ஊராட்சியளவில் செயல்படுத்தப்படுகின்றன. சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணியாளர்கள் 2,200 பேரும் மற்றும் 60 பல்நோக்கு மறுவாழ்வுப் பணியாளர்களும் இதற்கெனத் தேர்வு செய்யப்பட்டு, மறுவாழ்வுப் பணியில் முறையே ஒரு மாதம் மற்றும் மூன்று மாதங்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊனத்தைக் கண்டறியும் ஐம்பது மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, மறுவாழ்வு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன. பின்னர் இத்திட்டமானது தஞ்சாவூர் மற்றும் திருவாரூர் ஆகிய இரண்டு மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னையில், மாநில வளம் மற்றும் பயிற்சி மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## 4.36 அரசு மறுவாழ்வு இல்லங்கள்

தொழுநோயால் அவதியுறும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி மற்றும் மறுவாழ்வு அளித்திடவென கீழ்க்காணும் 10 இடங்களில் 10 மறுவாழ்வு இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன:

| வ. எண் | அரசு மறுவாழ்வு இல்லம் | நிறுவப்பட்ட நாள் |
|---|---|---|
| 1. | பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டம் | 18-6-1972 |
| 2. | தேவியாக்குறிச்சி, சேலம் மாவட்டம் | 23-10-1973 |
| 3. | மல்லவாடி, திருவண்ணாமலை மாவட்டம் | 4-7-1973 |
| 4. | மணையேறிப்பட்டி, தஞ்சாவூர் மாவட்டம் | 17-2-1973 |
| 5. | பரனூர், காஞ்சிபுரம் மாவட்டம் | 2-10-1971 |
| 6. | புதுக்கோட்டை, புதுக்கோட்டை மாவட்டம் | 7-01-1973 |
| 7. | செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம் | 19-10-1973 |
| 8. | உளுந்தூர்பேட்டை, விழுப்புரம் மாவட்டம் | 22-1-1972 |
| 9. | விண்ணப்பள்ளி, ஈரோடு மாவட்டம் | 10-1-1974 |
| 10. | யா. புதுப்பட்டி, மதுரை மாவட்டம் | 22-4-1973 |

ஒவ்வோர் அரசு மறுவாழ்வு இல்லத்திலும் 400 பெரியவர்கள் மற்றும் 25 சிறார்கள் சேர்க்க அனுமதிக்கப்பட்டுள்ளது. தொழுநோயால் பாதிக்கப்பட்டு, தானாகச் சேர முன்வரும் நோயாளிகள் அவர்களுடைய நோயின் தன்மையை மருத்துவர் உறுதிப்படுத்தியபின், இல்லங்களில் சேருவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். உளுந்தூர்பேட்டை அரசு மறுவாழ்வு இல்லத்தில் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட தொழுநோய்ப் பிச்சைக்காரர்கள் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். நோயாளிகள் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுடன் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். இல்லங்களில் தங்குவோர் முழுமையாகக் குணப்படுத்தப்பட்ட நிலையிலோ அல்லது ஒழுங்கு நடவடிக்கை காரணமாகவோ இல்லத்திலிருந்து விடுவிக்கப்படுகின்றனர்.





இல்லவாசிகளுக்கு இலவச தங்கும் வசதி, உணவு, உடை, மருத்துவ வசதி ஆகியவற்றுடன் பொழுதுபோக்கு வசதிகளான, விளையாட்டு, நூலகம், இசைக் கருவிகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டி ஆகியவை அளிக்கப்பட்டுள்ளன. நல்ல நிலையில் உள்ள இல்லவாசிகளுக்குப் பாய் முடைதல், துணி நெய்தல், தையல் மற்றும் காலணிகள் தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுகிறது.

இல்லவாசிகளுக்கு நாளொன்றுக்குப் பெரியவர்களுக்கு ரூ.20/- செலவிலும், குழந்தைகளுக்கு ரூ.15/- செலவிலும் உணவு வழங்கப்படுகிறது. சிறப்பு விழா நாட்களான பொங்கல், தீபாவளி மற்றும் காந்தி ஜெயந்தி ஆகிய தினங்களில் நபர் ஒன்றுக்குக் கூடுதலாக ரூ.5/- செலவில் சிறப்பு உணவு வழங்கப்படுகிறது. ஒவ்வோர் இல்லவாசிக்கும் ஆண்டுக்கு இரண்டு இணை உடைகளுடன், பொங்கல் அன்று இலவச வேட்டி/சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வோர் ஆண்டும் இலவசமாகப் பாய்கள் மற்றும் நுண்ணிய துளை ரப்பர் காலணிகள் வழங்கப்படுகின்றன. தட்டுகள் மற்றும் குவளைகள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும், போர்வைகள் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் வழங்கப்படுகின்றன. 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும், இல்லவாசிகளின் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்களும், நோட்டுப் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன.

இல்லவாசிகளுக்கு மருத்துவ அலுவலர்களின்மூலம் மருத்துவ வசதிகள் அளிக்கப்படுகின்றன. ஒவ்வோர் இல்லத்திற்கும் செலவுக்கென கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது:

| வ. எண் | விவரம் | செலவினம் ஆண்டொன்றுக்கு |
|---|---|---|
| 1. | பிரத்தியேகமான காலணிகள் மற்றும் செயற்கைக் கால் அவயங்கள் (தேவை உள்ளவர்களுக்கு மட்டும்) | ரூ.1,000/- |
| 2. | மூக்குக் கண்ணாடி வாங்குவதற்கு | ரூ.2,000/- |
| 3. | பற்பொடி மற்றும் பல் துலக்கும் புருசு வழங்குவதற்கு | ரூ.2,500/- |
| 4. | விளையாட்டுச் சாதனங்கள் | ரூ.1,200/- |
| 5. | இசைக் கருவிகள் | ரூ.400/- |

மேலும், இல்லவாசிகள் இறந்தால் அவர்களின் ஈமச்சடங்கிற்காக ரூ.500/– வழங்கப்படுகிறது.

### 4.37 அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம், மேல்பாக்கம்

1945 ஆம் ஆண்டு தமிழ்நாடு பிச்சை எடுப்பதைத் தடுக்கும் சட்டம் இயற்றப்பட்டது. மேல்பாக்கத்திலுள்ள அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம் 950 நபர்கள் தங்கும் வகையில் (ஆண்கள் 770 + பெண்கள் 180) 1–3–1954 அன்று தொடங்கப்பட்டது. நீதித் துறை நடுவர்மூலமாகத் தண்டிக்கப்பட்ட பிச்சைக்காரர்கள், இந்த இல்லத்தில் தங்க வைக்கப்படுகின்றனர். அவர்களுக்கு இவ்வில்லத்தில் இலவச உணவு, தங்குமிடம், உடை, மருத்துவ வசதி அளிக்கப்பட்டு, நெசவு, தச்சு, மண்பாண்டத் தொழில் மற்றும் தையல் போன்ற பிரிவுகளில் பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

மேலும், இல்லத்திலுள்ள ஆண்களுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு துண்டுகள், இரண்டு இணை சட்டைகள் மற்றும் கால் சட்டைகள் ஆகியவையும் பெண்களுக்கு ஆண்டொன்றுக்கு இரண்டு இணை சேலைகள் மற்றும் ஜாக்கெட்டுகள் ஆகியவையும் வழங்கப்படுகின்றன. இவற்றைத் தவிர, பொங்கல் நாளன்று இலவச வேட்டிகளும், சேலைகளும் வழங்கப்படுகின்றன. ஒவ்வோர் இல்லவாசிக்கும், பாய், படுக்கை விரிப்பு, தட்டு, டம்ப்ளர், தேங்காய் எண்ணெய் ஆகியவை வழங்கப்படுகின்றன. இவர்கள் தண்டனைக் காலம் முடிந்தவுடன் சொந்த ஊருக்குத் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

### 2006–2007 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல்

### ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரகம்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டம் | தொகை |
|---|---|---|
| 1. | ஊனமுற்றோருக்கான உதவி மற்றும் உபகரணங்கள் வாங்குதல் | 75.00 |
| 2. | விருதுநகர், காது கேளாதோர் அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்துதல் | 10.51 |
| 3. | 23 அரசு சிறப்புப் பள்ளிகளுக்கு சமையல் பாத்திரங்கள் வாங்குதல் | 4.60 |



| வ. எண் | திட்டம் | தொகை |
|---|---|---|
| 4. | ஊனமுற்றோருக்கான மாநில ஆணையரகத்திற்கு பதிவேடுகள் அறைக்கு இரும்பு அடுக்குகள் வாங்குதல் | 0.50 |
| 5. | 22 அரசு சிறப்புப் பள்ளிகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் வாங்குதல் | 6.60 |
| 6. | திருவண்ணாமலை, மல்லவாடி அரசினர் மறுவாழ்வு இல்லத்திற்கு குளிர்சாதனப் பெட்டி வாங்குதல் | 0.15 |
| 7. | பார்வையற்றோர், கை, கால் ஊனமுற்றோர், மனநலம் குன்றியோர் ஆகியோருக்கான அரசு சிறப்புப் பள்ளிகளுக்கு வகுப்பறைக் கலன்கள் வாங்குதல் | 7.20 |
| 8. | அனைத்து மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் தலைமைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு 8 கணினிகள் வாங்குதல் | 4.00 |
| 9. | தஞ்சாவூர், மனையேறிப்பட்டி அரசினர் மறுவாழ்வு இல்லத்திற்கு சமையல் எரிவாயு வசதி செய்து கொடுத்தல் | 3.47 |
| 10. | தலைமைக் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு ஒளி நகல் இயந்திரம் வாங்குதல் | 0.98 |
| | மொத்தம் | 113.01 |

## அத்தியாயம் 5

### சமூகப் பாதுகாப்பு

*5.1* துயருறும் சூழலில் உள்ள சிறார்களுக்குச் சேவை புரிவதில் தமிழ்நாடு முன்னோடியாகத் திகழ்கிறது. கைவிடப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட மற்றும் தவறிழைத்த சிறார்களின் சீர்திருத்தம் மற்றும் மறுவாழ்வுக்காக இந்தியாவில் முதல் சீர்திருத்தப் பள்ளி 1887 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் செங்கற்பட்டில் தொடங்கப்பட்டது.

சிறார்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக இளைஞர் நீதிச் சட்டம், 1986 (மத்திய சட்டம்) 2–10–1987 முதல் அமலாக்கம் செய்யப்பட்டது. குழந்தைகள் உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகளின் சாற்றுரையின் அடிப்படையில், மத்திய அரசு 1986 ஆம் ஆண்டின் இளைஞர் நீதிச் சட்டத்தை மறு ஆய்வு செய்து, 2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) என்ற புதிய சட்டத்தை நடைமுறைப்படுத்தியது. இப்புதிய சட்டத்தின் விரிவான விதிமுறைகளை 14–2–2002 அன்று அறிவிக்கை செய்ததில் தமிழ்நாடு அரசு முதல் மாநிலமாகத் திகழ்கிறது. திருத்தப்பட்ட சட்டத்தின்படி, தற்போது சிறார்களின் கவனிப்பு மற்றும் பாதுகாப்புத் தொடர்புடைய இளைஞர் நலக் குழுமம், குழந்தைகள் நலக் குழுவாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இளைஞர் நீதிமன்றங்கள், இளைஞர் நீதிக் குழுமமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இவ்விரு குழுமங்களும் நிறுவப்பட்டு, நன்முறையில் இயங்கி வருகின்றன. இச்சட்டத்தின் விதிமுறைகளுக்குட்பட்டு, பல்வேறு சிறுவர் கவனிப்பு நிறுவனங்களின் பெயர்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

#### 5.2.1 இளைஞர் நீதிக் குழுமங்கள்

திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் சட்டத்தின்கீழ், சட்டத்திற்குப் புறம்பாகச் செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள் குறித்த வழக்கு விசாரணைகளை விசாரிக்க, சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், சேலம், கடலூர், திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இளைஞர் நீதிக் குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டன. இக்குழுமங்கள் பெருநகர் நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதிமன்ற நடுவர் மற்றும் இரண்டு சமூகப் பணியாளர்களைக் கொண்டு (ஒரு பெண் சமூகப் பணியாளர் உட்பட) 1973 ஆம் ஆண்டின் குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பின்படி அதிகாரங்களைக் கொண்ட நீதிமன்ற நடுவர் குழுவாகச் செயல்படுகின்றன. சம்பந்தப்பட்ட கூர்நோக்கு இல்லங்களில், இக்குழுமங்கள் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் வாரத்தில் மூன்று முறை கூடுகின்றன.



#### 5.2.2 கூர்நோக்கு இல்லங்கள்

தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள், இளைஞர் நீதிக் குழுமங்கள்மூலமாக கூர்நோக்கு இல்லங்களில் சேர்க்கப்பட்டு வருகின்றனர். தன்னார்வத் தொண்டு அமைப்புகளின் கீழியங்கும் கூர்நோக்கு இல்லங்களுக்குப் பராமரிப்பு மானியமாக மாதம் ஒன்றுக்கு ஒரு இல்லவாசிக்கு ரூ.225/– வீதம் அரசு வழங்குகிறது.

தற்போது, மாற்றியமைக்கப்பட்ட சட்டத்தின்படி, சட்டத்திற்குப் புறம்பாக (தவறிழைத்த) செயல்பட்டதாகக் கருதப்படும் சிறார்கள் மட்டுமே கூர்நோக்கு இல்லங்களில் சேர்க்கப்படுவார்கள்.

சென்னை, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி, சேலம் மற்றும் கடலூர் ஆகிய ஆறு இடங்களில், தலா ஒரு அரசு கூர்நோக்கு இல்லமும், மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இரண்டு கூர்நோக்கு இல்லங்களும் செயல்பட்டு வருகின்றன.

#### 5.2.3 சிறுவர்/சிறுமியருக்கான சிறப்பு இல்லங்கள்

2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ், சிறுவர்/சிறுமியருக்கான இளைஞர் நீதிக் குழுமங்கள்மூலம், தவறிழைத்ததாகக் கருதப்படும் சிறார்கள் சிறப்பு இல்லங்களில் அனுமதிக்கப்பட்டு அச்சிறார்களுக்குக் கவனிப்பு, பாதுகாப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு ஆகியவை இளைஞர் நீதிக் குழுமங்கள் ஆணையிடும் காலம் வரை வழங்கப்படுகின்றன. சிறுமிகளுக்கு சென்னையிலும், சிறுவர்களுக்காக வேலூரிலும், இரண்டு அரசினர் சிறப்பு இல்லங்கள் இயங்கிவருகின்றன.

#### 5.3.1 குழந்தைகள் நலக் குழுக்கள்

2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள கவனிப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின்கீழ், கவனிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் சிறார்களுக்குக் கீழ்க்கண்ட இடங்களில் 18 குழந்தைகள் நலக் குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன:

[2006 ஆகஸ்ட் 22

| | | |
|---|---|---|
| 1. சென்னை | 7. சேலம் | 13. தஞ்சாவூர் |
| 2. செங்கற்பட்டு | 8. கோயம்புத்தூர் | 14. திருச்சிராப்பள்ளி |
| 3. இராணிப்பேட்டை | 9. விருதுநகர் | 15. மதுரை |
| 4. கடலூர் | 10. திண்டுக்கல் | 16. திருநெல்வேலி |
| 5. தருமபுரி | 11. காரைக்குடி | 17. நாகப்பட்டினம் |
| 6. ஈரோடு | 12. தூத்துக்குடி | 18. திருவள்ளூர் |

ஒவ்வொரு குழந்தைகள நலக் குழுவும், ஒரு தலைவர் (அரசு சார்பற்றவர்) மற்றும் நான்கு உறுப்பினர்கள் கொண்டுள்ளது (ஒரு பெண் உறுப்பினர் உட்பட). பெருநகர் நீதிமன்ற நடுவர் அல்லது முதல் வகுப்பு நீதிமன்ற நடுவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இக்குழந்தைகள் நலக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி என வாரத்தில் மூன்று நாட்கள், சம்பந்தப்பட்ட குழந்தைகள் இல்லங்களில் கூடுகின்றன.

### 5.3.2 சிறுவர்/சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள்

2000 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் 31 சிறுவர்/சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்களில் குழந்தைகள் நலக் குழுக்கள்மூலம் அனுப்பப்படும் சிறார்களுக்குப் பாதுகாப்பு, பயிற்சி, கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவை வழங்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (செங்கல்பட்டு, தட்டப்பாறை, இராணிப்பேட்டை, தஞ்சாவூர், சென்னை-13, மல்லிப்புத்தூர், பஞ்சப்பள்ளி, ஈரோடு, விழுப்புரம் மற்றும் காரைக்குடி) மற்றும் சிறுமியர் 1 (சென்னை) | 11 |
| 2 | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்கள் (சென்னை-21, சென்னை-113, சென்னை-8, சென்னை-93, சென்னை 17, சென்னை-107, சென்னை-39, சென்னை 10 (2 இல்லங்கள்), காந்திகிராம், கோயம்புத்தூர், தருமபுரி, சேலம், மதுரை, திருவள்ளூர், திருவண்ணாமலை, விருதுநகர், மயிலாடுதுறை, திண்டுக்கல் மற்றும் தூத்துக்குடி) | 20 |
| | மொத்தம் | 31 |



2006 ஆகஸ்ட் 22]

மாற்றியமைக்கப்பட்ட சட்டத்தின்படி, குழந்தைகள் நலக் குழுவின் ஆணைப்படி, கவனிப்பு மற்றும் பாதுகாப்பிற்காக மட்டும் அனுமதிக்கப்படும் சிறார்கள், குழந்தைகள் இல்லங்களில் அனுமதித்து பராமரிக்கப்படுகின்றனர்.

அரசு சாரா நிறுவனங்களினால் நடத்தப்படும் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் இல்லங்களுக்கு ஒரு மாதத்திற்கு ஒரு குழந்தைக்கு ரூ.225/- என பராமரிப்புத் தொகை அரசால் வழங்கப்படுகிறது.

### 5.3.3 பிற்காப்பு நிறுவனங்கள்

சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் இருந்து விடுபடும் சிறார்களின் மறுவாழ்வு நலனை முன்னிட்டு, பிற்காப்பு நலத் திட்டங்களைச் செயல்படுத்த கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் மூன்று "பிற்காப்பு நிறுவனங்கள்" செயல்பட்டு வருகின்றன:

| | | |
|---|---|---|
| 1 | அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், ஆத்தூர் (காஞ்சிபுரம் மாவட்டம்) | 1 |
| 2 | அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனம், மதுரை | 1 |
| 3 | அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனம், வேலூர் | 1 |

பிற்காப்பு நிறுவனத்தில் தங்கும் இல்லவாசிகளுக்கு வேலைவாய்ப்புடன்கூடிய தொழிற்பயிற்சிகள் கற்பிக்கப்படுகிறது. கவனிப்பு மற்றும் குழந்தைகள் இல்லத்திலிருந்து வெளியேறும், பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகள், தங்கள் உயர் கல்வியினைத் தொடர, பிற்காப்பு நிறுவனங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்.

## 5.4 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் அமைந்த மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்கள்

1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் தவறிழைத்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் மகளிருக்கென அமைக்கப்பட்ட பாதுகாப்பு இல்லங்களில், இவர்களுக்குப் பாதுகாப்பு, பராமரிப்பு, பயிற்சி மற்றும் மறுவாழ்வு வழங்கப்படுகிறது. மேலும் இவ்வில்லங்களில், ஒழுக்க நெறி அச்சுறுத்தலுக்கு உள்ளான சிறுமியர்

மற்றும் மகளிர், பாதுகாப்பிற்காகத் தாமாக முன்வந்து இவ்வில்லங்களில் தங்குவதற்கு, சமூகப் பாதுகாப்புத் துறை ஆணையரின் அனுமதியுடன் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். ஆறு மகளிர் காப்பகங்கள்/பாதுகாப்பு இல்லங்கள் கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் இயங்கி வருகின்றன:

| | |
|---|---|
| சென்னை | 2 |
| மதுரை | 1 |
| திருச்சிராப்பள்ளி | 1 |
| சேலம் | 1 |
| கோயம்புத்தூர் | 1 |
| **மொத்தம்** | **6** |

### 5.5 மீட்புப் புகலிடம்

இச்சட்டத்தின்கீழ் விசாரணைக்குட்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கென 6 மீட்புப் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன. இப்புகலிடங்கள் அந்தந்த இடங்களில் உள்ள மகளிர் காப்பகங்கள் மற்றும் பாதுகாப்பு இல்லங்களுடன் இணைந்து செயல்படுகின்றன.

### 5.6 மணமாகாத தாய்மார்கள் இல்லம்

பாலியல் கொடுமைகளால் பாதிப்பிற்குள்ளாகி மகப்பேறடைந்த மகளிர் மற்றும் சிறுமியர் கீழ்க்குறிப்பிட்டுள்ள இல்லங்களில் அனுமதிக்கப்படுகின்றனர்:

1. அரசினர் மகளிர் காப்பகம் மற்றும் ஸ்ரீசதனா, சென்னை–4
2. புனித பிரான்சிஸ் சேவியர் மீட்பு இல்லம், அடைக்கலாபுரம், தூத்துக்குடி மாவட்டம் (தன்னார்வத் தொண்டு நிறுவனம்)

### 5.7 குறுகிய கால இல்லம்

மேற்குறிப்பிட்டவை தவிர, திக்கற்ற மகளிருக்கென சென்னையில் தன்னார்வத் தொண்டு நிறுவனம் நடத்தி வரும் "அபய நிலையம்" என்ற இல்லம் இயங்கி வருகிறது. இத்தன்னார்வத் தொண்டு நிறுவனத்திற்குப் பராமரிப்புத் தொகையாக, ஒரு பெண் இல்லவாசிக்கு, மாதம் ஒன்றிற்கு ரூ.225/– வீதம் ஒவ்வோர் ஆண்டும் அரசினால் வழங்கப்படுகிறது.





### 5.8 இடை வழி இல்லம்

பாதிக்கப்பட்ட சூழலில் உள்ள சிறுமியர் மற்றும் மகளிருக்குப் புகலிடம், கல்வி மற்றும் தொழிற்பயிற்சி அளிக்கும் விதத்தில் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் 1999–2000 ஆம் ஆண்டில், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் ஒரு இடை வழி இல்லம் 25 பெண்களைப் பராமரிக்கும் வகையில் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

### 5.9 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள்

கூர்நோக்கு இல்லங்கள், குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களிலுள்ள சிறார்களின் பிரச்சினைகளை இளைஞர் வழிகாட்டி நிலையங்கள், உளவியல்ரீதியாக ஆய்ந்து, சம்பந்தப்பட்ட தகுதியுடைய அதிகாரிகளுக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கின்றன. சென்னை (2), மதுரை, வேலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் தலா ஒன்றும், ஆக 5 இளைஞர் வழிகாட்டி நிலையங்கள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கி வருகின்றன.

### 5.10 கல்விப் பயிற்சி

அனைத்து அரசு சிறுவர் மற்றும் சிறுமியருக்கான குழந்தைகள்/சிறப்பு இல்லங்களில் 8 ஆம் வகுப்பு வரை கல்வி அளிக்கப்படுகிறது. செங்கற்பட்டு அரசினர் சிறுவர் குழந்தைகள் இல்லம் மற்றும் சென்னை அரசினர் சிறுமியருக்கான குழந்தைகள்/சிறப்பு இல்லத்தில் 10 ஆம் வகுப்புக் கல்வியுடன், கணிப்பொறிப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இத்துறை, சிறார்கள் தமது உயர் கல்வியினைத் தொடரும்பொருட்டு, மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பக் கல்வி, தொழிற்பயிற்சிக் கல்வி மற்றும் மேல்நிலை/உயர்நிலைக் கல்வி ஆகியவை படிக்க உரிய வசதிகள் செய்து தருகிறது. குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களின் சிறார்கள் வெளியில் பயின்று வரும் சில உயர் கல்வி விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| மருத்துவக் கல்வி பட்டப் படிப்பு | 1 |
| பொறியியல் பட்டப் படிப்பு | 1 |
| தொழிற்பயிற்சி சான்றிதழ் படிப்பு | 31 |
| தொழில்நுட்பக் கல்வி | 6 |
| உயர்நிலைக் கல்வி | 19 |
| மொத்தம் | 61 |

## 5.11 தொழிற்பயிற்சி

மறுவாழ்வுத் திட்டத்தின் ஒரு பகுதியாக, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மற்றும் தொழில் ஆசிரியர்கள்மூலம் தொழிற்பயிற்சியும் பயிற்றுவிக்கப்படுகிறது. மேற்குறிப்பிட்டவை தவிர, பின்வரும் குறுகிய காலத் தொழிற்பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன:

1) மாவு அரைத்தல்

2) தானியங்கி பழுதுபார்ப்பு

3) திரை அச்சுக் கலை மற்றும்

4) கணினிப் பயிற்சி

தொழில் பிரிவுகளில் உள்ள சிறார்களுக்குக் கீழ்க்கண்டவாறு ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது:

| | | |
|---|---|---|
| 1 | முழுத் திறன் பெற்ற சிறார்கள் ஒரு சிறாருக்கு | ரூ.70/- மாதந்தோறும் |
| 2 | பாதித் திறன் பெற்ற சிறார்கள் ஒரு சிறாருக்கு | ரூ.50/- மாதந்தோறும் |

இவ்வாறு வழங்கப்படும் ஊக்கத் தொகை சேமிக்கப்பட்டு இல்லவாசிகளின் கைச்செலவுக் கணக்கில் மாதந்தோறும் வரவு வைக்கப்படுகிறது.

## 5.12 இல்ல நீக்கம் செய்யப்படும் இல்லவாசிகளுக்கான தொழிற்பயிற்சிகள்

காஞ்சிபுரம் மாவட்டம் ஆத்தூரில் உள்ள அரசினர் மாணவர் பிற்காப்பு நிறுவனத்தில் வேலைவாய்ப்புடன்கூடிய தொழிற்பிரிவுகளில் இல்ல நீக்கம் செய்யப்பட்ட இல்லவாசிகளுக்குக் கணினிப் பயிற்சி (டி.டி.பி.), தானியங்கி பழுதுபார்த்தல் மற்றும் மின் கம்பியாளர் பயிற்சி வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்தின்மூலம் இதுவரை 210 மாணவர்கள் பயிற்சி முடித்து பயனடைந்துள்ளனர்.

வேலூர், அரசினர் மகளிர் பிற்காப்பு நிறுவனத்தில் தங்கும் மகளிருக்கு, ஊசி வேலைப்பாடு மற்றும் தையல் ஆகிய பிரிவுகளில் தொழில் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.



## 5.13 மறுவாழ்வுத் திட்டங்கள்

சமூகப் பாதுகாப்புத் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்களில் பயிற்சி பெற்று வெளியேறும் குழந்தைகள்/இல்லவாசிகளுக்குக் கீழ்க்குறிப்பிட்ட மறுவாழ்வுத் திட்டங்கள் வழங்கப்படுகின்றன:

1. மறுவாழ்வு வழங்கும் விதமாக பெண் இல்லவாசிகளுக்கு திருமணக் கொடையாக ரூ.3,000/-ம், திருமண நாள் செலவாக ரூ.2,000/-ம் வழங்கப்படுகிறது.

2. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதி விதிகள் 2002-ன்படி நிறுவனங்களுக்கான உள்ளமைப்பு வசதிகள் ஏற்படுத்துதல், முற்றிலும் அனாதை/ஆதாரவற்ற குழந்தைகளுக்குக் கல்வி உதவி ரூ.5,000/-த்திற்கு மிகாமல் மற்றும் பொருளுதவி ரூ.10,000/-த்திற்கு மிகாமலும் இளைஞர் நீதி (குழந்தைகள் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம், 2000 மற்றும 1956 ஆம் ஆண்டின் ஒழுக்க நெறி பிறழ்தல் (தடுப்புச்) சட்டத்தின்கீழ் வீடேகிய இல்லவாசிகளுக்கு உதவும் வகையில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் நிறுவனக் கட்டடங்களில் சிறு பழுதுபார்த்தல் பணிகள் மற்றும் கட்டுமானப் பணிகளுக்கென ஒரு நிறுவனத்திற்கு ஓராண்டுக்கு ரூ.20,000/-க்கு மிகாமல் செலவிடவும், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்குச் சாதனங்கள் வாங்கவும் மற்றும் குழந்தைகளின் நலன் கருதி மேற்கொள்ளும் செலவினங்களும் இந்நிதியிலிருந்து செலவிடப்படும். இத்தொகை, இதற்கென அமைந்த ஆட்சிக் குழுமத்தினால் நிர்வகிக்கப்படுகிறது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான தமிழ்நாடு சமூகப் பாதுகாப்பு நல நிதியிலிருந்து, மகளிர் காப்பகங்கள்/பிற்காப்பு நிறுவனங்களில் இருந்து வீடேகிய இல்லவாசிகளுக்கு, சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.5,000/- வரை, சிறு கடைகள், தையற்கடை, ஆடு, மாடு வளர்த்தல் ஆகிய தொழில்களைத் தொடங்குவதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்மூலம் இதுவரை 153 முன்னாள் இல்லவாசிகள் பயன்பெற்றுள்ளனர்.

3. மேலும், அரசினர் குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில், கீழ்க்கண்ட பல்வேறு தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற்று வீடேகும் இல்லவாசிகள் சுய தொழில் தொடங்க உதவுவதற்காக, கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாங்க ஒட்டுமொத்த மானியம் வழங்கப்படுகிறது:

| வ. எண் | தொழிற்பிரிவுகள் | எண்ணிக்கை | உதவித் தொகை (தலா) ரூ. |
|---|---|---|---|
| 1 | தச்சு | 5 | 2,000 |
| 2 | நெசவு | 2 | 1,000 |
| 3 | புத்தகம் கட்டுதல் | 3 | 1,000 |
| 4 | தோட்டம் மற்றும் வேளாண்மை | 4 | 500 |
| 5 | கொத்து பிரிவு | 2 | 500 |
| 6 | தையல் | 10 | 2,500 |
| 7 | பூத்தையல் | 2 | 1,000 |
| 8 | உலோக வேலை | 4 | 1,000 |
| 9 | பாய் நெசவு | 4 | 1,000 |
| 10 | வீட்டு மின் இணைப்பு, கம்பி சுருள் சுற்றுதல் மற்றும் குழாய்ப் பணிகள் | 2 | 1,000 |
| 11 | மின் பற்ற வைப்பு | 2 | 1,000 |
| 12 | இரண்டு சக்கர வாகனப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் | 2 | 2,000 |

### 5.14 குடும்ப உதவித் திட்டம்

பின்தங்கிய பொருளாதாரச் சூழ்நிலை காரணமாக, குழந்தைகள் இல்லங்களுக்கு வரும் சிறார்களுக்கு உதவி செய்யும் விதத்தில் குடும்ப உதவித் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ், குழந்தைகள் இல்லத்தில் பராமரிக்கப்படும் குழந்தைகள், இல்ல நீக்கம் செய்யப்பட்டுக் குடும்பத்துடன் தங்க அனுமதிக்கப்படுகின்றனர். இதுபோன்ற சிறார்களுக்கு, அவர்களின் கல்வியினைத் தொடரும்பொருட்டு நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி அமைக்கப்பட்ட குழுமூலம் சிறார்கள் கண்டறியப்பட்டு, அவர்கள் பெற்றோர் வசம் மீண்டும் ஒப்படைக்கப்படுகின்றனர். சிறார் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு ரூ.200/– வீதம் நிதி உதவி அவர்களின் குடும்பத்திற்கு, இல்லவாசியின் உரிய இல்ல நீக்க நாள் வரை வழங்கப்படுகிறது. இல்லங்களில் சேர்ந்து பயிலாமல், சிறார்கள் தாமாகவே பயில உதவும் முயற்சியாக இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.



### 5.15 சிறார்கள் பிச்சை எடுத்தலை ஒழித்தல்

சிறார்கள் பிச்சை எடுப்பதைத் தடுப்பதற்கு, சிறார்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஆலோசனை வழங்கும் வகையில், சென்னை, இந்திய குழந்தைகள் நலச் சங்கம் என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின்கீழ் இளைஞர் வழிகாட்டி நிலையம் ஒன்று தமிழ்நாடு அரசின் நிதி உதவியுடன் இயங்கி வருகின்றது.

### 5.16 சிறப்புப் பராமரிப்பு மையம்

குழந்தைகள் இல்லங்களில் பயிலும் ஆதரவற்ற சிறார்களுக்கு, பெற்றோர்களின் அரவணைப்பு கிடைக்கும் வகையில் ஒரு சிறப்புப் பராமரிப்பு மையம் (சிறுமியர்) தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் சென்னையில் நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் ஐம்பது சிறுமியர் பயன்பெறுகிறார்கள்.

### 5.17 ஆதரவற்ற மற்றும் துன்புறுத்தலுக்கு ஆளான சிறார்களின் இடர்ப்பாடுகள் தலையீட்டு மையம்

குழந்தைகளை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தவிர்க்க, தமிழ்நாடு அரசு, இந்திய குழந்தைகள் நலச் சங்கம், சென்னை (தமிழ்நாடு கிளை) வாயிலாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில், குழந்தைகளைத் தவறாகப் பயன்படுத்துவது குறித்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரிக்கப்படுவதுடன், பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குத் தற்காலிகக் கவனிப்பு மற்றும் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. குழந்தைகளுக்கும், அவர்களின் பெற்றோருக்கும் உரிய வழிகாட்டுதல்களையும், ஆலோசனைகளையும வழங்குகிறது.

### 5.18 சாலையோர சிறார்களுக்கான விரிவான திட்டம்

தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் இயங்கி வந்த சாலையோர சிறார்களுக்கான இரவுப் புகலிடத் திட்டம், சாலையோர சிறார்களுக்கான விரிவான திட்டமாக மாற்றியமைக்கப்பட்டு, பராமரிப்பு மானியமாக ஒரு வருடத்திற்கு ஒரு புகலிடத்திற்கு ரூ.45,500/– என வழங்கப்பட்ட தொகை, தற்போது ஒரு வருடத்திற்கு ஒரு புகலிடத்திற்கு ரூ.1,35,000/– (ஒரு இல்லவாசிக்கு ஒரு மாதத்திற்கு ரூ.225/–வீதம் x 50 இல்லவாசிகளுக்கு x 12 மாதங்கள்) என உயர்த்தப்பட்டுள்ளது. இப்புகலிடங்கள் சாலையோர சிறார்களுக்கு ஒரு பாதுகாப்பான இடமாக விளங்குகின்றன. ஒவ்வொரு புகலிடத்திலும் 50 சிறார்கள் சேர்க்கப்பட்டு, அவர்கள் பயன் பெறும் வகையில் உணவு,

முறை சாராக் கல்வி மற்றும் தொழிற்பயிற்சி வழங்கப்படுகிறது. கீழ்க்குறிப்பிட்ட இடங்களில் புகலிடங்கள் செயல்பட்டு வருகின்றன:

| | | | |
|---|---|---|---|
| சென்னை | 2 | திருநெல்வேலி | 1 |
| மதுரை | 2 | சேலம் | 1 |

300 சிறார்கள் இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுகின்றனர்.

## 5.19 குழந்தைகளுக்கான தொலைபேசி உதவித் திட்டம் (Childline)

துன்பச் சூழ்நிலையிலுள்ள குழந்தைகளுக்கு அவசர காலத் தொலைபேசி அழைப்புகள்மூலம் உதவ, குழந்தைகளின் இலவசத் தொலைபேசித் திட்டம் ஒன்று சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலி நகரங்களில், மைய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான ஒரு இலவச சிறப்புத் தொலைபேசி எண் 1098 நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள குழந்தைகள் அனைவரும் பயன்பெறும் வகையில் இத்தொலைபேசி சேவை காவல் துறைமூலம் அனைத்து மகளிர் காவல் நிலையங்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

## 5.20 காணாமற்போன சிறார்களுக்கான தகவல் மையம்

காணாமற்போன சிறார்களை அவர்களுடைய குடும்பத்துடன் சேர்க்க உதவும் வகையில், உயர் தொழில்நுட்பத் தகவல் மையம் தொடங்கப்பட்டுள்ளது. இத்தகவல் மையங்கள் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

## 5.21 திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு

சமூகப் பாதுகாப்புத் துறையினால் செயலாக்கப்படும் குழந்தைகள் நலத் திட்டங்களைக் (நிறுவனங்கள் மற்றும் நிறுவனம் சாராத பணிகள்) கண்காணிக்க யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் 1991 ஆம் ஆண்டில் சமூகப் பாதுகாப்புத் துறை ஆணையரகத்தில் திட்ட முன்னேற்றம், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

துயருறும் சூழ்நிலையில் உள்ள சிறார்கள் குறித்துக் கருத்தரங்குகள் மற்றும் பயிலரங்கங்கள் நடத்துவதோடு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சாலையோர சிறார்களுக்கான நலத் திட்டங்களை இப்பிரிவு ஆயவு செய்து வருகிறது.



## 5.22 மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடை செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

மகளிர் மற்றும் குழந்தைகள் கடத்தப்பட்டு வணிகரீதியில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்தப்படுதலைத் தடுப்பது மாநில அரசின் முக்கிய நோக்கமாகும். இந்நோக்கத்திற்கென கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

- மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு ஒன்று தலைமைச் செயலரின் தலைமையின்கீழ் நவம்பர் 2001–ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- இதேபோல, மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- கிராமப் பஞ்சாயத்துத் தலைவரின் தலைமையில் ஒவ்வொரு பஞ்சாயத்திலும் இப்பிரச்சினைகளை ஆரம்ப நிலையிலேயே கவனித்துத் தடுக்க கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பெண்கள் மற்றும் குழந்தைகள் கடத்தப்படுதலைத் தடுக்க, இவ்வகையான மூன்றடுக்குத் திட்டத்தைத் தோற்றுவித்ததில் தமிழ்நாடு முதல் மாநிலமாகும்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்துதல் மற்றும் வணிகரீதியாகப் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுப்பதற்காக மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் மேற்பார்வைக்காகத் துணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுக்கள் மாவட்ட அளவிலான ஆலோசனைக் குழுக்கள் மற்றும் கிராம அளவிலான கண்காணிப்புக் குழுக்களின் பணிகளை மேற்பார்வையிடும் குழுக்களாகும்.
- பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்தி, வணிகரீதியில் பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துவதைத் தடுக்கவும், கடத்தலுக்கு எதிராகப் பிரசாரம் செய்யவும், தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், பாதிக்கப்பட்டவரின் மறுவாழ்வுக்கு உதவிகரமாக இருக்கவும், அதற்காகச் செயல்படும் அமைப்புகளுக்கு புத்தறிவுப் பயிற்சி 2005–06 ஆம் ஆண்டில் எல்லா மாவட்டங்களிலும் ரூ.1.00 இலட்சம் செலவில் நடத்தப்பட்டது.

## 5.23 சமூகப் பாதுகாப்புத் துறை இணையதளம்

இத்துறைக்கான இணையதளம் ஒன்று தேசியத் தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இணையதளத்தின் முகவரி **www.tn.nic.in/socialdefence**

## 2006–2007 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்களின் விவரப் பட்டியல் சமூகப் பாதுகாப்புத் துறை

(ரூ. இலட்சத்தில்)

| வ. எண் | திட்டங்கள் | தொகை |
|---|---|---|
| 1. | சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழியங்கும் மாவட்டங்களில் உள்ள நிறுவனங்களுக்குக் கணினி மற்றும் துணைப் பொருட்கள் வழங்குதல் | 9.50 |
| 2. | மயிலாடுதுறையில் இயங்கி வரும் உடல் ஊனமுற்ற/மனநலம் பாதிக்கப்பட்ட சிறுவர்/சிறுமியருக்கான குழந்தைகள் இல்லத்தை வலுப்படுத்துதல் | 6.75 |
| 3. | தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்களில் பிற்காப்புக் குழுக்கள் ஏற்படுத்துதல் | 1.35 |
| 4. | மனவளர்ச்சி குன்றிய சிறுவர்/சிறுமியருக்கான தன்னார்வத் தொண்டு நிறுவனம்மூலம் 40 குழந்தைகளுக்கென வரவேற்புப் பிரிவு தொடங்குதல் | 1.60 |
| 5. | சென்னை, பாலவிஹார் சிறுவர் மற்றும் சிறுமியருக்கான மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான குழந்தைகள் இல்லங்களை வலுப்படுத்துதல் | 2.80 |
| 6. | சமூகப் பாதுகாப்புத் துறையின் ஆணையரகத்தில் உள்ள கணினி அறைக்கு காற்று பதனப்படுத்தும் கருவி வழங்குதல் | 0.30 |
| 7. | குழந்தைகள் மற்றும் சிறப்பு இல்லங்களில் உள்ளடங்கிய பள்ளிகளில் அறிவியல் கண்காட்சி நடத்துதல் | 0.18 |
| 8. | குழந்தைகள் நலக் குழுவிற்காகப் பார்வைக் குறிப்புப் புத்தகங்கள் வாங்குதல் | 0.90 |
| 9. | தஞ்சாவூர், அரசினர் குழந்தைகள் இல்லத்தில் துயிற்கூடம் கட்டுதல் | 8.00 |
| 10. | வேலூர், அரசினர் சிறப்பு இல்லத்தில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல் | 6.50 |
| 11. | சென்னை, அரசினர் பெண்கள் சிறப்பு/குழந்தைகள் இல்லத்தின் பள்ளிக் கட்டடம் புதுப்பித்தல் | 8.00 |
| 12. | சென்னை, இராயபுரத்திலுள்ள அரசினர் குழந்தைகள் இல்லத்திற்கு நூலக அறை, கணினி அறை, குழந்தைகள் நலக் குழுமக் கட்டடம் மற்றும் உணவருந்தும் அறை கட்டுதல் | 6.00 |



| வ. எண் | திட்டங்கள் | தொகை |
|---|---|---|
| 13. | இராணிப்பேட்டை, சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லத்தில் உணவருந்தும் கூடம் கட்டுதல் | 6.50 |
| 14. | சென்னை, சிறுமியருக்கான அரசினர் சிறப்பு/குழந்தைகள் இல்லத்தில் குழந்தைகள் நலக் குழுமத்திற்குக் கட்டடம் கட்டுதல் | 5.20 |
| 15. | பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் குழந்தைகளுக்கு அவர்களது பெற்றோர்கள் வசம் சேர்க்க வேண்டி முகவரியைக் கண்டறிவதற்கான விளம்பரக் கட்டணங்கள் | 10.00 |
| 16. | தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலமாக சென்னை மாநகரில் விரிவான சாலையோர சிறார்களுக்கான திட்டத்தின்கீழ் 6 மையங்கள் தொடங்குதல் | 6.75 |
| | மொத்தம் | 80.33 |

# அத்தியாயம் 6

## சமூகப் பாதுகாப்பு வளையம்

### 6.1 ஓய்வூதியத் திட்டங்கள்

தமிழகத்தில் வாழ்வாதாரமோ, உற்றார், உறவினர் ஆதரவோ இன்றி வாடும் முதியோர்/ஆதரவற்றோருக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு, தமிழக அரசு கீழ்க்கண்ட ஓய்வூதியத் திட்டங்களை வருவாய்த் துறைமூலம் செயல்படுத்தி வருகிறது:

(1) முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டம்

(2) ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம்

(3) ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம்

(4) ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம்

(5) கணவனால் கைவிடப்பட்ட/ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம்

ஓயவூதியத் திட்டப் பயனாளிகளுக்கு மாதம் ரூ.200/– மாவட்டங்களிலுள்ள வருவாய்த் துறையைச் சார்ந்த நலிந்தோர் நலத் திட்ட தனி வட்டாட்சியர்களால் பணவிடைமூலம் அனுப்பப்பட்டு வருகிறது. ஓய்வூதியத் தொகை மாதம் ரூ.400/– ஆக 2006–2007–ல் உயர்த்தப்படும்.

#### 1. முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டம் (1–4–1962 முதல்)

இத்திட்டத்தின்கீழ், பிழைப்புதவி இல்லாமலும், காப்பாற்றுபவர் இல்லாமலும் உள்ள 65 வயதிற்கு மேற்பட்ட (பார்வையின்மை, தொழுநோய், மனநோய், பாரிசவாயு மற்றும் கை, கால் இழந்து வருவாய் ஈட்ட முடியாத நிலையிலுள்ள ஆதரவற்றோருக்கு 60 வயது) அனைத்து முதியோருக்கும் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகின்றது.

இத்திட்டத்தின்கீழ் முதியோர் உதவித் தொகை பெறத் தகுதி பெறும் நபர்,

(அ) எந்த ஒரு வருமானமோ அல்லது பிழைப்பு நியத்திற்கான ஆதரவு வழியோ பெற்றிருத்தல் கூடாது.

(ஆ) பிச்சை எடுத்தலைத் தொழிலாகக் கொண்டிருத்தல்கூடாது.



(இ) இருபது மற்றும் அதற்கு மேலும் வயதுள்ள மகன் அல்லது மகன்களால் ஆதரவு அளிக்கப்படுபவர்களாக இருக்கக்கூடாது மற்றும்

(ஈ) ரூ.5,000/–க்கு மேல் மதிப்புள்ள சொத்து வைத்திருப்பவராக இருக்கக்கூடாது.

இத்திட்டத்தின்கீழ் உதவி பெறும் முதியோருக்கு வழங்கப்படும் மாத உதவித் தொகை ரூ.200/–ல் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் மத்திய அரசு ரூ.75/–ஐ வழங்குகிறது. மீதமுள்ள ரூ.125/–ஐ மாநில அரசு ஏற்கிறது.

உயர்த்தி வழங்கப்படவுள்ள மாத ஓய்வூதியமான ரூ.400/–ல் மத்திய அரசு தன் பங்காக ரூ.200/–ம், மீதமுள்ள ரூ.200/–ஐ மாநில அரசும் ஏற்றுக்கொள்ள உள்ளன.

***31–3–2006 அன்றைய நிலவரப்படி 4,77,309 பயனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.***

#### 2. ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம் (1–11–1974 முதல்)

50 சதவிகிதம் மற்றும் அதற்கு மேலும் நிலையான உடல் ஊனம் உள்ள 45 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் இத்திட்டத்தின்மூலம் பயன் பெறத் தகுதி உடையவர்கள் ஆவர். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியாளர் தலைமையில் மாவட்ட மருத்துவ அலுவலர் மற்றும் மாவட்ட சமூக நல அலுவலர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு இயங்கி வரும் அரசால் ஏற்படுத்தப்பட்ட மாவட்ட அளவிலான குழுக்கள், ஊனமுற்றோரிடமிருந்து ஓய்வூதியம் வேண்டிப் பெறப்படும் மனுக்களை ஆய்வு செய்து, அவர்களின் ஊனத்தின் தன்மைக்கு ஏற்ப, தகுதியுள்ளவர்களுக்கு, வயது வரம்பை வலியுறுத்தாமல் ஓய்வூதிய அங்கீகாரம் வழங்கி வருகின்றது. முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டத்திற்குப் பொருந்தக்கூடிய ஏனைய நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். தொழுநோயாளிகளும் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்து வருகின்றனர். இத்திட்டத்திற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

***31–3–2006 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தினால் பயனடைந்த ஆதரவற்ற உடல் ஊனமுற்றவர் எண்ணிக்கை 65,384 ஆகும்.***

### 3. ஆதரவற்ற விதவையர் ஓய்வூதியத் திட்டம் (1-6-1975 முதல்)

மறுமணம் செய்துகொள்ளாத ஆதரவற்ற விதவையர் எந்த வயதினராக இருந்தாலும், 18 அல்லது அதற்கு மேல் வயதுடைய வாரிசு உள்ளவராக இருந்தாலுங்கூட இத்திட்டத்தின்கீழ் பயனடையலாம். முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டத்திற்குப் பொருந்தக்கூடிய ஏனைய நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்திற்கான முழுச் செலவும் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

**31-3-2006 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை 4,83,962 ஆகும்.**

### 4. ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள் ஓய்வூதியத் திட்டம் (15-3-1981 முதல்)

60 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் இத்திட்டத்தின்கீழ் பயனடையலாம். முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டத்திற்குப் பொருந்தக்கூடிய ஏனைய நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்திற்கான செலவினம் மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

**31-3-2006 அன்றைய நிலவரப்படி 88,057 ஆதரவற்ற வேளாண் தொழிலாளர்கள் இத்திட்டத்தில் பயனடைந்து வருகின்றனர்.**

### 5. கணவனால் கைவிடப்பட்ட/ஆதரவற்ற பெண்கள் ஓய்வூதியத் திட்டம் (25-4-1986 முதல்)

கணவனால் கைவிடப்பட்டு, குறைந்தபட்சம் 5 ஆண்டுகளுக்கு மேல் கணவரைப் பிரிந்து வாழும்/சட்டப்படி பிரிந்து வாழ நீதிமன்றத்தின் மூலம் சான்று பெற்ற ஆதரவற்ற 30 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் பயன் பெறும் வகையில் முதியோர் ஓய்வூதியத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. 18 வயது நிரம்பிய வாரிசு உள்ள, கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் இத்திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறலாம். முதியோர் ஓய்வூதியத் (சாதாரணம்) திட்டத்திற்குரிய பிற நிபந்தனைகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். இத்திட்டத்திற்கான முழுச் செலவினம் மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

**31-3-2006 அன்றைய நிலவரப்படி இத்திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை 82,911 ஆகும்.**



### 6. பிற பயன்கள்

#### 1) இலவச வேட்டி/சேலை வழங்குதல்

ஆண்டுக்கு இரு முறை பொங்கல் மற்றும் தீபாவளிப் பண்டிகையின்போது மேற்குறிப்பிட்ட திட்டங்களின்கீழ் உதவித் தொகை பெறும் பயனாளிகளில் ஆண்களுக்கு ஒரு வேட்டியும், பெண்களுக்கு ஒரு சேலையும் இலவசமாக வழங்கப்படுகிறது.

#### 2) இலவச சத்துணவு மற்றும் இலவச அரிசி வழங்குதல் (15-9-1991 முதல்)

மேற்கண்ட திட்டங்களின்கீழ் பயன் பெறும் அனைத்துப் பயனாளிகளும் கீழ்க்குறிப்பிடப்பட்ட அளவுகளின்படி இலவச அரிசி பெற்றுக்கொள்ள அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளனர்:

(அ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்ளாதவர்களுக்கு மாதம் ஒரு முறை தலா 4 கிலோ சன்ன ரக அரிசி.

(ஆ) சத்துணவுக் கூடங்களில் உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் ஒரு முறை தலா 2 கிலோ சன்ன ரக அரிசி.

#### 6.2 அன்னபூர்ணா திட்டம்

தேசிய முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் பயன் பெறும் ஆதரவற்ற/மூத்த குடிமக்களுக்கு தேசிய சமூக உதவித் திட்டத்தின் ஒரு பகுதியான அன்னபூர்ணா திட்டத்தின்கீழ் மாதமொன்றுக்கு 10 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது. மத்திய அரசால் தமிழ்நாட்டிற்கு 71,974 பயனாளிகள் எனக் குறியீடு நிர்ணயிக்கப்பட்ட இத்திட்டம், இம்மாநிலத்தின் பொது விநியோகம் மற்றும் நுகர்பொருள் பாதுகாப்பு ஆணையரால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கான செலவினம் முதலில் மாநில அரசின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு, பின்னர் மைய அரசால் ஒவ்வோர் ஆண்டும் தேசிய சமூக உதவித் திட்டத்திற்காக விடுவிக்கப்படும் கூடுதல் மைய நிதி உதவியிலிருந்து சரி செய்யப்படுகிறது.

இத்திட்டத்திற்கான பயனாளிகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால், அவர்களுடைய மாவட்டத்திலுள்ள தேசிய ஓய்வூதியத் திட்டப பயனாளிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். தனியான வண்ணம்

கொண்ட, "அன்னபூர்ணா" என்று பெயர் பொறிக்கப்பட்ட பொது நியோக அட்டைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் அச்சிடப்பட்டுப் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

### 6.3 தேசிய குடும்ப நலத் திட்டம் (2-10-1995 முதல்)

இத்திட்டமும் தேசிய சமூக உதவித் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு மைய அரசால் வழங்கப்படும் கூடுதல் மைய நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், வறுமைக் கோட்டிற்குக்கீழே வாழும் குடும்பங்களில் பிரதான வருவாய் ஈட்டும் நபர் இறப்பின், அக்குடும்பத்திற்கு மத்திய அரசால் ரூ.10,000/- வழங்கப்படுகிறது. தமிழகத்தில், தேசிய குடும்ப நல நிவாரணம் பெறும் பயனாளிகள், தமிழ்நாடு நலிந்தோர் நிவாரணத் திட்டம் மற்றும் தமிழ்நாடு விபத்து நிவாரணத் திட்டம் ஆகியவற்றின்கீழ் பயனடைகின்றனர். தமிழ்நாடு விபத்து நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூ.15,000/- வழங்கப்பட்டு வருகின்றது. இதில் மைய அரசின் பங்கு ரூ.10,000/-ம், மாநில அரசின் பங்கு ரூ.5,000/-ம் ஆகும்.

### முடிவுரை

ஊட்டச் சத்துக் குறைபாடுடைய குழந்தைகள், வளர் இளம் பெண்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், ஆதரவற்றோர், மூத்தகுடிமக்கள், உடல் ஊனமுற்றோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியோர் ஆகியோர் சமூக நலத் துறையின் முக்கிய இலக்காக அமைந்துள்ளனர். எனவே, சமூகத்தில் எளிதில் பாதிப்படையக்கூடிய இப்பிரிவினரை உயர்த்தி, அவர்களது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கென புதிய மற்றும் தற்போதுள்ள திட்டங்களை மிக உன்னிப்பாகவும், முழு அர்ப்பணிப்புடனும், திறமையாகவும் நமது மாண்புமிகு முதலமைச்சரின் மேலான தலைமையின்கீழ் செயல்படுத்திட சமூக நலத் துறை மிகுந்த முனைப்புடன் இயங்கி வருகிறது.

குழந்தைகளிடையே ஊட்டச் சத்துக் குறைப்பாட்டைத் தடுத்தல், முன் பருவக் கல்வி, தாய்மார்கள் மற்றும் வளர் இளம் பெண்களுக்கு சுகாதாரக் கல்வி ஆகியவைமூலம் சமுதாயத்தில் ஒரு பெரிய மாற்றத்தைக் கொண்டு வருவது நமது முதன்மையான குறிக்கோள்களாக விளங்கும். ஊட்டச் சத்துக் குறைபாடு, தனி மனிதர்களை மட்டுமல்லாது, மாநிலத்தின் ஒட்டுமொத்த வேலைத் திறனையும், பொருளாதார வளர்ச்சியினையும் பாதிக்கிறது. எனவே, ஊட்டச் சத்து





அளிக்கும் திட்டங்களுக்கு நமது மாநில முதலமைச்சர் தலையாய முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள்.

உடல் ஊனத்தைத் தவிர்க்க நமது அரசு பல் பயனுள்ள நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதோடு, தவிர்க்க முடியாதபட்சத்தில் ஒருங்கிணைந்த கல்விமூலம் வாழ்க்கை நீரோட்டத்தில் இணையச் செய்தல் ஆகியவற்றை அளிக்கும் ஒரு முழுமையான அணுகுமுறையைச் சிறப்பாக வலியுறுத்துவதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

பெண் குழந்தைக்கு எதிரான அனைத்துப் பாகுபாடுகளை ஒழிப்பதற்கும், பெண் குழந்தையின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும், குடும்பத்தின் பங்களிப்பை வலுப்படுத்துவதற்கும் தக்க முயற்சிகள் நமது அரசால் மேற்கொள்ளப்படும்.

நிறைவாக, ஆற்றல் மிக்க, கடமை தவறாத, அர்ப்பணிப்பு உணர்வுள்ள நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் இயங்கும் சமூக நலத் துறை, தமிழ்நாட்டினை ஊட்டச் சத்துக் குறைபாடற்ற, பாலின வேறுபாட்டுப் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட, ஊனமற்ற, சிறப்பாற்றல் நிறைந்த மக்களைக் கொண்ட மாநிலமாக மாற்ற வகை செய்யும்.

[2006 ஆகஸ்ட் 22

# இணைப்பு II

*(101 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006—2007

**முன்னுரை:—**

கால்நடை பராமரிப்பு மற்றும் வேளாண்மை ஆகிய இரு தொழில்களும் பண்டைக் காலந்தொட்டே கிராமப்புற வீடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. பழங்காலந்தொட்டே மனித செழுமை, கால்நடை வளத்துடன் தொடர்புடையதாக இருந்து வந்துள்ளது. நம் மாநிலத்தின் பொருளாதாரம் வேளாண்மை அடிப்படையிலானதாகும். கிராமப்புறங்களில் வாழும் 60 சதவீதத்திற்கும் மேலான மக்கள், கால்நடை, வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களிலேயே ஈடுபட்டுள்ளதால், இது கிராமப்புறப் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக விளங்குகின்றது. கால்நடை பராமரிப்பு உறுதியான வேலைவாய்ப்புகளை உருவாக்க, மனித பாதுகாப்பு மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கு உதவுகின்றது. மேலும், இது சிறு மற்றும் குறு விவசாயிகள், நிலமற்ற தொழிலாளர்களுக்குத் துணை வருவாய் ஈட்ட உதவுவதுடன், பெரும் எண்ணிக்கையிலான கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு இலாபகரமான வேலைவாய்ப்புகளைத் தோற்றுவிப்பதில் கணிசமான பங்கினை அளிக்கிறது. இவர்களில் பெரும்பாலானோர்கள் பெண்கள் ஆவர்.

வறுமையில் வாழும் மக்களுக்கு கால்நடைகள் கிராமப்புறச் செலாவணியாக உள்ளன. கிராமப்புற ஏழை வீடுகளில் வறுமைக் காலத்தின்போது அவற்றை வைத்துப் பணம் பெற உதவுவதால், அவை காப்பீட்டுக்கு மாற்றாக உள்ளன. கால்நடைப் பிரிவு இழுவைத் திறனையும், வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கச் செய்யக்கூடிய இயற்கை உரத்தையும் அளிக்கின்றது.

தேசியப் பொருளாதாரத்திற்கும், குடும்பத்தின் உணவுப் பாதுகாப்பை பெருக்கச் செய்வதிலும் கால்நடைப் பிரிவின் பங்களிப்பின் முக்கியத்துவம் பிரதிபலிக்கிறது. 1980—81—லிருந்து 2004—05—க்கு இடையில் கால்நடைப்



2006 ஆகஸ்ட் 22]

பிரிவின் பங்கு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.82 சதவீதத்திலிருந்து 5.40 சதவீதமாக அதிகரித்துள்ளது. பால் தற்போது மொத்த உள்நாட்டு உற்பத்திக்குப் பங்களிக்கின்ற மிகப் பெரிய வேளாண்மைப் பொருளாக விளங்குகிறது. மாநிலத்தில் பெருகி வரும் மக்கள் தொகைக்கான புரதச் சத்துத் தேவையை, பால், முட்டை மற்றும் இறைச்சி என்ற வடிவில் பூர்த்தி செய்வதில் கால்நடைகளின் பங்களிப்பு முத்திரை பதிப்பதாக உள்ளது.

கால்நடை பராமரிப்பு மேலும் வளர்ச்சியடைவதற்கு அதிக வாய்ப்புள்ளது. இதற்கு அதன் உள்ளாற்றலை வெளிப்படுத்த வேண்டும். இதனால் சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு இலாபகரமான வேலைவாய்ப்பு அளிப்பதுடன், கிராமியப் பொருளாதாரத்திற்குப் புத்துயிரூட்டவும், நிலையான வளர்ச்சி அடையவும் ஏதுவாகவும் அமையும். மேலும், கால்நடை பராமரிப்பு மட்டுமே கிராமப்புற மக்களுக்கு நல்ல தரமான வாழ்க்கை மற்றும் நிரந்தர வேலைவாய்ப்பினை தங்களின் இருப்பிடங்களிலேயே அளிப்பதுடன், பொருளில்லா ஏழைகளை வருவாய் மற்றும் பொருள் உள்ள நபர்களாக மாற்றிடவும் இயலும். மொத்தத்தில், கால்நடை பராமரிப்பு கிராமப்புற மக்களின் முழுமையான சமூகப் பொருளாதார மாற்றத்திற்கு வலிமை மிக்க கருவியாகவும், அதன் பன்மடங்கு விளைவுகளால் பொருளாதார முன்னேற்றத்தைத் தூண்டிவிடுவதாகச் செயல்பட இயலும். சுருக்கமாக நூற்றாண்டு முன்னேற்றக் குறிக்கோள்களான உச்ச நிலை வறுமை மற்றும் பசியை அறவே ஒழிக்க, கால்நடைகளின் பங்கு குறிப்பிடத்தக்க வகையில் அமையும்.

**பொது நிர்வாகம்**

கால்நடை பராமரிப்புத் துறை கால்நடைகளுக்குப் பயனளிக்கும் நோக்குடன், குடியியல் முறை கால்நடை துறை தோற்றுவித்ததன் தொடர்ச்சியாக உருவாக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பிறகு 1948—ல் குடிமுறை கால்நடைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறையாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, கால்நடை உடல் நலம் பேணுதல் மற்றும் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை முக்கியக் குறிக்கோள்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. முதலில் கால்நடைகளின் உடல் நலம் பேணுதலை முக்கியச் செயல்பாடாகக் கொண்டிருந்தாலும், பின்னர் பலதரப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்தியதன் பயனாக, கால்நடைப் பிரிவு ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு வழிகோலியது.

துறையின் முக்கியக் குறிக்கோள்களாவன:

- கால்நடைகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி, அதன் வாயிலாக பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியை அதிகரிப்பது;
- கால்நடை மற்றும் கோழியினங்களுக்குத் தேவையான கால்நடை மருத்துவச் சேவையை உரிய நேரத்தில் அளித்தல்;
- கிராமப்புற ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்றுவதற்காக, மத்திய மற்றும் மாநில அரசுகளின் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துதல்;
- கால்நடை பராமரிப்பு முறைகள் பற்றிய அடிப்படை மற்றும் தற்காலத் தகவல் மற்றும் பயிற்சி அளித்தல்.

கால்நடை பராமரிப்புத் துறையானது, கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் மற்றும் இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. தலைமையிடத்தில் 3 கூடுதல் இயக்குநர்கள் மற்றும் 1 இணை இயக்குநர் ஆகியோர் வெவ்வேறு தொழில்நுட்பத் துறைப் பணிகளில் ஆணையர் மற்றும் இயக்குநர் அவர்களுக்கு உதவி புரிந்து வருகின்றனர். மாநிலம் 21 மண்டலங்களாகவும், 65 நிர்வாகக் கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. அவர்கள் தத்தமது ஆளுகையின்கீழ் உள்ள பகுதிகளில் துறை நடவடிக்கைகளுக்கு முழுப் பொறுப்பு உள்ளவர்கள்.

கூடுதல் இயக்குநரின் தகுதியில் உள்ள ஓர் இயக்குநரின் தலைமையின்கீழ் இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம், கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு பல்வகைத் தடுப்பு மருந்துகள் மற்றும் நோய் கண்டறியும் சாதனங்கள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. நோய் பற்றிய ஆய்வினைச் செய்யவும், அதனை உறுதிப்படுத்துவதுடன் கண்காணிப்புப் பணிகளை மேற்கொள்ளவும், மத்தியத் தொடர்பு ஆய்வுக் கூடம் ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகிறது. இத்தொடர்பு ஆய்வுக் கூடம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் நோய்க் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைப் பணிகளில் ஈடுபட்டுள்ள உதவி இயக்குநர் தலைமையில் இயங்கி வரும் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகளின் பணியை ஒருங்கிணைத்து வருகிறது.

இத்துறை 8 கால்நடைப் பண்ணைகள், 3 ஆட்டுப் பண்ணைகள், 20 கால்நடைப் பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் மற்றும் 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றை நிர்வகித்து வருகிறது.






## 17-வது கால்நடை மற்றும் கோழியினக் கணக்கெடுப்பு

17-வது கால்நடை மற்றும் கோழியினக் கணக்கெடுப்பின்படி மாநிலத்தின் இனவாரியான கால்நடை மற்றும் கோழியின விவரங்கள் கீழ்வருமாறு:

| இனம் | எண்ணிக்கை (இலட்சத்தில்) | | | |
|---|---|---|---|---|
| | இதர பிரிவினர் | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | பழங்குடி வகுப்பினர் | மொத்தம் |
| பசுவினம் | 63.32 | 24.53 | 3.56 | 91.41 |
| எருமையினம் | 12.84 | 3.40 | 0.34 | 16.58 |
| செம்மறியாடுகள் | 42.60 | 12.25 | 1.08 | 55.93 |
| வெள்ளாடுகள் | 54.92 | 23.45 | 3.40 | 81.77 |
| பன்றிகள் | 0.91 | 1.77 | 0.53 | 3.21 |
| கழுதைகள், குதிரைகள், மட்டக் குதிரைகள் மற்றும் ஒட்டகங்கள் | 0.36 | 0.14 | 0.01 | 0.51 |
| **மொத்தக் கால்நடைகள்** | **174.95** | **65.54** | **8.92** | **249.41** |
| நாய்கள் | 20.43 | 5.80 | 0.94 | 27.17 |
| கோழியினம் | 513.28 | 345.40 | 7.23 | 865.91 |

**கால்நடைகள் எண்ணிக்கை**




227429
சென்னை-600 008

[2006 ஆகஸ்ட் 22

**2003–2004 கால்நடைக் கணக்கெடுப்பின் சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:**

- கால்நடைகளின் எண்ணிக்கை 1997–ல் 241.26 இலட்சமாக இருந்தது. இது 2004–ல் 3.38 சதவீதம் அதிகரித்து 249.42 இலட்சத்தை எட்டியுள்ளது.
- கோழி இனங்களின் எண்ணிக்கை 1997–ல் 365.11 இலட்சமாக இருந்தது. இது 2004–ல் 137.16 சதவீதம் என்ற கணிசமான அளவு அதிகரித்து 865.91 இலட்சத்தை எட்டியுள்ளது.
- செம்மறியாடுகளின் எண்ணிக்கை 1997–ல் 52.59 இலட்சமாக இருந்தது. இது 2004–ல் 6.35 சதவீதம் அதிகரித்து 55.93 இலட்சத்தை எட்டியுள்ளது.
- வெள்ளாடுகளின் எண்ணிக்கை 1997–ல் 64.16 இலட்சமாக இருந்தது. இது 2004–ல் 27.45 சதவீதம் அதிகரித்து 81.77 இலட்சத்தை எட்டியுள்ளது.
- எருமைகளின் எண்ணிக்கை 1997–ல் 27.41 இலட்சமாக இருந்தது. இது 2004–ல் 16.58 இலட்சமாகக் குறைந்துள்ளது.
- பன்றிகளின் எண்ணிக்கை 1997–ல் 6.09 இலட்சமாக இருந்தது. இது 2004–ல் 3.21 இலட்சமாகக் குறைந்துள்ளது. இது 47.29 சதவீதம் குறைவாகும்.

**தீவனம் மற்றும் பசுந்தீவனம்**

கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் தீவனம் முக்கியப் பங்காற்றுகிறது. கால்நடைகளுக்குக் கொடுக்கப்படும் தீவனம் உலர் தீவனம், பசுந்தீவனம் மற்றும் அடர் தீவனமாகும். இத்தீவனங்களில் உலர் தீவனம் அதிக அளவில் உட்கொள்ளப்படுகிறது. நமது நாட்டில் பசுந்தீவன உற்பத்தி இன்னும் வேளாண்மை உற்பத்திக்குத் துணையானதாகவே கருதப்படுகிறது. கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனம், புல்வெளிகள் மற்றும் புல் தரைகளில் மேய்வதாலும், சாகுபடி செய்யப்பட்ட நிலங்களில் வளரும் பசுந்தீவனப் பயிர்கள், களைகள், வரப்புகளிலுள்ள புற்கள், மர இலைகள் மற்றும் கலப்படத் தீவனப் பயிர்கள்மூலமாகவும் கிடைக்கின்றன. ஊட்டச் சத்து குறைவாக உள்ள, அறுவடைக் கழிவுகளான சோளம் மற்றும் வைக்கோல் கதிர்களே கால்நடைகளுக்குப் பெரும்பான்மை உணவாக அமைந்துள்ளது. பண்ணையில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில்



2006 ஆகஸ்ட் 22]

தீவனம் மற்றும் பசுந்தீவனம் பெரும் பங்கு வகிக்கிறது. கால்நடை பராமரிப்பின் பொருளாதாரம், தீவனம் மற்றும் பசுந்தீவனம் ஆகியவற்றினை சார்ந்ததாக உள்ளது. ஏனெனில், கால்நடைப் பண்ணையின் மொத்தச் செலவினத்தில் தீவனச் செலவு 65–70 சதவீதமாக அமைகிறது.

**மாநிலத்தில் தீவன நிலை**

| | உலர் தீவனம் (இலட்சம் மெட்ரிக் டன்) | பசுந்தீவனம் (இலட்சம் மெட்ரிக் டன்) |
|---|---|---|
| **தேவை** | 166.80 | 500.52 |
| **கிடைக்கும் அளவு** | 176.10 | 263.50 |
| **பற்றாக்குறை** | சாதாரணப் பருவ காலத்தில் போதுமானதாக உள்ளது | 237.02 |
| **பற்றாக்குறை சதவீதம்** | இல்லை | 47.35 |

சாதாரணமாக, பசுந்தீவனம் கறவை மாடுகளுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. பசுந்தீவனம் குறிப்பிட்ட பருவ காலங்களில் குறிப்பிட்ட இடங்களில் மிகக் குறைந்த அளவில் மட்டுமே கிடைக்கின்றது. பசுந்தீவனம் ஆண்டு முழுவதும் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கு மட்டுமின்றி, கருத்தரிப்பு விகிதத்தை அதிகரிப்பதற்கும் அளிக்கப்படவேண்டும். மாநிலத்தில் மொத்தம் 1.13 இலட்சம் ஹெக்டேர் மேய்ச்சல் நிலங்கள் உள்ளன. இவை தவிர, பொதுச் சொத்து ஆதாரங்களில் 16.99 இலட்சம் ஹெக்டேரும், திறந்தவெளிக் காடுகளாக 16.20 இலட்சம் ஹெக்டேரும் மேய்ச்சலுக்குக் கிடைக்கின்றன.

கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் போதிய தீவனம் மற்றும் பசுந்தீவனம் முக்கியப் பங்களிப்பதாலும், மாநிலத்தில் தீவனத் தேவை மற்றும் கிடைக்கும் அளவிற்கு இடையே பெரிய இடைவெளி இருப்பதாலும், இந்த இடைவெளியைக் கணிசமான அளவு தீவன உற்பத்தி செய்து சரி செய்ய கீழ்க்காணும் பசுந்தீவன அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன:

[2006 ஆகஸ்ட் 22

- மேய்ச்சல் நிலங்களை எந்தவித வேற்றுமையுமின்றி வேறு வகையான நோக்கங்களுக்குப் பயன்படுத்துவதால், அவை தரங்குறைந்து போவதுடன், ஒன்றுமில்லாமற்போவதைத் தவிர்க்கும்பொருட்டு, மேய்ச்சல் நிலத்தை வேறு எந்த வகையான பயன்பாட்டிற்கும் மாற்றக் கூடாது என்றும், அவ்வாறு மாற்ற வேண்டுமெனில், அதே மாவட்டத்தில் மாற்றப்படும் மேய்ச்சல் நிலத்திற்குச் சமமான பரப்பளவுள்ள வேறு நிலத்தை மேய்ச்சல் நிலமாகப் பயன்படுத்த ஒதுக்கப்பட்டாலன்றி மாற்றக் கூடாது என்ற நிபந்தனையை அரசு விதித்துள்ளது;

- நிலமற்ற மற்றும் ஏழை விவசாயக் குடும்பங்களை கால்நடை பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுத்த, சமுதாயத் தீவன மற்றும் பசுந்தீவன வங்கிகளை உள்ளூர் சுய உதவிக் குழுக்களின் உதவியுடன் ஏற்படுத்தி தீவன வசதிகளைப் பெருக்க ஊக்குவித்தல்;

- நீண்ட காலப் பசுந்தீவன வகையைச் சார்ந்ததும், அதிக மகசூல் அளிக்கக்கூடியதுமான நேப்பியர், உயர் ரக கோ1, கோ3, பாராபுல் மற்றும் கினியா புல் வகை ஆகியவற்றைப் பயிரிட ஊக்குவித்தல்;

- காராமணிப் பயறு வகை, ஸ்டைலோ சாந்தஸ், கோ3, புல் வகைகளை, தென்னை மற்றும் மாந்தோப்புகளிடையே ஊடுபயிராக விளைவிக்க ஊக்குவித்தல்;

- வறட்சி நிவாரணப் பணியின்கீழ், பசுந்தீவனப் பற்றாக்குறையை எதிர்கொள்ள 8 கால்நடைப் பண்ணைகளில் உள்ள 500 ஏக்கர் நிலம், பசுந்தீவனச் சாகுபடிக்குக் கொண்டு வரப்பட்டது. இத்துடன் கிராமங்களில் உள்ள 2,725 ஏக்கர் மேய்ச்சல் நிலங்கள் மேம்படுத்தப்பட்டன;

- 3,000 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடுவதற்காக 120 மெட்ரிக் டன் சோளம் மற்றும் மக்காச்சோள விதைகள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன;



2006 ஆகஸ்ட் 22]

- வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள நிலமற்ற வேளாண் தொழிலாளர்களின் 75,000 கால்நடைகளுக்குத் தேவையான 2,250 மெட்ரிக் டன் அடர் தீவனம் வழங்கப்பட்டது;

- 6,812 தீவன விதைகள் அடங்கிய சிறு பைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன;

- கடந்த பருவ காலத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின்போது, 11,543 மெட்ரிக் டன் பசுந்தீவனம் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டது;

- மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.50.00 இலட்சம் செலவில் 1,785 ஏக்கர் மேய்க்கால் புறம்போக்கு நிலங்கள், தீவன மேம்பாட்டிற்காக வழங்கப்பட்டன;


- 2006–2007–ல், ஓசூர் மற்றும் செட்டிநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் ரூ.40.00 இலட்சத்தில் பசுந்தீவனம் பற்றாக்குறையாக உள்ள காலங்களில் பயன்படுத்திட சைலோ உரக்குழிகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கால்நடை அபிவிருத்தி

### கால்நடைப் பண்ணைகள்

தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான அறிவியல் பூர்வமான இனப்பெருக்கம் மூலம் குறிப்பிட்ட இனக் கால்நடைகளை உற்பத்தி செய்யும்பொருட்டு கால்நடைப் பண்ணைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பண்ணைகள் செயல் விளக்கப் பண்ணைகளாகவும், தரமான கால்நடைகளை விவசாயிகளுக்கு வழங்குகின்ற ஆதாரமாகவும், பயிற்சி நிலையங்களாகவும் செயல்பட்டு வருகின்றன. மாநிலத்தில் 11 கால்நடைப் பண்ணைகள் உள்ளன. அவற்றில் 3 ஆட்டுப் பண்ணைகளாகும். இத்துடன், கோழி இனப்பெருக்கம் மேற்கொள்ள பிரத்தியேகமாக ஒரு பண்ணை உள்ளது.

## கால்நடைப் பண்ணைகளின் பராமரிக்கப்படும் இனங்கள்









## பசுவின மற்றும் எருமையின அபிவிருத்தி

*மாநிலத்தில் மொத்தம் 107.99 இலட்சம் பசுவினம் மற்றும் எருமையினங்கள் உள்ளன. இது மொத்தக் காலநடைகளில் 43.30 சதவீதமாகும். மொத்த மாட்டினங்களில் பசுவினம் 84.65 சதவீதமும், எருமையினம் 15.35 சதவீதமும் கொண்டுள்ளது.*

### இனவாரியாக இனவிருத்திக்கு உகந்த பெண் மாட்டினம்




### பசு மற்றும் எருமைகளில் இனவாரியாக இனவிருத்திக்கு உகந்த பெண் மாட்டினம்

| வ. எண் | இனம் | இனவிருத்திக்கு உகந்த பெண் மாட்டினம் | | | |
|---|---|---|---|---|---|
| | | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | பழங்குடி வகுப்பினர் | இதர பிரிவினர் | மொத்தம் |
| 1 | பசுவினம் அயலினம் | 5,463 | 961 | 16,643 | 23,067 |
| | கலப்பினம் | 6,04,063 | 53,664 | 19,08,149 | 25,65,876 |
| | உள்நாட்டுத் தூய்மை மரபுடையவை | 44,215 | 3,392 | 1,32,792 | 1,80,?99 |
| | நாட்டினம் | 3,94,139 | 78,282 | 8,75,025 | 13,47,446 |
| | மொத்தம் | 10,47,880 | 1,36,299 | 29,32,309 | 41,16,788 |

[2006 ஆகஸ்ட் 2

| வ. எண் | இனம் | இனவிருத்திக்கு உகந்த பெண் மாட்டினம் | | | |
|---|---|---|---|---|---|
| | | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் | பழங்குடி வகுப்பினர் | இதர பிரிவினர் | மொத்தம் |
| 2 | எருமையினம் | | | | |
| | முர்ரா | 16,002 | 1,358 | 45,183 | 62,543 |
| | தரம் உயர்த்தப்பட்டவை | 39,080 | 4,096 | 1,83,922 | 2,27,098 |
| | நாட்டினம் | 1,19,374 | 13,484 | 4,78,902 | 6,11,760 |
| | மொத்தம் | 1,74,456 | 18,938 | 7,08,007 | 9,01,401 |
| 3 | மாட்டினங்கள் | 12,22,336 | 1,55,237 | 36,40,616 | 50,18,189 |

நம் மாநிலத்தில் பசுவினம் மற்றும் எருமையினப் பெருக்கத்திற்குக் கீழ்க்காணும் கொள்கை பின்பற்றப்படுகிறது:—


- ஜெர்சி மற்றும் ப்ரிசியன் போன்ற அயலினப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கத்திற்குத் தகுதியுள்ள நாட்டினப் பசுக்களில் கலப்பினப் பெருக்கம் செய்தல்;
- முர்ரா இனப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு நாட்டின எருமைகளை இனப்பெருக்கம் செய்தல்;
- கலப்பினப் பசுக்களை, கலப்பினப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கம் செய்தல்;
- காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகிய உள்நாட்டுத் தூய்மை மரபுடைய இனங்களை, அவை வளர்க்கப்படும் பகுதிகளில் தேர்ந்தெடுத்த முறையில் இனப்பெருக்கம் செய்தல்.

இனப்பெருக்கத்திற்கு மேற்கூறிய கொள்கையை முறையாகக் கடைப்பிடிப்பதன் விளைவாக, 1994 ஆம் ஆண்டு கால்நடைக் கணக்கெடுப்பின்படி 17.71 இலட்சமாக இருந்த கலப்பினப் பசுவினங்கள் எண்ணிக்கை, 2004 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பில் 50.99 இலட்சமாக அதிகரித்துள்ளது. இதன்மூலம் பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. ஒரு தனி நபருக்கு ஒரு நாளைக்குக் கிடைக்கும் பாலின் அளவு 210 கிராமிலிருந்து 234 கிராமாக அதிகரித்து, நாட்டின் சராசரி அளவான 231 கிராம் அளவைவிடக் கூடுதலாக உள்ளது.



2006 ஆகஸ்ட் 22]

பால் உற்பத்தி மதிப்பீடு மற்றும் தனி நபருக்குக் கிடைக்கும் பாலின் அளவு




## செயற்கை முறைக் கருவூட்டல்

கறவை மாடுகளில் உற்பத்தித் திறனை அதிகரிக்க சிறப்புமிக்க உயர்தர மரபு ஆதாரங்களைச் செலுத்துவது அவசியமாகும். உயர்தர மரபு ஆதாரங்களை மாட்டினங்களில் பரப்ப செயற்கை முறைக் கருவூட்டல் தொழில்நுட்பம்தான் சிறந்த வழி என நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகையால் பசுவினம் மற்றும் எருமையினங்களின் பால் உற்பத்தி மரபு ஆதாரங்களை மேம்படுத்த மாநிலமெங்கும் உள்ள 3,178 செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களில் செயற்கை முறைக் கருவூட்டல் செய்யப்படுகின்றது.

இத்துடன் செயற்கை முறைக் கருவூட்டல் பணியை அதிகரிக்கவும், இனப்பெருக்க வசதிகளை விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அளிக்கவும், இத்துறை தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை உதவியுடன் நிரந்தர செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களை, நிரந்தர மற்றும் நடமாடும் செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களாக மாற்றிட ஈடுபட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், செயற்கை முறைக் கருவூட்டல் பணியை விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அளித்திட தனியார் மற்றும் வேலையில்லா கால்நடை மருத்துவப் பட்டதாரிகள், ஓய்வுபெற்ற கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்கு உறைவிந்துக் குடுவைகள் வழங்கப்பட்டுள்ளன. துறைமூலம் 2006–2007–ல், பசுக்கள் மற்றும் எருமைகளில் முறையே 33.00 இலட்சம் மற்றும் 3.26 இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டல்கள்

மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் 32.06 சதவீத இனவிருத்திக்கு உகந்த பெண் பசுவினம் மற்றும் 12.06 சதவீத இனவிருத்திக்கு உகந்த பெண் எருமையினம் செயற்கை முறைக் கருவூட்டலுக்கு உட்படுத்தப்படும்.

**உறைவிந்து உற்பத்தி**

மாநிலமெங்கும் பரவியிருக்கும் 3,178 செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன், கீழ்க்கண்ட 3 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

- ஈச்சங்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்
- ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்
- உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்

மேற்கண்ட உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் தரமான விந்தினை உற்பத்தி செய்திட, மத்திய அரசின் குறைந்தபட்ச தரக் கட்டுப்பாட்டு வழிகாட்டுதல்கள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. மத்திய அரசின் குறைந்தபட்ச தரக் கட்டுப்பாட்டு வழிகாட்டுதலைப் பின்பற்றிடத் தேவையான பல்வேறு உபகரணங்களான உறைவிந்துக் குச்சிகள் நிரப்புதல், அடைத்தல் மற்றும் அச்சிடும் இயந்திரம், மின்னணுப் புகைப்படக் கருவி பொருத்தப்பட்ட நுண்ணோக்கி, மின்னணு எடைபோடும் கருவி மற்றும் இதரவை தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை உதவியுடன் வாங்கப்பட்டு, இந்நிலையங்கள் வலுப்படுத்தப்பட்டன. மேலும் இந்நிலையங்கள் சர்வதேசத் தரக் கட்டுப்பாட்டிற்கு இணையாக மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட உறைவிந்து உற்பத்தி நிலையங்களில் தற்சமயம் 6 ஜெர்சி, 19 ப்ரிசியன், 43 ஜெர்சி கலப்பினம், 53 ப்ரிசியன் கலப்பினம், 31 காங்கேயம், 21 சிந்தி, 1 உம்பளாச்சேரி மற்றும் 7 முர்ரா, ஆக மொத்தம் 181 இனவிருத்திப் பொலிகாளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2005–06–ல், 34.00 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் தேவைக்கு, 18.53 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் மேற்கண்ட உறைவிந்து நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்டன. மீதமுள்ள உறைவிந்துக் குச்சிகள் கோள பண்ணை, அசர்கட்டா மற்றும் பிடேஜ் பண்ணை, குஜராத் ஆகிய கால்நடை அபிவிருத்தி வாரியம், மத்திய கால்நடை இனப்பெருக்கப் இடங்களிலிருந்து தருவிக்கப்பட்டன. 2006–07–ல், இத்துறைக்கு 36.26 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் தேவைப்படும். மேற்கண்ட



நிலையங்களிலுள்ள இனவிருத்திப் பொலிகாளைகளைக் கொண்டு, 20.08 இலட்சம் உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்ய முடியும். மீதமுள்ள உறைவிந்துக் குச்சிகள் பல்வேறு வகைகளில் கொள்முதல் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் வாரியாக 2005–06-ல் உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்துக் குச்சிகள் மற்றும் 2006–07-ல் உற்பத்திக் குறியீடு**

| வ. எண் | உறைவிந்து உற்பத்தி நிலையம் | உற்பத்தி 2005–06 எண்ணிக்கை (இலட்சத்தில்) | குறியீடு 2006–07 எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | அயலினக் கால்நடைப் பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை | 2.60 | 6.17 |
| 2 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர் | 10.17 | 6.85 |
| 3 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் | 5.76 | 7.06 |
| | மொத்தம் | 18.53 | 20.08 |

**திரவ நைட்ரஜன் உற்பத்தி மற்றும் விநியோகம்**

உறைவிந்துக் குச்சிகளை உறைய வைக்கவும், அவற்றைச் சேமித்து வைக்கவும், திரவ நைட்ரஜன் அத்தியாவசியமாகும். துறையில் ஈச்சங்கோட்டை, திருநெல்வேலி, ஓசூர், உதகமண்டலம், சைதாப்பேட்டை மற்றும் திருப்பரங்குன்றம் ஆகிய இடங்களில் உள்ள திரவ நைட்ரஜன் ஆலைகள்மூலம் திரவ நைட்ரஜன் உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும் திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்துக் குச்சிகளைச் சேமித்து வைக்கவும், அவற்றைப் பல்வேறு கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் பணியை மேற்கொள்ளும்பொருட்டு வழங்கவும், வேலூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், கடலூர், சிவகங்கை, சென்னை, திண்டுக்கல் மற்றும் சேலம் ஆகிய பன்னிரண்டு இடங்களில் தலா ஒரு உறைவிந்து வங்கி செயல்பட்டு வருகின்றது.

2005–06–ல், துறையின் மொத்த திரவ நைட்ரஜன் தேவையான 12.34 இலட்சம் லிட்டர்களில், மேற்கூறிய ஆலைகளின் வாயிலாக 2.37 இலட்சம் லிட்டர்கள் உற்பத்தி செய்யப்பட்டன. மீதமுள்ளவை தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகம் வாயிலாகக் கொள்முதல் செய்யப்பட்டன. 2006–07–ல், துறைக்கு 13.50 இலட்சம் லிட்டர்கள் திரவ நைட்ரஜன் தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதில் துறை ஆலைகள்மூலம் 2.60 இலட்சம் லிட்டர்கள் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும். கள நிலையங்களுக்குத் தங்குதடையின்றி திரவ நைட்ரஜன் கிடைத்திட, மீதித் தேவையைத் தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகம்மூலமாக வாங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துறையிலுள்ள பண்ணைகளில் பராமரிக்கப்படும் பசுவினம் மற்றும் எருமையின விவரம்:

| வ. எண் | பண்ணையின் பெயர் | பராமரிக்கப்படும் மாட்டினம் |
|---|---|---|
| 1 | அயலினக் கால்நடைப் பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை | ஜெர்சி, ஹோல்ஸ்டியன் ப்ரிசியன், ஜெர்சி கலப்பினம், உம்பளாச்சேரி, காங்கேயம், முர்ரா |
| 2 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர் | ஜெர்சி, கலப்பினம், ஹோல்ஸ்டியன் ப்ரிசியன் கலப்பினம், ஜெர்சி கலப்பினம், சிந்தி, காங்கேயம் |
| 3 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி | முர்ரா |
| 4 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலம் | ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டியன் ப்ரிசியன், ஹோல்ஸ்டியன் ப்ரிசியன் கலப்பினம் |
| 5 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | ஜெர்சி கலப்பினம், ஹோல்ஸ்டியன் ப்ரிசியன் கலப்பினம், சிந்தி |
| 6 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | ஜெர்சி கலப்பினம், கலப்பினம், தார்பார்க்கர், ஹோல்ஸ்டியன் ப்ரிசியன் கலப்பினம் |
| 7 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு | சிந்தி, காங்கேயம், முர்ரா |
| 8 | கால்நடைப் பண்ணை, கொருக்கை | உம்பளாச்சேரி |



## உள்நாட்டினங்களைப் பாதுகாத்தல்

உள்நாட்டினங்கள் இருப்பிடங்களுக்கு ஏற்ற தட்பவெப்ப நிலை மற்றும் மேலாண்மை முறைகளைப் பொருந்திக்கொள்வதில் தனித்துவம் கொண்டுள்ளது. இவை கடுமையான தட்பவெப்ப நிலையில் உயிர் வாழ்வதுடன், மிகக் குறைந்த தீவனத்தை உட்கொண்டு மிகுதியாக உற்பத்தித் திறனை அளிக்கவல்லன. மேலும் அதிக உஷ்ண மண்டல அழுத்தத்தைத் தாங்கிக்கொள்ளுதல், தரமற்ற தீவனத்தை உட்கொண்டு அதிக அளவில் பொருட்களாக மாற்றும் திறன் மற்றும் அதிக உஷ்ண மண்டலத்தில் காணப்படும் நோய்களில் சிலவற்றிற்கு நோய் எதிர்ப்பு சக்தி ஆகியவற்றுக்கான மரபியல் குணங்களைக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு காங்கேயம், உம்பளாச்சேரி, பர்கூர், புலிக்குளம் மற்றும் ஆலம்பாடி போன்ற பசுவினம் மற்றும் தோடா எருமையின உள்நாட்டினங்களைக் கொண்டுள்ளது. இத்துறை தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையுடன் ஒருங்கிணைந்து, மேற்கண்ட உள்நாட்டினங்களை மேலும் அவற்றின் தரம் குறையாமல் பாதுகாத்து மேம்படுத்திட ஈடுபட்டுள்ளது. இத்துறையில் 31 காங்கேயம் மற்றும் ஒரு உம்பளாச்சேரி இனவிருத்திப் பொலிகாளைகள், உறைவிந்து சேகரிப்புக்காகப் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2005–06–ல் மேற்கண்ட இனங்களின் உறைவிந்தைப் பயன்படுத்தி, ஒரு இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டல் பணி மேற்கொள்ளப்பட்டது. 2006–07–ல், உள்நாட்டின விந்தினைக் கொண்டு ஒரு இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டல்கள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

## செம்மறியாடு அபிவிருத்தி

மாநிலத்தில் கிராமப்புறப் பொருளாதாரத்திற்கு செம்மறியாடு வளர்ப்பு முக்கியப் பங்காற்றி வருகிறது. இது சமுதாயத்தில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்குப் பயனளிக்கக்கூடிய வேலைவாய்ப்பு மற்றும் வருவாயை அளிக்கின்றது. செம்மறியாடு வளர்ப்பு குறைந்த செலவுத் தொழில்நுட்பத்தைக் கொண்டு, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு உதவுகின்றது. இத்துடன் மனிதன் உண்பதற்கு இறைச்சி மற்றும் தோல் தொழிற்சாலைக்குத் தோல் அளிப்பதுடன், வயல்களுக்கு உரமிடுவதற்காக செம்மறியாடுகளைக் கிடையடைப்பதன்மூலமும் வருவாய் கிடைக்கிறது.

மாநிலத்தில் வளர்க்கப்படும் மொத்த ஆடுகளில் செம்மறியாடுகளின் எண்ணிக்கை 41 சதவீதத்தினைக் கொண்டுள்ளது. அவற்றுள் கலப்பினம

மற்றும் நாட்டினம் முறையே 14 மற்றும் 86 சதவீதமாக உள்ளன. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் முறையே 21.90 சதவீதம் மற்றும் 1.93 சதவீதம் செம்மறியாடுகளை வைத்துள்ளனர். தமிழ்நாட்டில் கீழக்கரிசல், இராமநாதபுரம் வெள்ளை, வேம்பூர், மேச்சேரி, சென்னை சிகப்பு, திருச்சி கருப்பு, கூறும்பாடு மற்றும் நீலகிரி என எட்டு வகையான செம்மறியாட்டினங்கள் உள்ளன. மாநிலத்தில் விவசாயிகள் இறைச்சி வகை இனங்களை வளர்க்கவே விரும்புகின்றனர்.

துறையிலுள்ள பண்ணைகளில் பராமரிக்கப்படும் செம்மறியாடு இனங்கள் பின்வருமாறு:

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | கீழக்கரிசல் |
| 2 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | இராமநாதபுரம் வெள்ளை |
| 3 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர் | மாண்டியா, கோரிடேல் கலப்பினம் |
| 4 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் | வேம்பூர், கீழக்கரிசல் |
| 5 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் | மேச்சேரி, சென்னை சிகப்பு |

இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் தரமான கிடா மற்றும் கிடேரிகள் உள்ளூர் விவசாயிகளுக்கு உள்ளூர் செம்மறியாடுகளின் ஈற்றின் தரத்தினை உயர்த்தும்பொருட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இனப் பெருக்கத்திற்காகவும் செம்மறியாடுகள் விற்கப்படுகின்றன. 2006–07–ல், 740 செம்மறியாடுகள் மேற்கண்ட பணிக்காக விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்துறை தேசியக் கால்நடை மரபியல் ஆதாரங்கள் செயலகத்துடன் ஒருங்கிணைந்து, சென்னை சிகப்பு மற்றும் திருச்சி கருப்பு செம்மறியாட்டினங்களில் ஆய்வில் ஈடுபட்டுள்ளது. இவ்வாய்வில் மேற்கூறிய இனங்களின் பூகோள இருப்பிடங்கள், மந்தைப் பராமரிப்பு முறைகள் மற்றும் உற்பத்தித் தன்மை ஆகியவை பற்றி ஆராயப்படும்.

**வெள்ளாடு அபிவிருத்தி**

மாநிலத்தில் வெள்ளாடு வளர்ப்பு ஒரு முக்கியக் கால்நடை பராமரிப்புத் தொழிலாகும். வறண்ட, குறைந்த வறண்ட, மலை, அதிக





பகுதிகளில் வாழும் மக்களின் மழை மற்றும் பழங்குடிப் பொருளாதாரத்திற்கு வெள்ளாடு வளர்ப்பு முக்கியமானதாகும். வெள்ளாடுகளைக் குறைந்த முதலீட்டில் கொட்டில்களில் அல்லது வெளியில் மிகுதியாக மேய்ச்சலுக்கு விட்டு இலாபகரமாக வளர்க்க முடியும். மோசமான சுற்றுப்புறச் சூழல் மற்றும் குறைவான மேய்ச்சல் ஆதாரங்கள் உள்ள இடங்களிலும் வெள்ளாடுகள் நல்ல உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளன. செம்மறியாடுகள்போல் இல்லாமல் வெள்ளாடுகளை சிறு அலகுகளாகப் பராமரிக்க முடியும். மேலும் அவை குறைந்த பராமரிப்புத் தேவைகளைக் கொண்டுள்ளன. மேலும் இவை அதிகக் குட்டிகளை ஈனுவதால் அதன் எண்ணிக்கை விரைவாக அதிகரிக்கின்றது. மாநிலத்தில் உண்பதற்கு அதிகமாக விரும்பப்படும் இறைச்சி வெள்ளாட்டின இறைச்சி ஆகும். சந்தையில் அதிக விலை கிடைப்பதும் இதற்குத்தான்.

வெள்ளாடுகள் மாநிலத்தின், மொத்த செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளில் 59 சதவீதத்தினைக் கொண்டுள்ளன. இதில் ஆண் மற்றும் பெண் முறையே 29 மற்றும் 71 சதவீதமாகும். மாநிலத்தில் மொத்தம் வளர்க்கப்படும் வெள்ளாடுகளில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் முறையே 26.98 சதவீதம் மற்றும் 4.15 சதவீதத்தினைக் கொண்டுள்ளனர். கடந்த கடைசி இரண்டு கணக்கெடுப்புக் காலக்கட்டங்களில் வெள்ளாடுகள் எண்ணிக்கை 27.45 சதவீதம் அதிகரித்துள்ளது. மாநிலத்தில் கன்னி ஆடு, கொடியாடு, சேலம் கருப்பு மற்றும் மோலையாடு ஆகிய இனங்கள் காணப்படுகின்றன.

துறையிலுள்ள பண்ணைகளில் கீழ்க்காணும் வெள்ளாட்டினங்கள் பராமரிக்கப்படுகின்றன:

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | ஜமுனாபாரி |
| 2 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | தெல்லிசேரி, ஜமுனாபாரி |
| 3 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூர் | கொடிவள்ளி, ஜமுனாபாரி |
| 4 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் | ஜமுனாபாரி |
| 5 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் | கன்னி வெள்ளாடு, ஜமுனாபாரி, கொடிவள்ளி |

[2006 ஆகஸ்ட் 22

உள்ளூரிலுள்ள வெள்ளாடுகளின் தரத்தை அதிகரிக்கும்பொருட்டு, இந்த ஆடுகள் ஈன்ற குட்டிகள் உள்ளூர் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. 2006–07–ல், 335 வெள்ளாடுகள் உள்ளூர் விவசாயிகளுக்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தீவிர உடல் நலப் பாதுகாப்புத் திட்டம்:** செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் பெரும்பாலும் மேய்ச்சலை நம்பியே வளர்க்கப்படுவதால் இவற்றிற்கு ஒட்டுண்ணிகள் தாக்கம் ஏற்பட்டு பல தொல்லைகள் வர வாய்ப்புள்ளது. அதன் காரணமாக உடல் எடைக் குறைவு, இனவிருத்திக்குக் காலம் கடந்து அதிக அளவிலான இறப்பு சதவீதம், குறைவான இனப்பெருக்க சதவீதம் போன்ற பல உடல் கோளாறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் வேறு பல நோய்களும் ஏற்படக் காரணமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு இத்துறை 1982–83 முதல் தீவிர உடல் நலப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் விவசாயிகளால் வளர்க்கப்படும் செம்மறியாடுகளுக்கு ஒட்டுண்ணியால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக காலமுறைப்படி குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது. 2005–06–ல் செம்மறி ஆடுகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்வதற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்புள்ள மருந்துகள் பயன்படுத்தப்பட்டன.

## இதர கால்நடை அபிவிருத்தி

**பன்றி அபிவிருத்தி:** ஆரம்பக் காலங்களில் பன்றி வளர்ப்பு அறிவியல் பூர்வமாக மேற்கொள்ளப்படவில்லை என்றபோதிலும், அண்மைக் காலங்களில் இது முன்னேற்றம் கண்டுள்ளது. இது சுய வேலைவாய்ப்பு, மேம்படுத்தப்பட்ட ஊட்டச் சத்து மற்றும் கூடுதல் வருவாயை ஈட்டித் தருகிறது. பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சிப் பொருட்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இத்துறை பன்றி வளர்ப்பை ஊக்குவித்து வருகிறது.

இத்துறைப் பண்ணைகளில் பராமரிக்கப்படும் பன்றி இனங்கள் விவரம் பின்வருமாறு:

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 1 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர் | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 2 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி | பெரிய வெள்ளை யார்க்ஷயர், லாண்ட்ரேஸ், லாண்ட்ரேஸ் கலப்பினம் |



2006 ஆகஸ்ட் 22]

| வ. எண் | பண்ணைகள் | இனம் |
|---|---|---|
| 3 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, செட்டிநாடு | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 4 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 5 | மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை | பெரிய வெள்ளை யார்க்ஷயர் |
| 6 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் | லாண்ட்ரேஸ் கலப்பினம் |

உள்ளினச் சேர்க்கையைத் தவிர்ப்பதற்காக மத்திய அரசின் உதவியுடன் வெளி மாநிலங்களிலிருந்து புதிய பன்றிகள் வாங்கப்பட்டு மேற்கண்ட பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. தற்போது மேற்கண்ட பிரிவுகளில் 22 ஆண், 173 பெண் மற்றும் 243 குட்டிகள் உள்ளன. 2006–07–ல், 1,250 பன்றிகள் விவசாயிகளுக்கு விற்பனை செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**குதிரை வளர்ப்பு:** குதிரைகளின் இனப்பெருக்கத்தைப் புணரூட்டவும் அவற்றைப் பாதுகாக்கவும், குதிரை வளர்ப்புப் பிரிவு ஒன்று ஓசூர், மாவட்டக் கால்நடை பண்ணையில் இயங்கி வருகிறது. இப்பிரிவில் கத்தியவார் மற்றும் தாரோ இனக் குதிரைகள் பராமரிக்கப்படுகின்றன. தாரோ மற்றும் கத்தியவார் இன ஆண் குதிரைகள் இயற்கை முறைக் கருவூட்டலுக்கு அனுமதிக்கப்படுகின்றன. தற்போது இந்தப் பிரிவில் 7 ஆண் குதிரைகள், 6 பெண் குதிரைகள் மற்றும் 6 குட்டிகள் உள்ளன.

**நாய் வளர்ப்பு:** தமிழ்நாட்டில் தலைசிறந்த நாய் இனங்களான ராஜபாளையம், கோம்பை, சிப்பிப்பாறை மற்றும் கன்னி ஆகியவை உள்ளன. இந்த உள்ளூர் இன நாய்களைப் பாதுகாத்து வளர்ப்பதற்காக 1980–81–ல் சென்னை சைதாப்பேட்டையில் நாய் வளர்ப்பு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. மற்ற இனத்தைச் சேர்ந்த நாய்களுக்கும் நல்ல தேவை இருந்ததால், லாப்ரடார் மற்றும் டாபர்மேன் இனங்கள், இப்பிரிவில் 1997–98–ல் சேர்க்கப்பட்டன. இந்நாய்க் குட்டிகள் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. நாட்டின நாய் இனங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவற்றை நாய்ப் பிரியர்கள் வளர்க்க ஊக்குவிக்கும் நோக்குடன், இத்துறை நாய்க் கண்காட்சிகளில் கலந்துகொள்கிறது. தற்போது இந்தப் பிரிவில் 9 ஆண், 13 பெண் மற்றும் 4 குட்டிகள் உள்ளன. 2006–07–ல் நாய் வளர்ப்புப் பிரிவை தேசிய

வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உள்ளிருப்பு மேம்பாட்டு நிதி உதவியுடன் நவீனப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கோழியின அபிவிருத்தி


மாநிலத்தில் கோழி வளர்ப்பு ஒரு முக்கியக் கால்நடை பராமரிப்புத் தொழிலாகும். மாநிலத்தில் 86.91 இலட்சம் கோழிகள் உள்ளன. இதில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடி வகுப்பினர் முறையே 39.89 சதவீதம் மற்றும் 0.83 சதவீதத்தினைக் கொண்டுள்ளனர். தற்சமயம் மாநிலத்தில் 5,123 இறைச்சிக் கோழிப் பண்ணைகள், 1,148 முட்டைக் கோழிப் பண்ணைகள் மற்றும் 11 கோழிக் குஞ்சு பொரிப்பகங்கள் உள்ளன. நாட்டின் மொத்த முட்டை உற்பத்தியில் நமது மாநிலம் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. மாநிலத்தில் முட்டைத் தொழில் வளர்ச்சி கணிசமாக அதிகரித்துள்ளது. வெறும் புறக்கடைக் கோழி வளர்ப்பாக மட்டும் இருந்த கோழி வளர்ப்பு தற்போது சுறுசுறுப்பான, உயிர்த் துடிப்புள்ள, நன்கு செயல்படக்கூடிய தொழிலாக 1960-ல் ஆழ்கூழ் முறை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து தொழில் முறை மாற்றம் ஏற்பட்டு முன்னேற்றம் அடைந்துள்ளது. 1970-களில் அறிமுகம் செய்யப்பட்ட நவீன அறிவியல் தொழில்நுட்பங்கள் மற்றும் கலிபோர்னியா கூண்டு முறைக் கோழி வளர்ப்பு போன்றவை இத்தொழிலில் புரட்சியை ஏற்படுத்தியது.

கோழி விரிவாக்க நிலையங்களை அரசு ஏற்படுத்தி இச்செயல்முறைகளை நிறைவுபடுத்தியதுடன், அவை செயல் விளக்கப் பண்ணைகளாகவும் விரிவாக்க நிலையங்களாகவும் செயல்பட்டு, கோழிப் பண்ணைத் தொழிலை நடத்துவதற்கு விவசாயிகளுக்குப் பயிற்சி நிலையங்களாகவும் விளங்கின. மேலும் கோழி வளர்ச்சிக் கூடங்களைத் தோற்றுவிக்க அரசின் உதவி, கோழிக்கழிச்சல் நோயிலிருந்து காத்திட மேற்கொள்ளப்பட்ட பரவலான தடுப்பூசி போடுதல், தரமான தீவனம் எளிதில் கிடைத்தல் ஆகியவை கோழி வளர்ப்பிற்குப் பெரும் பங்காற்றி, இது ஒரு தொழிலாக மேன்மையடையச் செய்தது. கோழி வளர்ப்பு தற்போது நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் பல இடங்களில் பெரிய வர்த்தகரீதியான தொழிலாக வளர்ச்சியடைந்துள்ளது. நாமக்கல் பகுதி, மாநிலத்தில் முட்டைக் கூடை மையமாக உருவெடுத்து, மொத்த முட்டை உற்பத்தியில் 65 சதவீதம் கொண்டுள்ளது. தற்சமயம் முட்டைக் கோழி மற்றும் இறைச்சிக் கோழித் தொழில் ஆண்டுக்கு முறையே 8-10 சதவீதம் மற்றும் 15 சதவீதம் அதிகரித்து, ஏற்றுமதி மற்றும் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு மிகப் பெரிய வாய்ப்பாக உள்ளது.





முட்டை உற்பத்தி மதிப்பீடு மற்றும் தனி நபருக்குக் கிடைக்கும் முட்டையின் அளவு




கோழி வளர்ப்பு ஒரு பெருந்தொழிலாக முன்னேற்றம் அடைந்த போதிலும், மாநிலத்தில் பண்டைக் காலந்தொட்டே சுற்றுச்சூழலைப் பாதிக்காத புறக்கடைக் கோழி வளர்ப்பு இலாபகரமான தொழிலாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இது கிராமப்புறங்களிலுள்ள பல ஏழை விவசாயிகளின் வாழ்க்கைப் பிழைப்பை நடத்திட ஆதாரமாக இருப்பதுடன், மாநிலத்தின் மொத்த முட்டை உற்பத்தியில் 6 சதவீதத்தைக் கொண்டுள்ளது. புறக்கடைக் கோழி வளர்ப்பானது, ஒரு குடும்பத்திற்கு 5 முதல் 10 கோழிகள் என்ற சிறிய முதலீட்டில் நடத்தப்படுகிறது. குடும்பத்திற்குத் தேவையான இறைச்சி மற்றும் முட்டைகள் இக்கோழிகளிலிருந்து கிடைக்கின்றன. இவ்வாறு வளர்க்கப்படும் கோழிகள், பூச்சி, புழு, வீணாகின்ற தானியங்கள் மற்றும் பண்ணை, சமையலறைக் கழிவுகளை உட்கொண்டு நமக்கு முட்டை மற்றும் இறைச்சியாக மாற்றித் தருகின்றன. இந்தக் கோழிகள் இறப்பை உண்டு பண்ணக்கூடிய கோழிக்கழிச்சல் என்ற நோய்த் தாக்குதலுக்கு ஆளாகி இறக்க நேரிடுகின்றன. கோழிகளை இந்நோயிலிருந்து பாதுகாப்பதற்கு இத்துறை அனைத்துக் கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களில் ஒவ்வொரு வாரத்திலும் ஒரு குறிப்பிட்ட நாள் மற்றும் கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்களில் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. மேலும் இந்நோயிலிருந்து கோழிகளைக் காக்கும்பொருட்டு இத்துறையால் ஒவ்வோர் ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான கோழிக் கழிச்சல் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2006 ஆகஸ்ட் 22

**மாநிலக் கோழிப் பண்ணைகளுக்கு உதவி:** குறைந்த தொழில்நுட்ப புறக்கடைக் கோழி வளர்ப்பினை ஊக்குவிக்க, குறு விவசாயிகள், நிலமற்ற தொழிலாளர்கள், சுய உதவிக் குழுக்கள் மற்றும் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவினருக்குக் கூடுதல் தொழில்களை உருவாக்கவும், வேலைவாய்ப்பும், துணை வருவாயை ஈட்டவும், இதன்மூலம் அவர்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், இத்துறை மத்திய, மாநிலப் பங்களிப்புத் திட்டத்தின்கீழ் (80:20) காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணையில் ரூ.74.69 இலட்சம் ஒதுக்கீட்டிலும், ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் ரூ.85.00 இலட்சம் மொத்த ஒதுக்கீட்டிலும் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்தில் கோழிக் கொட்டகைகள் மற்றும் பண்ணை உள் கட்டமைப்புகள் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்துடன் வனராஜா/கிரிராஜா கோழிகளின் பெற்றோர் இருப்பு பண்ணையில் சேர்க்கப்பட்டுள்ளது. இவை தவிர, பயனாளிகளுக்குக் கோழி வளர்ப்பில் ஒரு நாள் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயனாளிகளுக்கு 10 பெட்டைகள் மற்றும் ஒரு சேவல் கொண்ட அலகுகள் வழங்கப்படும். 2006–07–ல், மேற்கண்ட திட்டத்தை ஓரத்தநாடு மற்றும் செட்டிநாடு மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் தலா ரூ.85.00 இலட்சம் செலவில் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வான்கோழி வளர்ப்பு:** தமிழ்நாட்டில் 0.51 இலட்சம் வான்கோழிகள் உள்ளன. இதில் தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் முறையே 10.45 சதவீதம் மற்றும் 0.57 சதவீதத்தினைக் கொண்டுள்ளனர். வான்கோழி வளர்ப்பினைப் பிரபலப்படுத்துவதற்கும், புறக்கடை வான்கோழி வளர்ப்பு ஒரு இலாபகரமான தொழில் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், வான்கோழிப் பிரிவுகள் காட்டுப்பாக்கம் கோழிப் பண்ணை மற்றும் மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூர் மற்றும் ஓரத்தநாட்டில் பராமரிக்கப்படுகின்றன. இப்பிரிவுகளில் மொத்தம் 1,157 வான்கோழிகள் உள்ளன.

**பறவைக் காய்ச்சல்:**

விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்களில் கோழிகளை அதிக அளவில் தாக்கும் பறவைக் காய்ச்சல் நோய் முக்கியமானதாகும். இதில் $H_5N_1$ வகை மனிதர்களுக்குப் பரவக்கூடும். மகாராஷ்டிரா மற்றும் குஜராத் மாநிலங்களில் 2006–ல் பறவைக் காய்ச்சல் ஏற்பட்டதால் கோழி வளர்ப்புத் தொழில் மிகவும் பாதிப்புக்குள்ளானது. எனினும், கால்நடை



2006 ஆகஸ்ட் 22]

பராமரிப்புத் துறையால் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டதால், இப்பறவைக் காய்ச்சல் இம்மாநிலத்தைத் தாக்கவில்லை. கீழ்க்கண்ட ஆயத்த நடவடிக்கைகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

- தமிழகத்தில், தலைமைச் செயலாளர் தலைமையின்கீழ், மாநில அளவிலான ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஓர் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- நோய்க் கிளர்ச்சி ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் அவர்களின் பங்கு குறித்து- அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள், பொதுச் சுகாதாரத் துறை, வனம் மற்றும் சுற்றுச்சூழல், உள் துறை, பொதுப் பணி போன்ற துறைகளுக்கு தங்கள் பங்கு பற்றித் தக்கவாறு எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
- மாநில மற்றும் மாவட்ட அளவில் 24 மணி நேரக் கண்காணிப்பு அறை திறக்கப்பட்டுள்ளது.
- அண்டை மாநிலங்களிலிருந்து வரும் வாகனங்களைப் பரிசோதனை செய்யவும், நோய்க் கிருமி நாசினி செய்யவும், மாநில எல்லைகளில் 4 சோதனைச் சாவடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- 775 தனி மனிதப் பாதுகாப்புக் கவசங்கள் மற்றும் ஊசிகள், பைகள் போன்றவை இருப்பில் வைக்கப்பட்டுள்ளன.
- மாவட்டங்களில் 105 துரிதமாகச் செயல்படும் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 630 துறைப் பணியாளர்களுக்கு, கழிப்பவர்கள் மற்றும் தடுப்பூசியாளர்கள் உள்பட, பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.
- பறவைக் காய்ச்சல் தொடர்பான நடவடிக்கைத் திட்டம், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில், அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. கோழிப் பண்ணைகள் அமைந்துள்ள இடம் பற்றி, [illegible] மற்றும் மாவட்ட அளவிலான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுத் தயார் நிலையில் உள்ளன.

- கோழிப் பண்ணையாளர்கள் பயன் பெறும் வகையில் மாவட்டத் தலைமையிடங்கள் மற்றும் மாநில அளவில் நாமக்கல்லில் [illegible] பராமரிப்புத் துறை [illegible] கருத்தரங்குகளை நடத்தியுள்ளனர்.

- மத்திய அரசு இணைச் செயலாளர் அவர்கள் தலைமையில் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் கருத்தரங்கு ஒன்று சமீபத்தில் சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரியில் நடத்தப்பட்டது. இந்தக் கருத்தரங்கில், 7 மாநில அலுவலர்கள் கலந்து கொண்டு தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர்.

- பறவைகளை அழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குவதற்காக அரசு ரூ.50.00 இலட்சம் ஒதுக்கியுள்ளது.

**கூட்டுறவுச் சங்கங்கள்**

ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் 1964 முதல் இத்துறையில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களின் செயல் முறைப் பதிவாளராக கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் ஆணையர் மற்றும் இயக்குநர் உள்ளார். நலிவுற்ற பிரிவினரை சங்கத்தின் உறுப்பினர்களாக்கி, அவர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதே சங்கங்களின் நோக்கமாகும். 31—3—2005 அன்று உள்ளபடி, இத்துறையில் மொத்தம் 696 சங்கங்கள் இருந்தன. இவற்றில் 269 சங்கங்கள் செயல்படுபவையாகவும், 427 சங்கங்கள் செயல்படாதவையாகவும் இருந்தன.

**கால்நடை மருத்துவப் பணிகள்**

கால்நடை பராமரிப்புத் துறை மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவைப்படும் கால்நடை மருத்துவ உதவி மற்றும் உடல் நலம் பேணும் பணியில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. இத்துறையின் தொழில்நுட்ப அறிஞர்கள் மாநிலம் முழுமையும் பரவியுள்ள கால்நடை நிலையங்கள்மூலமாக இப்பணியினை வழங்குகிறார்கள். உடல் நலம் பேணுதல், நோய் கண்டறிதல், நோய்த் தடுப்பு, நோயை அறவே ஒழித்தல், இனப்பெருக்கப் பணிக்கு உதவிடல், வேளாண் குடிமக்களுக்குப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.



**கால்நடை உடல் நலம் பேணுதல்:**

**கால்நடை நிலையங்கள்:**

- பன்முக மருத்துவமனை — 6
- பிரதம கால்நடை மருத்துவமனை — 22
- கால்நடை மருத்துவமனை — 139
- கால்நடை மருந்தகம் — 1,157
- கால்நடை கிளை நிலையம் — 1799

பன்முக மருத்துவமனைகள் சென்னையில் சைதாப்பேட்டை, மதுரையில் தல்லாகுளம், கோயம்புத்தூர், திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய 6 மாநகராட்சிகளில் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றன. இவை உள்நோயாளி வசதிகள், சனியல் செயல்படும் சிகிச்சை, மருத்துவம், எக்ஸ்ரே வசதி போன்ற சிறப்பான மருத்துவ வசதிகளை அளித்து வருகின்றன. இந்த 6 நிலையங்கள் மட்டுமின்றி, பொள்ளாச்சி, வேலூர், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள கால்நடை நிலையங்களும் எக்ஸ்ரே வசதிகளைக் கொண்டுள்ளன.

**தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) உதவியுடன் கால்நடை நிலையங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்:**

நல்ல மற்றும் ஒருக்கம் செய்யப்பட்ட உள்ளிருப்புகள் முழுமையான வளர்ச்சிக்கு முக்கியத் திறவுகோலாக உள்ளன. மேம்படுத்தப்பட்ட உள்ளிருப்புகள் சிறப்பான கால்நடை சேவையைக் கிராமப்புறங்களில் அளித்து, கால்நடை நோய் நிகழ்வுகளைக் குறைத்து, ஒட்டுமொத்த உற்பத்தியை அதிகரித்து, குறிப்பிடும்படியான கிராம வளர்ச்சிக்கு உதவும். எனவே கிராமப்புற வளர்ச்சியை முடிவான இலக்காகக் கொண்டு, துறையில் உள்ள உள்ளிருப்பு வசதிகளை தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி உதவியுடன், துறையின கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

(அ) **பத்தாவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி (RIDF X), 2004-05:** துறையின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் 10—வது ஊரக

உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதியின்கீழ், ரூ.5,978.92 இலட்சத்தில் 80 கால்நடை மருந்தகங்கள், 13 கால்நடை மருத்துவமனைகள், 9 விந்து வங்கிகள், 23 களக் கண்காணிப்புப் பிரிவுகள், 10 நோய் கண்டறியும் பிரிவுகள், 97 சிகிச்சைக் கூடங்கள், 152 உள்நோயாளி பிரிவுகள் மற்றும் 19 எக்ஸ் கதிர் பிரிவுகள் கட்டவும், கள நிலையங்களின் வேலைத் திறமையை மேம்படுத்தவும் கால்நடை நிலையங்கள் மற்றும் நோய் கண்டறியும் பிரிவுகளுக்குத் தேவையான உபகரணங்கள் வாங்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

**(ஆ) பதினோராவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி (பத்தாவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டுத் துணை நிதி, 2005–06):** தேசிய வேளாண் மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஓசூர், உதகமண்டலம், ஈச்சங்கோட்டை ஆகிய கால்நடைப் பண்ணைகளில் பொலிகாளைக் கொட்டகைகள் கட்டுவதற்காகவும், ஓசூர் மற்றும் உதகமண்டலம் கால்நடைப் பண்ணைகளில் தரக் கட்டுப்பாடு ஆய்வுக் கூடங்கள் கட்டுவதற்காகவும் ரூ.234.20 இலட்சத்தினைத் துணை ஒதுக்கீடாக அளித்துள்ளது.

**(இ) பன்னிரண்டாவது ஊரக உள்ளிருப்பு வசதி மேம்பாட்டு நிதி (2006–07):** இத்துறை 2006–07–ல் ரூ.70.00 கோடி செலவில், கால்நடை நிலையங்கள், எக்ஸ் கதிர் பிரிவுகள், விந்து வங்கிகள், களக் கண்காணிப்பு நிலையங்கள், வேளாண் பயிற்சி விரிவாக்க நிலையங்கள் கட்டவும், உபகரணங்கள் வாங்கி உள்ளிருப்பு வசதிகளை வலுப்படுத்திடவும் விரிவான கருத்துருவை வகுத்து வருகிறது.

வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் 1,024 ஆழ்துளைக் கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள், மின் இணைப்புகள், மோட்டார் மற்றும் நீர்த் தொட்டிகள் ஆகியவை தேவையான கால்நடை நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டு, குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இவ்வசதிகளை அப்பகுதிகளில் பராமரிக்கப்படும் கால்நடைகள் தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் உபயோகித்து பயனடையும்.

### நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள்

மாநிலம் முழுவதிலும் குக்கிராமங்களில் வசிக்கும் வேளாண் குடிமக்களால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்குத் தடுப்பூசி, குடற்புழு நீக்கம், இனவிருத்திக்காக செயற்கை முறைக் கருவூட்டல் போன்ற மருத்துவ உதவிகள் பெற கால்நடை மருத்துவமனைக்குக் கொண்டு





செல்ல முடியாததால், கால்நடை மருத்துவப் பணிகளை வழங்க 55 நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் கால்நடை உதவி மருத்துவர் தலைமையில் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் நிலையான கால அட்டவணைப்படி செயல்பட்டு வருகின்றன. இம்மாதிரியான சிகிச்சை வசதிகள் மக்கள் இருப்பிடத்திலேயே கிடைப்பதால் பொது மக்களிடையே அதிக அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளன. 2006–07–ல், ரூ.40.90 இலட்சம் செலவில் 6 நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவுகளுக்கு புதிய வாகனங்கள் மற்றும் எல்லாப் பிரிவுகளுக்கும் உபகரணங்கள் வழங்கி உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2005–06–ல் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளில் 2.32 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

### சுனாமி

தமிழ்நாட்டிலுள்ள 13 கடலோர மாவட்டங்கள் 26–12–2004 அன்று சுனாமி அலைகளால் தாக்கப்பட்டன. இது, மனித உயிர் மற்றும் உடமைகளுக்கு மிகுந்த இழப்பினை ஏற்படுத்தியதுடன், கால்நடை வளர்ப்போருக்கும் அதிகப் பொருளாதார இழப்பை ஏற்படுத்தியது. 11,550 கால்நடைகள் மற்றும் 3,608 கோழியினங்கள், ஆக மொத்தம் 15,158 உயிரிழப்புகள் ஏற்பட்டன. சுனாமி ஏற்பட்ட பகுதிகளில், துறை நிவாரணப் பணிகளான கால்நடை உடல்நலம் பேணுதல், தற்காலிகக் கொட்டகைகள் அமைத்தல், பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்குத் தேவையான தீவனம், பசுந்தீவனம் மற்றும் குடிநீர் வழங்குதல் ஆகிய பணிகளை மேற்கொண்டது. இப்பணிக்காக 58 முகாம்களும், 59 கால்நடை மீட்புக் குழுக்களும் அமைக்கப்பட்டன. சுனாமி பாதித்த பகுதிகளில் 125 மெட்ரிக் டன் தீவனம் விநியோகிக்கப்பட்டது. அத்துடன் 81,102 கால்நடைகளுக்குத் தடுப்பூசியும், 8,173 கால்நடைகளுக்கு சிகிச்சையும் அளிக்கப்பட்டது. கால்நடை வளர்ப்போருக்கு நிவாரணம் அளிக்க, இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து ரூ.1.75 கோடி 4,485 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

### உலக வங்கி உதவியுடன்கூடிய அவசர சுனாமி மறு சீரமைப்புத் திட்டம்:

இத்திட்டம் மாநிலத்தில் 13 கடலோர மாவட்டங்களில் கீழ்க்கண்ட நோக்கங்களுடன் செயல்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது:

- கடலோரப் பகுதிகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி கால்நடை மருத்துவச் சேவைத் தரத்தினை அதிகரித்தல்;

[2006 ஆகஸ்ட் 22

- கடலோரப் பகுதி சமூகத்தினரிடையே கால்நடை வளர்ப்பில் நல்ல வழிமுறைகள் பற்றி பயிற்சி அளித்து அவர்களுக்கு மாற்று வேலை மற்றும் வருவாய் ஈட்டிட வழிவகுத்தல்.
- தீவன வங்கிகளை ஏற்படுத்தி, தீவனப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதல்;

கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள அரசு ரூ.8.57.702 இலட்சம் ஒப்பளித்துள்ளது:

- **பழுதடைந்த கால்நடை நிலையங்களைச் சீரமைத்துக் கட்டுதல்:** இதில் திட்டப் பகுதியில் 3 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 11 கால்நடை மருந்தகங்கள் கட்டிட மற்றும் 9 பழுதடைந்த கட்டடங்கள் சீரமைக்கப்பட உள்ளன. மேலும், இந்நிலையங்களுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் அறையணிகள் சேர்க்கப்படவுள்ளன.
- **மாவட்டக் கால்நடை விரிவாக்க நிலையங்களைக் கட்டுதல்:** இதில் 13 மாவட்டக் கால்நடை விரிவாக்க நிலையங்களைக் கட்டி, அதற்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் அறையணிகள் சேர்க்கப்பட உள்ளன. இந்நிலையங்கள் ஆண்டுக்கு, கால்நடை வளர்ப்பில் ஆர்வமுள்ள 10,000 பயனாளிகளுக்குப் பயிற்சி அளிப்பதில் ஈடுபடும்.
- **தீவன வங்கிகளை ஏற்படுத்துதல்:** கால்நடைகளின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் தீவனம் முக்கியப் பங்காற்றி வருகிறது. ஆகையால் கடலோரப் பகுதிகளில் போதுமான தீவனம் வழங்கப்படுவதை உறுதி செய்திட இரண்டு தீவன வங்கிகள், ஒன்று பசுந்தீவன விதை உற்பத்திப் பண்ணை, படப்பை, காஞ்சிபுரம் மாவட்டத்திலும், மற்றொன்று அயலினக் கால்நடைப் பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டத்திலும் ஏற்படுத்தப்படும். இத்துடன், செறிவூட்டப்பட்ட வைக்கோல் பாளம் தயாரிக்கும் இயந்திரம் மேற்கூறிய தீவன வங்கிகளில் நிறுவப்படும்.
- **சமூகம் சார்ந்த கால்நடைப் பணியாளர் நிலையங்களைக் கட்டுதல்:** இதன்கீழ், திட்டப் பகுதியில் 12 சமூகம் சார்ந்த கால்நடைப் பணியாளர் நிலையங்கள் கட்டப்பட உள்ளன.
- **கிளை நிலையங்களைக் கட்டுதல்:** இதன்கீழ், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளுடன் 70 கிளை நிலையங்கள் திட்டப் பகுதியில் கட்டப்பட உள்ளன.



2006 ஆகஸ்ட் 22]

**வெள்ள நிவாரணப் பணிகள்**

கடந்த பருவ காலத்தில் மாநிலத்தில் வெள்ளம் ஏற்பட்டபோது, துறை விரைவாகச் செயல்பட்டு, நிவாரணப் பணிகளை மேற்கொண்டது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு மருத்துவச் சேவை மற்றும் தீவனம் வழங்குவதற்காக அரசு ரூ.187.17 இலட்சம் இசைவளித்துள்ளது.

**மாண்புமிகு முதலமைச்சரின் மகளிர்/கிராமப்புற இளைஞர்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள்மூலம் வாழ்க்கை ஆதார வாய்ப்பு அளிக்கும் திட்டங்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறு விரிவான வாழ்க்கை ஆதாரத் திட்டம் ஒன்றினைத் துறை தயாரித்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ், கால்நடை பராமரிப்பில் ஆர்வமுள்ள மகளிர் மற்றும் கிராமப்புற இளைஞர்களைக் கொண்டு சுய உதவிக் குழுக்கள்மூலம், அவர்களுக்குச் சிறந்த கால்நடை பராமரிப்பு மற்றும் மேலாண்மை பற்றிய தீவிரப் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சி முடிவடைந்தவுடன் உடனடியாகச் செயலாற்றும்பொருட்டு கறவை மாடுகள், வெள்ளாடு அலகுகள் மற்றும் கோழி அலகுகள் வழங்கப்படும். இதன் இலக்கு, அணியினரின் நிரந்தர வாழ்க்கை ஆதாரம் மற்றும் வேலைவாய்ப்புகள் அவர்கள் கிராம சமூகத்திலேயே உருவாக்கப்படுவதுடன், அவர்களின் ஊட்டச் சத்து மற்றும் வாழ்க்கைத் தரம் மேம்பட வழிவகுக்கும். இத்திட்டத்தில், ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியைக் கொண்டு சுனாமியால் பாதிக்கப்பட்ட 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 10,000 உறுப்பினர்களும், பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்ட நிதியுதவியைக் கொண்டு மற்ற மாவட்டங்களில் உள்ள 20,000 உறுப்பினர்களும் ஈடுபடுத்தப்படுவர்.

**கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம்**

ஆரம்ப காலங்களில் "ஊநீர் நிலையம்" என்று அழைக்கப்பட்ட இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையம் அந்நாளில் அதிகமாகக் காணப்பட்ட வெக்கை நோயினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் வெக்கை நோய்க்கு எதிரான ஊநீர் மற்றும் காளை நச்சுயிரி தயாரிக்க 1932 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. அதிலிருந்து இந்நிலையம் மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழியினங்களைக் காப்பாற்றுவதற்குத் தேவையான பலதரப்பட்ட

[2006, ஆகஸ்ட் 22

தடுப்பூசிகள் மற்றும் உயிர் காக்கும் பொருட்களைத் தயாரிப்பதில் படிப்படியாக விரிவாக்கம் செய்யப்பட்டது. மாநிலத்தின் தடுப்பூசித் தேவையைப் பூர்த்தி செய்வதில் இந்நிலையம் முதுகெலும்பாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசி மருந்துகளாவன:

## 1. நுண்ணுயிரி தடுப்பு மருந்துகள்

1. தொண்டை அடைப்பான் தடுப்பூசி (ஆலம்)
2. தொண்டை அடைப்பான் தடுப்பூசி (ஆயில்)
3. சப்பை நோய்த் தடுப்பூசி (ஆலம்)
4. துள்ளுமாரி தடுப்பூசி (ஆலம்)
5. அடைப்பான் தடுப்பூசி
6. புருசெல்லா அபார்ட்டஸ் தடுப்பூசி

## 2. நச்சுயிரி தடுப்பு மருந்துகள்

1. திசுவளர் வெக்கை நோய்த் தடுப்பூசி
2. ஆட்டம்மை தடுப்பூசி
3. கோழிக் கழிச்சல் 'எப்' தடுப்பூசி
4. கோழிக் கழிச்சல் லசோட்டா தடுப்பூசி
5. கோழிக் கழிச்சல் 'கே' தடுப்பூசி
6. கோழி அம்மை தடுப்பூசி
7. வாத்துக் கழிச்சல் தடுப்பூசி

*2005–06–ல்,* ரூ.*4.42* கோடி மதிப்பிலான பொருட்கள் இந்நிலையத்தில் உற்பத்தி செய்யப்பட்டன. ரூ.*4.23* கோடி மதிப்பிலான பொருட்கள் விநியோகிக்கப்பட்டன. இத்துடன், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக உதவியுடன் கோமாரி நோய்க்கான அகில இந்திய ஒருங்கிணைந்த ஆராய்ச்சித் திட்டம் கோமாரி நோய்க் கிளர்ச்சியை ஆய்வு செய்வதற்காகவும், நச்சுயிரியை வகைப்படுத்துவதற்காகவும் செயல்படுகிறது.


இந்நிலையம் *70* ஆண்டுகளுக்கு மேல் பழமையானதால், தடுப்பூசி உற்பத்தி செய்யும் ஆய்வுக்கூடங்கள் நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு இல்லை. ஆகையால், கால்நடை நோய்களைக்



2006 ஆகஸ்ட் 22]

கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு உதவித் (ஆஸ்காட்) திட்டத்தின்கீழ், கோழித் தடுப்பூசி உற்பத்தி ஆய்வுக் கூடங்கள், நல்ல தயாரிப்பு வழிமுறைகள் தரத்திற்கு மேம்படுத்தப்பட்டு வருகின்றன.

### நிலையத்தில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் மதிப்பு




*2006–07–ல்,* ரூ.*5.59* கோடி மதிப்பிலான உயிர் காக்கும் பொருட்கள் இந்நிலையத்தில் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துடன் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்திலிருந்து நீலநாக்கு விதை நச்சுயிரி பெற்று ஒரு இலட்சம் டோஸ்கள் நீலநாக்குத் தடுப்பூசி ரூ.*15.00* இலட்சம் செலவில் உற்பத்தி செய்வதற்கான விரிவான கருத்துரு ஆஸ்காட் செயல் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. *2006–07–ல்,* நிலையத்திலுள்ள கோழித் தடுப்பூசி மருந்துத் தயாரிப்பு ஆய்வுக் கூடத்திற்கு இன்றியமையாத சாதனங்கள் ரூ.*38.00* இலட்சம் செலவில் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### நோய் கண்டறியும் பணிகள்

*"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்"*

என்பது தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வாக்கு. இத்துறை நோய் கண்டறியும் பணிகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. "கால்நடை நலம் தேசத்தின் வளம்" நோய்க் கிளர்ச்சி ஏற்படுவதால்

கால்நடைகள் இறக்க நேரிடுகின்றன. இதனால் உற்பத்தித் திறன் குறைந்து விவசாயிகளுக்குப் பெரும் பொருளாதார இழப்புகள் ஏற்படுகின்றன. இத்துறை நோயை வராது தடுப்பதிலும், அவற்றை அறவே ஒழிக்கும் பணிகளிலும் பெரும் பங்காற்றியுள்ளது. நோய்களை முறையாகக் கட்டுப்படுத்துவதிலும், படிப்படியாக நோய்களைக் குறைப்பதிலும், இறுதியாக அவற்றை அறவே ஒழிக்கும் பணிகளிலும் பெரும் பங்கேற்றுள்ளது.

## நோய்க் கடுங்கண்காணிப்பு, நோய்த் தொற்று மற்றும் நோய் கண்டறிதல்

நோய்க் கிளர்வுகள் பற்றி முன்னெச்சரிக்கை சமிக்ஞைகளை அளிக்க ஒரு நோய்க் கடுங்கண்காணிப்பு முறை அவசியமாகும். அதே வேளையில் நோய்த் தொற்று அறிவியல் முறையாக நோய்கள் பற்றிய பகிர்வு மற்றும் உடல் நலக் கேடு குறித்த பிரச்சினைகள் எவ்வாறு உண்டாகின்றன என்பதை உறுதி செய்திட உதவுகிறது. மேலும் துல்லியமாக நோய்க் கண்டறிதல், குறிப்பிட்ட நோய்களைத் தீவிரமாகக் கண்காணித்தல் மற்றும் அவற்றைத் தடுப்பதில் முக்கியப் பங்காற்றுகிறது.

இதற்காக மாநிலத்தில் கீழ்க்கண்ட இடங்களில் 15 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | காஞ்சிபுரம் | 6 | சேலம் | 11 | தஞ்சாவூர் |
| 2 | வேலூர் | 7 | மதுரை | 12 | திருச்சிராப்பள்ளி |
| 3 | விழுப்புரம் | 8 | திண்டுக்கல் | 13 | திருநெல்வேலி |
| 4 | கடலூர் | 9 | ஈரோடு | 14 | தூத்துக்குடி |
| 5 | கோயம்புத்தூர் | 10 | சிவகங்கை | 15 | உதகமண்டலம் |

கோழிகள் அதிகமாக வளர்க்கப்படும் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு உதவும்பொருட்டு, இரண்டு கோழி நோய்க் கண்டறியும் ஆய்வுக் கூடங்களில், ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டகளூர்கேட்டிலும், மற்றொன்று ஈரோட்டிலும் செயல்பட்டு வருகின்றன. கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் கோழி நோய்க் கண்டறியும் ஆய்வுக் கூடங்களின் பணிகளை ஒருங்கிணைக்கவும், களப் பணியாளர்களுக்கு நோய் ஆய்வு தொடர்பான பணிகளில் உதவிடவும், ஒரு மத்தியத் தொடர்பு ஆய்வுக் கூடம் சென்னை



சைதாப்பேட்டை மண்டல மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வருகின்றது. கோயம்புத்தூர், வேலூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள ஆய்வக நடைமுறைகளை, தரமான ஆய்வுக் கூடப் பணிக்கு நிகரான வகையில் தரம் உயர்த்திட, கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு நிதி உதவி (ஆஸ்காட்) திட்டத்தின்மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2006–07–ல், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், கரூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் ரூ.67.00 இலட்சம் செலவில் 4 புதிய கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## நோய் கட்டுப்படுத்துதல் மற்றும் அறவே ஒழித்தல்

இந்தியக் கால்நடைகள் மற்றும் கால்நடைப் பொருட்கள், ஏற்றுமதியைப் பெருக்க "Office International Epizootics" என்ற பன்னாட்டு நிறுவனம் நிர்ணயித்துள்ள தரக் கட்டுப்பாட்டு முறையை உறுதி செய்யும்போதுதான் அவை உலகச் சந்தையில் நுழைந்து போட்டியிட இயலும். தொற்று நோய்களால் பன்னாட்டு ஏற்றுமதிச் சந்தையை நமது நாடு முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள இயலவில்லை. மேலும், பெரும்பாலான கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவது உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவும். அதாவது, தற்போதைய உற்பத்தி மற்றும் உண்மையான உற்பத்தித் திறனுக்கான இடைவெளியைக் குறைத்து, கிராமப்புற ஏழைகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்திட உதவும். பல்வேறு நோய்களைக் கட்டுப்படுத்துவதில் இத்துறை குறிப்பிடத்தக்க சாதனையை எய்தியுள்ளது. மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு மிகப் பெரிய அளவில் இறப்பை ஏற்படுத்தி வந்த வெக்கை நோயை அடியோடு ஒழித்தது, அடையாளம் கண்டுகொள்ளத்தக்க மிக முக்கியமானதாகவும், பெரும் திருப்புமுனையாகவும் அமைந்தது. 1993–94 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் திட்டமான "தேசிய வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்" செயல்படுத்தப்பட்டதன் விளைவாகவே இச்சாதனையை அடைய முடிந்தது. 2001 ஆம் ஆண்டு மே திங்களிலிருந்து நமது மாநிலம் வெக்கை நோய் இல்லா மாநிலமாக அறிவிக்கப்பட்டது. இந்த நோயைத் திறமையுடன் கட்டுப்படுத்த இத்துறை மேற்கொண்ட நடவடிக்கைகள் முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளன. 1998–99 ஆம் ஆண்டு முதல் பிணி சார்ந்த கடுங்கண்காணிப்பு மற்றும் ஊர்தேடிக் கடுங்கண்காணிப்புச் சோதனைகளை மேற்கொள்வதன்மூலம் வெக்கை நோய்க் கிருமி ஏதேனும் மறைந்துள்ளதா என்றும், வெக்கை நோய் எதிர்ப்புத் திறன் வாய்ந்த நோய் எதிர்ப்பான்கள் காணப்படுகின்றனவா போன்ற சோதனைகளையும் மேற்கொண்டு வருகிறது.

[2006 ஆகஸ்ட் 22

விவசாயிகளுக்குப் பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும் பல்வேறு கால்நடை நோய்களிலிருந்து கால்நடைகளைக் காத்திட, முறையான மற்றும் கால முறைப்படி தடுப்பூசிப் பணி மேற்கொள்வது அவசியமாகும். இப்பணிக்குத் துறை அதிக முக்கியத்துவம் கொடுத்து, பாதிக்கப்படும் என கருதப்படும் கால்நடைகளுக்கும், கோழி இனங்களுக்கும் எல்லாக் கால்நடை நிலையங்கள், கால்நடைப் பாதுகாப்புத் திட்ட முகாம்கள், மக்கள் தொடர்பு முகாம்கள் மற்றும் ஆஸ்காட் திட்டத்தின்கீழ் தடுப்பூசிப் பணியை மேற்கொண்டு வருகிறது. 2005–06–ல் 449.91 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டன. 2006–07–ல் கால்நடை நிலையங்கள் மற்றும் இதரத் திட்டங்கள்மூலம் 650.15 இலட்சம் தடுப்பூசிகள் போடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**தடுப்பூசிகள்**

| வ. எண் | தடுப்பூசி | இலக்கு 2005 06 (இலட்சத்தில்) | சாதனை 2005 06 (இலட்சத்தில்) | இலக்கு 2006-07 (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | தொண்டை அடைப்பான் | 20.00 | 31.51 | 35.00 |
| 2 | சப்பை நோய் | 20.00 | 30.03 | 34.00 |
| 3 | அடைப்பான் | 25.58 | 37.42 | 50.00 |
| 4 | கோமாரி நோய் | 92.00 | 22.30 | 92.00 |
| 5 | ஆட்டுக் கொல்லி | 90.00 | 90.00 | 138.00 |
| 6 | துள்ளுமாரி | 2.00 | 3.48 | 5.50 |
| 7 | ஆட்டம்மை | 0.50 | 2.00 | 8.50 |
| 8 | கோழிக் கழிச்சல் | 200.00 | 231.24 | 250.00 |
| 9 | வெறிநாய்க் கடி | 0.10 | 0.39 | 0.55 |
| 10 | கன்று வீச்சு நோய் | | 0.84 | 35.00 |
| 11 | லெப்டோஸ்பைரோசிஸ் | | 0.02 | 0.05 |
| 12 | மஞ்சள் காமாலை | | 0.03 | 0.05 |
| 13 | நாய் டிஸ்டெம்பர் | | 0.25 | 0.50 |
| 14 | பார்வோ | | 0.30 | 0.50 |
| 15 | நீல நாக்கு | | 0.10 | 0.50 |
| | மொத்தம் | 450.18 | 449.91 | 650.15 |



2006 ஆகஸ்ட் 22]

நோய் அதிகம் தாக்கக்கூடிய பகுதிகளில் உள்ள பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய கால்நடைகளுக்கு, தடுப்பு நடவடிக்கையாக தடுப்பூசிப் பணி கால முறைப்படி மேற்கொள்ளப்படுவதால், மாநிலத்தில் நோய்க் கிளர்ச்சி குறைந்துள்ளது. வெக்கை நோய் அறவே ஒழிப்பு, நுண்ணுயிர் மற்றும் நச்சுயிர் நோய்கள் கட்டுப்படுத்துதல் மற்றும் பல்வேறு இதர நடவடிக்கைகளால் நமது மாநிலம் பெரும்பாலான கால்நடை நோய்களில் இருந்து விடுதலை பெற்று முன்னேறிக் கொண்டுள்ளது.

## சிறப்புத் திட்டங்கள்

### அ. கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்:

**செயல்படுத்தப்படும் பகுதிகள்:** 2000 முதல் அனைத்து மாவட்டங்கள்

இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் காஞ்சிபுரம் மாவட்டம் திருக்கழுக்குன்றத்தில் 18–1–2000 அன்று தொடங்கப்பட்டது.

**ஆண்டு வாரியாக நடத்தப்பட்ட முகாம்கள், பயனடைந்த கால்நடைகள் மற்றும் நிதி ஒதுக்கீடு விவரம்**

| வ. எண் | ஆண்டு | நடத்தப்பட்ட முகாம்களின் எண்ணிக்கை | பயனடைந்த கால்நடைகள் எண்ணிக்கை (இலட்சத்தில்) | நிதி ஒதுக்கீடு எண்ணிக்கை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 1999-2000 | 770 | 27.00 | 38.50 |
| 2 | 2000-01 | 4,620 | 96.64 | 244.00 |
| 3 | 2001-02 | 4,613 | 55.57 | 231.00 |
| 4 | 2002-03 | 4,812 | 58.14 | 214.00 |
| 5 | 2003-04 | 4,812 | 55.63 | 178.044 |
| 6 | 2004-05 | 5,005 | 54.21 | 185.185 |
| 7 | 2005-06 | 5,005 | 58.19 | 185.185 |
| 8 | 2006-07 (உத்தேசிக்கப் பட்டுள்ளது) | 5,500 | 65.00 | 275.00 |

**செயலாக்க முறை:**

- மாநிலத்தில் இத்திட்டம் ஜனவரி 2000 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இத்திட்டம் கால்நடை மருத்துவ வசதிகளைப் பெற பற்றாக்குறையாக உள்ள குக்கிராமங்களில் வளர்க்கப்படும் கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கும் முழுமையான கால்நடை மருத்துவ வசதி அளிக்கும் நோக்குடன் சிறப்பு முகாம்கள் அங்கேயே நடத்தப்படுகின்றன.
- இவ்வகை முகாம்களில் உடல் நலம் பேணுதல், முன்னெச்சரிக்கை நடவடிக்கை, குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம் செய்தல், செயற்கை முறைக் கருவூட்டல், சினைப் பரிசோதனை மற்றும் மலட்டுத் தன்மை நீக்கம் போன்ற பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன.
- கால்நடைகளுக்கு ஏற்படும் பலவிதமான நோய்கள் பற்றிய விளக்கங்கள், நோய்த் தடுப்பு முறைகள், தீவன உற்பத்தி முறைகள் மற்றும் கன்றுப் பேரணிகள் போன்றவை செயல் விளக்கத்துடன் நடத்தப்பட்டு, கிராம மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்கப்படுகிறது.
- 2006–07–ல், இத்திட்டத்தின்கீழ் 500 கூடுதல் முகாம்கள் குக்கிராமம் மற்றும் மலைப்புறப் பகுதிகளில் நடத்தி, அதிகப் பகுதிகள் பயனடைய வழிவகை செய்யப்படும்.

**பயனாளிகள்:** முகாம் நடத்தப்படும் கிராமங்கள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள கிராமங்களிலுள்ள கால்நடை வளர்ப்போருக்கு அனைத்துச் சேவைகளும் அவர்களின் இருப்பிடத்திலேயே இலவசமாகக் கிடைப்பதால், இத்திட்டம் கிராமப்புற விவசாயிகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**ஆ. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

**செயல்படுத்தப்படும் பகுதி: நீலகிரி மாவட்டத்தில் 1975 முதல்**

**செயலாக்க முறை:**

- மலைப் பகுதியில் வாழும் மக்களுக்குக் கால்நடை நலப் பணிகள் அளிக்கும் வகையில் இரண்டு நடமாடும் கால்நடை மருந்தகங்கள், ஒன்று கோத்தகிரியிலும், மற்றொன்று கூடலூரிலும், ஒரு கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு உதகமண்டலத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



- மாவட்டக் கால்நடைப் பண்ணை, உதகமண்டலத்தில் பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதுடன், அப்பண்ணையிலுள்ள உறைவிந்து உற்பத்தி வங்கியை வலுப்படுத்தவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- 2005–06–ல் உதகமண்டலம், மாவட்டக் கால்நடைப் பண்ணையிலுள்ள உறைவிந்து உற்பத்தி நிலையத்தை வலுப்படுத்திட ரூ.10.00 இலட்சம் செலவில் 5 ஜம்போ, உறைவிந்துக் குடுவைகள் வாங்கவும், சாகுபடி செய்ய இயலாத நிலத்தினை சாகுபடிக்கு ஏற்ற வகையில் மாற்றவும், உறைவிந்து உற்பத்தி நிலைய ஆய்வுக் கூடங்கள் மற்றும் கறவை மாடுகள் கொட்டகைகளைப் புனரமைக்கவும், நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பராமரிக்கவும், 5–சி திறன் கொண்ட குளிரூட்டும் சாதனம் வாங்கவும் இசைவளிக்கப்பட்டுள்ளது.
- இத்துடன், கோத்தகிரி கால்நடை மருந்தகத்தை பழுது நீக்கம் செய்து புனரமைக்கவும், விவசாயிகளுக்கு 25 சதவீத மானியத்தில் பசுந்தீவன விதைகள் வழங்கவும், 100 கலப்பினக் காளைகள் மசினகுடி பகுதியில் அறிமுகம் செய்து, உள்நாட்டு மாட்டினத்தின் தரத்தினை உயர்த்திடவும், திட்டப் பகுதியை நோயில்லா மண்டலமாக மாற்றிடவும் ரூ.37.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- இவ்வாறாக மேற்கண்ட திட்டத்திற்காக 2005–06–ல், ரூ.47.90 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.
- 2006–07–ல் கிரிராஜா கோழிகள் மற்றும் தாது உப்புகள், திட்டப் பகுதியில் ரூ.22.20 இலட்சத்தில் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பயனாளிகள்:** மலைவாழ் பகுதியிலுள்ள நலிவுற்ற பிரிவினர்.

**இ. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:**

**செயல்படுத்தப்படும் பகுதிகள்:** கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் விருதுநகர் ஆகிய

[2006 ஆகஸ்ட் 22

மாவட்டங்களில் உள்ள 135 நீர்பிடிப்புப் பகுதிகளில் 1981 முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

**செயலாக்க முறை:**

- இத்திட்டத்தின்மூலம் அபிசேகப்பட்டி, மாவட்டக் கால்நடைப் பண்ணையில் தற்போது இயங்கி வரும் உறைவிந்து வங்கி வலுப்படுத்தப்பட்டதுடன், விவசாயப் பயிற்சி நிலையம் ஒன்று கட்டப்பட்டுள்ளது.
- திட்டப் பகுதியில் உள்ள கால்நடை வளர்ப்போருக்கு மருத்துவச் சேவை அளிக்க கோயம்புத்தூர் மாவட்டம் வேட்டைக்காரன்புதூரிலும், தேனி மாவட்டம் உத்தமபாளையத்திலும், நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளும், திண்டுக்கல்லில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவும் செயல்பட்டு வருகின்றன.
- 2005–06–ல் 2,000 விவசாயிகளுக்குக் கோழி வளர்ப்பு பற்றி 5 நாள் பயிற்சி அளிக்கவும் பயனாளிகளுக்கு 9 பெண் கோழிகள் மற்றும் ஒரு சேவல் கொண்ட ஒரு கிரிராஜா கோழி அலகு 25 சதவீதம் மானியத்துடன் அளிக்கவும் ரூ.20.00 இலட்சம் வழங்கப்பட்டது.
- மேலும், மாட்டினங்களில் சினைப் பிடிப்பு சதவீதத்தை அதிகரிக்க, 400 மலட்டு நீக்க சிகிச்சை முகாம்கள் நடத்திட ரூ.20.00 இலட்சம் வழங்கப்பட்டது. இத்துடன், திட்டப் பகுதியில் 1,785 ஏக்கர் மேய்க்கால் புறம்போக்கு நிலங்களை மேம்படுத்தி தீவனம் அதிக அளவில் கிடைக்கச் செய்வதற்காக ரூ.50.00 இலட்சம் வழங்கப்பட்டது.
- இத்துடன், திட்டப் பகுதியில் 300 விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதோடு, பணியாளர் செலவினம் மற்றும் திட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்ட சொத்துக்களைப் பராமரிப்பதற்காக ரூ.4.30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.
- இவ்வாறாக 2005–06–ல் மேற்கண்ட திட்டத்திற்காக ரூ.94.15 இலட்சம் வழங்கப்பட்டது.
- 2006–07–ல், திட்டப் பகுதியில் பசுந்தீவன வளர்ச்சி மற்றும் கோழி வளர்ப்புக்காக முறையே ரூ.76.00 இலட்சம் மற்றும் ரூ.19.62 இலட்சம், ஆக மொத்தம் ரூ.95.62 இலட்சம் செலவில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 22]

**பயனாளிகள்:** திட்டப் பகுதியில் உள்ள அனைத்துக் கால்நடை வளர்ப்போர்.

**ஊ. கிழக்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:**

**செயல்படுத்தப்படும் பகுதிகள்:** சேலம், திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் 2005–06–ல் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**செயலாக்க முறை:**

- மலைப் பகுதியில் வாழும் விவசாயிகளின் வருமானம் மற்றும் வாழ்க்கைத் தரத்தினை அதிகரிக்க கால்நடை இடுபொருட்களை வழங்குதல்.
- 2005–06–ல், 91 ஏழை மகளிர் பயனாளிகளுக்குப் பயிற்சி அளித்து, 9 முதல் 12 மாத கலப்பினக் கிடேரிக் கன்று 50 சதவீத மானியத்துடன் அளிக்க ரூ.5.30 இலட்சம் வழங்கப்பட்டது.
- இத்துடன், 420 ஏழை மகளிர் பயனாளிகளுக்குப் பயிற்சி அளித்து 3–4 மாத வயதுடைய 10 பெட்டை மற்றும் 1 சேவல் கிரிராஜா கோழி அலகு ரூ.3.70 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது.
- ஆக, 2005–06–ல் இத்திட்டத்திற்காக மொத்தம் ரூ.9.00 இலட்சம் வழங்கப்பட்டது.
- 2006–07–ல் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட மைய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது.

**பயனாளிகள்:** திட்டப் பகுதியில் உள்ள நலிவுற்ற பிரிவினர்.

**உ. கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்காக மாநிலங்களுக்கு உதவி (ஆஸ்காட்):**

**செயல்படுத்தப்படும் பகுதிகள்:** 2003 முதல் அனைத்து மாவட்டங்களும்

**செயலாக்க முறை:**

- கால்நடைகளைத் தாக்கும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நோய்களைக் கட்டுப்படுத்த மத்திய அரசு உதவியுடன்

"கால்நடை நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு உதவி" என்ற திட்டம் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 75 சதவீதம் மத்திய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இதில், பயிற்சி/கருத்தரங்கு மட்டும் 100 சதவீதம் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. மாநிலத்தில் இத்திட்டம் 2003–04 முதல் செயல்படுத்தப்படுகிறது.

- 2005–06–ல் மத்திய அரசு இத்திட்டத்திற்காக ரூ.1,735.21 இலட்சம் ஒதுக்கீட்டை அங்கீகரித்தது. இதில் மாநில அரசின் பங்கையும் சேர்த்து ரூ.1,264.00 இலட்சத்தை விடுவித்தது. இதில் ரூ.1,261.00 இலட்சம் செலவிடப்பட்டது.

- 2006–07–ல் ரூ.36.51 கோடி செலவில் பல்வேறு இனங்களில் பணிகளை மேற்கொள்ள விரிவான செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**இத்திட்டத்தின் பணிகள் கீழ்க்கண்டவாறு:**

**(1) கண்டறியப்பட்ட ஒரு நோயினைத் தடுப்பு மற்றும் அறவே ஒழித்தல்:** இதன்கீழ் 2004–05 முதல் 3 ஆண்டு கால அளவில் ஆட்டுக் கொல்லி நோய்த் தீவிர பெருமளவிலான தடுப்பூசிமூலம் கட்டுப்படுத்த மற்றும் அறவே ஒழித்தலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2005–06–ல் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, சிவகங்கை, தேனி, இராமநாதபுரம், மதுரை, விருதுநகர், திண்டுக்கல், கோயம்புத்தூர், நீலகிரி, ஈரோடு, கரூர், நாகப்பட்டினம், நாமக்கல், பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் திருவாரூர் ஆகிய 21 மாவட்டங்களை உள்ளடக்கிய 267 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 90 இலட்சம் ஆடுகளுக்கு ஆட்டுக் கொல்லி நோய்த் தடுப்பூசி போடப்பட்டது. 2006–07–ல் மாநிலத்தில் 138 இலட்சம் செம்மறியாடு மற்றும் வெள்ளாடுகளுக்குத் தடுப்பூசி போடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(2) பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த மற்ற நோய்களுக்குத் தடுப்பூசி போடுதல்:** இதில் கீழ்க்கண்ட நோய்களுக்குத் தடுப்பூசி போடப்படுகிறது:

- **தொண்டை அடைப்பான்:** மாநிலத்தின் வடக்கு மாவட்டங்களான திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் மற்றும் விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் தொண்டை அடைப்பான் நோய் அதிக அளவில் காணப்படுகிறது. ஆகையால் இந்நோய்க் கிளர்ச்சியைத் தடுக்க மற்றும் முறையாக கட்டுப்படுத்திட 2005–06–ல்



இம்மாவட்டங்களில் உள்ள 21.03 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 2006–07–ல் மேற்கண்ட மாவட்டங்களில் உள்ள 20 இலட்சம் கால்நடைகள் தொண்டை அடைப்பான் நோயிலிருந்து காக்கப்படும்.

- **சப்பை நோய்:** அண்மைக் காலங்களில் காஞ்சிபுரம், விழுப்புரம், தஞ்சாவூர் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் சப்பை நோய்க் கிளர்ச்சி அதிக அளவில் காணப்பட்டது. ஆகையால், இம்மாவட்டங்களில் உள்ள கால்நடைகளை இந்நோயிலிருந்து காத்திட, 2005–06–ல் 18.15 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 2006–07-ல் காஞ்சிபுரம், சிவகங்கை, தஞ்சாவூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள 20 இலட்சம் கால்நடைகள் சப்பை நோயிலிருந்து காக்கப்படும்.

- **அடைப்பான்:** அண்மைக் காலங்களில் மனிதன் மற்றும் விலங்கினத்திற்கு இடையே பரவும் நோய்களில் அடைப்பான் முக்கியத்துவம் பெற்றுள்ளது. பொதுவாக, அடைப்பான் நோய்க் கிளர்ச்சி வேலூர், கடலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் காணப்படுகிறது. ஆகையால், இந்நோயினைக் கட்டுப்படுத்திட, 2005–06–ல் இம்மாவட்டங்களில் உள்ள 25.58 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 2006–07–ல் 50 இலட்சம் கால்நடைகள் அடைப்பான் நோயிலிருந்து பாதுகாக்கப்படும்.

- **கோமாரி நோய்:** கோமாரி நோய் ஒரு நச்சுயிர் நோயாகும். இது கால்நடைகளைத் தாக்கி விவசாயிகளுக்குப் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகிறது. ஆகையால் இந்நோயிலிருந்து கால்நடைகளைக் காத்திட, 2005–06–ல் 17.32 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. 2006–07–ல் மாநிலத்தில் உள்ள 92 இலட்சம் கால்நடைகளுக்குக் கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்படும்.

**(3) நோய்க் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் மற்றும் உயிரியியல் பிரிவை வலுப்படுத்துதல்:** இதில் மாநிலத்தின் உயிரியியல் உற்பத்தி நிலையத்தில் உள்ள தடுப்பூசி மருந்து தயாரிக்கும் ஆய்வுக்கூடங்கள் நல்ல தயாரிப்பு வழிமுறைகள் (GMP) மற்றும் கோயம்புத்தூர், வேலூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள நோய்க் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் நல்ல ஆய்வுக்கூட வழிமுறைகள் (GLP) தரத்திற்கு வலுப்படுத்தப்பட்டு வருகிறது.

**(4) பயிற்சி மற்றும் கருத்தரங்கு:** இதன்கீழ் 2005–06–ல் 120 கால்நடை மருத்துவர்களுக்குப் பல்வேறு நோய்க் கண்டறியும் முறைகள் பற்றி சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் மத்தியப் பல்கலைக்கழக ஆய்வுக் கூடம் ஆகிய இடங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. இத்துடன 160 கால்நடை ஆய்வாளர்களுக்கு மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஓசூரில் பயிற்சி அளிக்கப்பட்டது. மேலும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் "பொருளாதார முக்கியத்துவம் மற்றும் அதிதீவிர கோழி நோய்க் கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்துதல்" ஒரு நாள் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

**(5) தகவல் மற்றும் மக்கள் தொடர்புப் பிரச்சாரம்:** இதன்கீழ் 2005–06–ல் 770 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 58 மாவட்ட அளவிலான விழிப்புணர்ச்சி முகாம்கள் நடத்தப்பட்டன. இத்துடன் பல்வேறு நோய்கள் பற்றிய தகவல், அதனைக் கண்டறிதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பற்றிய சுவரொட்டிகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்டு, கால்நடை வளர்ப்போருக்கு விநியோகம் செய்யப்பட்டன.

**(6) தீவிர மற்றும் அயலின நோய்களைக் கட்டுப்படுத்துதல்:** இதன்கீழ் 2006–07–ல் பறவைக் காய்ச்சல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் வலுப்படுத்தப்படும்.

**பயனாளிகள்:** மாநிலத்தில் உள்ள அனைத்துக் கால்நடை வளர்ப்போர்.

**(ஊ) கோமாரி நோய்த் தடுப்புத் திட்டம்:**

**செயல்படுத்தப்படும் பகுதி:** 2004 முதல் கன்னியாகுமரி மாவட்டத்தில்

**செயலாக்க முறை:**

- மத்திய அரசு வழிகாட்டுதலின்படி, திட்டப் பகுதியில் கோமாரி நோய்த் தாக்கக்கூடிய கால்நடைகளுக்கு முறையாகத் தடுப்பூசி போடுதல்.
- 2004–05 வரை கோமாரி நோய்த் தடுப்பூசிப் பணி நான்கு கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.
- 2005–06–ல் அரசு ரூ.40.61 இலட்சம் மற்றும் திட்டப் பகுதியில் கோமாரி நோய்த் தடுப்பூசிப் பணி மேற்கொள்ள ஒரு இலட்சம் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. பணி நிறைவேற்றப்பட்டது.





- 2006–07–ல் இத்திட்டப் பணிகளை மேற்கொள்ள அரசு ரூ.12.88 இலட்சம் விடுவித்துள்ளது.

**பயனாளிகள்:** திட்டப் பகுதியில் உள்ள அனைத்துக் கால்நடை வளர்ப்போர்.

**(எ) 17-வது கால்நடைக் கணக்கெடுப்பு:**

**செயல்படுத்தப்படும் பகுதிகள்:** அனைத்து மாவட்டங்கள்.

**செயலாக்க முறை:**

- கால்நடை மற்றும் கோழியின தற்போதைய மற்றும் நம்பத் தகுந்த சரியான எண்ணிக்கை விவரம், திட்டமிடுவோருக்கு வளர்ச்சித் திட்டங்களைத் தீட்டுவதில் முக்கியப் பங்காற்றி வருகிறது.
- 17–வது கால்நடை மற்றும் கோழியினக் கணக்கெடுப்பு முதன்முறையாகக் கால்நடை பராமரிப்புத் துறையால் ரூ.8.64 கோடி நிதி ஒதுக்கீட்டில் 2003–04–ல் எடுக்கப்பட்டது.
- 17–வது கால்நடைக் கணக்கெடுப்புக்கான கிராமப்புற/நகர்ப்புற, இனம், தொழில் மற்றும் கிராமவாரியாக விவரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**பயனாளிகள்:** கால்நடை வளர்ப்போர். ஏனெனில், அடிப்படை நம்பத் தகுந்த விவரமாதலால் தகுந்த வழிமுறைகளுடன் திட்டங்கள் தீட்டி, விவசாய மக்களின் பொருளாதாரத் தரத்தை மேம்படுத்திட உதவுகிறது.

**(ஏ) மாதிரி வரைவுத் திட்டம்:**

**செயல்படுத்தப்படும் பகுதிகள்:** 1977 முதல் அனைத்து மாவட்டங்கள்.

**செயலாக்க முறை:**

- ஒருங்கிணைந்த மாதிரி வரைவுத் திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் 1977–78 ஆம் ஆண்டு முதல் கால்நடை உற்பத்திப் பொருட்களான பால், முட்டை மற்றும் இறைச்சி ஆகியவை பற்றி நம்பகமான புள்ளிவிவரங்கள் உரிய நேரத்தில் கிடைக்கச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

- மேலும் இது கால்நடை மேலாண்மை முறைகளை ஆண்டுதோறும் மற்றும் பருவம் வாரியாக தொடர்ந்தாற்போல் விவரங்களைப் பெற்று ஆய்வு செய்து வருகிறது. இவ்வாறு களத்திலிருந்து பெறப்பட்ட புள்ளிவிவரங்களைப் பகுப்பாய்வு செய்வதன்மூலம் பால் உற்பத்தி மற்றும் இதர கால்நடைப் பொருட்கள் பற்றி மதிப்பீடு செய்கிறது.
- 2005–06–ல் பதிவு செய்யப்படாத அறுவைக் கூடங்களின் இறைச்சி உற்பத்தி மதிப்பீடு செய்ய, ஒரு முன்னோடித் திட்டம் சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் இத்துறை மேற்கொண்டுள்ளது.
- 2006–07–ல் இயற்கை மரணங்களால் இறக்கும் பல்வேறு கால்நடைகளின் இறப்பு சதவீதத்தினை மதிப்பீடு செய்ய, இத்துறை 5 மாவட்டங்களில் ஆய்வை மேற்கொள்ள உள்ளது.

**2005-06-ல் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் மதிப்பீடு மற்றும் 2006-07-க்கான இலக்கு**

| இனம் | சாதனை 2005–06 | குறியீடு 2006–07 |
|---|---|---|
| பால் (இலட்சம் மெட்ரிக் டன்கள்) | 54.74 | 56.00 |
| முட்டை (மில்லியன்களில்) | 6,222.54 | 6,530.00 |
| இறைச்சி (மில்லியன் கிலோ) | 49.91 | 53.00 |

**பயனாளிகள்:** இது, இத்துறையினால் தொடங்கப் பெற்று செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு கால்நடை மேம்பாடு பற்றிய செயல்பாடுகளின் தாக்கத்தைக் கணக்கிடவும், கண்காணிக்கவும் உதவுகின்றது. இந்த ஆய்வு அளிக்கும் அடிப்படைப் புள்ளிவிவரங்கள் எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கான திட்டங்களைத் திட்டமிட உதவுகின்றன.

**விரிவாக்கப் பணி மற்றும் கால்நடை பொதுச் சுகாதாரம்:**

முறையான விரிவாக்கப் பணியும், பிரச்சாரப் பணியும் இன்றி புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகளை முழுவதுமாகப் பயன்படுத்த இயலாது. சிறந்த விரிவாக்கப் பணிகளால் கால்நடை பராமரிப்பு முறைகளில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள்





பற்றி அறிந்துகொள்வதற்கும், இத்துறையின் திட்டங்களும், செயல் முறைகளும் பற்றி பொது மக்கள் வெளிப்படையாகத் தெரிந்துகொள்ளவும் இயலுகிறது. மேலும் விவசாயிகள் தினம் தினம் எதிர்கொள்ளும் பல்வேறு களப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த முக்கிய நோய்களைக் கட்டுப்படுத்தவும் வழிவகுக்கும்.

**"காண்பதே கற்றல்"** என்ற கொள்கையின்படி, பல்வேறு கால்நடை பராமரிப்பு முறைகள் மற்றும் நோய்க் கண்டறிதல் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்க இத்துறை, கிடைக்கும் எல்லா வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொண்டு வருகிறது. இத்துறை, உள்ளூர் விழாக்கள், பொருட்காட்சிகள் மற்றும் இதர நிகழ்ச்சிகளில் கண்காட்சிகளை நடத்தி, கால்நடை பராமரிப்பின் தற்கால நவீனத் தொழில்நுட்பங்களையும் கால்நடை பொதுச் சுகாதாரம் குறித்த அணுகுமுறையையும் பொது மக்களுக்கு எடுத்துரைக்கின்றது. ஒவ்வோர் ஆண்டும் சென்னையில் நடைபெறும் அகில இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சியிலும், கூட்டுறவு வார விழாவிலும் இத்துறை கலந்துகொள்கிறது. வாரந்தோறும் அகில இந்திய வானொலி நிலையம்மூலமாக கால்நடை பராமரிப்பு பற்றிய செய்தி ஒலிபரப்பப்படுகிறது.

மனிதனுக்குப் பரவும் தொற்று நோய்களில் 4/5 பங்கு விலங்குகளிலிருந்து பரவுகின்றது. இவை மனித மற்றும் விலங்கினத்திற்கிடையே நோய் பரவுதல் எனப்படும். பல இலட்சக் கணக்கான கிராம மக்கள் வாழ்க்கை நடத்திட கால்நடை வளர்ப்பு முக்கிய ஆதாரமாக உள்ளதால், மனித மற்றும் விலங்கினத்திற்கிடையே நோய்ப் பரவுவதைத் தடுப்பதில் கால்நடை பொதுச் சுகாதாரம் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

**(அ) வெறிநாய்க் கடி நோய்த் தடுப்புத் திட்டம்:**

இந்தியா உட்பட பெரும்பாலான வளரும் நாடுகளில் மனிதன் மற்றும் கால்நடைகளில் வெறிநாய்க் கடி நோய் பெரும் பொதுச் சுகாதாரப் பிரச்சினையாக இருந்து வருகின்றது. இந்த மனித விலங்கினத்திற்கு இடையே பரவும் நோய்களுள் வெறிநாய்க் கடி நோய், நாட்டில் ஆண்டுதோறும் 30,000 இறப்பை ஏற்படுத்துகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது. சமீபத்திய கணக்கெடுப்பின்படி முக்கிய

டிக்கும் விலங்கு நாய் (91.50 சதவீதம்) ஆகும். இதில் 62.9 சதவீதம் தெரு நாய்கள் மற்றும் 37.1 சதவீதம் வீட்டு நாய்கள் ஆகும். நாய்கள் மனிதனுக்கு மட்டுமின்றி, விவசாயிகளுக்குப் பெரும் முக்கியத்துவமான கால்நடைகளுக்கும் இந்நோயினை பரப்புகிறது. ஆகையால் வெறிநாய்க் கடியை ஒழிப்பதன்மூலம் மனிதர்கள் மற்றும் இதர கால்நடைகளுக்கு இந்நோய் பரவுவதைக் கட்டுப்படுத்துதல் சிறந்த வழியாகும்.

இக்குறிக்கோளுடன், வெறிநாய்க் கடி நோய்த் தடுப்புப் பிரிவு, மதுரை மற்றும் திருநெல்வேலியில் இயங்கி வருகின்றது. 2005—06—ல் இந்நிலையங்களில் மொத்தம் 6,998 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. இத்துடன் கோயம்புத்தூர், கடலூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, கரூர், நாகப்பட்டினம், நாமக்கல், அரியலூர், இராமநாதபுரம், சிவகங்கை, திருவள்ளூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய நகர்ப்புறங்களில் உள்ள 27,611 நாய்களுக்கு அரசு சாரா அமைப்புகளின் உதவியோடு ரூ 10.00 இலட்சம் செலவில் வெறிநாய்க் கடி நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. இத்திட்டச் செயலாக்கத்தினால் மனிதர்கள் மற்றும் நாய்களைத் தாக்கக்கூடிய வெறிநாய்க் கடி நோய் இந்நிலையங்களின் அருகிலுள்ள இடங்களில் கணிசமான அளவு குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்துடன் ஏழை மக்களின் பொன்னான வேலை நேரம் பாதுகாக்கப்படும்.

இத்துறை விரிவான வெறிநாய்க் கடி நோய்க் கட்டுப்படுத்தும் திட்டத்தை உருவாக்கப் பிராணிகள் நல வாரியத்துடன் கலந்தாலோசித்து வருகின்றது.

### ஆ) தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம்:

மாநிலமெங்கிலும் இத்துறை கால்நடை மற்றும் கோழிகளுக்கு முறையாகத் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம் ஆகிய பணிகளைச் செய்து வருகின்றது. இதனால் அடைப்பான், கன்று வீச்சு மற்றும் நாடாப் புழு, ஸ்டராங்கைலாசிஸ் (Strongylosis), ஆம்பிஸ்டோமியாசிஸ் (Ampistomiasis) போன்ற அபாயகரமான நோய்கள் மேலும் பரவாமல் தடுக்கப்படுகின்றன. முறையான குடற்புழு நீக்கம் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் செய்வதன் பலனாக மனிதனுக்குப் பரவாமல் குடற்புழுக்களின் வளர்ச்சி தவிர்க்கப்படுகிறது.





**இனவாரியாகத் தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கப் பணிகள்**

| இனம் | தடுப்பூசி எண்ணிக்கை (இலட்சத்தில்) | | குடற்புழு நீக்கம் எண்ணிக்கை (இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|
| | சாதனை (2005-06) | இலக்கு (2006-07) | சாதனை (2005-06) | இலக்கு (2006-07) |
| பசுவினம் மற்றும் எருமையினம் | 103.06 | 196.00 | 32.51 | 36.00 |
| செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகள் | 114.61 | 197.50 | 147.60 | 160.00 |
| நாய்கள் | 1.00 | 1.65 | 0.97 | 1.00 |
| கோழியினம் | 231.24 | 250.00 | 3.29 | 3.50 |
| மற்றவை | | | 1.63 | 2.00 |
| மொத்தம் | 449.91 | 645.15 | 186.00 | 202.50 |

### இ) இறைச்சி ஆய்வு:

மாநிலமெங்கிலும் உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் 123 பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்களில் முறையான இறைச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் இறைச்சியை உண்ணும் பொது மக்கள் நாடாப் புழு மற்றும் தசைப் பகுதிக்குள் வளரும் ஒட்டுண்ணிகள் போன்ற நோய்களிலிருந்து காக்கப்படுகிறார்கள்.

## பிராணி நலத் திட்டங்கள்

கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்கவும், அவற்றை மனிதாபிமான முறையில் நடத்தவும் தமிழக அரசு பிராணிகள் நல வாரியத்துடன் ஒருங்கிணைந்து கீழ்க்காணும் மூன்று வழிகளில் இப்பிரச்சினைகளைக் களைய செயல்பட்டு வருகிறது:

- சந்தை இடங்களில்
- பயணத்தின்போது
- இறைச்சிக் கூடங்களில்

[2006 ஆகஸ்ட் 22

பிராணிகள் வதைத் தடுப்புச் சட்டம், 1960, பிரிவு 38—ன்படி திருத்திய பிராணிகள் வதைத் தடுப்பு விதிகள், 2001—ன்படி, தமிழகத்தில் எல்லா மாவட்டங்களிலும் பிராணிகள் வதைத் தடுப்புச் சங்கம் கீழ்வரும் குறிக்கோள்களுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது:

- மாவட்டத்திலுள்ள பாதிக்கப்படும் விலங்குகளை மீட்டல், பாதுகாத்தல் மற்றும் பிராணிகள் வதைச் சட்டம், 1960—ஐ அமல்படுத்துதல்.
- விலங்குகளை வதைப்பவர்கள்மீது வழக்குப் பதிவு செய்து தண்டனை பெறும்பொருட்டு, அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துதல்.

தமிழ்நாட்டில் இந்தியப் பிராணிகள் நல வாரிய அங்கீகாரத்துடன் 92 பிராணிகள் நல அமைப்புகள் பல்வேறு பிராணிகள் நல நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்க அரசு, மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்புக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது.

**சந்தை இடங்களில்:**

மாநிலத்திலுள்ள 203 கால்நடைச் சந்தைகள் வாயிலாக பெரும்பாலான கால்நடை வர்த்தகம் நடைபெறுகிறது. இச்சந்தைகளில் அடிப்படை வசதிகளான தண்ணீர், நிழல் மற்றும் முதலுதவி ஆகியவை குறைவாகவே உள்ளன. மேலும், கால்நடைகளைப் பத்திரமாக ஏற்றுவதற்கு மற்றும் இறக்குவதற்குப் போதிய வசதிகள் இல்லை. ஆகையால், இப்பிரச்சினைகளை எதிர்கொள்ளவும், கால்நடைகள் கொடூரமான முறையில் நடத்தப்படுவதைத் தடுக்கவும், கால்நடைகளைக் கையாளும் வர்த்தகர்களிடம் போக்குவரத்தின்போது மனிதாபிமான முறையில் நடத்துவது குறித்து எடுத்துரைக்கவும், 20 சந்தைகளில் "கால்நடை முதலுதவி நிலையங்கள்" ரூ.40.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டது.

**பயணத்தின்போது:**

கால்நடைகளை ஏற்றிச் செல்லும்பொழுது மனிதாபிமான முறையில் அவற்றை நடத்திட, இது பற்றிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் பற்றி கால்நடைகளை ஏற்றிச் செல்லும் தொழிலில் ஈடுபட்டுள்ள சுமை ஊர்தி உரிமையாளர்கள், வேலையாட்கள் மற்றும் சுமை ஊர்தி உரிமையாளர்கள், ஓட்டுநர்கள், போன்றோர் அறிவுறுத்தப்பட்டனர். அவர்களும் இணையம் கடைப்பிடிப்பதாக ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.



2006 ஆகஸ்ட் 22]

பிராணிகள் வதைத் தடுப்புச் சங்க அலுவலர்கள் உதவியுடன் காவல் துறை, வருவாய்த் துறை அலுவலர்கள் மற்றும் வணிக சோதனைச் சாவடிகளில் உள்ள அலுவலர்கள் கால்நடைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களைச் சோதிக்கின்றனர். குற்றம் புரியும் ஊர்திகளில் இருந்து கைப்பற்றப்படும் கால்நடைகள், அவற்றைப் பராமரிப்பதற்காகக் கால்நடை நல அமைப்பு மற்றும் பசு மடங்களில் ஒப்படைக்கப்படுகின்றன.

## 2006–07 ஆம் ஆண்டுக்கான பகுதி–2–ன் புதிய திட்டங்கள்

1. நான்கு கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவுகள், கிருஷ்ணகிரி, நாகப்பட்டினம், கரூர் மற்றும் விருதுநகரில் ரூ. 67.00 இலட்சம் செலவில் புதியதாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகளின் உள்கட்டமைப்பு வசதிகளை ரூ. 40.90 இலட்சம் செலவில் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
3. இரண்டு மண்டல இணை இயக்குநர்களுக்கு இலகு ரக வாகனம் ரூ. 9.00 இலட்சம் செலவில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
4. மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் வட்டத் தலைமையிடங்களில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு ரூ. 10.40 இலட்சம் செலவில் தகவல் தொடர்பு வசதி ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
5. இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் உள்ள கோழி தடுப்பு மருந்து ஆய்வுக்கூடத்தை, ரூ. 38.00 இலட்சம் செலவில் இன்றியமையாத உபகரணங்கள் வழங்கி வலுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
6. ஓசூர் மற்றும் செட்டிநாடு, மாவட்டக் கால்நடைப் பண்ணைகளை ரூ. 40.00 இலட்சம் செலவில் ஒருங்கிணைந்த தீவன அபிவிருத்தி செய்ய சாக்குழிகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
7. தொலைதூரம் மற்றும் மலைப் பகுதிகளில் செயல்படும் கால்நடை கிளை நிலையங்களின் பணிகளை, ரூ. 20.00 இலட்சம் செலவில் உபகரணங்கள் மற்றும் தளவாடங்கள் மாற்றி வழங்கி வலுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2006, ஆகஸ்ட் 22

## தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை

"தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை" மத்திய அரசின் தேசிய பசு மற்றும் எருமை இனப்பெருக்கத் திட்டத்தினை தமிழ்நாட்டில் செயல்படுத்த சுயமான செயல்பாடு கொண்ட மாநிலச் செயல்பாட்டு முகமையாக 11-2-2002-ல் பதிவு செய்யப்பட்டு, 9-1-2003 முதல் செயல்பட்டு வருகிறது. இந்த மாநிலச் செயல்பாட்டு முகமை தன் செயல்பாடுகள் வழி, சுயமாகச் செயல்பட்டு, தன்னிறைவு பெற்ற நிறுவனமாக இயங்க வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.

### குறிக்கோள்

இம்முகமையின் முதன்மையான குறிக்கோள், கலப்பின மாடுகளின் தரம் மற்றும் எண்ணிக்கையை உயர்த்துவதன்மூலம் அதிக அளவில் பால் உற்பத்தியைப் பெருக்குவதே. மேலும், பால் உற்பத்தியைப் பெருக்குவதன்மூலம் ஒரு நபருக்குத் தற்சமயம் நாள் ஒன்றுக்குக் கிடைக்கக்கூடிய 200 கிராம் பால் என்ற அளவை 250 கிராம் என்ற இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் பரிந்துரையை அடைவதே ஆகும். இதற்கு இனப்பெருக்கத்திற்கு உகந்த பசு மற்றும் எருமை இனங்களில் தற்பொழுது நடைபெறும் செயற்கை முறைக் கருவூட்டல் எண்ணிக்கையை முறையே 7 மற்றும் 9 சதவீதமாக உயர்த்துவதே ஆகும்.

### திட்ட உள்ளடக்கம்

1. விந்து உற்பத்தி நிலையங்கள், விந்து வங்கிகள் மற்றும் பயிற்சி நிலையங்கள் நல்ல தரக் கட்டுப்பாட்டுடன் இயங்குவதற்கு
   - உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது
   - பொலிகாளைகள் மற்றும் விந்துவின் தரத்தினை நிர்ணயம் செய்தல்
2. விந்து உற்பத்திக்கு உயர்ந்த மரபியல் தன்மை கொண்ட தரமான காளைகளை அறிமுகப்படுத்துவது
   - தேர்வு செய்யப்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்களில் சிறந்த மாடுகளின் பால் உற்பத்தித் திறனைப் பதிவு செய்தல் திட்டம்
   - வம்சாவழி சோதனைத் திட்டத்தைத் தீவிரமாகச் செயல்படுத்துதல்



2006 ஆகஸ்ட் 22]

   - கருமாற்றுத் திட்டத்தினைச் செயல்படுத்துவதன் மூலமாக
3. விவசாயிகளின வீடுகளுக்குச் சென்று கால்நடைகளுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் பணியை மேற்கொள்வதறகு கிராமப்புற படித்த இளைஞர்களை ஊக்குவித்தல்
   - செயற்கை முறைக் கருவூட்டல் பணி செய்ய பயிற்சி அளித்தல்
   - தேவையான உறைவிந்து மற்றும் செயற்கை முறைக் கருவூட்டல் உபகரணங்களைப் பெற்று வழங்குவது
   - உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் தங்குதடையின்றி நியாயமான விலையில் வழங்குவது
4. தற்பொழுது இயங்கி வரும் நிலையான செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களை நிலையான மற்றும் நடமாடும் நிலையங்களாக மாற்றியமைத்தல்
   - வீடு வீடாகத் தூக்கிச் செல்வதற்கு எளிதான சிறிய உறைவிந்துக் குடுவைகளை வழங்குவது
   - தரமான மரபியல் தன்மை கொண்ட உறைவிந்துக் குழல்களைத் தடையின்றி வழங்குவதன்மூலம்
   - விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று கால்நடைகளுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் பணியை மேற்கொள்வதற்குத் தனியார் செயற்கை முறைக் கருவூட்டல் பணியாளர்களை அங்கீகரிப்பதன்மூலம்
5. மாநிலத்தின் மாடு மற்றும் எருமைகளின் இனப்பெருக்கப் பணி தொடர்பான செயல்பாட்டினைக் கூர்ந்து கண்காணிப்பதற்குக் கணினிமயமாக்கல்
6. நிறுவன மறு சீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு திட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல்
7. திரவ நைட்ரஜன் சேமிப்பு மற்றும் விநியோக முறையைச் சீர்படுத்துதல். திரவ நைட்ரஜன் அதிக அளவில் சேமிப்பதற்கும், அதிக அளவில் எடுத்துச் செல்வதற்கும் உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்

[2006 ஆகஸ்ட் 22

8. இந்தியப் பாரம்பரியக் கால்நடை இனங்களை அழிவிலிருந்து பாதுகாத்தல்

9. மேற்குறிப்பிட்டவை தவிர, மாடு மற்றும் எருமை இனப்பெருக்கம் சார்ந்த செயல்பாடுகள்

2005–06 ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு ரூ. 1,253.00 இலட்சமும், மாநில அரசு ரூ. 16.42 இலட்சமும் முகமையின் செயல்பாட்டிற்காக வழங்கியுள்ளது.

## 2005-06-ன் செயல் விவரம்

### 1. உறைவிந்து உற்பத்தி நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

அ. அனைத்து விந்து உற்பத்தி நிலையங்களையும் மேம்படுத்த ரூ. 363.66 இலட்சம் செலவில் இந்திய அரசின் "உறைவிந்து உற்பத்திக்குத் தேவையான குறைந்தபட்சத் தரச் செயல் முறை"களின் அடிப்படையின்படி அதில் குறிப்பிட்டுள்ள மிக முக்கிய உபகரணங்கள் வாங்கி வழங்கப்பட்டது.

ஆ. ஜெர்ஸி, கலப்பின ஜெர்ஸி, ஹோல்ஸ்டீன் ப்ரீசியன், சிந்தி மற்றும் முர்ரா இனத்தைச் சேர்ந்த தரமான 69 பொலிகாளைகள் மற்றும் பொலிகாளைக் கன்றுகள் 2005–06 ஆம் ஆண்டில் வாங்கப்பட்டு, அரசுப் பண்ணைகளில் பராமரிக்கப்படுகின்றன. தற்போது அனைத்துப் பண்ணைகளிலும் உள்ள இனவாரியான பொலிகாளைகள் மற்றும் கன்றுகளின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| ஜெர்ஸி | – | 58 |
| ஜெர்ஸி கலப்பினம் | – | 79 |
| ஹோல்ஸ்டீன் ப்ரீசியன் | – | 26 |
| ஹோல்ஸ்டீன் ப்ரீசியன் கலப்பினம் | – | 23 |
| சிகப்பு சிந்தி | – | 24 |
| முர்ரா | – | 47 |
| உம்பளாச்சேரி | – | 1 |
| காங்கேயம் | – | 18 |
| **மொத்தம்** | – | **276** |



2006 ஆகஸ்ட் 22]

### 2. புதிய நடமாடும் செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களை ஏற்படுத்தி மாநிலத்தில் செயற்கை முறைக் கருவூட்டல் பணி அமைப்பைப் பலப்படுத்துதல்

(அ) 127 சுயமாகப் பணியாற்றும் கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு (Self employed veterinary graduates) தேவையான செயற்கை முறைக் கருவூட்டல் உபகரணங்கள் வழங்கப்பட்டு, செயற்கை முறைக் கருவூட்டல் பணி விவசாயிகளின் வீடுகளுக்கே சென்றடையும் வகையில் நடைபெற்று வருகிறது.

(ஆ) புதிய நடமாடும் கருவூட்டல் நிலையங்களை ஏற்படுத்த, 202 படித்த கிராமப்புற இளைஞர்கள் மற்றும் டானிடா தொடர்புப் பணியாளர்களைத் தேர்வு செய்து, செயற்கை முறைக் கருவூட்டல் பயிற்சி மற்றும் கருவூட்டல் பணி மேற்கொள்வதற்குத் தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டு செயற்கை முறைக் கருவூட்டல் பணி நடைபெற்று வருகிறது.

(இ) கடந்த வருடம் (2005–06) 300 படித்த கிராமப்புற இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டு, மதுரை, வேலூர், சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் உள்ள பயிற்சி நிலையங்களில் வகுப்பறைப் பயிற்சியும், அதன் பிறகு அவர்களின் இருப்பிடத்திற்கு அருகிலுள்ள கால்நடை பராமரிப்புத் துறையின் கால்நடை மருந்தகம் மற்றும் கால்நடை மருத்துவமனைகளில் செயல் முறைப் பயிற்சியும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை மார்ச் 2006 முடிய 172 கிராமப்புற இளைஞர்கள் பயிற்சி பெற்றுள்ளனர்.

(ஈ) 18 ஓய்வு பெற்ற கால்நடை மருத்துவர்கள் மற்றும் கால்நடை ஆய்வாளர்களுக்கு விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று செயற்கை முறைக் கருவூட்டல் பணிகளை மேற்கொள்ள இடுபொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

### 3. நிலையான கால்நடை செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களை நடமாடும் செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களாக மாற்றுதல்

அ. இதுவரை கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த 271 நிலையான கால்நடை செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்கள், நிலையான மற்றும நடமாடும் கால்நடை செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களாக

மாற்றப்பட்டுள்ளன. மேலும், 250 கால்நடை செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்கள் விவசாயிகளின் வீடுகளுக்குச் சென்று செயற்கை முறைக் கருவூட்டல் பணிகளை மேற்கொள்ளும் வகையில் நிலையான மற்றும் நடமாடும் செயற்கை முறைக் கருவூட்டல் மையங்களாக மாற்றத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

ஆ தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தைச் சார்ந்த 1,659 நிலையான கால்நடை செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்கள் நடமாடும் செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களாக மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

## 4. திரவ நைட்ரஜன் விநியோகத்தைச் சீர்படுத்தி பலப்படுத்துதல்

அ. அனைத்து திரவ நைட்ரஜன் தயாரிப்பு ஆலைகளுக்கும் உதிரி பாகங்கள் வாங்குவதற்குப் போதுமான நிதி வழங்கப்பட்டு, அவை முழுத் திறனுடன், முழு அளவில் இயங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஆ. அனைத்து உறைவிந்து விநியோக நிலையங்களுக்கும் 590 திரவ நைட்ரஜன் குடுவைகள் மற்றும் 25 உறைவிந்துக் குழல் சேமிப்புக் குடுவைகளும் வழங்கப்பட்டுள்ளன.

இ. 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட திரவ நைட்ரஜன் சேமிப்புக் கலன்கள் தமிழ்நாட்டில் சேலம், கோவை, தருமபுரி, ஈரோடு, திருச்சி, திருநெல்வேலி, மதுரை, திருவண்ணாமலை, சென்னை மற்றும் வேலூர் ஆகிய 10 இடங்களில் நிறுவப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் திரவ நைட்ரஜன் விநியோகம் மற்றும் இருப்பு சீராகவும், தங்குதடையின்றி வழங்க ஏதுவாகவும் அமையும்.

## 5. வழங்கப்பட்ட பயிற்சிகள் (2005-06)

தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை பயிற்சிகளை ஏற்பாடு செய்து வழங்கியுள்ளது. 2005–06–ல் 132 கள கால்நடை மருத்துவர்களுக்கு தொழில்/புத்தாக்கப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

## 6. வம்சாவழி சோதனைத் திட்டம்

ஈரோட்டைத் தலைமையிடமாகக் கொண்டு தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்தின்மூலம் தமிழ்நாடு கால்நடை



அபிவிருத்தி முகமை நிதி உதவியுடன் 8 மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் அமைக்கப்பட்டுள்ள 160 பால உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் வம்சாவழி சோதனைத் திட்டம் 15 வருவாய் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 7. சிறந்த கறவை மாடுகளின் பால் உற்பத்தித் திறனைப் பதிவு செய்தல் திட்டம்

பொலிகாளை உற்பத்திக்காக வேலூர், சேலம், ஈரோடு, கோவை, மதுரை, திருச்சி, திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களில் அமைக்கப்பட்டுள்ள 300–க்கும் மேற்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்களை 150 மையங்களாக்கி, அவற்றில் 1,600 சிறந்த ஜெர்ஸி கலப்பினக் கறவை மாடுகள் தெரிவு செய்வதற்காக 2,232 கறவை மாடுகள் நோய்ச் சோதனையில் உள்ளன. இந்தத் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட 13 வருவாய் மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 8. கருமாற்றுத் திட்டம்

இத்திட்டம் உயர்தரக் காளைகளை உற்பத்தி செய்ய தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தின் வழியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 82 கருக்கள் சேகரம் செய்யப்பட்டு, அவற்றில் 60 கருக்கள் மாற்றம் செய்யக்கூடிய தரம் வாய்ந்தவை சேகரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 5 எண்ணிக்கை கருமாற்றம் செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 55 கருக்கள் பிற்கால உபயோகத்திற்காக திரவ நைட்ரஜனில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

## 9. பாரம்பரிய இனங்களை அழிவிலிருந்து பாதுகாத்தல்

ஓசூர், மாவட்டக் கால்நடைப் பண்ணைக்கு விந்து சேகரிப்பு, உறைவிந்துத் தயாரிப்பு மற்றும் விநியோகத்திற்காக 14 எண்ணிக்கை காங்கேயம் இனக் காளைகள் மற்றும் இளம் காளைக் கன்றுகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு, உறைவிந்துக் குழல்கள் காங்கேயம் இனம் உள்ள பகுதிகளில் கருவூட்டல் பணிக்காக வழங்கப்பட்டுள்ளது. மேலும், உம்பளாச்சேரி இனத்தைப் பாதுகாக்க உம்பளாச்சேரி காளைகளிலிருந்து உறைவிந்து சேகரிக்கப்பட்டு, உம்பளாச்சேரி மாடுகள் வளர்க்கப்படும் இடங்களில் பயன்பாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

**10. பிரச்சாரம் மற்றும் விளம்பரம்**

அ) விவசாயிகள் பயன் பெறும் வகையில் 385 ஒன்றியங்களில் ஓர் ஒன்றியத்திற்கு 2 முகாம்கள் வீதம் 770 முகாம்களில் சிறப்பு மலடு நீக்கம் மற்றும் உழவர் பயிற்சிக்காகக் கால்நடை பராமரிப்புத் துறைக்கு ரூ. 26.95 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது.

ஆ) சென்னை வானொலிமூலமாகக் கால்நடை வளர்ப்பு பற்றிய தகவல்கள் வாரத்திற்கு 30 நிமிட நிகழ்ச்சிகளாக (52 வாரம்) ஒலிபரப்பப்பட்டு வருகிறது.

**கால்நடைக் காப்பீட்டுத் திட்டம்**

தேசிய கால்நடைக் காப்பீட்டுத் திட்டத்தை இந்தியாவில் 100 மாவட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மாநிலத்தில் செயல்படுத்த, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமை செயல்பாட்டு நிறுவனமாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2006–07–ல் மொத்தம் ஒரு இலட்சம் அதிகப் பால் கறவைத் திறன் கொண்ட மாட்டினங்களைக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டு வந்து இத்திட்டத்தினைச் செயல்படுத்த சேலம், கோவை, நாமக்கல், ஈரோடு, வேலூர் ஆகிய 5 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டமானது பசு மற்றும் எருமைகளைக் காப்பீடு செய்யத் தேவையான தொகையில் 50 சதவீதம் அரசு மானியமாகவும், 50 சதவீதம் கால்நடை வளர்ப்போர்களிடமிருந்தும் பெற்றும் செயல்படுத்தப்பட உள்ளது.

## வருங்காலத் திட்டங்கள்

இனப்பெருக்கத்திற்கு உகந்த பசு மற்றும் எருமை இனங்களில் தற்பொழுது நடைபெறும் செயற்கை முறைக் கருவூட்டல் எண்ணிக்கையை முறையே 7% மற்றும் 9% ஆகவும் உயர்த்துதல் மற்றும் தற்சமயம் சினை பிடிக்கும் விகிதத்தை ஆண்டிற்கு 1% மேலும் உயர்த்துவதற்காக இதில் அங்கம் வகிக்கும் கால்நடை பராமரிப்புத் துறை, கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமைமூலம் கீழ்க்கண்டவாறு திட்டமிட்டுள்ளது:





**செயற்கை முறைக் கருவூட்டல் இலக்கு, 2006-2007**

| வருடம் | இலக்கு சதவீதம் இனப்பெருக்க வயதிலுள்ள கால்நடைகள் (எண்ணிக்கை சதவீதம்) | | செயற்கை முறைக் கருவூட்டல் மேற்கொள்ளப்பட வேண்டிய கால்நடை எண்ணிக்கை (இலட்சத்தில்) | | மேற்கொள்ளப்பட வேண்டியவை செயற்கை முறைக் கருவூட்டல் (எண்ணிக்கை— (இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|
| | பசு | எருமை | பசு | எருமை | பசு | எருமை |
| 2006-2007 | 47.00 | 30.00 | 19.35 | 2.68 | 48.30 | 6.38 |

**2006-2007 ஆண்டிற்கான செயல்பாடுகள்**

1. தேசியக் கருத்தரங்கு
2. உறைவிந்து உற்பத்தி நிலையங்களைப் பலப்படுத்துதல்
3. மாநிலத்தில் செயற்கைக் கருவூட்டல் பணி அமைப்பைப் பலப்படுத்துதல்
4. நிலையான கருவூட்டல் நிலையங்களை நிலையான மற்றும் நடமாடும் கருவூட்டல் நிலையங்களாக மாற்றுதல்
5. திரவ நைட்ரஜன் விநியோகத்தைப் பலப்படுத்துதல்
6. பயிற்சித் திட்டங்கள்
7. வம்சாவழி சோதனைத் திட்டம்
8. சிறந்த கால்நடைகளின் உற்பத்தித் திறனைப் பதிவு செய்யும் திட்டம்
9. பாரம்பரிய மாட்டினம் மற்றும் எருமையினத்தை அழிவிலிருந்து பாதுகாக்கும் திட்டத்தின்கீழ் உம்பளாச்சேரி மற்றும் காங்கேயம் இனங்கள் தற்சமயம் பாதுகாக்கப்பட்டு வருவது மேலும் விரிவுபடுத்தப்படவுள்ளது. தோடா இன எருமைகளை அழியாமல் பாதுகாக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்
10. பிரச்சாரம் மற்றும் விளம்பரம்
11. கணினிமயமாக்கல்/தகவல் தொடர்பு மேலாண்மை

[2006 ஆகஸ்ட் 22

## தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

### முன்னுரை

தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் 20–9–1989–ல் ஏற்படுத்தப்பட்டது. இது இந்தியாவிலேயே கால்நடை மருத்துவத்திற்கான முதல் பல்கலைக்கழகம் என்ற பெருமையைப் பெறுகிறது. இதனை ஆரம்பித்த பெருமை தற்போதைய மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களையே சாரும். இப்பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறது:

- இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பெறுவோருக்கு, கால்நடை மருத்துவம், விலங்கின மற்றும் மீன்வள அறிவியலில் சிறந்த கல்வியை அளித்தல்
- கால்நடை மற்றும் மீன் வள உற்பத்தி ஆகியவற்றின் பாதுகாப்பு மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் மற்றும்
- தொழில்நுட்பக் கல்வியைக் கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் கிராமப்புறப் பண்ணையாளர்களுக்கு விரிவாக்கக் கல்விமூலம் பரப்புதல்

கடந்த வருடங்களில், இப்பல்கலைக்கழகம் கால்நடை, கோழியின மற்றும் மீன் வள மேம்பாட்டில் கிராமப்புறப் பண்ணையாளர்களின் பங்களிப்போடு குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை கால்நடை உற்பத்தி, இலாப நோக்கு மற்றும் ஸ்திரத் தன்மை, உணவு மற்றும் ஊட்டச் சத்துப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் குறைந்த அளவில் வளத்தைப் பயன்படுத்தி அதிக அளவில் பயனீட்டும்பொருட்டு நிகழ்த்தியுள்ளது. அவையாவன:— இன மேம்பாடு, அயல்நாட்டின் கலப்பின மேம்பாடு, உற்பத்தி முறை ஆய்வு, தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் உற்பத்தி அளவினை அதிகரித்தல், தொடர்ந்து நடைபெற்று வரும் ஆராய்ச்சிகளின் பயனாக கால்நடை, கோழி மற்றும் மீன் இனத்திற்கான தடுப்பு மருந்துகளில் நல்ல முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. நுண்ணுயிரிகளால் ஏற்படும் நோய்களைக் கண்டறிய நோயறி சாதனங்களும் முறைப்படுத்தப்பட்டுள்ளன. வளர்ந்து வரும் நிறுவனங்களுக்கு மனித வளம் என்பது ஒரு முக்கிய அம்சமாகும். அவர்களின் தனித் திறமையை முன்னேற்ற உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தின் திறமையை



2006 ஆகஸ்ட் 22]

மேம்படுத்தவும், காலத்திற்கேற்ற வகையில் கல்வித் திட்டம் மற்றும் ஆராய்ச்சிக் கருவிகளை மாற்றவும் குறுகிய காலத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டு, ஆராய்ச்சியாளர்களின் பணிகளும் அவ்வபோது கண்காணிக்கப்படுகின்றன.

### கல்வி

இப்பல்கலைக்கழகத்தில் 2005–2006 ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவர் சேர்க்கைப் பட்டியல் பின்வருமாறு:

| பாடப் பிரிவு | சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் | மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | மொத்தம் |
|---|---|---|---|---|
| பி.வி.எஸ்சி. | 134 | 74 | - | 208 |
| பி.எஃப்.எஸ்சி. | - | - | 29 | 29 |
| எம்.வி.எஸ்சி. | 50 | 9 | - | 59 |
| எம்.எஃப்.எஸ்சி. | - | - | 15 | 15 |
| பி.எச்டி. (கால்நடை) | 27 | 1 | - | 28 |
| பி.எச்டி. (மீன் வளம்) | - | - | | - |
| வர்த்தக மேலாண்மையில் முதுகலைப் பட்டயப் படிப்பு | - | | | |
| உயிர்த் தகவல் நுட்பவியலில் முதுகலைப் பட்டயப் படிப்பு | 5 | | | 5 |
| உயிர்த் தொழில் நுட்பவியலில் எம்.டெக். படிப்பு | 3 | - | - | 3 |
| மொத்தம் | 219 | 84 | 44 | 347 |

தமிழக அரசு, இந்திய அரசு, இந்திய வேளாண் அறிவியல் கழகம் மற்றும் இதர முகமைகள் உதவியுடன் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு உதவித் தொகைகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**சர்வதேச கூட்டுக் கல்வி மற்றும் ஆராய்ச்சித் திட்டம்**

- மிச்சிகன் ஸ்டேட் பல்கலைக்கழகம், அமெரிக்கா மற்றும் இப்பல்கலைக்கழகம் இணைந்து செயல்பட முடிவெடுத்து, பல்கலைக்கழக அறிவியல் அறிஞர்கள் மற்றும் மாணவர்கள் பரிமாற்றம், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சித் திட்டங்களில் இணைந்து ஐந்து ஆண்டுகள் செயல்பட ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக "நவீன கால்நடை மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சையியல்– கால்நடை நலம் மற்றும் உற்பத்தி மேம்பாடு" எனும் தலைப்பில் ஒரு சர்வதேச மாநாடு 2006 ஜூன் 21 முதல் 25 ஆம் தேதி வரை சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகத்தில் நடத்தப்பட்டது.

**ஆராய்ச்சி**

பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ் வளாக வசதியை வலுப்படுத்தவும், உயர் கல்வி அளிக்கவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும், ஆராய்ச்சிகளை மேம்படுத்துதல் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை மேற்கொள்ள 88 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகத்தில் 73 புரவலர் ஆராய்ச்சித் திட்டங்கள் ரூ.1,798.08 இலட்சம் மதிப்பீட்டில் செயல்பட்டு வருகின்றன.

**கால்நடை அறிவியலில் குறிப்பிடத்தக்க ஆராய்ச்சி சாதனைகள்**

- **கோயம்புத்தூர் இனச் செம்மறி ஆடுகளின் கற்றாய்வு, மதிப்பீடு பண்பேற்றக் குறிப்பீடு**

கோயம்புத்தூர் இனச் செம்மறி ஆடுகள் பெரும்பாலும் கிராமங்களிலிருந்துதான் பல இடங்களுக்கு மந்தைகளாகச் செல்கின்றன என்று ஆய்வு முடிவு தெரிவிக்கின்றது.

- **மாட்டின விந்தணுக்களை வெவ்வேறு உறை நிலையில் பதப்படுத்தி, அவற்றின் அசைவுத் திறனைக் கணினிமூலம் கண்டறிதல்**



மிதமான மற்றும் வேகமான உறை நிலையில் குளிர்விக்கப்பட்ட விந்துக்கள் அதிக அசைவுத் திறன் உள்ளவையாக இருப்பது தெரிய வந்துள்ளது. இதன்மூலம் உறை விந்துவின் முன்னோக்கி அசையும் தன்மைக்கும் பிளாஸ்மா சவ்வு நிலைத் தன்மைக்கும் இடையேயான தொடர்புக் குணம் பற்றி ஆராய்ந்ததில் கணிசமான தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது.

- **ஊரக மகளிர் பொருளாதார மேம்பாட்டிற்கான கறவை மாடுகளில், சினைப் பருவ ஒருங்கிணைப்பு மற்றும் திட்டமிட்ட கருவூட்டல் முன்னோடித் திட்டம்**

இத்திட்டத்தில் உட்படுத்தப்பட்ட மாடுகளில் கன்று ஈனும் இடைவெளியும் குறைகிறது. இதனால் மாடு...ரிலிருந்து வருடம் ஒரு கன்று பெறுவது எளிதாகிறது. கிராமப்புற மகளிர் பயனாளிகள் இத்திட்டத்தின்மூலம் பொருளாதார மேம்பாடு அடைய வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. கறவை மாடுகளில் கன்று ஈனுதல் மற்றும் பால் உற்பத்திமூலம் மாதம் ஒன்றுக்கு ரூ.600 முதல் ரூ.1,200 வரை வருமானமாகப் பெறுகின்றனர்.

- **தீவனப் பயிர்கள் மற்றும் வேளாண் தொழில் கழிவுப் பொருட்களை முழுத் தீவனத்தில் சேர்த்து ஆராய்தல்**

சூரியகாந்திச் செடி சேர்த்துத் தயாரிக்கப்படாத முழுத் தீவனத்தைத் தமிழ்நாட்டின் மேற்குப் பகுதி விவசாயிகள் ஆடுகளுக்கு அளித்து வளர்க்கலாம் எனப் பரிந்துரைக்கப்படுகிறது.

- **மாடுகளில் கருச்சிதைவு நோயைக் கண்டறிதல்**

STAT சோதனை, RBT சோதனை, டாட் எலிசா சோதனை மற்றும் C-எலிசா சோதனைகள் போன்ற ஊனீர்ச் சோதனைகள் வாயிலாக மாடுகளில் புருசெல்லோசிஸ் என்கிற கருச்சிதைவு நோய் கண்டறியப்பட்டது.

- **சென்னையில் நாய்களின் பூசண வகைத் தோல் நோய் பற்றிய நோய் நிகழ்வு ஆய்வு**

சென்னையில் நாய்களின் தோல் நோய்ப் பாதிப்பு ஒரு வயதிற்குட்பட்ட நாய்க் குட்டிகளில் அதிகம் காணப்பட்டது. இந்த நோயை அறிய பூசணக் கிருமி வளர் சோதனையே உகந்தது என அறியப்பட்டது.

- **ND மற்றும் IB-க்கு எதிரான ஒரு முறை ஊனீர் நீர்த்தல் எலிசா சாதனம்** [2006 ஆகஸ்ட் 22

கோழிகளின் வெள்ளைக் கழிச்சல் மற்றும் சுவாச நோயின் எதிர்ப் பொருளை அளவிடுவதற்கு ஒரு முறை ஊனீர் நீர்த்தல் எலிசா சாதனம் உருவாக்கப்பட்டது.

- **கோழிப் பண்ணைகளில் ஈக்களைக் கட்டுப்படுத்துதல்**

பேசிலஸ் துரிஞ்சியன்ஸ் பாக்டீரியாவை வளர்க்க இளநீர் சிறந்த ஊடகம் எனக் கண்டறியப்பட்டுள்ளது. இளநீரில் வளர்க்கப்பட்ட பேசிலஸ் துரிஞ்சியன்ஸ் பாக்டீரியாக்கள் ஈக்களின் இளம் புழுப் பருவங்களை அழிக்கும் திறனைக் கொண்டுள்ளன எனக் கண்டறியப் பட்டுள்ளது. இளநீரில் வளர்க்கப்பட்ட இவ்வகைப் பாக்டீரியாவைக் கொண்டு கோழிப் பண்ணைகளில் ஈக்களைக் குறைந்த செலவில் சுற்றுப்புறச் சீர்கேடு ஏதுமில்லாமல் கட்டுப்படுத்தலாம்.

- **நாய்களில் மடிப்புற்று நோய் ஆய்வு**

நாய்களின் மடிப்புற்று நோயினைக் கண்டறியவும், அதன் பாதிப்பு முடிவுகளை முன்கூட்டியே கணிப்பதற்கும் ஏதுவாக இவற்றின் வகைப்பாடுகள் முறையாகச் செய்யப்பட்டன.

- **எருமையின் ஒட்டுமொத்த மரபணுவுக்கான வெளியீட்டுத் தொடர் வரிசைத் துண்டுகளை உருவாக்கி, பசுந்தாய்தல் மற்றும் மாட்டினத் தொடர் வரிசைகளுடன் ஒப்பிடுதல்**

மண்ணீரல் உள்ள ஒரு உட்கரு செல்களை செல்பிரிதல் ஊக்கி மூலம் தூண்டி கிடைக்கப் பெற்ற இணை DNA தொகுப்பிலிருந்து பெறப்பட்ட 189 மரபிழை சீரமைப்புப் படிகளுக்கு எருமையின் EST உருவாக்கப்பட்டது. RT-PCR முறைமூலம் எட்டு சைட்டோகைகளால் தூண்டப்படுகின்ற மரபணுக்கள் பெருக்கப்பட்டன. இரண்டு எருமை சைட்டோகைன் புரதம் (IL3 மற்றும்) மாதிரிகள் உருவாக்கப்பட்டன. இவை மாட்டை ஒப்பிடும்போது எருமையின் அதிக நோய் எதிர்ப்புச் சக்தியை உலகிலேயே முதல் முறையாக வெளிச்சத்திற்குக் கொண்டு வருகின்றன. உருவாக்கப்பட்ட EST இந்திய எருமைகளின் DNA தொடர் வரிசை பற்றிய ஆராய்ச்சி ஆதாரக் கூற்றுத் தகவல் அறிவைக் கொண்டு வருகிறது.



2006 ஆகஸ்ட் 22]

- **பிபிஆர் நோய் நிர்ணயிக்கும் (கண்டுபிடிக்கும்) முறைகளை உருவாக்குதல்**

நீள் துண்டுச் சோதனை எளிய கண்டுபிடிப்புச் சாதனம். இச்சோதனையின் தெளிவான கூர்ந்தறியும் திறனை c-ELISA-வுடன் ஒப்புமைப்படுத்தலாம். PPRV கண்டறியப்பட்ட மாதிரிகளிடமிருந்து N மரபணுவின் தன்மை RT-PCR மற்றும் தொடர் வரிசைப்படுத்தல்மூலம் கண்டறியப்பட்டது. நீள் துண்டுச் சோதனை விரைவில் எந்த இடத்திலும் PPR வைரஸ் நோய் நுண்ம எதிரியின் தன்மையைக் கண்டுபிடிக்க உதவும்.

- **ராணிகெட் நோய் வைரசின் இம்மியுனோஜெனிசிட்டி மற்றும் வீரோ செல்லில் பதப்படுத்துதல் பற்றிய ஆய்வு**

இவ்வாய்வின்படி நோய்ச் சீற்றம் குறைக்க திசுவில் வளர்க்கப்பட்ட NDV-2 வைரஸ் இருமி, தடுப்பூசி தயாரிக்கப் பயன்படுத்தலாம் என அறியப்பட்டுள்ளது.

**சிகிச்சைகள்**

மருத்துவமனைகளுக்குக் கொண்டு வரப்படும் பிணியுற்ற கால்நடைகளிலிருந்து பெறப்பட்ட நோய் மாதிரிகள் மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் நோய் அறிவில் நல்ல அறிவைப் பெற வாய்ப்பை நல்கும். சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, வேப்பேரி, மாதவரத்திலுள்ள பல்கலைக்கழகப் புறநகர் கால்நடை மருத்துவனை மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடை மருத்துவமனை ஆகியவற்றில் மருத்துவ சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன.

**உள்நோய்ப் பிரிவு வசதிகள்**

சென்னை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளின் உள்நோய்ப் பிரிவில் பெரிய மற்றும் சிறிய பிராணிகளுக்கெனத் தனித்தனியாகத் தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. வெறி நோயுற்ற நாய்களைக் கண்காணிக்கத் தனியாகக் கண்காணிப்பு அறைகள் கட்டப்பட்டுள்ளன.

**கால்நடை அறிவியலில் விரிவாக்கப் பணிகள்**

**கிராமப்புறங்களில் தகவல் தொழில்நுட்ப மையங்கள்**

இந்தப் பல்கலைக்கழகம் வேலூர், திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் மூன்று கிராமப்புறத் தகவல் தொடர்பு மையங்களை உருவாக்கி உள்ளது. இம்மையங்கள், அச்சிடுதல், ஒலி, ஒளி மற்றும் நுண்ணணுத் தகவல் தொடர்புச் சாதனங்களைக் கொண்டு, கால்நடைப் பராமரிப்பு மற்றும் சார்ந்த தகவல்களைப் பெற உதவுகின்றன.

**தொலைத்தொடர்புக் கல்வி**

இப்பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவர் மற்றும் கால்நடை உற்பத்தி வல்லுநர்களின் செயல் திறன் உயர, தொலைத் தொடர்பு மூலமாக, கனடா நாட்டின் காமன்வெல்த் கற்கும் குழு உதவியுடன், கல்வி முறையைச் செயல்படுத்தியது. மேலும் பிராணிகள் நலத்திற்காகப் பிரசுரங்கள் வழியாகத் தொலைத் தொடர்புக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

**இதர வெளிப்புறச் செயல் முறைகள்**

பயிற்சித் திட்டங்கள், மக்கள் தொடர்பு முகாம், பண்ணைகளைப் பார்வையிடுதல், கண்காட்சிகள், பண்ணை வானொலிச் செய்தித் திட்டங்கள், நோய்களை ஆராய்ந்தறிதல், ஆலோசனை வழங்குதல் போன்ற பல விரிவாக்கப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.

**மீன் வள அறிவியல் முக்கிய ஆராய்ச்சி சாதனைகள்**

- பினேயஸ் மோனோடான் மற்றும் டிலாபியா ஓரியோக்ரோமிஸ் நியோசாம்பிகஸ் வகை வரியிறால்களில் உணவுடன் கலந்து கொடுக்கப்பட்ட பழ மற்றும் பூண்டுச் சாறு, திலேபியா மற்றும் வரி இறாலிலும் அதிக வளர்ச்சியையும், நோய் எதிர்ப்புத் தன்மையையும் கொடுத்தது.
- இறாலின் சதையின் தரத்தையும், நிறத்தையும் அஸ்டாசான்தின் மற்றும் ஈஸ்ட் கொடுக்கப்பட்ட உணவு அதிகரித்தது.
- இந்திய நதி இறால் மேக்ரோபிராக்கியம் மால்கம்சோனியின் (ஹெச்.மில்னே எட்வர்ட்ஸ்) வளர்ச்சி, இன முதிர்ச்சி மற்றும் முட்டையிடும் திறனின்மீது ஹார்மோன்களின் தாக்கம் பற்றிய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



- இறால், நண்டு மற்றும் சிங்கிறால் ஓடுகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கைட்டோசான்களின் நுண்ணுயிர் எதிர்ப்புத் திறனும், மீன் பதனத்தில் அதன் பயன்பாடு பற்றி ஆய்வு செய்யப்பட்டது.
- கோழியுடன் மீன் வளர்ப்பு, பன்றியுடன் மீன் வளர்ப்பு, மாட்டுடன் மீன் வளர்ப்பு மற்றும் வாத்துடன் மீன் வளர்ப்புப் பண்ணைகள், தூத்துக்குடி மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் ஏற்படுத்தப்பட்டன.
- நீர்ப்பாசனக் குளங்களில் வளரக்கூடிய ஆகாயத் தாமரை, அல்லி, தாமரை போன்ற நீர்த்தாவரங்களைக் கட்டுப்படுத்தக்கூடிய முக்கிய மீன் இனமாகப் புல்கெண்டை தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- திடகரிவளிக் கட்டிமூலம் மீன்களைப் பதனம் செய்து பாதுகாத்து மீன்களின் தரத்தை நீட்டிப்பது பற்றி ஆராயப்பட்டது.
- முதுகெலும்பில்லாக் கடல் விலங்குகளின் ஓட்டுக்கழிவுகளிலிருந்து, கைட்டின், கைட்டோசன், அஸ்டாஸாந்தின் மற்றும் கால்சியம் போன்ற உப பொருட்கள் தயாரிக்கப்படும் முறைகள் கண்டறியப்பட்டன.

**தொழில்நுட்ப வெளியீடு**

இப்பல்கலைக்கழகத்தால் கீழ்க்குறிப்பிட்டுள்ள புதிய இனம், கால்நடைப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள், நோயறி சாதனங்கள், நோயறித் தொழில்நுட்பங்கள், நோய்த் தடுப்பூசிகள், தொழில்நுட்ப முறைகள் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**புதிய இனம்**

நந்தனம் வான்கோழி – வகை ஒன்று, நந்தனம் காடை – வகை மூன்று.

**கால்நடைப் பொருட்கள் மற்றும் தொழில்நுட்பங்கள்**

தானுவாஸ் மாட்டினத் தாது உப்புக் கலவை, செறிவூட்டப்பட்ட வைக்கோல் தீவனக் கட்டி, மின் காந்த அலைமூலம் வயதான கோழிகளின் இறைச்சியை மிருதுபடுத்துதல், தகவல் மீள அறிய உதவும்

[2006 ஆகஸ்ட் 22

சாதனம், பால் புரதம் கலந்து செறிவூட்டப்பட்ட நூடுல்ஸ், சிரிகுந்த், எருதுவின் உள உறுப்புக்களைப் பற்றிய கணினித் தகவல் தட்டு, திசுவியல் பற்றிய வரைபடத் தகவல் தட்டு, ரூமன் ஊக்கித் தொழில்நுட்பம், கிராமப்புற மகளிர்க்கான பறவைக் கூண்டு, நல்ல முட்டை அறிய புதிய சாதனம், கிராமப்புற மகளிர்க்கான நவீன குஞ்சு உற்பத்திக் கூடம், மீன் நூடுல்ஸ், ஜெல் வடிவ மீன் உணவுப் பொருட்கள், உடன் உண்ணக்கூடிய மீன் உணவு.

## நோய்த் தடுப்பூசிகள்

- ஆட்டினத்திற்கு நீல நாக்கு நோய்த் தடுப்பூசிகள் இந்தியாவில் முதன்முறையாக தயாரிக்கப்பட்டுள்ளன. இத்தொழில் நுட்பமானது கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநரகத்திற்குப் பெரிய அளவில் உற்பத்தி செய்யும்பொருட்டு தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இத்தடுப்பூசி செம்மறியாடு மற்றும் வெள்ளாட்டினத்தில் ஏற்படும் நீல நாக்கு நோயினைக் கட்டுப்படுத்தும்பொருட்டு கள உபயோகத்திற்காக வெளியிடப்பட்டுள்ளது.
- வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகளுக்கென ஆட்டுக் கொள்ளை (பி.பி.ஆர்.) நோய்த் தடுப்பூசி தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்பப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- இதர மேம்படுத்தப்பட்ட நோய்த் தடுப்பூசிகளாவன: செயலிழக்கப்பட்ட கோழிக் காலரா தடுப்பூசி, முட்டையிடும் கோழிகளுக்கான செயலிழக்கப்பட்ட இராணிக்கெட் நோய்த் தடுப்பூசி, ஆட்டுக் கொள்ளை நோய்க்கான ஓரின நோய்த் தடுப்பூசி.

## நோயறி சாதனங்கள்

ND மற்றும் IB–க்கு எதிரான ஒரு முறை ஊனீர் நீர்த்தல் எலிசா சாதனம், இடிஎஸ் 76 நோயைக் கண்டறிய உதவும் ஃப்ளோ த்ரூ தொழில்நுட்பம், ஹைட்ரோ பெரிக்கார்டியம் சின்ரோம் அறிய ஆகார் ஜெல் இம்யுனோ டிப்யூசன் நோயறி சாதனம், பி.பி.ஆர். என்ற ஆட்டுக் கொள்ளை நோயை அறியும் நோயறி சாதனம், கோழிகளைத் தாக்கும் மைக்கோபிளாஸ்மா நோயை அறிய உதவும் சாதனம், இறால் நோயைக் கண்டறியும் சாதனம்.



2006 ஆகஸ்ட் 22]

## நோயறித் தொழில்நுட்பங்கள்

சிறு பிராணிகளைத் தாக்கும் பி.பி.ஆர். ஆட்டுக் கொள்ளை நோயை அறிய உதவும் நோயறி முறைகள் மற்றும் அதன் நோய் நுண்ம எதிரியை அறிய உதவும் முறைகள், நாய்களைத் தாக்கும் பால் சுரப்பிப் புற்று நோயை அறிய நிப்பில் ஆஸ்பிரேட் திரவ நோயறி முறை.

## தொழில்நுட்ப முறைகள்

பால் ஊனீர் கஞ்சி தயாரிக்கும் முறை, எருமை இறைச்சியைக் குளிர் பதனிடுதல்மூலம் தர மேம்பாட்டு முறை, கால்நடைகளுக்கான வீரோ செல் வெறி நோய்த் தடுப்பூசி முறை.

இப்பல்கலைக்கழகத்தால் கண்டுபிடிக்கப்பட்ட ஏழு பொருட்களுக்கு அறிவுசார் சொத்துரிமை பெறும்பொருட்டு, அரசின் அறிவுசார் சொத்துரிமை அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

## 2006–2007-க்கான எதிர்காலக் கொள்கைகள்

### கால்நடை

- கால்நடைப் பண்ணையாளர்கள் தன்னம்பிக்கை பெறவும், நிலையான மேம்பாட்டினை அடையவும் தேவையான அறிவைப் பெறத் தகுந்த மனித வள மேம்பாட்டினை அடைய வழிவகுத்தல்
- தொழிற்சாலைகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் துணையுடன் கூட்டுத் தொழில் முறை உருவாக்குதல்
- ஏற்றுமதிக்காக உள்ள கால்நடை, கோழி மற்றும் மீன் உணவில் பூச்சி மருந்து, அடர் உலோகம் மற்றும் பூஞ்சக் காளான் நச்சு நுண் படிவங்கள் கண்டறியும்பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆய்வகத்தை நிறுவுதல்.
- தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்குக் கால்நடை, மீன் வளம் மற்றும் அது சார்ந்த தொழில்மூலம் வருவாயினை ஈட்டும் திட்டம்.
- வேலைவாய்ப்பினை ஏற்படுத்தும் பட்டம்/பட்டயப் படிப்புகள், உணவு பதப்படுத்தும், கால்நடை ஆய்வுக் கூட நோய் கண்டறியும, பால் மற்றும் பால் பொருட்கள் துறையில் உருவாக்கப்படுகின்றன.

- கால்நடை மற்றும் கோழியினங்களில் புதியதாக ஏற்படும் நோய்களைக் கண்டறிந்து, அவற்றை தடுக்கும் முறைகளை உருவாக்கத் தேவையான அடிப்படை வசதிகளைப் பலப்படுத்துதல்.
- கிராமப்புறத்தில் சுய உதவிக் குழுக்கள் மற்றும் பொருளாதார ரீதியான நலிவடைந்த பிரிவு மக்களுக்குக் கால்நடை மற்றும் அது சார்ந்த, குறிப்பாகப் புறக்கடைக் கோழி வளர்க்கும் தொழில்மூலம் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் திட்டம்.
- தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சிகளின் தொழில்நுட்பங்கள் விவசாயிகளை எளிதில் சென்றடைய, பல்கலைக்கழகம், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் விவசாயப் பிரதிநிதிகள் ஒருங்கிணைப்புக் கூட்டம் கால முறைப்படி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மீன் வளம்**

- தேசிய மற்றும் சர்வதேச அளவில் மீன் விற்பனையை அதிகரிக்க மீன் பொருட்கள் தரக் கட்டுப்பாடு ஆய்வகம் அமைத்தல்
- இறால் வளர்ப்பை ஊக்குவிக்கத் தடுப்பூசிகள் மற்றும் நோயறி சாதனங்களை உருவாக்குதல் மற்றும் மதிப்பூட்டிய இறால் பொருட்கள் தயாரித்தல்

**2006–07-க்கான புதிய திட்டங்கள்**

**1. அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய பாட வகுப்புகள்**

- இவ்வாண்டு உணவு பதனிடும் தொழில்நுட்பவியலில் இளங்கலைப் பட்டப் படிப்பு (பி.டெக்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்விக்கான கால அளவு நான்கு ஆண்டுகள் ஆகும். இக்கல்விக்கான மாணவர் சேர்க்கை எண்ணிக்கை இருபது ஆகும்.
- பி.வி.எஸ்சி. பட்டதாரிகளுக்கான செல்லப் பிராணிகள் பராமரிப்பு பற்றிய ஓராண்டு முதுகலைப் பட்டயப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்விக்கான மாணவர் சேர்க்கை எண்ணிக்கை ஆறு ஆகும்.



- பி.வி.எஸ்சி பட்டதாரிகளுக்கான கால்நடை மருத்துவ நோயறி ஆய்வக முறைகள் பற்றிய ஓராண்டு முதுகலைப் பட்டயப் படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இக்கல்விக்கான மாணவர் சேர்க்கை எண்ணிக்கை ஆறு ஆகும்.

**2. உள்ளுறைப் பயிற்சி உதவித் தொகை**

பி.வி.எஸ்சி. மாணவர்களின் கோரிக்கையை ஏற்று, உள்ளுறைப் பயிற்சி உதவித் தொகையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுடன் ரூ.1,150–லிருந்து ரூ.1,650 ஆக உயர்த்தி ஆணை வெளியிடப்பட உள்ளது.

**3. 2006–07-க்கான புதிய பகுதி-2 திட்டங்கள்**

1. ரூ.48.00 இலட்சம் மொத்தச் செலவில் நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் கோழியின நோய் ஆய்வகம் கட்டுவதற்கான கட்டுமானப் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுமானப் பணிக்காக 2006–07 ஆண்டுச் செலவினமாக ரூ.19.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.
2. தென் மாவட்டங்களில் உள்ள விவசாயிகளின் வருமானத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த மரபின ஆடுகளை உற்பத்தி செய்ய ரூ.39.73 இலட்சம் மொத்தச் செலவில் திருநெல்வேலியில் ஆடு வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்றை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிக்காக 2006–07 ஆண்டுச் செலவினமாக ரூ.15.55 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஹைஹைஹை

D V24, 31 Feb. 13'
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227429
சென்னை-600 008